பக்கங்கள் : முப்பத்திரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 30 ஞாயிற்றுக்கிழமை (16.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 324

## சமாதானத்தை தந்திரோபாய அரசியலாக்கி தமிழரின் விடுதலை உணர்வை நசுக்கமுடியாது!

### 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஒக்.16

தொடர்ந்தும் சமாதானத்தை ஒரு தந்திரோபாய அரசியலாகப் பயன்படுத்தி தமிழரின் விடுதலை உணர்வை நசுக்கிவிடலாம் என்று சிங்களம் கனவு காணமுடியாது. தொடர்ந்தும் அது சர்வதேச சமூகத்தை ஏமாற்றவும் முடியாது.

விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' ஏட்டின் தலைப்புச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று வெளியாகிய 'விடுதலைப் புலிகள் பத்திரிகையில் இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மூன்றரை வருடத்திற்கு முன்னர் போர் நிறுத்த உடன்பாடு காணப்பட்டபோது போருக்கு முடிவு நெருங்கிவிட்டது! சமாதானம் தளைத்தோங்கப்போகின்றது! என்று தமிழ் மக்கள் குதூகலித்தனர். சர்வதேசத்தின் நேரடிக் கண்காணிப்பில் மூன்றாந்தரப்பு நாடொன்றின் மத்தியஸ்துவப் பணியின் கீழ் நடைபெறுகின்ற சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக முன்னேற்றம் காணும் என்று தமிழ் மக்கள் நம்பியிருந்தனர்.

ஆனால், சர்வதேச சமூகத்தையும் மதிக்காத சிங்கள அரசின் கடும்போக்கால் சமாதான முயற்சிகள் பாரிய நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. இதேசமயம், 'தமிழருக்கு உரிமை வழங்கக் கூடாது' என்ற அரசியல் கோஷத்தை முன்வைத்து சிங்களத்தின் ஆளும் கட்சி ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளும் அளவுக்கு தற்போதைய சமாதான முயற்சிகள் அவநம்பிக்கை தரும் வகையில் உள்ளன.

சர்வதேச மத்தியஸ்துவம் இலங்கைத்

(22ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் பாதுகாப்பு நிலைவரம் மிகமோசம் என்கிறார் புறூஹோவ்டே!

## கொலைகள் போர்நிறுத்த மீறல்களே செய்தியாளர் மத்தியில் அவர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்ரோபர்16

**இலங்கையின் பாதுகாப்பு நிலைவரம் மிக மோசமான கட்டத்தில் உள்ளது என்று எச்சரித்திருக்கின்றார் நோர்வேயின் விசேட பிரதிநிதி மேஜர் ஜெனரல் ரொன்ட் புறூஹோவ்டே**

**வடக்கு - கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கொலைகள் வெறுமனே குற்றச் செயல்கள் அல்ல. அவை அப்பட்டமான போர்நிறுத்த உடன்படிக்கை மீறல்களே என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.**

போர்நிறுத்த அமைதி ஒப்பந்தத்தை செவ்வனே அமுல் செய்வது தொடர்பாக பேசுவதற்காக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜெனரல் புறூஹோவ்டே, அரசு, புலிகள் உட்பட பல்வேறு தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்தியிருந்தார். கடைசியாக நேற்று முன்தினம் அவர் கொழும்பில் உள்ள வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தினரைச் சந்தித்து இலங்கை நிலைவரம் குறித்து அவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அப்போது அவர், இலங்கை நிலைவரம் மிகமோசமாக உள்ளது என்று அபாய அறிவிப்புச் செய்தார்.

செய்தியாளர் மத்தியில் புறூஹோவ்டே, மேலும் கூறியதாவது:-

சர்வதேச கண்காணிப்புடன் கூடிய போர் நிறுத்த உடன்பாட்டை எட்டிய பின்னரும் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் அழிவு தரும், குழிபறிக்கும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் தற்போது இடம்பெற்று வரும் கொலைகளை வெறுமனே கிரிமினல் செயல்களாக மட்டும் கருதமுடியாது. இவற்றை

(22ஆம் பக்கம் பார்க்க)

## ராஜபக்ஷவின் வவுனியா விஜயம் ரத்து!

வவுனியா,ஒக்.16

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்காக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வவுனியாவுக்கு மேற்கொள்ளவிருந்த விஜயத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ரத்துச் செய்துள்ளார்.

வவுனியா மடுகந்தவில் அன்றையதினம் நடைபெறவிருந்த பிரசாரக் கூட்டத்தில் மஹிந்த உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அவருக்குப் பதிலாக அமைச்சர்கள் சிலரே கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவர் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## கொழும்பில் பிக்குமார் திரண்டு ஒற்றையாட்சியை வலியுறுத்தினர்

### பிரதமர் ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.16

ஒற்றையாட்சியை வலியுறுத்தி நாட்டின் இறைமையைப்பேணுவதற்கு உறுதிபூண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து பல நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குமார் நேற்று கொழும்பில் ஒன்றுகூடினர்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் திரண்ட பிக்குமார் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவை வெளிப்படுத்தினர்.

ஜாதிக ஹெலஉறுமயவின் ஏற்பாட்டில் ஜாதிக மகாசங்க ஒன்றுகூடலாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்துகொண்ட சகல பௌத்த தேரர்களும் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

வண ராஜா பலத்து தம்பிக்க தேரர் தலைமையில் ஒன்றுகூடல் இடம்பெற்றது.

அவர் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

சமஷ்டி முறையான தீர்வை ஏற்றுக்கொள்ளமுடியாது. அத்தகைய தீர்வு சாத்தியமும் இல்லை. வடக்கு - கிழக்கு தாயகம்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வவுணதீவுத் தாக்குதல் ராணுவத்தின் பெரும் சதி!

### கண்காணிப்புக் குழுவுக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

கிளிநொச்சி,ஒக்.16

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வவுணதீவில் கடந்த திங்களன்று இரவு நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னால் இராணுவத்தின் பெரும் சதித்திட்டம் உள்ளது.

இப்படிப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் தெரிவித்திருக்கிறார் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

வவுணதீவில் கேணல் பானுவை இலக்கு வைத்து விடுதலைப் புலிகளின் வாகன அணி மீது ஆயுதக்குழுவினர் நடத்திய தாக்குதல், யாழ்ப்பாணத்தில் பாடசாலை அதிபர்கள் இருவர் அடுத்தடுத்துப் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் ஆகியன தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பிய கடிதத்தில் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

வவுணதீவு தாக்குதலுக்குப் பின் ஸ்ரீலங்கா அரச ஊடகங்கள் கேணல் பானு கொல்லப்பட்டார் என்று உடனடியாகப் பாரிய பரப்புரை செய்தன. ஸ்ரீலங்கா இராணுவத்தின் பெரும் சதித்திட்டமும் தொடர்பும் இத்தாக்குதலில் இருப்பதை இது நேரடியாகச் சுட்டிக்காட்டுகின்றது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் சவாலை ஏற்க பிரதமர் ராஜபக்ஷ தயாராம்!

கொழும்பு,ஒக்.16

ஊழல் மோசடிகள் தொடர்பாகத் தம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து நேரடியான விவாதம் ஒன்றுக்கு வர முடியுமா என்று கேட்டு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த பகிரங்க அழைப்பை பிரதமரும் ஜனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் சவாலை ஏற்பதற்கு பிரதமர் தயார் என்று அவரின் சார்பில் நேற்றுத் தகவல் வெளியிடப்பட்டது.

சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் செயலாளர் டி.எம்.ஜயரத்தின பிரதமர் சார்பில் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

ஊழல் மோசடிகள் தொடர்பாக பகிரங்க விவாதத்தில் பங்குகொள்ளப் பிரதமர் தயாராக இருக்கிறார். ஊழல்கள் தொடர் பாக மக்களுக்கு உண்மை நிலையைத் தெரியப்படுத்த வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஹெல்பிங் அம்பாந்தோட்டை ஊழல் மோசடி தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதால் அது பற்றி விவாதிக்க முடியாது.நீதிமன்றத்தில் உள்ள ஒரு விவகாரத்தை

(22ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் உருவாக்கிய சமாதானமே புலிகளை பலவீனமடையச் செய்தது

### அட்டாளைச்சேனையில் ஹக்கீம் தெரிவிப்பு

அம்பாறை,ஒக்.16

யுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் மிகவும் பலமான நிலையில் இருந்தனர். ஆனால், இன்று அப்படியல்ல.அவர்கள் பலவீனமாகிவிட்டனர்.ரணில் விக்கிரமசிங்க உருவாக்கிய சமாதானச் சூழலே புலிகளைப் பலவீனப்படுத்தியுள்ளது.

- இப்படித் தெரிவித்திருக்கிறார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரஊப் ஹக்கீம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று மாலை அட்டாளைச்சேனையில் நடைபெற்றது. ரஊப் ஹக்கீமும் அதில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச சமூகத்தின் வலைப்பின்னலில் அரசு - புலிகள் - முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன சிக்கியுள்ளன. இதனால் முத்தரப்பினரும் பலவீனமான நிலையில் உள்ளனர்.இதுதான் யதார்த்தம்.

(22ஆம் பக்கம் பார்க்க)


அதிபருக்கு அஞ்சலி


மத்தியின் மைந்தர்கள் தோள்களில்...


விடைபெறும் வேளை...


கலங்கும் கல்விச் சமூகம்.
படங்கள் : தமிழினியன்.

# கல்விச் சமூகத்தினர் திரண்டிருக்க அதிபர் இராசதுரையின் உடல் தகனம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

வீரசிங்கம் மண்டபம் முன்பாக வைத்துக் கடந்த புதன்கிழமை இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரையின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

கடந்த இரண்டு நாள்களாக மத்திய கல்லூரியில் உள்ள அதிபரின் வாசஸ்தலத்தில் அதிபர் க. இராசதுரையின் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. நேற்று முற்பகலில் அங்கு சமயக் கிரியைகள் நடைபெற்றன.

நண்பகல் 12 மணியளவில் அதிபரின் பூதவுடல் மத்திய கல்லூரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பூதவுடலுக்கு மத்திய கல்லூரியின் கொடி போர்த்தப்பட்டிருந்தது. இறுதி நிகழ்வில் மத்திய கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், வங்கியாளர்கள், வைத்தியர்கள், சட்டவாளர்கள், பொறியியலாளர்கள், மதகுருமார்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் மத்திய கல்லூரி உப அதிபர் எஸ்.பத்மநாதன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் ஆரம்பமானது.

இதில் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி, யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தங்கராஜா, மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபைத் தலைவர் திவாகர், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், யாழ். மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் பாலசுந்தரம், யாழ். பத்திரிசியார் கல்லூரி உப அதிபர் அருட்திரு. ஜெறோ செல்வநாயகம், யாழ். பரியோவான் கல்லூரி அதிபர் எஸ். தனபாலன் ஆகியோர் உட்பட பலர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

இதனையடுத்து பிற்பகல் 2 மணியளவில் அதிபரின் பூதவுடல் தாங்கிய பேழை கல்லூரி மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் மாணவர்களால் சுமந்து செல்லப்பட்டது.

கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்ட பூதவுடல் பிற்பகல் 3.45 மணியளவில் தீயுடன் சங்கமமாகியது.

(ஐ-8-86-190)

## திருகோணமலையில் செவ்வாயன்று பாடசாலைகளை மூடி துக்கம்!

### யாழ். அதிபர்களின் கொலைகளுக்குக் கண்டனம்

திருகோணமலை,ஒக்.16

யாழ்ப்பாணத்தில் பாடசாலை அதிபர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து திருகோணமலையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. பாடசாலைப் பகிஷ்கரிப்பும் இடம்பெறவுள்ளது.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை இதற்கான அழைப்பை விடுத்துள்ளது.

இதுதொடர்பாகப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியினதும் யாழ்.மத்திய கல்லூரியினதும் அதிபர்கள் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளினால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தமிழ்த் தேசியத்திற்காகக் குரல் கொடுப்பதனையும் அதற்கான போராட்டத்திற்கு அனுசரணையாக இருப்பதனையும் ஏற்றுக்கொள்ளாத சமூக விரோதிகளே இச்செயல்களைச் செய்திருக்கிறார்கள் என்பதனை நன்கு அறிவோம். இது ஆசிரிய சமூகத்திற்கு விடுக்கப்பட்டுள்ள மிகப்பெரிய அச்சுறுத்தல் ஆகும்.

இத்தகைய கொடூர கொலைகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. எனவே இப்படுபாதக செயல்களைக் கண்டித்து திருகோணமலை மாவட்டத்தின் சகல பாடசாலைகளையும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மூடி ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலையை முற்றாகப் பகிஷ்கரித்து எமது கண்டனத்தையும் துயரையும் வெளிப்படுத்துவோம். அன்று சகல கேளிக்கை நிகழ்வுகளையும் தவிர்க்குமாறு வேண்டுகிறோம் - என்றுள்ளது.

(ஐ-3)

## கைதடிச் சந்தியில் கிரனேட் வீச்சு!

கைதடி,ஒக்.16

கைதடிச் சந்தியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் மீது நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இனந்தெரியாதோர் கிரனேட் வீசியுள்ளனர். அது சந்தியின் மையப் பகுதியில் வீழ்ந்து வெடித்துள்ளது.

பெரும் சத்தத்துடன் கிரனேட் வெடித்ததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் வீதிகளில் கூடினர்.

சம்பவம் குறித்து பொதுமக்களிடம் விசாரணை செய்யப்பட்டது.

(ஐ-75-204)

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.16

இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளையில் இன்றும் நாளை திங்கட்கிழமையும் நடைபெறவிருந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை அதிபர்கள் சேவை போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டில் கருத்தரங்குகள் தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(3-9)

## அனுராவின் நிலைப்பாட்டால் ஆளும் கட்சிக்குள் குழப்பம்!

கொழும்பு,ஒக்.16

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்காக அவர் கூட்டுச்சேர்ந்துள்ள கட்சிகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துவரும் பகிரங்கக் கருத்துக்களினால் ஆளுந்தரப்புக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என அறியவருகின்றது.

இத்தகைய விமர்சனங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென மூத்த அமைச்சர்கள் பலர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் நேரடியாக வலியுறுத்தியிருக்கின்றனர். ஆனால் தாம் ஒன்றும் செய்ய முடியாது என்று அவர் கைவிரித்துவிட்டார் என விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவின் இந்த விமர்சனங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தைப் பெரிதும் பாதிக்கும் என்பதாலும், மக்களிடையே குழப்ப நிலையை உண்டுபண்ணும் என்பதாலும் அனுராவின் அத்துமீறல் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென அந்த அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரிவருகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா லண்டனுக்குப் புறப்பட முன்னர் அவரைச் சந்தித்த மூத்த அமைச்சர்கள் சிலர் இந்தக் கோரிக்கையை அவரிடம் முன்வைத்தனர் என்ற போதிலும், இது விடயத்தில் கூடுதல் ஆர்வம் காட்டிக்கொள்ளாத ஜனாதிபதி இதுபற்றி அமைச்சர் அனுராவிடம் தாம் கூறுவார். என்றாலும் இதில் இறுதி முடிவு எடுப்பது அமைச்சர் அனுராவையே சார்ந்ததென்றும் உறுதியாகத் தெரிவித்துவிட்டாராம்.

இதற்கிடையில், இன்று வெளியாகும் சிங்களவார இதழொன்றிற்கு

(21ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகள் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஒக்.16

வடக்கு - கிழக்கு மாகாண சபை, மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட ஆசிரியர் நியமனப் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையில் தோற்றியும் நிரந்தர நியமனம் கிடைக்கப்பெறாத பயிலுநர் அல்லாத பட்டதாரிகளுக்கான ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.கல்வி வலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட பட்டதாரிகளை தொடர்புடைய ஆவணங்களுடன் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-9)

## விரிவுரையாளரின் வழக்கின் ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.16

சிறுமி ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்று சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு எதிரான புலன் விசாரணைகள் பூர்த்தியானதையடுத்து அவருக்கு கடும் நிபந்தனையுடன் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

அங்கு சமுகமளித்திருந்த பொலீஸார் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியாகிவிட்டன என நீதிவானிடம் தெரிவித்தனர். இதனையடுத்து நிபந்தனைகளுடன் அவரைப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

பத்து லட்சம் ரூபா பெறுமதியான ஆதனப் பிணையும் -

12 ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத அடிப்படைச் சம்பளத்தைப் பெறும் அரச, அரச சார்ந்த நிறுவன ஊழியர்கள் ஐவர் தலா 2 லட்சம் ரூபா பிணையையும் செலுத்தவேண்டும் என நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர் வெளிநாட்டுக்குச் செல்வதாயின் நீதிமன்றத்தின் அனுமதி பெறவேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார்.

சந்தேக நபரின் உறவினர்களோ, அவரது நண்பர்களோ, உத்தியோகத்தர்களான சகபாடிகளோ அல்லது வேறு யாராவது சிறுமியுடனோ அவரது உறவினர்களுடனோ தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது என்றும் -

இதை மீறி அவர்களைச் சந்தித்ததாக நீதிமன்றத்துக்குத் தகவல் கிடைத்தால் பிணை ரத்துச்செய்யப்படும் என்றும் - நீதிவான் உத்தரவிட்டார்.

பிரஸ்தாப வழக்கின் ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்படும். சட்டமா அதிபர் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

## மகாசமாதி குருபூசை

சிவஸ்ரீ முருகுப்பிள்ளை (மௌன குரு) கடவுள் சுவாமிகளின் 25 ஆவது மகாசமாதி குருபூசை இன்று ஞாயிற்றுக்கிழமை மறவன்புலோவில் உள்ள சுவாமிகளின் சமாதி குருபீடத்தில் நடைபெறவுள்ளது.

விசேட பூசை, அபிஷேகம், பஜனை, பிரார்த்தனை, ஆத்மீகப் பேருரைகள் என்பன இடம்பெறும்.

(ஐ-202-185)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு
யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு



யாழ்.நகரையும் தீவுப் பகுதிகளையும் இணைக்கும் வீதியில் உள்ள பிரதானமான பண்ணைப் பாலத்தினூடான போக்குவரத்துகள் நேற்றுடன் நிறுத்தப்பட்டன. மாற்று ஏற்பாடாக பயணிகளை வீதியின் ஒருமுனையில்இருந்து மறுமுனைக்குக் கொண்டுசெல்லும் தற்காலிக படகுச் சேவைகள் நேற்று ஆரம்பமாகியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
(படங்கள் : நேசன்,தமிழினியன்)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி,-யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# போர் அரங்கில் தோற்றவர்கள் சமாதான அரங்கில் தந்திரம் புரிகிறார்கள்

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இப்போது தீர்க்கமான ஒரு கட்டத்தை எட்டியிருக்கின்றது.

அவர்களின் விடுதலை அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தத் தீர்க்கமான கட்டத்தை எப்படித் தாண்டப் போகின்றது என்பது இன்றைய வரலாற்றுத் திருப்புமுனையில் முக்கிய அம்சமாக அமைகின்றது.

ஆயுதம் ஏந்திய ஒரு விடுதலைப் போராட்ட அமைப்புக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளையும் கொண்டு இயங்குகின்ற விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு புறம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க வேண்டிய அரசியல் கட்டமைப்பாகவும், மறுபுறம் அதனை எட்டுவதற்கான ஆயுதப் போராட்டத்தை நடத்தும் விடுதலைப் போராட்ட இராணுவமாகவும் இரண்டு வேறுபட்ட கோணங்களில் தனது பாதையை முன்னெடுக்க வேண்டியதாக இருக்கின்றது.

இந்த இரண்டுபட்ட பாதைகளில் ஒரே சமயத்தில் பயணிப்பதால் அது எதிர்கொள்ளும் வெவ்வேறான - ஒன்றுக்கொன்று முரண்பாடான - இழுபறிகளினதும் குழப்பங்களினதும் விளைவே இன்று அந்த அமைப்பு எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவாலும் பிரச்சினைகளுமாகும்.

ஒருபுறம் விடுதலைப் போராட்ட இராணுவமாகத் தனது நிலையை ஸ்திரப்படுத்தி, வலுப்படுத்தி, அது பலவீனப்பட்டுப் போகாமல் உறுதிப்படுத்திக்கொள்ளும் அதேசமயம், மறுபுறத்தில் அதற்காக அந்த அமைப்பு எடுக்கும் நடவடிக்கைகள், செயற்பாடுகள் அந்த அமைப்பின் அரசியல் இயக்கப் போக்கினை சர்வதேச மட்டத்திலும் அதன் தாயகத்திலும் பாதிக்காமல் பார்த்துக் கொள்வதும் மிகவும் சிக்கலானதாகும். கொந்தளிப்பான விளைவுகளையும் தாக்கங்களையும் மோசமான விமர்சனங்களையும் ஏற்படுத்தும் பிரச்சினை இந்த அடிப்படைச் சிக்கலிலிருந்து தான் எழுகின்றது.

அரசியல் இயக்கமாக இயங்கும் அதேசமயம் இராணுவக் கட்டமைப்பாகவும் விளங்கும் புலிகள் அமைப்பு இந்த இரு பரிமாணப் போக்கில் செயற்படும்போது எதிர்கொள்ளக் கூடிய பிரச்சினைகளையும் சிக்கல்களையும் வசமாக - தனக்குச் சாதகமாக - பயன்படுத்த முனைகிறது எதிர்த்தரப்பில் உள்ள சிங்கள அரசு.

போர் அரங்குகளில் பிரமிப்பூட்டும் சாதனைகளைப் படைத்து, ஒப்பற்ற தியாகங்களைப் புரிந்து, தனது இணையற்ற இராணுவ வலிமையை நிலை நிறுத்திய விடுதலைப் புலிகள் அமைப்பை அந்த அரங்கில் வெற்றி கொள்ளமுடியாமல் துவண்ட தென்னிலங்கைச் சிங்களம், சமாதான அரங்குகளில் தனது நேர்மையற்ற தந்திரோபாயங்கள், குயுக்தி முறை நடவடிக்கைகள், பொய்ப்பிரசாரங்கள் போன்றவை மூலம் வீழ்த்துவதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது. அந்தப் பரப்புரைப் போக்கின் விஷமத்தமான பொய்யுரைகளே சர்வதேச மட்டத்தில் இப்போது விதைக்கப்பட்டு வருவதை நாம் காண்கிறோம்.

சமாதான அரங்கிலே விடுதலைப் புலிகளும், இலங்கை அரசும் சமதரப்புகள்.

ஆனால், அந்தச் சமாதான அரங்கில் ஒரு தரப்பான புலிகள் அமைப்பை - அதன் அரசியல் செயற்பாட்டையும் இராணுவக் கட்டமைப்பையும் - ஒன்றாக நோக்கும் சர்வதேசம், மறுபுறத்தில் மற்றத் தரப்பான தென்னிலங்கை அரசின் அரசியல் தலைமைத்துவத்தைத் தனியாகவும், இராணுவக் கட்டமைப்பைத் தனியாகவும் வெவ்வேறாக நோக்குவது சர்வதேசம் விடும் மிகப் பெரிய தவறாகும்.

யுத்த நிறுத்தத்துக்கு வழிசெய்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பல்வேறு அடிப்படை விவகாரங்களை - கடப்பாடுகளை - அந்த ஒப்பந்தத்தின் ஒரு தரப்பான இலங்கை அரசு இன்னும் நிறைவேற்றவே இல்லை.

அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தான் ஆக்கிரமித்த தமிழ்மக்களின் தாயக மண்ணிலிருந்து அரச படைகள் வெளியேறவில்லை, வடக்கு - கிழக்கில் தான் செயற்படுத்திவரும் ஒட்டுப் படைகளின் ஆயுதங்களைக் களைந்து அவற்றை அங்கிருந்து அகற்றவில்லை, தேடுதல்கள், சுற்றிவளைப்புகளை நிறுத்தவில்லை, இயல்பு வாழ்க்கைக்கான அடிப்படைகளை ஏற்படுத்தவில்லை... இப்படி அரசுத் தரப்பு நிறைவுசெய்ய மறந்த - அல்லது மறுத்த - விடயங்கள் பலப்பல.

கறுப்பு - வெள்ளையில், கடதாசியில் எழுதப்பட்டு, ஒப்புக் கொள்ளப்பட்ட பல விடயங்களை நிறைவு செய்யாமல் அவற்றை இழுத்தடித்துக் குழப்பிவருகின்றது இலங்கை அரசு தரப்பு.

இந்தத் தவறுகளை - அடிப்படைப் பிழைகளை - சுட்டிக்காட்டி - காட்டமாக விமர்சிக்கத் தவறும் சர்வதேசம், அரச படைகளின் காட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் நிகழும் படுகொலைச் சம்பவங்களுக்கு மட்டும் புலிகளைப் பொறுப்பானவர்களாக்கி அறிக்கை விடுவதும், நியாய உபதேசம் செய்வதும் ஒரு பக்கச் சார்பான நடவடிக்கையாகும்.

அரச இராணுவம், அரசுத் தலைமையினால் வழி நடத்தப்படுவது. அந்த இராணுவமும், ஏனைய அரசுப் படைகளும், அவற்றின் புலனாய்வுப் பிரிவுகளும் தமிழர் தரப்புக்கு எதிராகத் தற்போது புரிந்து வரும் இருள்யுத்தத்தைக் கண்டு கொள்ளாமல் - அல்லது கண்டுகொண்டாலும் அது குறித்து காட்டமாக விமர்சிக்காமல் -

புரிந்துணர்வு உடன்பாட்டில் தனது கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறிய இலங்கைத் தரப்பை அதற்காகக் கண்டிக்காமல் -

பார்த்துக் கொண்டிருக்கும் சர்வதேச சமூகம், அத்தகைய அரசின் நயவஞ்சகப் பரப்புரைகளுக்கும், பசப்புரைகளுக்கும் எடுபட்டுப் புலிகளுக்கு எதிராக - ஒரு பக்கச் சார்பாக - அறிக்கை விடுவதும், அழுத்தம் கொடுப்பதும் அந்தச் சமூகத்தின் நடுநிலைப் பண்புக்கு இழுக்காகும்.

இலங்கைப் படைத் தரப்பினால் அவற்றின் செயல்கள் மூலம் அல்லது செய்யாமல் விடுவதன் மூலம் இழைக்கப்பட்டு வருகின்ற பெருந்தவறுகளுக்கு இலங்கை அரசுத் தலைமையைப் பொறுப்பாக்கி, அதனைப் பகிரங்கமாக அம்பலப்படுத்தி, அறிவிப்புகளை விடுப்பதன் மூலம் தனது நடுநிலைத் தன்மையை நிரூபிக்கச் சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்.

சமாதான அரங்கில் தமிழர் தரப்பை நயவஞ்சகப் பின்னடைவுக்கு உள்ளாக்குவதன் மூலம், அவர்களைப் போர் அரங்குக்குத் திரும்பிச் செல்ல வைக்கவும், அதன் மூலம் போர் அரங்கில் சர்வதேச உதவியைத் தனக்குச் சாதகமாகப் பெற்று அந்த அரங்கில் புலிகளைத் தோற்கடிக்கவும் கனவு காண்கின்றது சிங்களத் தரப்பு.

அந்தக் கனவு, நனவாகி விடுவதற்கு உடந்தையாகாமல், தந்திரோபாயத்தோடு செயற்படுவது தமிழர் தரப்பின் இப்போதைய பொறுப்பும் கவனமுமாக இருக்கவேண்டும்.

# அச்சுவேலி ஆஸ்பத்திரிக் கட்டடத்துக்கு ஒதுக்கீடு செய்த நிதி திரும்பிவிடும் நிலை

அச்சுவேலி,ஒக்.16

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் புதிய மாடிக் கட்டட வேலைகள் உரியகாலப் பகுதியில் நிறைவு செய்யப்படவில்லை.

இதனால் கட்டடத்தில் 3ஆம் கட்ட வேலைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமல் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டிருப்பதாக வைத்தியசாலை அபிவிருத்திச் சபை கவலை தெரிவித்துள்ளது.

அச்சுவேலி அரசினர் வைத்திய சாலைக்குப் புதிய கட்டட வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு பொருத்தமான நிலம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்துப் பொதுமக்களின் நிதி மூலம் 10 லட்சம் ரூபா செலவில் காணி கொள்வனவு செய்யப்பட்டு வைத்திய சாலைக்கு வழங்கப்பட்டது.

பொதுமக்களின் அன்பளிப்பினால் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் புதியமாடிக்கட்டடம் நிறுவுவதற்கு 2002 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் உரியகாலப் பகுதியில் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் 2004ஆம் ஆண்டின் முற்பகுதியில்தான் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கட்டட வேலைகளுக்கு முதலாம் கட்டமாக 33 லட்சம் ரூபாவும், 2ஆம் கட்டமாக 55 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இரண்டாம் கட்ட வேலைகள் முழுமையாக இன்னமும் முடிவடையவில்லை.

3ஆம் கட்ட வேலைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 68 லட்சம் ரூபா இந்த வருடம் முடிவிற்குள் பயன்படுத்தப்படவேண்டும். ஆனால், மூன்றாம் கட்ட வேலைகளுக்கான ஆரம்ப ஏற்பாடுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும் -

இதனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி திரும்பிவிடும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் - மேற்படி வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-11)

# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று காலை தேர்த்திருவிழா

## விசேட போக்குவரத்துச் சேவை

வடமராட்சி,ஒக்.16

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறும்.

வசந்த மண்டபூசை நடைபெற்று வல்லிபுரப் பெருமான் உள்வீதியுலா வந்து பின்னர் தேரில் ஆரோகணம் செய்வார்.

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சமுத்திரத் தீர்த்தம் இடம்பெறும். பிற்பகல் 2.30 மணிக்கு ஸ்தம்ப பூசை, வசந்த மண்டப பூசை என்பன இடம்பெறும். நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பட்டுத் தீர்த்தத்துடன் பெருந்திருவிழா நிறைவுபெறும்.

தேர், தீர்த்தத்திருவிழாக்களை முன்னிட்டு இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலை, வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் என்பன ஆலயத்திற்கு விசேட பஸ்சேவைகளை நடத்தவுள்ளன.

பக்தர்களின் வசதிகருதி மடங்களில் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-173-204)

# முறைகேடு இடம்பெறும் நிலையங்களில் நவம்பர் 19 ஆம் திகதி மறுவாக்களிப்பு

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.16

ஜனாதிபதித் தேர்தலில் அசம்பாவிதம் இடம்பெறும் வாக்களிப்பு நிலையங்களில் மறு வாக்களிப்பு நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வாக்களிப்பு நிலையங்களில் அச்சுறுத்தல்கள், அசம்பாவிதங்கள் நிகழும் பட்சத்தில் அந்த வாக்களிப்பு நிலைய வாக்குப் பெட்டிகள் வாக்கு எண்ணலுக்கு உட்படுத்தப்படமாட்டாது. மாறாக நவம்பர் 19ஆம் திகதி இந்த வாக்களிப்பு நிலையங்களில் மறுவாக்களிப்பு இடம்பெறும்.

கடந்த தேர்தலை விடக்கடுமையான சட்டங்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அமுல்படுத்தப்படும்.

இது தொடர்பாக சகல கட்சிகளையும் அழைத்து அறிவுறுத்தல் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை -

ஒரு தேர்தல் தொகுதியில் பதிவிலுள்ள வாக்காளர் எண்ணிக்கையை விட அதிகமான வாக்களிப்பு இடம்பெற்றிருக்கும் பட்சத்திலும் அந்த வாக்களிப்பு நிலையத்தின் வாக்களிப்பு ரத்துச்செய்யப்படும் - என்று தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-203)

# மதமாற்றத் தடைச்சட்டத்தை பகிரங்கமாகவே எதிர்ப்பேன்

## அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.16

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவைப் பெற்றுள்ளார் என்பதற்காக மதமாற்றத் தடைச்சட்ட விவகாரத்தில் நான் மௌனமாக இருக்கமாட்டேன். எனது உயிர் இருக்கும் வரை கிறிஸ்தவ மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவேன். மதமாற்றத் தடைச்சட்டத்தை நான் பகிரங்கமாக எதிர்ப்பேன்."

- இவ்வாறு திட்டவட்டமாகக் கூறினார் கிறிஸ்தவ விவகார மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ. மதமாற்றத் தடைச்சட்டம் தொடர்பில் அவர் கருத்து வெளியிடும் போதே இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த மதமாற்றத் தடைச்சட்டத்தினை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். ஜனாதிபதித் தேர்தலுக்காக ஜாதிக ஹெல உறுமயவுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட்டுச் சேர்ந்திருக்கிறார். அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரொருவர் பௌத்த மக்களுக்காக மதமாற்றத் தடைச் சட்ட தனிநபர் பிரேரணையொன்றை கொண்டுவர முடியுமாயின் கிறிஸ்தவ மக்களுக்காக என்னாலும் தனிநபர் பிரேரணையொன்றைக் கொண்டுவர முடியும்.

- இவ்வாறு மேலும் கூறினார் அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ. (எ-க)

# முற்றவெளியில் பாம்புத்தொல்லை பொதுமக்கள் தரப்பில் முறைப்பாடு

அரியாலை, ஒக்.16

யாழ்.முற்றவெளிப் பகுதியில் பாம்புத் தொல்லை அதிகரித்துள்ளது.

முனீஸ்வரன் கோயில் மற்றும் கோட்டையை அண்டிய பகுதிகளில் கடந்த ஒருவருடத்துக்கு மேலாகத் துப்புரவுப் பணிகள் எவையும் இடம்பெறவில்லை. இதனால் அப்பகுதி அடர்ந்த பற்றையாகக் காணப்படுகின்றது.

இந்த நிலையில், கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் மழையை அடுத்து பற்றைகளுக்குள் இருந்து நாகபாம்பு உட்பட மற்றும் சில வகையான பாம்பினங்கள் அப்பகுதியில் தாராளமாக நடமாடத் தொடங்கியுள்ளன. இதனால் அப்பகுதியூடாகப் பயணிப்போர் பெரும் அச்சத்துடன் பயணிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக செல்லும் கே.கே.எஸ். வீதியிலும், யாழ். ரெலிக்கொம் நிறுவனத்துக்குச் செல்லும் வீதியிலும் வாகனங்களில் சிக்கி நசியுண்டு பாம்புகள் இறந்து கிடப்பதையும் அவதானிக்க முடிந்தது.

காடுபோல் அடர்ந்து வளர்ந்திருக்கும் இந்த பற்றைகளை வெட்டி அழிப்பதற்கு யாழ்.மாநகராட்சி மன்றம் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இப்பகுதியூடாக நாளாந்தம் பயணிப்போர் தரப்பில் கூறப்பட்டது. (எ-17)

## உதயவாக்கு

எதைச் சிந்திக்கிறாய் என்பதில்லை. எப்படிச் சிந்திக்கிறாய் என்பதில்தான் புதிய கருத்துகள் வெளிவருகின்றன.

*- ஓர் அறிஞர்.*

## நாளை

*புரட்டாதி 31*
*திங்கட் கிழமை*
*17.10.2005*
**திதி: பூரணை**
**முன்னிரவு: 06.21 வரை**
**நட்சத்திரம்: ரேவதி**
**முன்னிரவு 06.27 வரை**
**பூரணை விரதம்**
**சுபநேரம்: 12.02 - 01.32**
**ராகுகாலம்: 07.32 - 09.02**
*(யாவும் பழைய நேரப்படி)*

# இரண்டாம் கட்ட வீடமைப்புக்காக கிராமங்களைத் தெரிவு செய்யும் பணி

வலி.மேற்கு,ஒக்.16

உலக வங்கியின் நிதியுதவியுடன் இரண்டாம் கட்டமாக வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்கான கிராமங்களைத் தெரிவுசெய்யும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலக வட்டாரங்கள் கூறின.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸின் பணிப்புரைக்கிணங்க இதற்கான நடவடிக்கைகளில் பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி பானுமதி இரவீந்திரன் தலைமையில் திட்டமிடல் பகுதியினர் பல கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து தகவல்களைத் திரட்டிவருகின்றனர்.

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் தற்போது உலக வங்கியின் நிதியுதவியுடன் 90 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. (எ-175)

"மழைநீரைச் சேகரிப்போம் நீர்வளத்தைக் கூட்டுவோம்"

## பிற்போடப்பட்டுள்ளது.

தமிழ் தகவல் தொழிநுட்ப ஒருங்கமைப்பின் நிர்வாகத்தின் கீழ்

**இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன்**
**இலவச கணனிப்பயிற்சி நிலையம்,**
**சாவகச்சேரி.**

மேற்படி பயிற்சி நிலையத்தில் இன்று 16.10.2005 நடைபெறவிருந்த சான்றிதழ் வழங்கும் வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 23.10.2005 ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(41536)(51-11) முகாமையாளர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியமையையிட்டு அவரையும், அவரை வழிநடத்திய பெற்றோர், அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் இவர் கல்வியில் சிறந்து விளங்கவேண்டுமென இறைவனை வேண்டுகிறோம்.

**ரிஷானா - சந்திரமோகன்**
கோண்டாவில்
(யாழ் / சுண்டிக்குளி மகளிர்க் கல்லூரி)
(Marks - 134)

**மாணவர் சமூகம்**
**மிஷன் பாடசாலைவீதி**
**கோண்டாவில்.**

## ஐந்து வேளை பாங்கு ஓசையை ஒலிபரப்ப இனித்தடை வரும் ?

**பௌத்த சாசனத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழு சிபாரிசு**

கொழும்பு, ஒக்.16

முஸ்லிம்களின் பள்ளி வாசல்களில் இருந்து ஐந்து வேளைத் தொழுகைகளின் போதும் எழுப்படும் பாங்கு ஓசையை, ஒலிபெருக்கிகள் மூலம் ஒலி பரப்புவதற்குத் தடை விதிக்கவேண்டும்.

இவ்வாறு பௌத்த சாசனம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு சிபாரிசு செய்திருப்பதாக அறியவருகின்றது. பௌத்த சாசனத்தைப் பேணுவது தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது சிபாரிசுகளை தற்போது தெரிவித்துள்ளது.

'மத நடவடிக்கைகளுக்கு ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடு' தொடர்பாக அந்த ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள சிபார்சு வருமாறு:-

குறிப்பாக- முஸ்லிம்களின் பள்ளிவாசல்களில் ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்தி ஒரு நாளில் ஐந்து தடவைகள் மதத்துதி ஒலிபரப்பப்படுகின்றது. இது அப்பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு உபத்திரவத்தை ஏற்படுத்துகின்றது. அத்தோடு, இத்தகைய ஒலியினால் சூழலும் மாசுபடுகின்றது. விசேட மத நிகழ்வுகளைத்தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் சுற்றாடல் குடியிருப்பாளர்களுக்கு உபத்திரவம் ஏற்படுத்தப்படாமல் தவிர்ப்பதற்காக, ஒலி பெருக்கிப் பாவனையைத் தடுக்குமாறு நாம் சிபாரிசு செய்கிறோம். இந்த நடவடிக்கை மத நல்லிணக்கத்தைப் பாதுகாக்கவும் உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பௌத்த சாசனத்தைக் கட்டிவளர்ப்பதற்காக மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழு செய்துள்ள இந்த சிபாரிசு உட்பட பல்வேறு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து மக்கள் பாதுகாப்பு சட்டம், சமாதான அலுவல்கள் தொடர்பான அமைச்சு ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்த சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்வதற்கான உயர்மட்டக் கூட்டம் ஒன்று மக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு அமைச்சின் பொலீஸ் பிரிவுக்குப் பொறுப்பான மேலதிக செயலாளர் எச்.கே.பாலசூரியவினால் அண்மையில் கூட்டப்பட்டதாகவும் அறியவந்துள்ளது. (எ-க)

## பூங்கன்றுகள் விற்பனைக்கு

எல்லா வகையான பூங்கன்றுகளும் சாடியுடனும், பைக்கற்றுக்களுடனும் (குறோட்டன், பாம்ஸ், சிதம்பரத்தை, போகன்விலா, யூக்கோப்பியா, றெசினா, சைபிரஸ், அலெக்கெரியா) விற்பனைக்குண்டு.

**கரிஸ் கார்டின்**

தொடர்பு: நந்தாவில் ஒழுங்கை
(செம்பியன் லேன் K.K.S Road )
கொக்குவில்.T.P:0776524970

(41538)(51-11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 24 ஆவது பட்டமளிப்புவிழாவில் சித்தமருத்துவத்துறையில் முதன் முதலில் கலாநிதிப் பட்டம் பெற்ற எந்தன் பாசமிகு நண்பர் **டாக்டர் பொன்னம்பலம் இராமநாதன்** அவர்களையும் இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி அவரின் திறமையால் கலாநிதிப் பட்டம் பெற்ற **திருமதி கலைவாணி இராமநாதன்** அவர்களையும் மேலும் பல பட்டங்கள் பெற்றுப்பல்லாண்டுகாலம்வாழ்கவெனவாழ்த்துகின்றோம்.

அருணஸ்,
இல.100, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி கருணாநிதி
குடும்பத்தினர்.

(41467)(50-11)

## திருக்கார்த்திகை விரதம்

பார்த்திப வருடம் கார்த்திகை மாதம் முதலாம் திகதிக்குச் சமமான 16.11.2005 புதன்கிழமையே திருக்கார்த்திகை விரதமாகும். இதைப்பற்றி மக்கள் சந்தேகமடையத் தேவையில்லை.

திருக்கார்த்திகை விரதம் அனுஷ்டிக்கவேண்டிய விதம் சரசோதிமாலையிற் பின்வரும் பாடலிற் குறிக்கப்பட்டுள்ளது. அது வருமாறு:-

**தேள் ஆதவனில் திகழ்பூரணையில் நாள் ஆரலிலே**
**மாமதிதான் நீளேறுறவே நெறியே சுடர்தான்**
**கேளேற்றிடவே கிளரும் நலமே.**

கார்த்திகை மாதத்தில் பூரணையும் கார்த்திகை நட்சத்திரமும் ஒன்றுசேர, சந்திரன் இடபத்தில் நிற்க திருக்கார்த்திகை விரதமும், தீபமேற்றல் செய்வதே சிறப்பு என்பது பாட்டின் பொருள். ஆரல் என்பது கார்த்திகை ஏறு என்பது இடபம். இரகுநாதையர் பஞ்சாங்கத்தில் கார்த்திகை முதலாம் திகதி நாடி விநாடி 48-58 மணி பின்னிரவு 1-42 க்குக் கார்த்திகை நட்சத்திரம் நிற்கிறது. அன்றியும் சந்திரன் இடபத்தில் நிற்கிறது. எனவே, அன்றுதான் திருக்கார்த்திகை விரதம் என்பது உறுதியாகின்றது.

அக்ஷய வருடம் ஐப்பசி மாதம் 30ஆம் தேதி (16.11.1986) ஞாயிற்றுக்கிழமை திருக்கார்த்திகை விரதமும் சர்வாலய தீபமும் இரகுநாதையர் பஞ்சாங்கப்படி எந்தவித சந்தேகமுமின்றி யாவராலும் கொண்டாடப்பட்டது. இதனை மக்கள் தெளிவாக அறிக.

விநாயகவிரத ஆரம்பமும் அடுத்த நாள் கொண்டாடப்பட்டது. ஆர்த்திராதரிசனமும் மார்கழி 2ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

இவ்வாறிருக்க, இதனை மக்கள் கலங்கத்தக்கதாகப் பல்வேறு அறிக்கைகளும், விளம்பரங்கள் செய்வதும் பெரும்பாவமாகும்.

இந்தவருடம் அவ்வாறே **ஆர்த்திராதரிசனம்** மார்கழி 2ஆம் திகதி குறிக்கப்பட்டிருக்கிறது. மார்கழியிலே **ஆர்த்திரா தரிசனம்** வரவேண்டுமென்பது யாவருக்கும் தெரியும். எனவே இரகுநாதையர் பஞ்சாங்கமே திருக்கார்த்திகை விரதம், விநாயகஷஷ்டி ஆரம்பம், **ஆர்த்திராதரிசனம்** என்பவற்றைச் சரியாகக் குறித்திருக்கின்றது.

மக்கள் அதைப்பற்றி சந்தேகமின்றி உறுதியுடன் இருப்பார்களாக.

*சோதிட பரிபாலனமடம்,*
*கொக்குவில்.* (41520)

*இ.வெங்கடேச ஐயர்*
*இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம்.*

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 14 ஆம் திகதி எமது சக வர்த்தகரான பொ. சிறிதரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தங்கம்மா பொன்னுத்துரை**

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/45660)(51-11) **மல்லாகம் வர்த்தக சங்கம்.**

## மரண அறிவித்தல்



**வேலுப்பிள்ளை வீரபாகு**
(கண்டி ஸ்ரோஸ் - அச்சுவேலி கொமினிக்கேசன்)

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி, பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வீரபாகு 14.10.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், சாந்தலட்சுமி (சுவிஸ்), சுகந்தலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் குலசேகரம் (சுவிஸ்), குகேஸ்வரன் (சுதன் ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கந்தசாமி, செல்லக்கண்டு, அருமைத்துரை ஆகியோரின் சகோதரரும் தர்சினி, அஜந்தா (சுவிஸ்), சிவசுதன், பரசுதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2005) ஞாயிறு பி.ப 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று.பூதவுடல் தீர்த்தான்குளம் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாந்தா இல்லம்.*
*விமான நிலைய வீதி.பத்தமேனி.* (41539)(51-11)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
26
11
1973

மறைவு
16
09
2005

திருமதி
**சிவறஞ்சிதம் (றஞ்சி) சிவயோகநாதன்**

நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும்
உங்களின் நினைவு என்றென்றும்
எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.
உங்கள் ஆத்மசாந்திக்காக நாம்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


புலோப்பளை.
பளை. (41541)(51-11)

தகவல்:
**கணவன், தாய், அப்பம்மா,**
**அக்கா, பிள்ளைகள், அண்ணா,**
**அண்ணி, பிள்ளைகள்.**


## பிறவுண்ஸ் காட்சியறையில்!

**SHARP**

நீங்கள் ஆவலுடன் எதிர்பாத்திருந்த
தீபாவளி மற்றும் கிறிஸ்மஸ் பண்டிகைக்
கால அதிரடி விலைக் கழிவு இதோ...



**SHARP** இலத்திரனியல் வீட்டுப் பாவனைப் பொருள்கள் T.V, VCD, DVD, Micro wave Oven, Electric Oven, AC மற்றும் பல இலத்திரனியல் பாவனைப் பொருள்களையும் நீங்கள் இதுவரை கண்டிராத விலைக்கழிவும் ஏனைய பொருள்களுக்கு பெறுமதிமிக்க இலவச பொருள்களும் காத்திருக்கின்றன.

தொடர்புகளுக்கு இன்றே எமது
பிறவுண்ஸ் காட்சியறையை நாடவும்

**முகவரி: இல.89, ஸ்ரான்லி றோட்,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 0212225150**

(C/45662)(52-11)

# போர் நிறுத்தத்தைப் பாதுகாப்பதற்கான வாய்ப்புகள் நழுவி நழுவிப் போகின்றன

## ஐ.தே.கவின் தூதர்கள் வன்னிக்கு வருவார்களா?

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து நான்காவது ஆண்டை அண்மித்துக் கொண்டிருக்கின்றது.

தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடன், நேரடிப் பேச்சுகளை நடத்த வசதியாக இந்த உடன்படிக்கை கைச்சாத்தானது.

என்ன இலக்குடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதோ அந்த இலக்கு இன்னமும் எட்டப்படவில்லை. யுத்தம் நிறுத்தப்பட்டது. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பாதை திறக்கப்பட்டது. யுத்தத்துக்கான செலவீனம் அரசுக்கு இல்லாமல் போனது. ஆனால், தமிழ் மக்களுக்கு எதுவும் நடக்கவில்லை. அவர்கள் எதிர்பார்த்த இயல்பு வாழ்வு கிட்டவில்லை. அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

ஏமாற்றத்தின் விளிம்பில் நிற்கும் தமிழ் மக்களுக்கு இராணுவ நெருக்குவாரங்கள் தான் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஆயுதக் குழுக்களின் அடாவடித்தனமும் நாளுக்கு நாள் கூடிக்கொண்டு போகின்றது.

சமாதானச் சூழல் உருவாகி மக்கள் மனங்களில் ஏற்பட்ட சந்தோஷ நிலை இப்போது குறைந்து கொண்டே வருகின்றது. அச்சமும் பீதியும் அவர்கள் மனங்களில் குடிகொள்ளத் தொடங்கிவிட்டன.

விடுதலைப் புலிப் போராளிகள் குடாநாட்டில் காலடி எடுத்து வைத்தபோது நிம்மதிப் பெருமூச்சுவிட்ட மக்கள் இன்று தொடரும் கொலைகளால் கலக்கம் அடைந்துள்ளனர். அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்கத்துடன் உள்ளனர்.

கடந்த மாதம் 7 ஆம் திகதி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து விடுதலைப் புலிப் போராளிகள் வெளியேறினர். போராளிகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்ததை



அடுத்து தலைமைப்பீடத்தின் முடிவுக்கு அமைய யாழ்ப்பாணத்தில் இருந்து போராளிகள் வெளியேறினர்.

அதன்பின்னர் குடாநாட்டின் நிலைமை மோசமடைந்தது. குழு மோதல்கள், போதைப் பொருள் பாவனை, பெண்கள் மீதான சேஷ்டைகள் என தொடர்ந்த வன்செயல்கள் இப்போது கொலைகளாகத் தொடர்கின்றன.

**நீளும் கொலைப்பட்டியல்**

கடந்த மாதம் 14 ஆம் திகதி உடுவிலில் ஆரம்பித்த கொலையுடன் நீள்கின்றது கொலைப் பட்டியல். நேற்றுவரை 10 கொலைகள் இடம் பெற்றுள்ளன. இரு தாக்குதல் சம்பவங்களும் நடந்துள்ளன.

கொலைகளின் பின்னணி, காரணம் வெவ்வேறு வகையாகக் கூறப்பட்ட போதிலும், கொலைகள் தொடர்ந்தவண்ணமேயிருக்கின்றன.

இந்த நிலையில்தான் யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் சீராக - செம்மையாக - நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள் தொடர்பாக ஆராய்வதற்காக நோர்வேயின் பிரதிநிதியான கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் புறூவ் ஹொவ்டே கடந்த வியாழக் கிழமை வன்னி வந்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருடன் அவர் கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சில் முக்கியமாகப் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயம் இந்தப் படுகொலைகள் தொடர்பான விவகாரம்தான்.

''யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அடிப்படை விதிமுறைகளில், ஆயுதக்குழு விவகாரமும் ஒன்று. உடன்படிக்கையின் 1.8 சரத்தில் மிகத்தெளிவாக இந்த விடயம் சொல்லப்பட்டுள்ளது. யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி தமிழர் தாயகப் பிரதேசத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஆயுதக் குழுக்கள் கலைக்கப்பட்டு, அவற்றின் ஆயுதங்கள் களையப்பட்டு, அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும். உடன்பாட்டில் இது தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

''ஆனால், அண்மைக்காலத்தில் ஆயுதக் குழுக்கள் மீண்டும் ஆயுதமயப்படுத்தப்பட்டு எல்லா இடங்களிலும் - தமிழர் தாயகப் பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் - வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. எமது புத்திஜீவிகள், பொதுமக்கள், போராளிகள் எல்லோர் மீதும் தாக்குதல் நடத்துவதில் அவர்கள் தீவிரமாக இறங்கியிருக்கிறார்கள்.

''இலங்கை அரசு ஆயுதக்குழுக்கள் எதுவும் தமது பகுதிகளில் இல்லை என மறுத்த நிலையிலும் வன்முறைச் சம்பவங்கள் நடப்பதை நோர்வேயிடம் சுட்டிக்காட்டினோம்.

''எமது போராளிகள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியேறிய பின்பு அங்கு இராணுவத்தோடு ஆயுதக் குழுக்கள் சுதந்திரமாக நடமாடுகின்ற செய்திகள் எமக்கு வந்து கொண்டிருக்கின்றன. இவர்களின் கொலை வெறியாட்டம் இப்போது தீவிரமடைந்துள்ளது.''

- இப்படி நோர்வேப் பிரதிநிதிக்கு ஆதாரங்களுடன் தமிழ்ச்செல்வன் விளக்கியுள்ளார்.

யுத்தநிறுத்த சூழலை நெருக்கடிக்குள்ளாகி, அந்த யுத்தநிறுத்தத்துக்குக் காரணமான உடன்படிக்கையை செயலிழக்கச் செய்யும் செயற்பாடு தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அரசும் படையினரும் துணைக் குழுக்களும் இக்கைங்கரியத்தில் தீவிரமாகச் செயற்படுகின்றார்கள் என்றே கருதவேண்டியுள்ளது.

**நோர்வேயின் கடைசி முயற்சி**

யுத்தநிறுத்த உடன்படிக்கை நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டு அது செயலிழக்கச் செய்யப்படாமல் இருப்பதற்காக யோசனை ஒன்றை நோர்வேத் தரப்பு முன்வைத்தது.

இரு தரப்பையும் ஒரே மேசையில் அமர்த்தி, நேரடிப்பேச்சை நடத்தி இந்த நெருக்கடிக்கு தீர்வு ஒன்றைக் காண நோர்வே முயன்று கொண்டிருக்கின்றது.

இத்தகைய பேச்சுக்குத் தயார் என விடுதலைப் புலிகளின் தலைமை நோர்வேக்குத் தெரிவித்தது. நடுநிலையான ஓர் இடத்தில் இந்தப் பேச்சுகளை நடத்தவும் தலைமை சம்மதித்தது. ஆனால், ஸ்ரீலங்கா அரசின் இழுத்தடிப்புக் காரணமாக நேரடிப் பேச்சுக்கான வாய்ப்பு அருகிக்கொண்டு போகின்றது.

நோர்வேத் தூதர் அடிக்கடி வன்னி வந்து இதுபற்றி விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியபோதும் முடிவு ஏதும் எட்டப்படவில்லை.

நோர்வேயின் பிரதிநிதியாக புறூவ் ஹொவ்டே வன்னி வந்தும் முடிவு எதுவும் எட்டப்படவில்லை. பயனற்ற சந்திப்பாகவே அது முடிந்ததாகக் கருதப்படுகின்றது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைப்படுத்தும் வாய்ப்புக் குறித்த அரசு - புலிகள் நேரடிப் பேச்சுக்கான முயற்சி இழுபட்டுக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், வன்முறைகள் கட்டுப்பாடற்ற முறையில் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

அரசு - புலிகள் நேரடிப் பேச்சுக்கான சூழல் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு உருவாகுமா? விடைபெற்றுச் செல்லும் ஜனாதிபதி தனது அதிகாரங்களைப் பயன் படுத்தி வடக்கு - கிழக்கில் இருந்து ஆயுதக் குழுக்களை அப்புறப்படுத்தி யுத்தநிறுத்த சூழலைத் தக்கவைப் பாரா?



படைகளுடன் இயங்கும் ஆயுதக் குழுக்கள் தமது செயற்பாட்டைத் தீவிரமாக்கி மக்களை அச்சநிலையில் வைக்கப்போகின்றனவா?

இவைதான் இன்று எழும் கேள்விகள்.

வடக்கு - கிழக்கில் யுத்தநிறுத்த சூழலுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் தெற்கில் ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடித்துள்ளது.

தமிழ்த்தேசியத்துக்கு எதிராகச் சிங்களத் தேசியத்தை நிலைநிறுத்தப் புறப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ குழுவும், தமிழர்களுக்கு உரிமை வழங்கப்போவதாக உரத்துக் கூறிக் கொண்டு மறைமுகமாக அவர்களுக்கு எதிராகச் சர்வதேச வலைப்பின்னலை உருவாக்கி உரிமைப் போராட்டத்தை முடக்க முனைந்தவருமான ரணில் குழுவும் நேருக்கு நேர் மோதிக் கொண்டிருக்கின்றன.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவது தொடர்பான திட்டங்களையோ -

நாட்டின் தேசிய பிரச்சினையான தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைத் தரக்கூடிய திட்டங்களையோ - முன்நிறுத்திப் பிரசாரம் செய்யாது ஒருவரை ஒருவர் தாக்குவதும், பகிரங்க விவாதத்துக்கு அழைப்பதும்தான் தெற்கு தேர்தல் களத்தில் நடந்து கொண்டிருக்கின்றன.

பிரதான இரு வேட்பாளர்களும் தெற்கு வாக்குகளை இரண்டாகப் பகிரப்போகிறார்கள். சிறுபான்மை மக்களின் வாக்குத் தான் வெல்லப் போகும் வேட்பாளரைத் தெரிவு செய்யப் போகின்றது.



இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி ஆகியன ரணிலுக்கு ஆதரவு கொடுப்பதால் மலையக மக்களின் வாக்குகள் அவருக்கே கிடைக்கப் போகின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ரணிலுக்கு ஆதரவு வழங்குவதால் முஸ்லிம்களின் வாக்குகளும் அவருக்குக் கிடைக்கும் என நம்பலாம்.

வடக்கு - கிழக்கு மக்கள் கூட்டாக அவருக்கு வாக்களித்தால் அவர் ஜனாதிபதியாவது நிச்சயமாகிவிடும்.

**வன்னிக்கு ஐ.தே.க.வினர் தூது**

அப்படி ஒரு நிலையை உருவாக்குவதற்கு ஐ.தே.கட்சி அதன் தூதர்கள் சிலரை வன்னிக்கு அனுப்பவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்படித் தூதர்கள் வந்தாலும் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை மாற்ற மாட்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை ஏற்கனவே வெளிப்படுத்திவிட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பதைத் தமிழ்மக்கள் தாங்களே சுதந்திரமாகத் தீர்மானிப்பர். அந்த விடயத்தில் எங்கள் கருத்துகளை எங்கள் மக்கள் மீது திணிக்க நாம் விரும்பவில்லை என விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்தனர்.

சமாதான முயற்சிகளில் சமபலத்துடன் - சம அந்தஸ்துடன் - அரசும் - விடுதலைப் புலிகளும் இருக்கின்றனர். தேர்தலில் வென்று வருபவருடன் தமிழர் தரப்பு என்ற வகையில் விடுதலைப் புலிகள் பேசவேண்டும். அத்தகைய சூழ்நிலையில் குறிப்பிட்டு ஒருவரை ஆதரிக்குமாறு கூற முடியாத இக்கட்டு விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட வாய்ப்பு உண்டு. இதன் காரணமாகவே சுதந்திரமாக வாக் களிக்குமாறு மக்களை அவர்கள் கேட்டிருக்கலாம்.

தற்போதுள்ள சூழலில் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடியவர் யார் என்பதைச் சிந்தித்து, முடிவு செய்து மக்கள் வாக்களிப்பர்.

**வாராந்த அரசியல் அலசல்**
**குகா**

மக்கள் தமது அபிலாஷைகளையும் பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடியவரைத் தெரிவு செய்யப்போகிறார்களா? அல்லது கடந்த கால சம்பவங்களை, நடப்புகளை அலசி ஆராய்ந்து சுயநிர்ணய உரிமையுடன் வாழும் நிலையை உருவாக்கும் இலக்கை நோக்கியதான முடிவை எடுக்கப்போகிறார்களா?

நவம்பர் 17 ஆம் திகதி இதற்கான பதிலை எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் எவருக்கும் வாக்களிக்காமல் ஸ்ரீலங்காவின் தேர்தல்தானே எனக் கண்டும்காணாத போக்கை தமிழ்மக்கள் கடைப்பிடிக்கும் சிந்தனையும் உண்டு. அப்படியான சிந்தனை உருவாகும்போது, ஏற்படப்போகும் ஆபத்தையும் கவனத்தில் எடுக்கவேண்டும். அந்த வாக்குகள் கள்ளத்தனமாக விரும்பியவர்களுக்குப் போடப்பட்டு, தமிழ்மக்கள் சிங்கள பேரினவாதச் சக்திகளுக்கு ஆதரவு வழங்கினார்கள் என்று சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தப்படலாம்.

வடக்கு - கிழக்கில் பணிபுரியப் போகும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் இவ்விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர் மக்கள்.

யார் வென்றாலும் தமிழர் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு சாத்தியமா என்பது தான் ஒட்டு மொத்தமாகத் தமிழ் மக்களின் சிந்தனையாகவும் இருக்கின்றது. ✱

ஒக்டோபர் - வாசிப்பு மாதம்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!
சமகால வாசிப்பு அதிர்வுகளும் அடுத்த காலடியும்...
வருடச் சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு: இல.3, டொறிங்ரன் அவனியு, கொழும்பு 07. தொலைபேசி:011 2506272
வாசியுங்கள்
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...

எவரெஸ்ட் மூலிகை இருமல் பாணி

EVEREST Herbal Cough Syrup
AN EXPECTORANT AND ANTISPASMODIC
Excellent Herbal Syrup for Cough of all types

"உணவே மருந்து மருந்தே உணவு"

Herbal Cough Syrup

நூறு வீதம் இயற்கையானது
பக்கவிளைவு அற்றது
பாரம்பரிய மற்றும் சித்த பேராசிரியர்களின் ஏட்டுப் பிரதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது.
ஆயுள் வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது
சகலவிதமான இருமலுக்கும் சிறந்த நிவாரணி

சகல மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

T.P:-0777112410, 0773144873
0212263469

எவரெஸ்ட் சித்த மருத்தகம்

## வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ். குடாநாட்டுச் சந்தைகளில் வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ வெங்காயம் ரூபா 50 முதல் 60 வரை விற்பனை செய்யப்படுகின்றது.

தற்போது பெய்து வரும் பருவமழையை அடுத்து வெங்காயத்தின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-17)

UNIT

3 வருட முழு உத்தரவாதம்

No Additional Charges for Warranty Claim

Free
UPS, Screen Filter, Dust cover, Mouse Pad.

All Based on Colombo Price

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737

அமெரிக்கன் DV 2007 லொத்தர் விசாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன



DV 2006 இற்கான எமது நிறுவனம் மூலம் விண்ணப்பத்திவர்களில் பலருக்கு விசா கிடைத்துள்ளதை மிகவும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

அதேவேளை DV 2007 இற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 2"x2" கலர் படம் ஒன்றுடன் எமது நிறுவனங்களுக்கு உடன் சமுகம் தரவும்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993

## நயினாதீவில் இன்று இலவச மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,ஓக்.16

நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நயினாதீவு அரசினர் வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் பற்சிகிச்சை, இருதயசிகிச்சை, சிறுவர்களுக்கான சிகிச்சை மற்றும் பொதுச் சிகிச்சைகள் என்பன வழங்கப்படும்.

இந்த மருத்துவ முகாமில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் சிகிச்சைகளை வழங்குவர்.

நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தகுந்த சிகிச்சைகளைப் பெற்றுப் பயனடையுமாறு கேட்கப்பட்டுள் ளது.

மருத்துவ முகாமைத் தொடர்ந்து நயினாதீவிலுள்ள பிரதான வீதிகளில் நிழல் தரும் மரங்களை நடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-204)

## மரண அறிவித்தல்கள்

### மதியாபர்ணம் நகுலேஸ்வரன் (நாதா)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மதியாபர்ணம் நகுலேஸ்வரன் (நாதா) 07-10-2005 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மதியாபர்ணம் - நாகம்மா தம்பதியரின் புத்திரனும் அருந்தவமலர் (கனடா), மகேஸ்வரன் (ஜேர்மனி), விக்கினேஸ்வரன் (கனடா), அருள்மலர் (குஞ்சு, உரும்பிராய்), சபேசன் (கனடா) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் சறோசாதேவி (ஜேர்மனி), சுமதி (கனடா), ஸ்ரீரஞ்சன், தர்சிகா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஜெயபரன், சிறிதரன் (கனடா), பிரசாத், தனுஜா, சிந்துஜா ஆகியோரின் மாமனாரும் மதன், அருண், மிதுண் (ஜேர்மனி) ஆகியோரின் சித்தப்பாவும் அபிராம், அரபிந், றஜிகா (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17-10-2005) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(41526) (24-11-19)

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
ஸ்ரீரஞ்சன் (மைத்துனர்).
தொ.பே.இல.: 0712 707325

### சின்னத்துரை சாந்தகுமார்



தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும் தம்பாலை, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சாந்தகுமார் அவர்கள் 12.10.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும் ஐயம்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் தயாநிதியின் அன்புக் கணவரும் கிரிசாந், பிரசாந் (இடைக்காடு மகாவித்தியாலயம்), தக்ஷிகா ஆகியோரின் அன்புத் தகப்பனும் வசந்தகுமார், ஆனந்தகுமார், சந்திரகுமார், யதீஸ்குமார், சாந்தி, வசந்தி, சசிகலா, சந்திரகலா, சுகந்தி, காலஞ்சென்றவர்களான செந்தில்குமார், ஞானகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் செல்வராஜா, புஸ்பராஜா, ரவீந்திரன், தவராஜா, சுரேஸ்ராஜ், கணேசமூர்த்தி, சத்தியமூர்த்தி, கிருபாமூர்த்தி, விக்னேஸ்வரமூர்த்தி, கருணாநிதி, செல்வநிதி, கலாநிதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-10-2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாலை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தம்பாலை,
அச்சுவேலி. 077 6141245

தகவல்:
குடும்பத்தினர்.

குறிப்பு: நேற்று இறுதிக்கிரியை பற்றிய அறிவித்தலில் நேரம் முற்பகல் 10 மணியெனத் தவறாக அறிவிக்கப்பட்டது. பிற்பகல் 3 மணியென மாற்றி வாசிக்கவும். [41526] [24-11-19]

## 31ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில் 05 - 08 - 1933

விண்ணில் 20 - 09 - 2005

### திருமதி பரமேஸ்வரி கந்தசாமி

(சுவாமியார் வீதி, கொழும்புத்துறை)

எமது அன்புக் குலதெய்வமே நீங்கள்
எம்மைவிட்டுப் பிரிந்து 31 நாள்கள்
மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
என்றும் நிலைத்திருக்கும் அம்மாவே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகரைப் பிரார்த்தித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திருமதி மஞ்சுளாதேவி யோகேந்திரன் (மகள்),
மற்றும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கொழும்பு.

(41521) (24-11-19)

## கண்ணீர் அஞ்சலி



யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபரும் யாழ்.வலயக் கல்வி அலுவலகப் பரீட்சைச் சபை உறுப்பினருமான

### நடராஜா சிவகடாட்சம்

அவர்களின் அகால மரணத்தினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பரீட்சைச் சபை,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/45649)
(11-19-23-24)

## கண்ணீர் அஞ்சலிகள்

அமரர் ந.சிவகடாட்சம் [அதிபர், கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்]

அமரர் க.இராசதுரை [அதிபர், யாழ். மத்திய கல்லூரி]

ஆகிய இருவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் பாடசாலைச் சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
இரத்த வங்கி, யாழ்ப்பாணம்.

(41500) (24-11-19)

## விழிநீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கடமையாற்றும் திருமதி றோ.ஜக்குலின் அவர்களின் பாசமிகு தந்தை

**M.G.நடராசா** (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(41529) (24-11-19)

அலுவலர்கள்,
புனர்வாழ்வுப் பகுதி, யாழ். மாவட்டச் செயலகம்.

அரிய வாய்ப்பு

உங்கள் இசைக் கருவிகளை
உங்கள் வீடுகளில்
கற்றுக்கொள்ளுங்கள்.

தொடர்பு: 077 - 9596611

(41534) (23-11-19-24)

WANTED

Staff wanted for Elders Home. Day & Night Duty (3 Girls). Please Contact at Mc. Leod Hospital at Inuvil.

"Pleasent Cottage"
MC Leod Hospital,
Inuvil.
T.P. No.:
021 222 7669

(41519) (24)

KINGS ELECTRONICS

சன் T.V
பொதிகை
BBC World
DD Sports
(38 Channels)
EUROSTAR Disk, LNBF, DelSat Receiver (Made in KOREA)

11250/=



தற்போது இல.91 ஸ்ரான்லி வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

New Mp3 Cd 75/=

கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்

Audio Cd, Video Cd, Mp3 Cd ,மற்றும் தரமான எலெக்ரோனிக் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

எமது நிறுவனத்திற்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை.
இல.91 ஸ்ரான்லி வீதி யாழபபாணம்

NO 91, STANLEY ROAD, JAFFNA.Tel.:222 3857

# சர்வதேச கிரிக்கெட் சபை விருதுகள்



இந்த ஆண்டுக்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் விருதுகளைப் பெறும் வீரர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. பல முன்னணி வீரர்களைப் பின்தள்ளி புதுமுக வீரர்கள் இந்த விருதுப்பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில் சிறந்த வீரர்கள் தெரிவு செய்து கௌரவிக்கப்படுகின்றனர். அந்த வகையில் கவாஸ்கர் தலைமையிலான குழுவினர் இந்த வருடத்திற்கான சிறந்த வீரர் களைத் தெரிவுசெய்துள்ளனர்.

இந்தத் தெரிவில் இந்த வருடத்திற்கான சிறந்த வீரர், சிறந்த ஒருநாள் போட்டி வீரர், சிறந்த டெஸ்ட் போட்டி வீரர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்திற்கான சிறந்த வீரர் விருதுக்கு சகலதுறை ஆட்டக்காரர்களான பிளின்ரொப், ஜக் கலிஸ் ஆகியோருக்கிடையே கடும்போட்டி நிலவியது. இருவருமே தலா 86 வாக்குகளைப் பெற்றிருந்தனர். இதனால், அந்த விருதுக்குரிய சேர் கர்பீல்ட் சோபர்ஸ் கிண்ணம் இருவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இதில் சிறந்த வீரருக்கான விருதை இரண்டாவது தடவையாகவும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சைமன் டாபல் பெற்றார்.

விருது பெறும் வீரர்களின் விவரம் வருமாறு:-

*அந்த ஆண்டின் சிறந்த வீரர்கள்:* அன்ரூ பிளின்ரொப் (இங்கி லாந்து), கலிஸ் (தென்னாபிரிக்கா).

*சிறந்த டெஸ்ட் போட்டி வீரர்:-* ஜக்கலிஸ் (தென்னாபிரிக்கா)

*சிறந்த ஒருநாள் போட்டி வீரர் மற்றும் சிறந்த புதுமுக வீரர்:-* கெவின் பீற்றர்சன் (இங்கிலாந்து)



இதேவேளை, சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் போட்டி அணித் தலைவருக்கான விருதினை இலங்கை அணித் தலைவர் மார்வன் அத்தப்பத்து பெற்றுக்கொண்டார். இந்த விருதைப் பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட உத்தேச குழுவில் பாகிஸ்தான் வீரர் இன்சமாம் உல் ஹக்கும் போட்டியிட்டார்.

இதேவேளை சிறந்த டெஸ்ட் அணித் தலைவருக்கான விருதினை ஆஸ்திரேலிய அணிக் கப்டன் ரிக்கி பொன்டிங் பெற்றுள்ளார்.



# டிராவிட் காட்டில் மழை



கிரிக்கெட் அணித் தலைவர் பதவி டிராகுல் டிராவிட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நீண்ட காலமாக இந்தியக் கிரிக்கெட் ரசிகர்களை குழப்பததில் ஆழ்த்திய கேள்விக்கு ஒருவாறு விடை கிடைத்துள்ளது.

அண்மையில் சிம்பாப்பேயில் இடம்பெற்ற போட்டியின்போது இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் கிறேக் சப்பலுக்கும் அப்போதைய அணித் தலைவர் கங்குலிக்கும் இடையேயான முரண்பாடு வெளிச்சத்துக்கு வந்தது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலையிட்டு இருவருக்கும் இடையே சமரசம் செய்துவைக்கப்பட்டது. இந்தப் பின்னணியில் கங்குலியின் அணித் தலைவர் பதவிக்கு ஆப்பு வைக்கப்படும் என அனைவராலும் பரவலாகக் கருதப்பட்டது. அது போலவே தற்போது இடம்பெற்றுள்ளது.

இலங்கை, தென்னாபிரிக்க தொடர்களுக்கு அணித் தலைவராக டிராகுல் டிராவிட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியா செல்லும் இலங்கை அணி அங்கு 7 ஒரு நாள் ஆட்டங்களிலும் விளையாடவுள்ளது. இத்தொடர் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகிறது. எதிர்வரும் நவம்பர் மாதம் தென்னாபிரிக்காவுடன் 5 ஒரு நாள் ஆட்டங்களில் இந்தியா விளையாட உள்ளது.

இந்தத் தொடர்களுக்கான புதிய அணித்தலைவரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் மொஹாலியில் இடம்பெற்றது. இதில் அணித் தலைவராக ராகுல் டிராவிட் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். காயத்தால் அவதிப்படும் கங்குலி தலைமைப் பதவியை இழந்தார். இவர் எதிர்வரும் 17ஆம் திகதிவரை ஓய்வில் இருக்க வேண்டும் என உடற் பரிசோதனையாளர் ஜ ன் குளோஸ்டர் அறிவுறுத்தியுள்ளார். இதனால் இலங்கைக்கு எதிரான முதல் இர டு ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பை அவர் இழந்தார். பயிற்சி ளர் கிறேக் சப்பலுடனான மோதல், உடற் தகுதி இல்லாத நிலை என்பவற்றைக் ாரணங்காட்டி கங்குலி எளிதாக கழற்றி விடப்பட்டுள்ளார். அதனால் டிராவிட்டே ந்தரத் தலைவராக நீடிக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் சபைச் செயலாளர் எஸ்.கே.நாயர் கருத்துக் கூறுகையில் டிராவிட் ஏகமனதாக அணித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு நீண்ட நாள்களுக்கு வாய்ப்பளிக்கும் பொருட்டே இரு தொடர்களுக்கும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கும் கங்குலி காயத்திற்கும் சம்பந்தம் இல்லை. 17 ஆம் திகதி குளோஸ்டர் தரும் உடல் தகுதி அறிக்கைக்குப் பிறகே கங்குலி ஒரு வீரராகப் பரிசீலிக்கப்படுவார். அணியில் மாற்றம் ஒன்று தேவை என்பதனையே தேர்வாளர்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக விரும்புகின்றனர் என்றார். இதேவேளை ஒரு முழுத் தொடரின் அணித்தலைவராக ராகுல் ராவிட் மூன்றாவது தடவையாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 17 போட்டிகளில் தலைவராக இருந்துள்ளார். அதில் 7 போட்டிகளி் வெற்றியும், 9 போட்டிகளில் தோல்வியும் கண்டுள்ளார். ஒரு போட்டி கைவிடப்பட்டது.

# ஆஸ்திரேலியாவை அசத்தியவர்கள்

தற்போது ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றுவரும் சுப்பர் சீரிஸ் ஒருநாள் போட்டித் தொடரில் உலக அணி தோற்றது. மேற்கிந்தியஅணி வீரர் பிரைன்லாரா இத் தொடரில் பிரகாசிக்கவில்லை. ஆனாலும் அவர் ஆஸி. அணிக்கெதிராக அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

ஆஸ்திரேலிய அணிக்கெதிராக 27 போட்டிகளில் பங்குபற்றியுள்ள இவர் 2 ஆயிரத்து 470 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 8 சதங்களும், 11 அரைச் சதங்களும் அடங்கும். இவரை அடுத்து அதிக ஓட்டங்களைப் பெற்றவர் இந்திய அணியைச் சேர்ந்த ராகுல் ராவிட். இவர் 18 போட்டிகளில் விளையாடி ஆயிரத்து 480 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

ஆஸ்திரேலிய அணிக்கெதிராக உலக லெவன் அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் பெற்ற ஓட்டங்கள், கைப்பற்றிய விக்கெட் என்பவற்றின் விவரங்கள் வருமாறு:-

| வீரர் | போட்டி | ரன் | 100 | 50 | அ.ப. | சராசரி | விக்., | சி.ப. |
|---|---|---|---|---|---|---|---|---|
| லாரா (வெ.இ.,) | 27 | 2470 | 8 | 11 | 277 | 51.45 | - | - |
| டிராவிட் (இந்தியா) | 18 | 1480 | 2 | 8 | 233 | 51.03 | - | - |
| இன்சமாம் (பாக்.,) | 13 | 784 | 1 | 6 | 118 | 34.08 | - | - |
| சேவக் (இந்தியா) | 8 | 763 | 2 | 2 | 195 | 50.86 | - | - |
| காலிஸ் (தெ.ஆ.,) | 12 | 685 | 1 | 4 | 101 | 32.61 | 22 | 3/29 |
| பிளின்டாப் (இங்கி.,) | 5 | 403 | 1 | 3 | 102 | 40.20 | 24 | 5/78 |
| வெட்டோரி (நியூசி.,) | 13 | 400 | - | 2 | 65 | 25.00 | 51 | 7/87 |
| ஸ்மித் (தெ.ஆ.,) | 2 | 114 | - | 1 | 68 | 28.50 | - | - |
| பவுச்சர் (தெ.ஆ.,) | 6 | 264 | - | 1 | 64 | 24.00 | - | - |
| ஹார்மிசன் (இங்கி.,) | 9 | 107 | - | - | 20* | 8.91 | 26 | 5/43 |
| முரளிதரன் (இல.,) | 10 | 76 | - | - | 43 | 10.85 | 50 | 6/59 |
| போலக் (தெ.ஆ.,) | 8 | 278 | - | 1 | 61* | 25.27 | 28 | 7/87 |
| அக்தர் (பாக்.,) | 10 | 85 | - | - | 27 | 6.07 | 31 | 5/21 |

# தோல்வியிலிருந்து மீண்டார் மரியா



ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் இடம்பெற்று வரும் கிளிம்ளின் கோப்பை டெனிஸ் போட்டியில் தோல்வியில் இருந்து மீண்டார் மரியா ஷரபோவா.

உலகின் முதல் தர வீராங்கனையான ரஷ்ய நாட்டைச் சேர்ந்த மரிய ஷரபோவா தனது சொந்த மண்ணில் இடம்பெறும் போட்டியில் பங்குபற்றுவதனால் எதிர்பார்க்கப்படுகிறார். இவர் இச் சுற்றின் இரண்டாம் சுற்றில் ஜேர்மனியின் அண்ணா லீனா குறோயன் அபாரமாக ஆடி முதல் செட்டில் ஷரபோவாவை தோல்வியடையச் செய்து அதிர்ச்சியூட்டினார்.

இரண்டாவது சுற்றில் 4:2 என்று முன்னிலையில் இருந்த இவருக்கு காலில் சுளுக்கு ஏற்பட்டது. இதனால் 6:1, 4:2 என்ற செட் கணக்கில் முன்னிலையில் இருந்தபோதும் மேற்கொண்டு விளையாட முடியாத காரணத்தினால் போட்டியில் இருந்து விலகினார். இதன்மூலம் ஷரபோவா தோல்வியிலிருந்து மயிரிழையில் தப்பினார்.

இதேவேளை, மூன்றாம் தரத்திலுள்ள பிரான்ஸைச் சேர்ந்த மேரி பியர்ஸ் 4:6, 4:2, 6:3 என்ற செற்களில் இத்தாலியின் பிளாவியா பென்னட்டாவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

# ஆனந்துக்கு பிரகாசமான வாய்ப்பு

உலக சதுரங்க சம்பியன் பட்டத்தை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இந்திய வீரர் விஸ்வ்நாதன் ஆனந்திற்கு பிரகாசமாக வுள்ளது.

கடந்த 2 வாரங்களாக சென் லூயிஸ் நகரில் உலக சதுரங்க சம்பயின் பட்டப் போட்டி இடம்பெற்றுவருகிறது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற 12 ஆவது சுற்று ஆட்டத்தில் ஹங்கேரி வீரர் பீட்டர் லீகோவை வென்றார் ஆனந்த். இதனைத் தொடர்ந்து மொத்தம் 7.5 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் உள்ளார் அவர். ரஷ்ய வீரரான பீட்டர் ஸ்விட்லரும் அதே புள்ளிகளையே பெற்றுள்ளார். ஆனால், இவர்களுக்கிடையே போட்டியில்லை.

தொடர்ந்து முன்னிலையில் இருந்து வரும் பல்கேரிய வீரர் தோபா லோவ் தற்போது 9 புள்ளிகளுடன் உள்ளார். எஞ்சியுள்ள இரண்டு சுற்றுகளில் ரஷ்ய வீரர் அலக்சாண்டர் மோரே செவிக்குடனும் ஸ்விட்லருடனும் மோதவுள்ளார் ஆனந்த்.

இந்த நிலையில் ஆனந்த் பட்டம் வெல்ல வேண்டும் என்றால் 2 சுற்றுகளிலும் வெற்றி பெறுவதோடு, முன்னிலையிலுள்ள தோபலோவ், 2 சுற்றுகளிலும் தோல்வி அடைய வேண்டும். இதுதவிர ஒரு போட்டியில் வெற்றிபெற்றாலோ அல்லது 2 போட்டிகளையும் சமன் செய்தலோ அவர் பட்டத்தைத் தனதாக்கிக்கொள்வார். அவை தவறினால் 9.5 புள்ளிகளுடன் ஆனந்த் மகுடம் சூடிவிடமுடியும். இது சாத்தியமாகுமா என்பதே போட்டியின் பரபரப்பு.

மொத்தத்தில் 13 ஆவது சுற்று ஆட்டம் ஒருவித எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அச்சுற்றுள் ஆதம்ஸ் உடன் விளையாடுகிறார் தோபலோவ்.

இதேவேளை மோரே செவிக் 6 புள்ளிகளுடனும், ஹங்கேரிய வீரர் ரஸ்தம் கஸம்ஸ் தானோவ், பீட்டர் லிகோ ஆகியோர் தலா 5 புள்ளிகளுடனும் உள்ளனர்.

# கிரிக்கெட் தர வரிசைப்பட்டியல்

சர்வதேச கிரிக்கெட் சபையினால் வெளியிடப்பட்டுள்ள ஒருநாள் போட்டிக்கான வீரர்களின் தரவரிசையில் முதல்பத்து இடங்களில் 5 இடங்களை இலங்கை வீரர்கள் பெற்றுள்ளனர்.

துடுப்பாட்டத்தில் ஏழாம் இடத்தில் சனத் ஜெயசூரியாவும், 9 ஆம் இடத்தை மார்வன் அத்தப்பத்து, குமார் சங்கக்காரவும் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சு தரவரிசையில் முரளிதரன், சமிந்தவாஸ் ஆகியோர் முறையே 3ஆம், 4ஆம் இடங்களைப் பெற்றுள்ளனர். இதேவேளை இந்தத் தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் இந்திய வீரர்கள் எவரும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

துடுப்பாட்டம்

| நிலை | வீரர் | நாடு |
|---|---|---|
| 01 | கில்கிறீஸ்ட் | ஆஸ்திரேலியா |
| 02 | றிக்கிபொன்டிஸ் | ஆஸ்திரேலியா |
| 03 | ஸ்மித் | தென்னாபிரிக்கா |
| 04 | டிரெஸ்கோதிக் | இங்கிலாந்து |
| 05 | கெய்ல் | மே.இ.தீவுகள் |
| 06 | யுகானா | பாகிஸ்தான் |
| 07 | சன்த் ஜெயசூரிய | இலங்கை |
| 08 | இன்சமாம் உல்ஹக் | பாகிஸ்தான் |
| 09 | மார்வன் அத்தப்பத்து | இலங்கை |
| 09 | குமார் சங்ககார | இலங்கை |

பந்துவீச்சு

| நிலை | வீரர் | நாடு |
|---|---|---|
| 01 | கிளென்மக்ராத் | ஆஸ்திரேலியா |
| 02 | பிரட்லீ | ஆஸ்திரேலியா |
| 03 | முத்தையா முரளிதரன் | இலங்கை |
| 04 | சமிந்தவாஸ் | இலங்கை |
| 05 | ஷேன்பொலக் | தென்னாபிரிக்கா |
| 06 | டானியல்விட்டோர் | நியூசிலாந்து |
| 07 | ஹசன் | பாகிஸ்தான் |
| 08 | மக்கயா நிட்னி | தென்னாபிரிக்கா |
| 09 | ஹெர்மிசன் | இங்கிலாந்து |
| 10 | ஓரம் | நியூசிலாந்து |

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு எமது கல்லூரியின் ஆசிரியர்

**திரு.ச.கிருபானந்தன்**

அவர்கள் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் சிறந்த ஆசிரியராகக் கௌரவிக்கப்பட்டுள்ளமையையிட்டு பெருமையுறுவதுடன் அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

*யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி.* **ஆசிரியர் கழகம்.**

(41504)(42.11.19)

## தேவை

*எமது எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு நிரப்புநர் வெற்றிடங்கள் உள்ளன (பம்பர்) வயது 25 இற்கும் 45 இற்கும் இடைப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.*
*நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு முதலிடம். 22.10.2005 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.*
*தொடர்பு:*

**S.JEYADEVA**
Parameswara Junction,
173, Palaly Road,
Thirunelvely.

(41494)(42-11-19)

### மணப்பெண் அலங்கார வகுப்புகள்

வெள்ளவத்தை Nature Way இல் மணப்பெண் அலங்கார Facials, Wedding Structures, Rich Cakes, B'day Cakes தையல், Flower Decoradions என்பவற்றிற்கான Orders ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றுக்கான வகுப்புகள் சான்றிதழுடன் நடைபெறுகின்றன. T.Luxmy, 18/B, Station Road, Wellawatte. Tel.: 2505325. (41027)


## சாயி நிலையத்தில் ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.16

போயாதின ஆன்மீக நிகழ்வுகள் யாழ். பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

நிகழ்வில் பேராசிரியர் கே.சண்முகநாதனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

(எ-202)

## பளையில் புதனன்று நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஒக்.16

காலங்கடந்த பிறப்பு, இறப்புகளைப் பதிவுசெய்வதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை அன்று பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் தலைமையில் நடைபெறும் இந்த நடமாடும் சேவையில் இதுவரை பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்யத் தவறியோர் அனைவரும் அன்றைய தினம் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று பச்சிலைப் பள்ளி உதவிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

(எ-202)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.செ.திருச்செல்வநாதன் M.Phil (Edu.)
திரு.இ.கந்தசாமி M.Ed.

*மேற்படி பட்டங்களைப் பெற்ற எமது ஆசிரியர்களை கல்லூரிச் சமூகம் வாழ்த்தி மகிழ்கின்றது.*

**ஆசிரியர் கழகம்,**
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம். (C/45641)(42.11.19)

## திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (38657)

தொடர்பு: நடனம், சோமசுந்தரம் பாலர் பாடசாலை, 22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா மருதப்பு



2ஆம் வட்டாரம், நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கம்மா மருதப்பு அவர்கள் 11.10.2005 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் மகளும் நாகேந்திர சடையர் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் மருதப்பு (சின்னத்துரை) அவர்களின் அன்பு மனைவியும் தங்கலட்சுமி (நீராவியடி), சண்முகசுந்தரம் (வட்டக்கச்சி), பவானி (இந்தியா), காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் தயாபரன் (நோர்வே), பாஸ்கரன் (சாவகச்சேரி), திலகம் (நெடுந்தீவு), அன்புலிங்கம் (கொழும்பு), கோபாலரூபன் (லண்டன்), ரஞ்சினி (நாச்சிமார் கோயிலடி), லதா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கனகலிங்கம் (நோர்வே), மகாலட்சுமி, அன்ரன் (இந்தியா), கலா (நோர்வே), நளாயினி, சுகநேசன், மலர்செல்வி (கொழும்பு), மாலதி (லண்டன்), கிரிதரன் (Kiri Arts), சரவணன் ஆகியோரின் அன்பு மாமியாரும் மயூரன், சோபனா, சுகன்யா, நந்தினி, தேவன், ரஞ்சினி, சுபாஜினி, ஞானந்தி, தர்ஷிகா, ராதிகா, கார்த்திகா, பிரசாத், ரேணுகா, தர்ஷிகன், நேமினி, ஜெயவினோதன், கிருஷா, சுகிர்தன், சுசிதன், கேசவன், மயூரி, பிரியா, பிரித்தி, கீர்த்திகன், தினேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், பார்வதிப்பிள்ளை, சிவகாமி, மருதலிங்கம் மற்றும் விசாலாட்சி, குமாரசாமி (C.T.B. லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மணி, பத்தினிப்பிள்ளை, பசுபதி மற்றும் சின்னம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிரந்தர முகவரி:* *2ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு.*

*தற்காலிக முகவரி:* *70, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.*

*தகவல்:* **கணவர், பிள்ளைகள், மருமக்கள்.**

(41480)(42-11-19)


## விவசாயிகளுக்கு தோட்ட மண்வெட்டிகள்

வலி.மேற்கு,ஒக்.16

தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் விவசாயிகளுக்கு தோட்ட மண் வெட்டிகள் விநியோகிக்கப்படுகின்றன.

(எ-175)


## வெளிநாட்டு வேலைவாய்ப்பு (உடனடி பயணம்)

கட்டாரிலுள்ள முன்னணி ஸ்தாபனத்திற்கு பின்வரும் தரத்திலான பணியாளர்கள் தேவை

பெயின்டர்கள் -15- சம்பளம் QR:750/= (S.L.R. - 750/=x28=21,000/=)

அலுமினியம் பெப்ரிகேட்டிங் உதவியாளர்கள் -15- சம்பளம் QR:750/= (S.L.R. - 750/=x28=21,000/=)

அலுமினியம் இட (Site) நிறுவுனர்கள் -15- சம்பளம் QR:750/= (S.L.R. - 750/=x28=21,000/=)

இணைப்பாளர்கள் (வெல்டர்கள்) -5- சம்பளம் QR:750/= (S.L.R. - 750/=x28=21,000/=)

பெண் அலுவலக செயலாளர் சம்பளம் QR:1000/= (S.L.R. - 1000/=x28=28,000/=)

தகுதிகாண் பயிற்சி 3 மாதம் - ஒப்பந்தம் 2 வருடம்
தங்கும் வசதியும் - வைத்தியமும் இலவசம்
ஒப்பந்தம் முடிவுற்றதும் இலவச விமான டிக்கெட் - ஒருமாதம் சம்பளத்துடன் விடுப்பு
தினம் 8 மணிநேர வேலை (வெள்ளி விடுமுறை)

**Rocky's Management (PVT) LTD**
1444/B, 1/, Kotte Road,
Rajagiriya.
Tele:011-2863386/2871669

# United Nations Development Programme

The UNDP Mine Action Project, a Project of UN Support to Mine Action in Sri Lanka, has the following vacancies:
Post of Operations/Information Management Assistant to be based in Jaffna.

## UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME

**Position of Operations / Information Management Assistant (OPS/IMA), JAFFNA.**

### The duties and responsibilities of the OPS/IM Assistant, Jaffna are as follows:

The OPS/IM Assistant will be responsible to the Jaffna Operations Officer. Specific duties will be:

- Assist in maintaining the central filing system for IMSMA especially Task Dossier related documentation;
- Alter status for all objects in IMSMA;
- Assist in the maintenance of the IMSMA data related mine and UXO incidents and accidents including cross-checking with Government departments, UNICEF, ICRC and other related sources;
- Informing the Operations Officer on inaccuracies of incoming reports;
- Liaise with Mine Action, NGOs on IMSMA reports;
- Assist in updating the clearance progress reports by every week;
- Assisting in the maintenance of archived information in IMSMA Archives;
- Completing additional tasks assigned by the Mine Action Officer;
- Other duties as required by either the Mine Action Officer, Operations Officer or the Technical Advisor.

### Educational Background:

- University degree in a computer related subject or G.C.E.(Adv. Level) with 5 years' experience in the relevant field.

**Experience:**

- Experience with database use and/or information Management Systems;
- Excellent computer skills in the Windows 2000 and XP Professional environment with the ability to transfer written text into electronic text;
- Experience in operational issues for Mine Action preferred;
- Very good ability in topographical map reading;
- Accuracy of work and meeting deadlines;

**Others:**

- Fluent in both written and spoken Tamil and English. Knowledge in Sinhala language is an advantage.
- Willing to travel for training if required;
- Possess good work habits with a willingness to work in a multi-cultural environment;
- Flexible and adaptable to any situation;
- Be in good health.

**Duration:** Initially for one year with probable extensions.

**Duty Station:** Jaffna.

Qualified candidates are invited to send an updated CV containing details of educational and professional qualifications and work experience with the names of two, non-related referees and a contact telephone number during working hours, on or before 4pm on the 26th October 2005. The position offers an attractive remuneration package. Applications should be addressed to the Technical Advisor, UNDP Mine Action Project, District Secretariat, Jaffna.


**N.B. Only short-listed candidates will be notified.**

# இனப்பிரச்சினையை முன்னிலைப்படுத்தி இரு வேட்பாளர்களும் உதைபந்தாட்டத்தில்!

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களான மஹிந்த ராஜபக்ஷவும், ரணில் விக்கரமசிங்கவும் அரசியல் வாதிகளின் வழமையான அடிச்சுவட்டில் தமது வெற்றிக்கான இலக்காக நாட்டின் இனப பிரச்சினைத் தீர்வு விடயத்தை முன்னிலைப் படுத்தி மிகச் சாதுரியமாகத் தமது பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதை அவதானிக்க முடிகிறது.

ஒரு புறத்தில் நாட்டின் பிரதமரான மஹிந்த ராஜபக்ஷ சிங்களப் பௌத்த கடும் கோட்பாட்டாளர்களான ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் ஆவண மூலமான உடன்படிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் விபரீதமான அரசியல் செயற்பாட்டில் தம்மைச் சிக்கவைத்துக் கொண்டுள்ளார்.

இவ்விரு கட்சிகளுடன் பிரதமர் செய்து கொண்ட ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிகள் நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வு யுத்தத்தின் மூலமே எட்டப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. அதேவேளை, தமிழ்மக்களுக்குக் குறைந்தபட்ச சலுகைகளை வழங்குவதற்கு மட்டுமே இந்த ஒப்பந்த விதிகள் வழி வகுக்கின்றன. அத்துடன் ஒற்றையாட்சி முறையை வற்புறுத்தும் அரசமைப்பு விதி



களுக்கு அமையும் வகையிலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டும் என்பதை வற்புறுத்தும் வகையிலும் அமைந்துள்ளன.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு வாழ் மக்களுக்கு உதவுவதற்கென உருவாக்கப்பட்ட தற்காலிக நிர்வாகப் பகிர்வு

> *ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு நாட்டின் இனப்பிரச்சினையை முன்னிலைப்படுத்தி இரண்டு வேட்பாளர்களுமே அரசியல் கால்பந்தாட்ட மொன்றில் ஈடுபடுவதாகவே கருத முடிகிறது. இவ்விரு வேட்பாளர்களும் யதார்த்தத்தை எதிர்கொள்ள விரும்பாத போக்கையே கடைக் கொள்ள முயல்வதாகத் தோன்றுகின்றது.*

அமைப்பான அனர்த்த நிவாரணக் கட்டமைப்பைக் கூட ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் எதிர்க்கின்றன. ஆனால், தாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவருடன் நேடியாகப் பேச விரும்புவதாகப் பிரதமர் தெரிவித்த கருத்து ஆச்சரியத்தை ஏற்படுத்தும் விடயமாக அமைந்தது. இதன் மூலம் சிங்கள பௌத்தர்களின் வாக்குகள் தமது வாக்கு வங்கியை நிரப்பும் என்பதோடு, எப்போதுமே ஐ.தே.கட்சிக்கு ஆதரவளிக்கும் வாக்காளர்களது - குறிப்பாக கிழக்கு மாகாணத்து முஸ்லிம் வாக்காளர்களது - ஆதரவையும் திரட்டிக் கொள்வதற்கான முயற்சியே இது என்பது தெளிவாகப் புரிகின்றது.

இதற்கு மற்றொரு புறம், நாட்டின் பொது மக்களது மனச்சார்பின் அடிப்படையில் அமையும் மிதவாதக்கருத்தாக - இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து தமது திட்டத்தின் ஒரு பகுதியாக - ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளுக்கான மீள்கட்டமைப்பு யோசனையை நடைமுறைப்படுத்தப் போவதாகவும் சமஷ்டி முறை நிர்வாகத்தை ஏற்படுத்தப் போவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்து வருகிறார். ஆயினும், உத்தேச சமஷ்டி அரசமைப்பு குறித்த மேலதிக விவரங்களெதனையும் அவர் வெளியிட்டதில்லை.

1994 இல் பொதுஜன முன்னணி அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கமைய 2000 ஆம் ஆண்டில் அரசினால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் சட்டமூலத்துக்கு எதிராக அந்த வேளையில் ரணிலின் தலைமையிலான ஐ.தே.கட்சி எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்கியமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். அதேசமயம், ஐ.தே.கட்சி அரசால் 2002 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட யோசனை 2003 ஏப்ரலில் முன்னெடுக்கப்பட்ட சமயம், ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னதாக வாஷிங்ரனில் கூட்டப்பட்ட மாநாட்டில் கலந்துகொள்ள விடுதலைப் புலிகளுக்கு வாய்ப்பளிக்கப்படாததன் காரணமாக அந்த முயற்சியும் பலனற்றுப் போயிற்று. ரணில் விக்கிரமசிங்கவின் இத்தகைய மிதமான நிலைப்பாடு பாரம்பரிய ஐ.தே.வாக்கு

## அண்மையில் தலைதூக்கிய கிறிஸ்தவ சமயப் பிரச்சினையையும் இவர்களால் தீர்த்து வைக்கமுடியாது

வங்கியை அப்படியே நிலைநிறுத்திக்கொண்டு தமிழர் என்று வர்ணிக்கப்படும் சகலரது வாக்குகளையும் தன்பக்கம் திருப்பும் நோக்கத்தையே கொண்டிருந்ததை அவதானிக்க முடிகிறது.

எதிர்க்கட்சித் தலைவரின் இந்த நிலைப்

> *சர்வதேச மட்டத்தில் விடுதலைப் புலிகளை ஓரம் கட்டும் நடவடிக்கையைத் தென்னிலங்கை அரசியல் மகிழ்ச்சியுடன் வரவேற்றிருப்பதானது அமைதிக்கான போர் என்றது போன்ற தூர நோக்கற்ற அழிவுக்குரிய அம்சமாகவே இருக்கப் போகின்றது.*

பாடு இராணுவ நடவடிக்கைக்கு சகலமட்டங்களிலும் தயக்கம் காட்டப்படுவதையும் வெளிநாட்டு யதார்த்த நிலைமையையும் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்ட புத்திசாதுர்ய தந்திரோபாயம் என்று கருதலாம். இந்த வகையில் வடக்கு - கிழக்கில் வாக்காளர் வருகை குறையுமானால் விக்கிரமசிங்காவுக்கு பிரச்சினையாகவே இருக்கும்.

### சிங்கள மேலாதிக்கப்போக்கு

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை இலக்காகக்கொண்டு நாட்டின் இனப்பிரச்சினையை முன்னிலைப்படுத்தி இரண்டு வேட்பாளர்களுமே அரசியல் கால்பந்தாட்டமொன்றில் ஈடுபடுவதாகவே கருதமுடிகிறது. இவ்விரு வேட்பாளர்களும் யதார்த்தத்தை எதிர்கொள்ள விரும்பாத போக்கையே கடைக் கொள்ள முயல்வதாகத் தோன்றுகிறது.

சிங்கள - பௌத்த பெரும்பான்மை என்ற கழுத்துப் பிடியைத் தளத்தாதவரை இனப்பிரச்சினையை மட்டுமல்ல அண்மைக் காலத்தில் தலை தூக்கியுள்ள கிறிஸ்தவ சமய பிரச்சினையையும் தீர்த்து வைப்பது இலகுவாக இருக்காது.

### கிறிஸ்தவ எதிர்ப்பு

கிறிஸ்தவ மத வழிபாட்டிடங்கள் மீது அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் பாரதூரமானவையாகக் கொள்ளப்படாதது மட்டுமன்றி, அவ்வித குற்றமிழைப்போரைச் சட்டத்தின் முன் நிறுத்த அரசு கடும் அக்கறை எடுத்துச் செயற்படுவதாகத் தோன்றவில்லை. இது மறைமுகமான புறக்கணிப்பு மட்டுமன்றி, சிங்கள பௌத்த

**அம்ரித் முத்துக்குமாரு**

மேலாதிக்கப் போக்கை அனுமதிக்கும் செயற்பாடாகவும் கொள்ளத்தக்கது. கடந்த மூன்றாண்டுகால இடைவெளியில் நாட்டின் பல பகுதிகளில் பெரும்பாலான புனித வழிபாட்டுத் தலங்கள் உட்பட இருநூற்றுக்கும் மேற்பட்ட கிறிஸ்தவ மத நிலையங்கள் தாக்கப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டன.

பௌத்தமதத் தலைவரொருவரின் மறைவின் முதலாவது நினைவு தினத்தன்று கொழும்பில் பிரமாண்டமான கலை நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமையைக் கண்டித்து எதிர்பைத் தெரிவிக்கும் நோக்கில் அந்த நிகழ்ச்சியில் கைக குண்டுத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது. இது தீவிர பௌத்த மத கடுங் கோட்பாட்டாளர்களின் குரோத மனப்பாங்கின் வெளிப்பாட்டுக்கு உதாரணமாக அமைந்தது. அச்சம்பவத்தின் தொடர்ச்சியாகப் பெண்கள் கல்லூரி வளாகமொன்றினுள் நிறுவப்பட்டிருந்த கன்னிமரியாளின் உருவச் சிலை நாசப்படுத்தப்பட்ட சம்பவம் கிறிஸ்தவர்களின் மனதைக் காயப்படுத்தும் வகையில் அமைந்த தொன்று. இந்தச் சம்பவம் ஊடகங்களால் பெரிய அளவில் வெளிப்படுத்தப்படாதது மட்டுமன்றி, முக்கிய கிறிஸ்தவ மதத் தலைவர்கள்கூட அது குறித்து தீவிர கவனம் செலுத்தத் தவறியமை கவலைக்குரியது.

பௌத்தமதத்தின் பாரம்பரிய அடிப்படைத தர்மநெறிகளையே அவமதிக்கும் வகையில் அமைந்ததே இச்சம்பவமாகும். நாட்டில் இன்று பௌத்த மத தர்ம போதனைகள் அவமதிப்புக்கு உள்ளாகி வருகின்றன. அமெரிக்க ராஜாங்க திணைக்களம் காங்கிரஸ் சபைக்குச் சமர்ப்பித்த 2004 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மதச் சுதந்திரம் தொடர்பான அறிக்கை இலங்கையில் மதச் சுதந்திரம் மீறப்படுவதான பல சம்பவங்களைச் சுட்டிக்காட்டியுள்ளது. பௌத்த மத கடுங்கோட்பாட்டாளர்கள் பரந்த அளவில் மதச் சுதந்திரத்துக்கு இடையூறு விளைவிப்பதாகவும், அவர்கள் கிறிஸ்தவ மத வழிபாட்டிடங்களைச் சேதப்படுத்தி, கிறிஸ்தவ மத போதகர்களை அவமதித்து வருவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதமாற்றத் தடைச்சட்ட மசோதா குறித்து ஜனாதிபதித் தேர்தலின் பிரதம வேட்பாளர்கள் இருவரும் கருத்து வெளியிடுவதைத் தவிர்த்து வருவது தற்செயல் அல்ல. நாட்டின் அரசமைப்பின் ஒற்றையாட்சி கட்டமைப்பில் பௌத்தமதம், தேசியக்கொடி, தேசிய கீதம், சட்டங்களை நிறைவேற்றல், கல்வி வசதிகள், தொழில் வாய்ப்பு, பொலீஸ் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுடனான தனி மனிதத் தொடர்புகள் யாவுமே சிறுபான்மையினருக்கு குறிப்பாக தமிழர்களுக்கு மிகவும் பாதகமாகவே இன்றும்கூட இருந்து வருகின்றன.

தமிழ்மக்களையே பெருமளவில் இம்சைக்குள்ளாக்கும் அவசரகாலச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட முறை இதை பிரதிபலிப்பதாய் இருந்தது.

நூறுவீதம் சிங்களவர்களைக் கொண்ட பாதுகாப்புப்படையினரால் அடிக்கடி இன்னல்களுக்குள்ளாக்கப்பட்டுவரும் மலையக மக்களின் இ.தொ.காங்கிரஸின் ஆதரவை மட்டுமே அதுபெற்றுக்கொண்டது. அண்மையில் திருகோணமலையில் பொதுமக்கள் பெருளமவில்கூடும் பொது இடமொன்றில் நிறுவப்பட்ட புத்தர்சிலை விவகாரத்தில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட கெடுபிடிகள் தேசிய இனவாதப் போக்குக்கு இன்னுமொரு உதாரணமாக அமைகின்றது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இவ்விரு பிரதான வேட்பாளர்களில் எவரும்சரி இவ்வித விடயங்களில் அர்த்தமுள்ள விதத்தில் கவனம் செலுத்தி தீர்த்துவைப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

### மீறப்பட்ட வாக்குறுதிகள்

> *கடந்த சில நாள்களின் முன்னர் வெளியிடப்பட்ட ஐ.தே.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண கட்டமைப்பு குறித்த விவரங்கள் தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று உத்தேச சமஷ்டி அரசியல் அமைப்பு முறை குறித்து தெளிவாக அவ் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த எதிர்க் கட்சித் தலைவரின் நிலைப்பாடு சந்தேகத்துக்கு இடமாகிக் காணப்படுகிறது.*

பெரும்பான்மையின இனவாதிகளால் காலத்துக்காலம் தமிழ்மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளால் தமிழ் மக்களில் பலர் தமது உயிர், உடைமைகளை இழக்க நேர்ந்தது. அத்தோடு, அரசியல் தலைவர்களால் பற்பல சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் பின்னர் அவர்களாலேயே மீறப்பட்டன; கைவிடப்பட்டன. இதன் பலனாய் தமிழ் மக்கள் தமது உரிமைகளை அடைவதற்காக ஆயுதப்போராட்ட வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று. சிங்கள பௌத்த கடுங்கோட்பாட்டாளர்களால் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்தோ - குறிப்பாக அண்மையில் கிறிஸ்தவ மத வழிபாட்டுத் தலங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பைத்தியக்காரத்தனமான தாக்குதல்கள் குறித்தோ - தென்பகுதி அரசியல் தலைமைகள் மௌனம் சாதிப்பதையே வழக்கப்படுத்திக் கொண்டுள்ளன. நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஒவ்வொரு அரசுகளும் வெவ்வேறு வித்தியாசம் மிக்க அணுகுமுறைகளையே கையாண்டன. அரசுகளால் ஊக்கப்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் திட்டமிட்ட வகையில் முற்று முழுதாக சிங்கள இனத்தவர்களே குடியமர்த்தப்பட்டமையால், கிழக்கு மாகாணத்தின் பல தமிழ்ப்பகுதிகள் சிங்களக் கிராமங்களாகத் தோற்றமுற்றன. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் அரசுகளால் திட்டமிட்ட வகையில் இவ்வித குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. இவற்றை விட 1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் அரசமொழிச் சட்டமாக உருவாக்கப்பட்டதும், அதனால், தமிழ் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களினின்றும் நிவாரணமளிக்கவென 1957 இல் மேற்கொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் உருவாக்கப்பட்டதும், பின்னர் 1966 இல் டட்லி - செல்வா ஒப்பந்தம் உருவாக்கப்பட்டதும் வரலாற்றுப் பதிவுகளாயிற்றே தவிர பலனேதும் ஏற்படவில்லை. 1972 இல் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் முறை காரணமாக தமிழ்மாணவர்களின் கல்வித் திறமைக்குத் தடைபோடப்பட்டது. 1981 ஆம் ஆண்டில் மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தல் சமயத்தில் தென்கிழக்கு ஆசியாவிலேயே புகழ்மிக்க யாழ்.பொதுநூலகம் தீவிர இனவாத கடுங்கோட்பாட்டாளர்களால் தீயிட்டு அழிக்கப்பட்டது. 1987 இல் அறிமுகப்படுத்தப்பட்ட



மாகாணசபை முறை கூட உரிய பயனளிக்கத் தவறியது. 1995 இல் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வால் தமிழ்மக்கள் சொல்லொணாத் துன்பத்துக்கு உள்ளாக நேர்ந்தது. இவற்றைத் தொடர்ந்து 2000 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு யோசனைகள், மிக அண்மையில் செய்து கொள்ளப்பட்ட ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்கான பொதுக்கட்டமைப்பு உடன்பாடு ஆகிய யாவும் இத்தகைய சிங்களப் பேரினவாதக் கடும் கோட்பாளர்களின் எதிர்ப்பினால் செயலுருப் பெற இயலாது முளையிலேயே கருகிப் போயின. இத்தகைய கடுங்கோட்பாட்டாளர்களால் 1958ஆம் மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இனக் கலவரங்கள் அவ்வேளைகளில் ஆட்சியிலிருந்த அரசுகளுக்கு சர்வதேச ரீதியிலான கணடனங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையை உருவாக்கின.

### தந்திரப்போக்கு

இந்நாட்டில் கௌரவத்துடனும் பாதுகாப்புடனும் ஏனைய அனைத்து இனங்களுக்கும் சமமான நிலையில் வாழ்வதற்கான தமிழ் மக்களின் அபிலாஷை, இவ்வித சிங்கள இனவாத கடும் கோட்பாட்டாளர்களது மிகைப்படுத்தல், தந்திரப்போக்கு, உண்மையை மறைத்தல், சிலசமயம் முற்றுமுழுதான பொய் உரை ஆகியவற்றால் தொடர்ந்து பாதிப்புற்று வந்தது; வருகிறது.

சிறுவர்களைப் படையில் சேர்த்தல் பற்றிய குற்றச்சாட்டு, கருணா பற்றிய பூச்சாண்டி ஆகியவை இவற்றுக்கான உதாரணங்களாகும். பாலியல் தொடர்பு மேற்கொள்வதற்கான சட்டபூர்வ வயதெல்லையைப் 16 வயதிலிருந்து 13 வயதாகக் குறைக்கும் யோசனைக்கு முன்னுரிமையளித்து செயற்பட விழைந்த இந்த நாட்டு அரசின் போக்கு எவ்வளவு தூரம் இளம் சமுதாயத்தின் மீது அக்கறையும் "அதீத" கவனமும் செலுத்துகிறது என்பதற்கு உதாரணமாக அமைகிறது.

**தமிழில்: வசந்தாமணாளன்**

இது ஏற்கனவே இந்த நாடு சர்வதேச ரீதியல் தேடிக்கொண்டுள்ள அபகீர்த்திக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் அமைவதாகும்.

கருணா தரப்பினரை கிழக்கு மாகாணத்தில் ஒரு பெரும் சக்தியாக வெளிக்காட்டி விடுதலைப் புலிகளுக்கு பெரும் சவால் போல உருவாக்க முயல்வது தென்னிலங்கை அரசியலுள்ள ஒரு பகுதியின் கற்பனை நடவடிக்கை. வடக்கு - கிழக்கின் ஒற்றுமையை சீர்குலைக்கும் முயற்சி.

(11 பக்கம் பார்க்க)

## ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக்.16

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் உளநல மேம்பாட்டுக்கென கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையினை சர்வதேச கல்வியகமும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் மேற்கொண்டுள்ளன.

இது தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் சர்வதேச கல்வியகத்தினைச் சேர்ந்த திருமதி அஞ்சலா விஜயரட்ணம், பசில் டி சில்வா ஆகியோரும் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு கருத்துரையாற்றவுள்ளனர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள் ளது.

(த-13)

## புலிகளின் பிரதேசத்துக்கு முகமாலையில் வாக்களிப்பு நிலையம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு கிளிநொச்சி, வடமராட்சி கிழக்கு ஆகிய புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள மக்கள் வாக்களிப்பதற்காக கொத்தணி வாக்களிப்பு நிலையம் முகமாலை சோதனைச் சாவடியில் அமைக்கப்படவுள்ளது.

இந்தத்தகவலைத் தெரிவத்தாட்சி அலுவலரும் யாழ்.மாவட்ட அரச அதிபருமான கே.கணேஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதிக்கான வாக்களிப்பை நடத்துவதற்கான ஏற்பாடுகள் சுமுகமாக நடைபெற்று வருகின்றன.

யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களான கிளிநொச்சி மாவட்டத்தின் 95 வாக்களிப்பு நிலையங்களும் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் 8 வாக்களிப்பு நிலையங்களுக்கும் முகமாலைச் சோதனைச் சாவடியில் கொத்தணி வாக்களிப்பு நிலையம் அமைக்கப் படவுள்ளது.

இந்தக் கொத்தணி வாக்களிப்பு நிலையத்தில் உதவி அரச அதிபர் பிரிவுகள் ரீதியாக வாக்களிப்புப் பகுதிகள் அமைக்கப்படவுள்ளன. இதனால், வாக்காளர்கள் சிரமங்களின்றி வாக்களிக்க முடியும் - என்றார் தெரிவத்தாட்சி அலுவலர்.

(ஒ-202-203)

## நிகொட் திட்டக் கலந்துரையாடல்

வரணி.ஒக்.16

நிக்கொட் உதவித் திட்டத்தின் கீழ் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்ட பயனாளிகளிடையேயான கலந்துரையாடல் மீசாலை கமநலசேவை நிலையத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் நெதர்லாந்தைச் சேர்ந்தவர்களான நிபுணர்கள் பங்குபற்றினர். அவர்கள் பயனாளிகளுடன் திட்டம் பற்றிக் கலந்துரையாடினார். கமத்தொழில்சேவை அபிவிருத்தி உதவி ஆணையாளர் சுந்தரேசன் உட்படப் பல முக்கிய பிரமுகர்கள், விவசாய சம்மேளன பிரதிநிதிகள் ஆகியோர் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

(ஒ-170)

## குறுகிய கால நெல்ரகங்களே இம்முறை விதைப்பு

கடந்த சில தினங்களாக மழை பெய்து வருவதையடுத்து வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் விவசாயிகள் குறுகியகால விதைநெல் ரகங்களைப் பயன்படுத்தி காலபோக விதைப்பில் ஈடுபட்டு வருகின்றனர். நெல்விதைப்புக் காலம் பிந்தியுள்ளதால் ஆறுமாத விளைச்சலையுடைய பாரம்பரிய நெல் இனங்களான மொட்டைக் கறுப்பன், பச்சைப் பெருமாள், ஏச்.4, பெரிய வெள்ளை ஆகிய விதை நெல் வர்க்கங்களைப் பெரும்பாலான விவசாயிகள் இம்முறை விதைக்கவில்லை. மூன்றுமாதம் அல்லது மூன்றரை மாத கால விளைச் சலையுடைய விதைநெல் வர்க்கங்களையே அவர்கள் விதைத்து வருகின்றனர்.

(ஒ-135)

## ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 | 16 |
| * | * |
| 08. | 10 |
| * | * |
| 1946 | 2000 |



### திருமதி தையல்நாகேஸ்வரி அரியநாயகம்

(தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)

திதி:16.10.2005

காலமெல்லாம் எம்முடன் வாழாமல்
கோலமெல்லாம் மாறிநிற்கும் குவலயத்தில்
கலங்கி நாம் கதியற்று நிற்கவிட்டு
ஆலமர் கண்டனடி சென்றதேனோ?
நித்தம் எம் நெஞ்சினிலே உமதுருவம்
நித்திரையிலும் கனவிற் காணுகின்றோம்
வித்தகியே அம்மா எம் அகத்தினிலே
நித்தியமாய் பிறவியெல்லாம் இருப்பீர் அம்மா!

*191, காதி அபூபக்கர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (41468)

- குடும்பத்தினர்.

## ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை

எங்கள் பிரபல ஆயுள் காப்புறுதி க் கூட்டுத்தாபனத்திற்கு முகவர்கள் உடன் தேவை. ஆர்வம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**வயதெல்லை:** **18 - 50 வரை**
**கல்வித் தகைமை:** G.C.E. O/L கணித பாடம் முக்கியம்

காப்புறுதிக் கம்பனி தவிர்ந்த வேறு ஸ்தாபனங்களில் வேலை செய்வோரும் பகுதி நேரமாக இணைந்து கொள்ளலாம்.

ஆர்வம் உள்ளவர்கள் 19-10-2005 இல் இருந்து 21-10-2005 வரை காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 4 மணிவரை நேர்முகப் பரீட்சைக்குத் தங்களது சுயவிவரக்கோவையுடன் சமுகமளிக்கலாம்.

**ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை**

(41393)(50) 55, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

## அருணலு

### பெறுமதிமிக்க பரிசில்களை 5ஆம் ஆண்டு புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.

உங்களுடைய பிள்ளை புலமைப்பரீட்சையில் சித்தியெய்தி அதிகப்படியான புள்ளிகளை 1ம், 2ம் அல்லது 3ம் இடத்தில் அவருடைய பாடசாலையில் பெற்றிருப்பதுடன் பரீட்சை எழுதும் போது அவரது அருணலு கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- மீதியாக இருந்திருந்தால், உங்களுக்கு எதிர்பாராத ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

நீங்கள் அருணலு கணக்கு வைத்திருக்கும் கொமர்ஷல் வங்கி கிளைக்கு பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சென்று பெறுமதிமிக்க பணப்பரிசுகளை தட்டிக்கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு அருணலு கணக்கு திறந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடையவில்லையா?

கொமர்ஷல் வங்கியின் அருணலு - ஒளிமயமான எதிர்காலத்தை புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.

**கொமர்ஷல் வங்கி**
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

# பரீட்சைக்காகப் பட்டபாடுகளை பகிர்கின்றனர் சாதனையாளர்கள்

கடந்த மாதம் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தர பெறுபேறுகளில் வடபகுதியில் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திபெற்ற மாணவர்கள் எத்தகைய வழிகளைக் கையாண்டு இத்தகைய பெறுபேற்றினைப் பெற்றார்கள் என்பதை இனிவரும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டும் முகமாக சாதனை படைத்த மாணவர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துகளைத் தருகின்றோம்.

இந்த மாணவர்கள் எத்தகைய இலக்கினை நோக்கிச் செல்கிறார்களோ? அத்தகைய இலக்கினை வெற்றிகரமாக அடைந்து எமது தாயக மண்ணில் சேவையாற்ற வேண்டு மென்று ஊக்கமளிக்கும் வகையில் உதயனின் இந்தத் தொடர் அமைகிறது.

5

## முயற்சி வீண்போகவில்லை



காராளசிங்கம்
கௌரீசன்
நீர்வேலி அத்தியர்
இந்துக்கல்லூரி
வர்த்தகப்பிரிவு

நீர்வேலியைச் சொந்த இடமாகக்கொண்ட இவர் தனது ஆரம்பக்கல்வியை நீர்வேலியில் உள்ள றோ.க.பாடசாலையில் கற்றவர்.

இவர் தன்னுடைய வெற்றி பற்றி இப்படிச் சொல்கிறார். 'எனக்கு சாதரண தரத்தில் 2ஏ, 2பி, 3சி, 2எஸ்' என்ற பெறுபேறு கிடைத்தது.

வர்த்தகத்துறையினை ஏன் தேர்தெடுத்தீர்கள்?

வர்த்தகத்துறையினைப் படிக்க வேண்டும் என்பது எனது ஆசையாக இருந்தது. அதனால், அத்துறையினைத் தேர்தெடுத்தேன்.

99 ஆம் ஆண்டு எனது தந்தையார் இறந்துவிட்டார் அதன் பின்னர் எனது கல்வி கேள்விக்குறியாகவே இருந்தது. தரம் 9 இல் இருந்து 10 வரை படிப்பில் எனக்கு அறவே அக்கறையில்லை. பாடசாலைக்குக்கூட ஒழுங்காகப் போவதில்லை. பிறகு அம்மாவின் தயவான வேண்டுதலின் பேரில் கூடுதலான கவனமெடுத்துப்படித்தேன்.

உயர்தரப் பரீட்சையில் முதல்தடைவையாக 'ஏ,2பி' என்ற பெறுபேறுதான் கிடைத்தது.

முதற்தடவையிலேயே '3ஏ' எடுப்பேன் என்ற எண்ணம் இருந்தது. ஆனால், அது தோல்வியாகப்போனது. இருப்பினும் 2 ஆவது தடவையாவது அந்த இலக்கினை அடைய வேண்டும் என்ற இலக்குடன் நகர்ந்தேன். அதன்படி முயற்சி தோற்றுப் போகாமல் வெற்றிபெற்றேன்.

இரவு 12 மணி வரையும் படிப்பேன். நான் அதிகாலையில் படிப்பதில்லை. பகலில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதிகம் படிப்பேன்.

விளையாட்டுத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபடுவேன். வலயமட்டத்தில் பல போட்டிகளில் பங்குபற்றியிருக்கிறேன்.

அந்த நேரங்கள் உங்கள் கற்றலுக்குத் தடையாக இருக்கவில்லையா? அப்படி ஒரு தடையும் ஏற்படவில்லை. படிக்கிற நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்தினால் போதும்.

எந்தவொரு மாணவனும் தன்னுடைய ஆரம்பகால பின்னடைவுகளை வைத்துக் கொண்டு எதிர்கால வளர்ச்சியை எடை போடக் கூடாது. முயன்றால் முன்னேறலாம்.

* * *

## ரியூசனுக்கு போனதில்லை



கொன்சாரிஸ்
பீற்றர்
கனிஸ்வினித்திரா
இளவாலை
கன்னியர் மடம்
வர்த்தகப்பிரிவு

சென்யூட் இளவாலையைச் சேர்ந்த இவர் தனது ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை இளவாலை கன்னியார் மடம் பாடசாலையில் கற்றவர்.

இவருடைய சாதனை பற்றி கேட்டபோது இப்படி விவரிக்கிறார்.

எனக்கு ஜி.சீ.ஈ. சாதரண தரத்தில் ஓரளவு கணிசமான பெறுபேறுதான் கிடைத்தது.

இதுவரைக்கும் நான் ரியூசனுக்குச் சென்றதில்லை. பாடசாலையில் கற்பிப்பதை வீட்டில் இரவு 12 மணி வரைக்கும் நன்றாக மீள் பயிற்சி செய்துகொள்வேன்.

உயர்தரம் படிக்கின்றபோது ரியூசனுக்கு போ என்று பலர் என்னை கட்டாயப்படுத்தினார்கள்.

ரியூசனுக்குப் போகாததன் காரணம் என்ன என்று கேட்டதற்கு...

இன்றைக்கு தனியார் கல்வி நிறுவனங்களில் அதிகளவில் கட்டணம் அறவிடுகிறார்கள். ஏன் அப்படி காசு செலவழித்துப் படிப்பான் என்ற எண்ணமும் ரியூனுக்குப் போகாமல் படித்தால் சாதிக்கேலாதா? என்ற எதிர்பார்ப்புடன் சாதித்துக் காட்டவேண்டும் என்ற வைராக்கியத்துடன் முழுமையாக என்னை அர்ப்பணித்துப் படித்தேன்.

என்னுடைய அப்பா அடிக்கடி சொல்லிக் கொள்வது பிள்ளை நாங்கள் தான் படிக்கேல நீயாவது படிக்க வேண்டும் அந்த அன்பான வார்த்தை என்னை மேலும் திடப்படுத்தியது.

இறுதியாக எந்தவொரு மாணவனும் தன்னுள்ளே ஓர் இலக்கினை வைத்து வெற்றிபெற வேண்டும் என்ற துடிப்புடன் செயற்பட்டால் எதிலும் ஜொலிக்கலாம்.

* * *

## கற்ற அன்றே மீட்டலும்



கோபாலசிங்கம்
கார்த்திகன்
சென்ஜோன்ஸ்
கல்லூரி
கணிதப்பிரிவு

யாழ்ப்பாணம் கச்சேரியடியைச் சொந்த இடமாக கொண்ட இவர் தரம் 5 வரை ஜோன் பொஸ்கோ பாடசாலையில் கற்றுபுலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பின்னர் சென் ஜோன்ஸ் கல்லூரியில் இணைந்துகொண்டார்.

இவருடைய சாதனை பற்றி கேட்ட போது... இப்படி விவரிக்கிறார்.

சாதாரண தரப் பரீட்சையிலும் '10ஏ' பெறுபேறுகளைப் பெற்றேன்.


என்னுடைய பெற்றோர் யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிமார்களாகக் கடமையாற்றுகின்றனர்.

உயர்தரத்தில் கணிதத்துறையினை ஏன் தேர்தெடுத்தீர்கள்...? சிறியவயதிலிருந்து என்னுடைய இலக்கு பொறியியலாளராக வேண்டுமென்பதே. அதற்காக அப்பா, அம்மாவினதும் விருப்பத்திற்காகவும் இத்துறையில் என்னை இணைந்தேன்.

கற்றல் முறைகளை எப்படிப் பின்பற்றினீர்கள்? நான் இரவு நேரங்களில்தான் அதிகம் படிப்பதுண்டு. ரியூசனிலும், பாடசாலைகளிலும் கிடைக்கும் பாடக் குறிப்புகளை அன்றன்றே மீட்டல் செய்துவிடுவேன். அத்துடன் நண்பர்களுடன் இணைந்தும் கற்றலில் ஈடுபடுவேன். இதனால் ஒருவருக்குத் தெரியாத விடயங்களை இன்னொருவர் அறிந்து கொள்வோம். இளைய மாணவருக்கு சொல்ல விரும்புவது? கணித பாடம் என்பது மிக இலகுவானது. மன உறுதியுடன் படித்தால் நிச்சயமாக வெற்றிபெறலாம்.

* * *

## அதிகாலையில் படிப்பேன்



இரத்தினசிங்கம்
சிந்துஷா
புத்தூர்
சோமஸ்கந்தாக்
கல்லூரி
கலைப்பிரிவு

வாதரவத்தையைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் ஜி.சீ.ஈ உயர்தரத்தில் சோமஸ்கந்தாக் கல்லூரியில் இணைந்து கொண்டார்.

தந்தையார் விவசாயம் செய்பவர். தாயார் வீட்டுப்பணி செய்பவர். "எனக்கு ஜி.சீ.ஈ. சாதரண தரத்தில் ஏ,பி,7சி என்ற பெறுபேறு கிடைத்தது. எதிர்பார்த்த அளவிற்குக் கிடைக்கவில்லை. ஆனாலும், மனதைத் தளரவிடவில்லை. எப்படியாவது உயர்தரத்தில் '3ஏ' பெறுபேறு எடுக்க வேண்டுமென்ற மன வைராக்கியத்துடன் என்னை முழுமையாக அர்ப்பணித்துப்படித்தேன்.

"இரவு 9 மணி வரைத்தான் படிப்பேன். பகலில்தான் அதிக நேரமெடுத்து படித்துக்கொள்வேன். அதிகாலை 4 மணிக்கெல்லாம் எழும்பிப் படிப்பேன். "எங்கட கிராமத்தில் மின்சார வசதிகள், போக்குவரத்து வசதிகள் எதுவுமே இல்லை. வீட்டில இருந்து நான்கு கிலோமீற்றர் தூரம் சைக்கிள் ஓடித்தான் பாடசாலைக்குப் போறனாங்கள்.

"ஆரம்பித்திலிருந்து இன்று வரைக்கும் குப்பிவிளக்கில்தான் படிச்சனான். அம்மா, அப்பாவின்ர ஒத்துழைப்பு அதிகம் கிடைத்தது.

விளையாட்டுத்துத்துறையில் அதிகளவிலான ஈடுபாடு எனக்கு உண்டு. வலயமட்டம் வரைக்கும் மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றியிருக்கிறேன்.

என்னுடைய எதிர்கால இலட்சியம் வனப்பிழந்து, வசதியீனங்களுக்கு மத்தியில் திண்டாடும் எனது கிராமத்துக்கு என்னால் இயன்றளவு சேவையாற்ற வேண்டுமென்பது தான். அதற்காக கல்வியைத்தான் கருவியாகப் பயன்படுத்தப் போகிறேன்.

"கலைத்துறையில் கற்கின்ற மாணவர்கள் பாடங்களை நன்றாக மனனம் செய்து கொள்ள வேண்டும். அத்துடன் வாசிப்புப் பழக்கத்தையும் அதிகரித்துக் கொள்ள வேண்டும். அன்றன்டு கிடைக்கிற பாடக்குறிப்புகளை உடனுக்குடன் படித்துக்கொள்ள வேண்டும்.

## பரீட்சைக்குப் பயந்ததில்லை



ராதிகா
சிவதாசன்
வர்த்தக பிரிவு
மாவட்ட நிலை 4
மானிப்பாய்
மகளிர் கல்லூரி

நான் தரம் 1-5ஆம் ஆண்டுவரை சங்குவேலி அரசினர் தமிழ்க்கலவன் பாடாசலையில் கற்றேன். தரம் 6 தொடக்கம் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கற்றுவந்தேன். எனக்கு அப்பா இல்லாதபோதும் அம்மா, சகோதரர்கள், நண்பர்கள், அதிபர், ஆசிரியர்கள் கொடுத்த ஊக்கத்தினால்தான் உயர்தரத்தில் '3 ஏ' பெறுபேறு எடுக்கமுடிந்தது. என்னைப் பொறுத்தவரை படிப்புத்தான் குறிக்கோளாக இருந்தது. அதனால், வேறுதுறைகளில் ஈடுபடவில்லை.

சந்திப்பு: அபிமானன்

உயர்தரத்தில் நான் வெற்றிபெற தேடல்கள்தான் உதவியாக அமைந்தது. தற்காலக் கல்வியைப் பொறுத்தவரை புத்தகப் படிப்பு மட்டும் போதாது.

எவ்வளவு தூரம் தேடி நல்லவற்றைப் படிக்கிறோமோ அந்தளவிற்கு எமது அறிவை வளர்த்துக்கொள்ளலாம். நான் காலை 8 மணியிலிருந்து 2 மணிவரை பெரும்பாலும் நூலகத்தில் படிப்பேன். பரீட்சை பற்றி நான் என்றுமே பயப்பட்டதில்லை. காரணம், பயம் ஒரு மாணவனுக்கு அவனுடைய வெற்றிகளுக்குத் தடையாக அமைகிறது.

நான் எப்பொழுதும் மனதை லேசாக வைத்துக்கொள்வேன். அதிகப்படியான சிந்தனைகளைப் பூட்டி வைத்து என்னைக் குழப்பிக் கொள்வதில்லை.

*

# இனப்பிரச்சினையை...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச மட்டத்தில் விடுதலைப் புலிகளை ஓரம்கட்டும் நடவடிக்கையைத் தென்னிலங்கை அரசியல் மகிழ்ச்சியுடன் வரவேற்றிருப்பதானது 'அமைதிக்கான போர்' என்றது போன்ற தூர நோக்கற்ற அழிவுக்குரிய அம்சமாகவே இருக்கப்போகின்றது.

இவை எப்படியிருந்தபோதிலும் விடுதலைப் புலிகள் அமைப்பு தமது ஆயுதப் போராட்டப் பாதையினின்றும் விலகி, பொறுப்புமிக்க அரசியல் அமைப்பாக சகிப்புத்தன்மை, பன்மைத்துவம், ஜனநாயகம் ஆகியவற்றை பேணிச் செயல்பட வேண்டும் என்பதில் கேள்விக்கிடமில்லை. துரதிர்ஷ்ட வசமாக இலங்கை அரசு எல்லா வகையிலும் ஒரு நல்லரசு என்பதற்கான மிகமோசமான உதாரணத்தையே காட்டிநிற்கின்றது. கொடிய மனித உரிமை மீறல்களும் இதில் அடங்கும்.

### பேரினவாத இறுக்குப்பிடி தளர்த்தப்படாத வரை....

மேற்குறிப்பிட்ட வகையில் சிங்கள பௌத்த பேரிவாதிகளின் இறுக்குப்பிடி தளர்த்தப்படாதவரை பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது துர்லபமே.

தமது வணக்கஸ்தலங்கள் தாக்கப்பட்டுச் சேதப்படுத்தப்பட்ட சம்பவங்களின் மூலம் கிறிஸ்தவமக்கள் தங்களுக்கு இழைக்கப்படட பாரபட்சமான செயல்களை உணரும் போது இன்னும் மோசமான, மிக்விரிவான வகையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்டுள்ள கொடுமைகளைக் கண்டும் காணமலிருந்துவிட்டதை இப்போது உணர்கிறார்கள் என்பது கவனத்துக்குரிய விடயமாகும்.

சிங்கள கிறிஸ்தவர்கள் இவ்விதம் திட்டமிட்டு நலிவுபடுத்தப்படுவது குறித்தோ, கட்டாய மதமாற்றத் தடைச்சட்டமூலம் குறித்தோ இவ்விரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் எவ்வித கருத்தையும் வெளியிட முன்வரவில்லை. நாட்டில் சமாதானத்தை உருவாக்கும் முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்தும் அரசசார்பற்ற நிறுவனங்கள் கூட இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த இவ்விரு பிரதான வேட்பாளர்களின் உறுதியான நிலைப்பாட்டை வெளிக்கொணர எதுவித நெருக்குதலும் மேற்கொண்டதாய் இல்லை. அது மட்டுமன்றி கட்டாய மதமாற்றத் தடுப்புச் சட்ட மசோதா குறித்த வேட்பாளர்களின் கருத்தைப் பகிரங்கப்படுத்துமாறு கோரியதாக இல்லை. மாறாக, தற்போது அவைகள் தாம் இலாபகரமானதெனக் கருதும் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளில் பங்கேற்கவும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் பங்கேற்கவுமே ஆர்வம் காட்டி வருகின்றன.

இத்தகைய அரசசார்பற்ற நிறுவனங்கள், பிரதமர் வலியுறுத்தும் ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டின் அடிப்படையில், நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பரந்ததொரு பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டினுள் வைததிருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புடன் எவ்விதம் இணங்கி இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியை முன்னெடுக்க முடியுமெனப் பிரதமரிடம் வினாவ இயலும். யுத்தத்தின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென்பது பிரதமரின் நிலைப்பாடானால், தமது மூன்று வளர்ந்த ஆண் மக்களையும் யுத்த முனைக்கு அனுப்பி நாட்டுக்காகப் போரிட வைக்கப் பிரதமர் தயாராயுள்ளாரா என்பதைத் தெளிவுபடுத்துமாறு இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரதமரிடம் வினாவ முடியும். அதுமட்டுமன்றி யுத்தத்துக்காகச் செலவிடப்படும் நிதி பொதுமக்களுக்குச் சுமையாக அமையும் என்பதையும் பிரதமருக்குச் சுட்டிக்காட்டமுடியும்.

எதிர்க்காட்சித் தலைவர் குறிப்பிட்டு வரும் சமஷ்டி அமைப்பு முறை நாட்டின் ஐக்கியத்துக்குப் பங்கம் ஏற்படாதவிதத்தில் உருவாக்கப்படுவது எப்படி என்பதனைத் தெளிவுபடுத்துமாறு அரசசார்பற்ற நிறுவனங்கள் எதிர்க்கட்சித் தலைவரைக் கோரமுடியும். அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அவரது மனச்சார்பை அவர் தெளிவாக வரையறுத்து வெளிப்படுத்த வேண்டுமென அரசசார்பற்ற நிறுவனங்கள் எதிர்கட்சித்தலைவரை வற்புறுத்திக் கோர இயலும்.

கடந்த சில நாள்களின் முன்னர் வெளியிடப்பட்ட ஐ.தே.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஆழிப் பேரலை அனர்த்த நிவாரண கட்டமைப்பு குறித்த விவரங்கள் தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று உத்தேச சமஷ்டி அரசியல் அமைப்பு முறை குறித்து தெளிவாக அவ்விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால், இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த எதிர்க்கட்சித் தலைவரின் நிலைப்பாடு சந்தேகத்துக்கு இடமாகிக் காணப்படுகிறது.

இவை காரணமாக இன்று ஒரு புறம் சாததானுக்கும் மறுபுறம் ஆழப்பரந்து விரிந்து கிடககும் நீலக்கடலுக்கும் மத்தியில் சிக்குண்டு தவிக்கும் நிலை இந்த நாட்டின் தமிழ் மக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஏற்பட்டிருப்பதால் அவர்கள் அல்லலுற்று அவலப்பட நேர்ந்துள்ளது.

# மனித உரிமை அலுவலகம் மீது கொழும்பில் தாக்குதல்

கொழும்பு,ஒக்.16

கொழும்பு மனித உரிமைகள் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கொழும்பு கின்சி வீதியில் ஐந்துமாடிக் கட்டடங்களுடன் இந்த அலுவலகம் அமைந்துள்ளது.

மேல்மாடி வழியாக அலுவலகத்திற்குள் நுழைந்த நபர்கள் நான்கு மாடிகளிலும் உள்ள அலுவலகங்களுக்குள்நுழைந்து சேதப்படுத்தியுள்ளனர். ஆவணங்கள் மீது மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டுள்ளது. அதனருகில் தீக்குச்சிகளும் இருந்துள்ளதை பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணையகத் தலைவர் ராதிகா குமாரசுவாமி கூறியதாவது:

மனித உரிமை ஆணையகத்தை எச்சரிக்கும் வகையில் சிலர் இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளனர். தற்போது விசாரித்துவரும் வழக்கை இடைநிறுத்துவதற்காக இதுபோன்ற செயலில் அவர்கள் ஈடுபட்டிருக்கலாம்.

இந்தக் கட்டடத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருக்கின்றபோதும் அவர்கள் இதைக் கவனிக்காமல் இருந்துள்ளனர் - என்றார் அவர். (எ)


## அதிரடி விலைக் கழிவில்



வீடுகளில், அலுவலகங்களில் பாவிக்கக்கூடிய முறையில் டயலொக் G.S.M, மொபிரெல் G.S.M மேசைத் தொலைபேசிகள் பூட்டித்தரப்படும். டயலொக் 500/= மொபிடெல் 300/= பக்கேஜ் இணைப்புகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.

ரூ.10,000/= மட்டும்

தொடர்புகளுக்கு:

பவர் செல்லூலர் ரேடிங் கம்பனி

205/01, கஸ்தூரியார் வீதி (ராஜா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.

T.P:-0712-399220,0714-182500,0773518330


## EMPLOYMENT OPPORTUNITIES

World Vision

*__World Vision__ is an International Christian humanitarian, relief and development agency looking for suitable qualified candidates for the positions of,*

**School / Supplementary Feeding Program Monitors @ Jaffna -7 Mullaitivu -10**

School Feeding is, the activities and processes, which aim to increase attendance and enrollment of school children, and increase access to school health services for tsunami-affected school children. World Vision roles in this program activity includes provision of mid-morning meals at schools, provision of cooking/eating utensils, provision of kitchens, food storage rooms, expansion of health-nutrition surveillance at school, provision of health inputs to school children, Health-Nutrition promotion program, and establishing vegetable gardens.

**The purpose of this position is** to implement all School Feeding components including community mobilization, community planning, proper targeting of beneficiary, preparation of activities in a timely manner, including approvals, training of teachers, procurement, storage, implementation, reporting, monitoring and impact assessment.

**Personal Profile:** Maturity and ability to cope in harsh working environments, Good command of oral and written English and the local language, Ability to work under pressure with minimum supervision, Mature individual who is familiar with the culture of the community and willingness to serve. Holder of Motorbike rider's license and Computer literacy in word and excel is an added advantage.

**Admin &Logistics Officers @ Kilinochchi -1 @ Jaffna -1**

A very organized individual with experience in managing an office. Be able to do multi tasks and make administrative decisions. He/She should ensure that all of the administrative requirements are met with very little disruption. Keeping track of all communications and providing operational support, Represents the program office on admin issues, To monitor, organize and supervise the transport, vehicle maintenance, purchasing, warehousing, and distribution of commodities to the target areas. To monitor the receipt of reports/documentation on the status and disposition of commodities from point of origin to end use, security, and other logistics. Ability to lead, plan, and organize. Proven ability in relating with communities and local governmental authorities. Able to work in a harsh and demanding environment, as required. Able to travel extensively.

**Technical Officer / Assistants - Construction @ Jaffna-3, Mullaitivu-1**

Technical assistants are required to work in the supervision of a range of construction projects that include houses, preschools and clinics constructed as part of World Vision Sri Lanka's Tsunami Response Program.

**Personal Profile:** Relevant tertiary qualifications or experience in supervising construction projects. The candidates must be able to understand construction processes, technical drawings and building contracts. Some training will be provided, but we require people who are motivated, able to work as part of a team and able to work in isolated areas. The Technical Assistants will be required to submit weekly verbal and written reports to their District Engineers /Managers. They should have good communication and negotiation skills and should be able to communicate effectively in English and Tamil.

**Nutrition Officer @ Kilinochchi -1**

Nutrition Officer must be able to work with communities, listen to their needs and desires in terms of health and nutrition and operate those needs in accordance with World Visions nutrition strategy. Collaborate in the planning and setting up of the nutrition program; report weekly and monthly on progress of the program to the Nutrition Coordinator. Liaise with authorities, Pre-schools, local NGOs and INGOs to ensure the smooth running of WV activities in the area of operation. Monitor the impact of nutrition education on childcare for better survival, growth and development. Integrate nutrition programs with other programs.

**Personal Profile:** Requires a degree in Nutrition, Must be sensitive to local culture and be knowledgeable of context and needs of the local population. Requires emotional maturity and ability to adjust to harsh living conditions. Strong interpersonal and negotiation skills, Strong capacity building and facilitation skills, Ability to manage project budgets and take on day-to-day financial responsibilities in the office, Knowledge of MS Office, Lotus Notes and statistical programs, Ability to work in a team environment, Strong skills in oral and written English, Strong organizational and management skills.

**World Vision Lanka offers attractive remuneration package, based on individual competence and skills. If you are a person who meets the above requirements and are willing to work with the poor and the oppressed, sometimes in difficult conditions, Please be present for a walk in interview on Thursday, October 20, 2005 after 9.00a.m. at the Kilinochchi Office OR on Monday, October 24, 2005 after 10a.m. at the Jaffna Office with your CV, Contact No., Names and addresses of three non-related referees.**

Thursday @ **World Vision Lanka,**
**284, Jaffna Road, Kilinochchi**

Monday @ **World Vision Lanka,**
**Human Resource Department (Northern Zone),**
**227, 3rd Cross Street, Jaffna.**
**Contact No. 0773-178918**

# கற்கை விடுமுறை பற்றி ஜனாதிபதிக்கு முறையீடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறியினை முழுநேரமாகத் தொடரும் பட்டதாரி ஆசிரியர்கள் தமது கற்கை விடுமுறை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு முறையீடு செய்துள்ளனர்.

அரச வர்த்தமானி விளம்பரத்தில் ஒருவருட சேவைக் காலத்தையுடைய பட்டதாரி ஆசிரியர்கள் மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கமுடியும் எனவும் போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்படும் ஆசிரியர்களுக்கு முழுச் சம்பளத்துடனான கற்கைவிடுமுறை வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், அவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சிற்கு முழுச் சம்பளத்துடனான கற்கைவிடுமுறைக்கு விண்ணப்பித்தபோது அவர்களுக்கு சம்பளமற்ற கற்கை விடுமுறை வழங்கப்படுவதாக அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தார். இதனால் அதிருப்தியுற்றிருக்கும் ஆசிரியர்களே அரச வர்த்தமானி விளம்பரத்திற்கமைவாக தாம் முழுச் சம்பளத்துடனான கற்கை விடுமுறை பெறத் தகைமையுடையவர்கள் என்றும் தமக்கு சம்பளமற்ற கற்கை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்க அறிவுறுத்தல் வழங்குமாறு கோரி ஜனாதிபதிக்கு மேன்முறையீடு செய்துள்ளனர்.

இம்முறையீடானது யாழ்.பல்கலைக் கழக கல்வியியல்துறை, கலைப்பீடாதிபதி, துணைவேந்தர் ஆகியோரது சிபார்சுகளுடன் முன்வைக்கப்பட்டுள்ளது. இவர்கள் இதுதொடர்பாக இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் கடந்த ஜூலை மாதம் முறைப்பாடு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (405)

## லொறி தடம் புரண்டது

கைதடி,ஒக்.15

பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்துகொண்டிருந்த லொறியொன்று வீதியை விட்டு விலகித் தடம்புரண்டது. இச்சம்பவம் கடந்த புதன்கிழமை காலை 11 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

வவுனியாவில் இருந்து பால்மா வகைகளை ஏற்றிக்கொண்டு வந்த இந்த லொறி அப்பகுதியில் மின் இணைப்புவேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மின்சாரசபைக்குச் சொந்தமான ஹன்ரர் வாகனத்திற்கு வழிவிட்டு விலகி முன்னோக்கிச் சென்றபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் சாரதியும் உதவியாளரும் மயிரிழையில் உயிர்தப்பினார்கள். (த-75)

## நடைபாதைக் கடைகள் அகற்றப்பட்டன.

யாழ்ப்பாணம், ஒக.15

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைக்கப்பட்டிருந்த நடைபாதைக் கடைகள், யாழ். போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலீஸாரால் அகற்றப்பட்டன.

கடந்த வியாளக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதிப்பகுதிக்கு திடீரென விரைந்த போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலீஸார் அப்பகுதியில் விற்பனையில் ஈடுபட்டிருந்த நடைபாதைக் கடைகளை உடனடியாக அப்புறப்படுத்தினர். (த-12)

## திலங்க மீண்டும் ஐ.தே.க. பக்கம்

ஐக்கிய தேசியக் கட்சியின் அனுராதபுரம் மாவட்ட அமைப்பாளராக, இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவரும், முன்னணி தொழிலதிபருமான திலங்க சுமதிபால நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான நியமனக்கடிதம் நேற்றுமுன்தினம் ஐதே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் திலங்க சுமதிபாலவிற்கு வழங்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளரான திலங்க கட்சியின் உயர் மட்டத்தினருடன் ஏற்பட்ட அதிருப்தியினால் சில காலம் சற்று ஒதுங்கியிருந்தார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான ரணிலிற்கு முழுமையான ஆதரவு வழங்க அவர் தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சேவை நிறைவில் பாராட்டி வாழ்த்துகின்றோம்



தம் அயராத
உழைப்பால்
சிறப்புறச் சேவையாற்றி
அகவை அறுபதில்
ஓய்வுபெறும் அதிபர்

**திரு.நல்லதம்பி தியாகராசா**
(SLPS - 2 - II)

அவர்களைப் பல்லாண்டு காலம்
வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

(41341) -பாடசாலைச் சமூகம்


## சாவகச்சேரியில்



ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்
வாழும் கலைப் பயிற்சி

இலவச அறிமுக உரை

நாள்:- 17.10.2005 திங்கட்கிழமை மாலை 6.00 மணி
இடம்:- ஐங்கரன் மணிமண்டபம், டச்சு வீதி, சாவகச்சேரி.
பயிற்சி நாள்கள்:- 18.10.2005 முதல் 23.10.2005 வரை
பயிற்சி நேரம் :- காலை 6 மணி முதல் 8 மணிவரை (அல்லது)
மாலை 6 மணி முதல் 8 மணிவரை

மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0777078349

அன்பில் மலருங்கள் உங்களை உணருங்கள்
அனைவரும் வருக! (41454)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தாய்மடி | | இறையடி |
|---|---|---|
| 18 - 04 - 1944 |  | 27 - 09 - 2004 |

அமரர் **தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம்**


திதி:சதுர்த்தசி

(இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் பொறியியலாளர்)

எம் குடும்பத்தின் விளக்காய்
ஒளிச் சுடர் பரப்பி
அதன் ஒளியில் நம்மை
நற்பாதையில் இட்டுச்சென்ற - எம் தெய்வமே
ஆண்டு ஒன்று ஓடினாலும்
எம் நினைவை விட்டு நீங்கவில்லை
உமது நினைவுகள்.

150, நெடுங்குளம் வீதி,
அரியாலை, யாழ். (41339)(50) **மனைவி, மக்கள்.**

# இயக்கர், நாகர் முதல் இராவணன் வரை ஆதிக்குடிகள் அனைவரும் தமிழர்களே!



பெரிய போரதீவு பூ.ம.செல்லத்துரை

**மட்டக்களப்பு பெரிய போரதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தமிழ் உணர்வாளரும் மிக மூத்த அரசியல் தொண்டருமான பூ.ம. செல்லத்துரை–**

**ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டம் தொடங்கிய ஆரம்ப காலத்திலேயே முழு வீச்சுடன் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**இன்னும் சில மாதங்களில் எழுபதாவது அகவையை எட்ட இருப்பினும் அவர் அரசியல் தொண்டில் இப்போதும் மூழ்கியவராகவே உள்ளார். ஐம்பது ஆண்டுகளை அரசியலோடு செலவிட்டவர்.**

**மூத்த ஊடகவியலாளர் என்ற வகையில் தமிழர்களின் உரிமைப் போராட்டம் குறித்த பதிவுகள் அவரிடம் நிறையவே உள்ளன. இலங்கையில் வெளிவந்த, வெளிவரும் அதிக எண்ணிக்கையான பத்திரிகைகளில் தமிழர் அரசியல்,வரலாறு ஆகிய துறைகளில் ஆழமான,ஆய்வுபூர்வமான பல கட்டுரைகளை எழுதியவர் அவர்.**

**தமிழர் அரசியலின் விடிவெள்ளியாக உதித்த தந்தை செல்வாவின் பொடி அடித் தொண்டன் என்று கருதுமளவுக்கு மட்டக்களப்பில் அவருடன் நெருங்கிப் பணியாற்றியவர் பூ.ம.செ.**

**அவர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தவேளை,அவருடன் நடத்திய நேர்காணல் இது. பல அரிய விடயங்களை அவரிடமிருந்து பெற்று உதயன் வாசகர்களுக்குத் தருகிறோம்.**

செவ்வி கண்டவர்
அலங்காரன்

***கேள்வி:*** உங்களது அரசியல் பணி பொதுப்பணி என்பவற்றின் பிரவேசம் எப்போது, எப்படி ஏற்பட்டது?

***பதில்:*** 1953 ஆம் ஆண்டு நான் 8 ஆம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். அப்போதே இலங்கைத் தமிழர்களின் விடுதலை தொடர்பான எண்ணங்கள் எனது மனதில் ஏற்பட்டன.

இலங்கைக்கு கிடைத்த சுதந்திரம் எமக்கானதல்ல என்று தீர்மானித்து அதனை எதிர்க்கவேண்டும் என்ற சிந்தனை தோன்றியது. பாடசாலைகளில் நடந்த விளையாட்டுப் போட்டிகளையும், சுதந்திரதின விழாக்களையும் பகிஷ்கரித்தேன். சுதந்திர தின விழாக்களின்போது எனது கிராமத்தில் பகிஷ்கரிப்பு ஊர்வலங்களை முன்னின்று நடத்தினேன். கறுப்புக் கொடிகள் கட்டி ஆர்ப்பாட்டம் செய்தோம். அப்போதெல்லாம் எனக்கு ஏற்பட்ட உணர்வே என்னை மீண்டும் மீண்டும் அரசியலின் பால் ஈர்த்தது.

### சிங்களம் மட்டும் சட்டம்

1956ஆம் ஆண்டு 'சிங்களம் மட்டும்' சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது நான் உயர்தரத்தில் படித்துக்கொண்டிருந்தேன்.

1956 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி களனியில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் சிங்களம் மட்டும் தான் இந்த நாட்டின் ஆட்சி மொழியாக வேண்டும் என்று ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒரு பிரேரணையைக் கொண்டுவர இருந்தார்.

அன்றைய தினம் சொல்லின் செல்வர் செ.இராஜதுரை தலைமையில் மட்டக்களப்பில் ஒரு மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. அதில் நானும் கலந்துகொண்டேன்.

### தமிழரசுக் கட்சி!

***கேள்வி:*** அரசியல் கட்சியில் இணைந்து நேரடியாக அரசியல் பணி செய்தது எப்போது?

***பதில்:*** எனது உயர்தரப் படிப்பு முடிவடைந்ததும் தமிழரசுக் கட்சியில் நேரடியாக இணைந்து அரசியல் வேலைகளில் ஈடுபட்டேன். தமிழரசுக்கட்சியின் பட்டிருப்புத் தொகுதிக்கான கிளையை எனது கிராமமான பெரிய போரதீவிலே ஆரம்பித்தோம். அதன் மூலம் பல ஆக்கபூர்வமான அரசியல் பணிகளைச் செய்தோம்.

மட்டக்களப்பு மக்களிடம் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகப் பல கூட்டங்கள் நடத்தப்பட்டன. அந்தக் கூட்டங்களில் நான் பங்கேற்றேன்.

இதற்காகவே 'தாயகம்' என்றொரு பத்திரிகையை நான் ஆரம்பித்தேன். அந்தப் பத்திரிகை இலங்கையின் பல பாகங்களுக்கும் அனுப்பப்பட்டது. அதிலே தமிழர்களின் பூர்வீகம் சம்பந்தமாக நான் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளை 'தமிழனே கேள்' என்ற பெயரில் 58 ஆம் ஆண்டு புத்தகமாக வெளியிட்டேன். அந்தப் புத்தகம் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழரசுக்கட்சி மாநாட்டில் வெளியிடப்பட்டது. பின்பு 'தமிழர்களும் தாந்தாவும்' என்ற நூலையும் வெளியிட்டேன். 'நேர்வழி' என்ற பத்திரிகையையும் ஆரம்பித்து நடத்தினோம்.

### சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்து வென்றோம்!

1958ஆம் ஆண்டு பட்டிருப்புத் தொகுதியின் மேற்குப்புறத்தில் 38, 39, 40 ஆவது கொலனிகளில் சிங்களவர்களைக் குடியேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது. அப்போது அதனை எதிர்த்து சி.மு.இராஜமாணிக்கம் தலைமையில் இரவோடிரவாக அங்கு தமிழர்களைக் குடியேற்றிப் பாதுகாத்தோம். அது இன்னும் தமிழர்களின் பிரதேசமாக இருக்கின்றது.

அதேபோல 60 ஆம் ஆண்டளவில் மட்டக்களப்பு இராஜதுரைபுரம் என்ற கிராமத்தில் அரச அதிபர் சிங்களவர்களைக் கொண்டு வந்து குடியேற்றினார். அப்போது நான் மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளராக இருந்தேன். மக்கள் அனைவரையும் திரட்டி கொழும்பில் இருந்த நாடாளுமன்றப் பிரதிநிதிகளையும் அழைத்து பெரும் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

## 10 ஆம் நூற்றாண்டுக்குப் பின்பே இலங்கையை சிங்கள மன்னர்கள் ஆட்சிசெய்யத் தொடங்கினர்

அதன் பெறுபேறாக அந்தச் சிங்களக் குடியேற்றம் வாபஸ் பெறப்பட்டது.

### தமிழர்களே இந்த நாட்டின் மூத்த குடிகள்; பூர்வீக வாசிகள்

***கேள்வி:*** தமிழர்களின் பூர்வீகம் சம்பந்தமாக ஆரம்பகாலங்களில் பல கட்டுரைகளை எழுதியிருக்கிறீர்கள். பூர்வீகம் குறித்த முக்கிய விடயங்கள் சிலவற்றை கூறமுடியுமா?

***பதில்:*** தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வீக மக்கள் என்பதில் எந்தவித சந்தேகங்களும் இருக்கமுடியாது. அரசியல் ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் தமிழர்களே இந்த நாட்டின் மூத்த குடிகள்; பூர்வீக வாசிகள்.

அழிந்து போன இந்துமா சமுத்திரத்தின் ஆழத்தில் பதிக்கப்பட்டிருக்கின்ற குமரி கண்டத்தின் எஞ்சிய பகுதி இலங்கை என்பதில் நான் உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

இந்தக் கருத்துகளை வலியுறுத்தி 'இலங்கையில் தமிழர்களின் பூர்வீகம்' என்ற நூலை வெளியிட்டேன். அந்தப் புத்தகம் இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. எனது வாழ்வில் பெரும்பாலான காலப்பகுதி ஆய்விலும் வரலாற்று நூல் எழுதுவதிலுமே கழிந்தது. தற்போதும் கூட யார் இந்த இராவணன்? என்று நூல் வெளிவரவிருக்கின்றது. இலங்கையில் இராவணன் ஆண்ட வரலாற்றை அது தாங்கி நிற்கிறது.

### இலங்கை அரசியலில் அதிகம் பங்கெடுத்தோரும் தமிழர்களே!

என்னைப் பொறுத்தவரையில் இலங்கையின் அரசியலில் கூடிய பங்களித்தவர்கள் தமிழர்கள்தான். இலங்கையை ஆண்ட மன்னர்கள் தமிழர்களேயன்றி சிங்களவர்கள் அல்லர்.

சிங்கள மொழியின் தாக்கம் 9ஆம், 10 ஆம் நூற்றாண்டுகளுக்குப் பின்பு தான் வெளிப்படுகிறது. அதற்கு முன்னர் சிங்கள மொழிக்கு எழுத்து வடிவங்கள் இருக்கவில்லை. 'எட்மூலர்' என்ற அறிஞர் 'இலங்கையின் சாசன வரலாறு' என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

ஆகவே, 10 ஆம் நூற்றாண்டில் தான் தென்னிந்தியாவில் நடைமுறையில் இருந்த கிரந்த எழுத்துகளின் வடிவமைப்பாக சிங்கள மொழி எழுத்து வடிவம் பெற்றது.

### 'சிங்களம்' என்றால் 'கறுவா' என்று பொருள்!

'சிங்கள' என்ற சொல்லுக்கு சமஸ்கிருதத்தில் கறுவா அல்லது கறுவாப்பட்டை என்று பொருள் உண்டு.

கறுவாத்தோட்டத் தொழில் செய்தவர்களையே சிங்களேயர் என்று வடமொழியில் அழைத்தார்கள். அவர்கள் பாவித்திருந்த மொழிதான் பிற்காலத்தில் சிங்களமாகத் திருத்தப்பட்டது. எனவே, இங்கு ஒரு காலத்தில் கறுவாத்தோட்டம் அதிகமாக இருந்தது. அந்தத் தோட்டங்களில் வேலை செய்தவர்களுக்கு பாவிக்கப்பட்ட பெயர்தான் பின்னர் அவர்களது மொழியின் பெயராகவும் வந்தது.

இந்த வரலாற்று உண்மைகளை ஆராய்ந்து பார்க்கின்றபோது இந்த நாட்டில் 11 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தான் சிங்களவர்களின் ஆட்சி ஏற்பட்டது. அதற்கு முன்னர் ஒருபோதும் சிங்களவர்கள் இந்த நாட்டை ஆழவில்லை என்பது புரியும்.

ஆனால், 17 ஆம் நூற்றாண்டு வரை தமிழர்கள் இந்த நாட்டை ஆண்டிருக்கிறார்கள். சிவனொளிபாத மலையின் நிர்வாகம் 1700 ஆம் ஆண்டு வரை தமிழர்களின் கைகளிலேயே இருந்தது.

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் கண்டியின் அரசனாக்கப்பட்ட போது அவன் தமிழர்களின் கைகளில் இருந்த அந்த நிர்வாகத்தைப் பிடுங்கி பௌத்தர்களின் கையில் கொடுத்தான். கதிர்காமத்தின் நிர்வாகத்தையும் அவன்தான் இடைமறித்து சிங்களவர் கைக்கு மாற்றினான். கண்டிப் பெரஹராகூட 17 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் சிங்கள பௌத்த பெரஹராவாக மாற்றப்பட்டது.

### தமிழரே பௌத்தம் தழுவி சிங்களவர்கள் ஆகினர்!

சிங்களவர்கள் இந்த நாட்டில் எந்த வகையிலும் உரிமையற்றவர்கள் என்று நாம் சொல்லமுடியாது. தமிழர்களே பௌத்த மதத்தைத் தழுவி சிங்களவர்களானார்கள் என்பதுதான் உண்மையான வரலாறு. சிங்களவர்கள் அரசர்களாக இருக்கவில்லை.

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனுக்கும், பிரெஞ்சு மன்னன் 17ஆம் லூயி என்பவனுக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த ஒப்பந்தம் தமிழில்தான் எழுதப்பட்டது. ராஜசிங்கன் தமிழிலேதான் அதில் கையெழுத்திட்டிருக்கிறான். பிரெஞ்சு மன்னன் லூயி பிரெஞ்சு மொழியில் கையெழுத்திட்டிருக்கிறான். இந்த ஒப்பந்தம் இப்போது பாண்டிச்சேரியில் தொல்பொருள் அகத்தில் இருக்கி றது.

***கேள்வி:*** தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளே அல்லர் என்றல்லவா சிங்களவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்...?

***பதில்:*** அவர்கள் தொடர்ந்தும் அப்படித்தான் பொய்யான வரலாறுகளைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். மகாவம்சம் போன்ற நூல்களின் அடிப்படையில்தான் அவர்கள் தமது வாதங்களை முன்வைக்கிறார்கள். இந்த நூல்களை எழுதியவர்கள் கூட தமிழர்கள் தான். மகாவம்சத்தை எழுதிய மகாநாமன் ஒரு தமிழ்த் தேரர்.

தென்னிந்தியாவில் வீர சைவத்தின் எழுச்சி ஏற்பட்டபோது அங்கு பௌத்த மதத்தைத் தழுவியிருந்த தமிழர்கள் தாக்கப்பட்டு இங்கு துரத்தப்பட்டார்கள்.

அவர்கள்தான் இங்குவந்து இலங்கையை ஒரு பௌத்த நாடாக்கவேண்டும் என்ற உணர்வினால் பொய்யான வரலாறுகளை மகாவம்சத்திலே எழுதினார்கள்.

இந்த மகாவம்சம் திருத்தப்பட வேண்டும் என்று சிங்கள அறிஞர்களே கூறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் மகாவம்சத்தில் கூறப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றைக் கூறிக் கொண்டிருப்பது வேடிக்கைக்குரியது; அது நகைப்புக்கிடமானது.

### இயக்கரும் நாகரும் பூர்வீகத் தமிழர்கள்!

***கேள்வி:*** இலங்கையின் ஆதிக்குடிகள் இயக்கரும் நாகரும் தான் என்பது வரலாற்று அறிஞர்கள் பலரதும் கருத்து. அந்த வகையில் இயக்கரும் நாகரும் தமிழர்கள் என்பதை நிரூபிக்கமுடிகிறதா?

***பதில்:*** நாகரும் இயக்கரும்தான் இலங்கையின் பூர்வீகக் குடிகள் என்பதை சிங்கள அறிஞர்களே ஒப்புக்கொள்கிறார்கள். இயக்கர் நாகர் தொடக்கம் இராவணன் வரை இலங்கையின் ஆதிக்குடிகள் அனைவரும் தமிழர்கள் தான் என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன.

நாகர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தமிழ்மொழியுடன் இரண்டறக்கலந்த ஓர் இனம். 'மாந்தையை' ஆண்ட 'மயன்' என்று சொல்லப்படுகின்ற நாக மன்னன் தமிழ் இலக்கண நூல் ஒன்றை எழுதியிருக்கிறார். இந்த நூல் சென்னை அரசால் 1986 ஆம் ஆண்டு வெளியில் கொண்டுவரப்பட்டுள்ளது. அதிலே 2 லட்சம் பாடல்கள் இருக்கின்றன.

இந்த நூலிலே தமிழ்மொழியின் தொன்மை, குமரி கண்டத்தின் தொன்மை, தமிழ் நாடு அழிந்த வரலாறு என்பன கூறப்பட்டிருக்கின்றன. அந்த இலக்கண நூலைத் தந்த நாகவம்சத்து மன்னன் மயன் தமிழனாகவே இருந்திருக்கமுடியும்.

அவரின் வழிவந்தவர்தான் தொல்காப்பியர். 181 நாக இனக் கவிஞர்கள் தமிழில் கவிதைகள் பாடியிருக்கிறார்கள். ஆகவே, நாகபரம்பரை முழுக்க முழுக்கத் தமிழ்ப் பரம்பரை என்பதில் எந்தவித ஐயமும் இருக்க முடியாது.

இலங்கையில் பௌத்தத்தை ஆரம்பித்த தேவநம்பியதீசன் ஒரு நாக மன்னன். அவனுடைய தந்தையின் பெயர் மூத்தசிவன். ஆகவே, அவன் சைவசமயத்தைச் சேர்ந்தவன்; தமிழ்ப்பரம்பரையில் வந்தவன். மன்னனாகிய பின்புதான் பௌத்தத்தை அறிமுகப்படுத்தினான். பௌத்தம் நாகர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு மதம். பௌத்த மதத்தைத் தழுவிய இயக்கர்களும் நாகர்களும் பின்னர் பௌத்த மதத்துக்கு ஒரு தனிமொழி வேண்டும் என்ற காரணத்தினால் கறுவாத் தோட்ட தொழிலாளர்கள் பாவித்திருந்த மொழிவடிவத்தை தாங்களும் பாவிக்கத் தொடங்கி 'சிங்களம்' ஆக்கிக்கொண்டார்கள்.

நாக, இயக்க இனத்தவர்களின் பிற்சந்ததியினரில் ஒரு பிரிவினரே சிங்களவர்களாகினர்.

***கேள்வி:*** பௌத்த மதம் இலங்கையில் செல்வாக்குப் பெற்றது எவ்வாறு?

***பதில்:*** பௌத்த மதத்தை ஆதரித்த மன்னர்கள் பௌத்த மதத்துக்கே சேவை செய்து கொண்டுபோனார்கள். 'மன்னன் எவ்வழி மக்களும் அவ்வழி' என்பதுபோல மன்னனை தொடர்ந்து மக்களும் பௌத்தத்தை ஆதரித்தார்கள். இதனால் மன்னனின் அனுசரணையும் ஆதரவும் பௌத்தத்துக்கு ஏற்பட்டது. இதனால் சைவசமயத்தவர்கள் பலரும் பௌத்த மதத்தை சார்ந்தனர்.

பௌத்த சமயத்தவர்கள் புத்தர் பெருமானை வழிகாட்டியாகக் கொண்டிருந்த போதிலும் இந்துமதக் கடவுள்களையே அவர்கள் வழிபட்டார்கள். இதனால் சமய அடிப்படையில் ஆரம்பத்தில் வேறுபாடுகள் பெரிதாக இருக்கவில்லை.

காலப்போக்கில் பௌத்தராக இல்லாத எவரும் மன்னராக இருக்கமுடியாது என்ற நிர்ப்பந்தம் இங்கு ஏற்பட்டது. கண்டியில் ஆட்சிசெய்த இரண்டாம் ராஜசிங்கன் பௌத்தத்தை ஆதரித்தது குறைவு. அவனது வீட்டு மொழியும் அரசியல் மொழியும் தமிழாகவே இருந்தது. அவனது சமயம் சைவமாக இருந்தது. இதனால், அவன் பூந்தோட்டத்தில் வைத்து வெட்டிக்கொல்லப்பட்டான்.

அதற்குப் பிறகு வந்த கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் போன்ற மன்னர்கள் பயம் காரணமாக பௌத்தத்தையே தழுவினார்கள். கண்டியிலும் சிவனொளிபாதமலை, கதிர்காமம் போன்ற பகுதிகளிலும் வாழ்ந்த தமிழர்கள் தமிழோடும் சிங்களத்தையும் சேர்த்து இணைத்தார்கள். அவர்கள் அப்படியே தொடர்ச்சியாக - 2,3 தலைமுறைகளாக தமிழும் சிங்களமும் பேசிவந்தார்கள்; கால ஓட்டத்தில் தமிழை விட்டு சிங்களத்தை மட்டுமே பேசத் தொடங்கினார்கள். அதனால்தான் அந்தப் பகுதிகளில் இருந்த தமிழர்களும் சைவர்களும் முழுமையாக சிங்களவர்களாக்கப்பட்டார்கள். (வளரும்)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தரமான மெசின் மூலம் அரிந்த கொங்கிறீற் கற்கள், கொங்கிறீற் வேலித் தூண்கள், கட்டடத் தூண்கள், அலங்காரத் தூண்கள், அலங்கார பூங் கற்கள், பூச்சாடிகள் என்பன வேண்டிய அளவு களில் விற்பனைக்குண்டு. தொடர்பு: அகிலன், 17, ஐயனார் கோயில் வீதி (கெங்காதரன் வைத்தியசாலை அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 077 3144884. (40603)

அல்சேஷன் 15 மாதம் நிரம்பிய ஆண் நாயும் பூ மைனா ( Saleenia), கொக்கற்றோ குருவிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சத்தியநாதன், மானிப்பாய் மருதடிப் பிள்ளை யார் கோயில் சந்தி (திருமண சேவைக்கு அருகில்). (41211)

ரெலிக்கொம் தொலைபேசி லைன் P IV Computer, Hand Phone, ஈர உழுந்து அரைக்கும் இயந்திரம்,மா அரைக்கும் கிறைண்டர் (10'') தொடர்பு: S.பிறேம் T.P. 5745. (41491)

## கார் விற்பனைக்கு

லான்சர் (மிற்சுபிசி), டட்சன்சனி ஆகிய இரண்டு கார்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.சூரியகுமார் சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் பார்வை யிடும் நாள் ஞாயிற்றுக்கிழமை. (41507)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

45 நாள் நிறைவு பெற்ற, இருமுறை பூச்சி நீக்கப்பெற்ற, உயர்ரக சுத்தமான ஜேர்மன் செப்பேட் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற் பனைக்குண்டு. பாவோ தடுப்பூசி போடப் பட்டுள்ளது. புத்தகமும் உண்டு. தொடர்பு: 52, மாட்டீன் றோட், யாழ்ப்பாணம். T.P.: 021-222 7535. (41395)

## அலுமாரிகள் தேவை

வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை செய்வதற்குரிய மரத்தாலான அலுமாரிகள் தேவை. தொடர்பு: P.கஜன் T.P. 0777 250326, 0777159564. (41453)

## HOUSE FOR RENT

Good condition house with four Bed rooms for Rent. 290, Kandy Road, Ariyali, Jaffna, suitable for NGO's. Contact Directly. (C/45621)

## காணி விற்பனைக்கு

பளை ஆஸ்பத்திரிக்கு மிக அருகில் உள்ளதும் A-9 பாதைக்கு 50 M தூரத்தில், 10 அடி தனிப்பாதையுள்ள 4 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: மு.சின்னத்துரை, 293/9, ஆனந்தன் வடலி றோட், அரியாலை. கடித மூலமும் தொடர்பு கொள்ளலாம். (41354)

கொக்குவில், நந்தாவில் ஒழுங்கையில் ஐந்து பரப்பு காணியுடன் மேல்மாடி வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P. 077 6500321. (41523)

யாழ்.நகர மத்தியில் மத்திய கல்லூரி விளை யாட்டு மைதானத்திற்கு முன்னால் நல்ல தண் ணீர் கிணறுடனும் ஆறு அறைக் கட்டடத்துட னும் 7½ நிலப்பரப்புக் காணியுடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: நா.குமரகுருபரன், இல.2, சங்கிலியன் வீதி, நல்லூர். T.P.: 0777 111 388, 0777 176909, 021 222 2727. (40958)

யாழ்ப்பாணம், நல்லூர் கோயில் வீதிக்கு அருகில் 1½ பரப்பளவு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: 0776943532. (41516)

யாழ்ப்பாணம், கொட்டடி வைரவர் கோயில் ஒழுங்கையில் 5½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.கனகலிங்கம், 67/43, தர்மலிங் கம் அவெனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம். (41487)

## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, பாண்டியன் தாழ்வு, கொழும் புத்துறை வீதியில் 6 பரப்பில் அமைந்த பெரிய கல்வீடு உடன் விற்பனைக்குண்டு. கிணறு, கராஜ், தண்ணீர்த்தாங்கி ஆகிய சகல வசதி களுடனும் ஒருவித திருத்த வேலை, வெள்ளை யடித்தல், பெயின்ற் அடித்தல் தேவையில்லை. தொடர்பு: R.கோபாலரட்ணம், சட்டத்தரணி, சுண்டிக்குளி. (40971)

## அமெரிக்கா விசா

55050 அமெரிக்கா விசா லொத்தர் Lateat விண்ணப்ப விவரங்களை இலவச மாகப் பெற சரியான விலாசத்துடன் தொடர்பு கொள்க. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரிய வாய்ப்பு Penquin Book Shop B2/F23, Bloementhal Flats, Colombo 13. T.P 0773081764, 2438367 Internet மூலம் அமெரிக்காவிற்கு அனுப்பி Receipt அனுப்பப்படும். (சி-45557)

## ஓடருக்கு செய்து தரப்படும்

மதிய உணவு, இட்லி , தோசை, றவா, இடியப்பம், வடை ஓடருக்கு செய்து தரப் படும். குறைந்தது -100. தொடர்பு: கரன், 23, ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாய். T.P 021 4791114. (41360)

## மணமகள் தேவை

இங்கிலாந்தில் M.Sc. பட்டம் பெற்று அங்கு Local Council இல் Computer Programmer ஆக தொழில் புரியும் 31 வயது 5' 8'' உயரம் உள்ள மணமகனுக்கு நன்கு படித்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்த 25 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. இந்துக்கள், கிறிஸ்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல. 2712, மே/பா. உதயன். (40970)

இங்கிலாந்தில் Barelays Bank இல் Engineer ஆக தொழில்புரியும் 34 வயது 6' உயரம் உடைய மணமகனுக்கு நன்கு படித்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அழகான 25 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. இந்துக் கள், கிறிஸ்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விளம் பரஇல.2711, மே/பா.உதயன். (40172)

றோமன் கத்தோலிக்க 32 வயது டாக்ட ருக்கு அழகிய குடும்பப்பாங்கான 25-29 வயதுக்கிடைப்பட்ட மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். ஜாதகம் இருப்பின் ஜாதகத் துடனும், குடும்ப விவரத்துடனும் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: விளம்பர இல.2715 மே/பா உதயன். (41463)

## திருமண சேவை

தங்களின் சளைக்காததேடல் Professional லா? Acadamic க்கா? எவ்வகைத் தொழில் ஆற்று பவரைத் தாங்கள் தேடினாலும், பிரபல திருமண ஆற்றுப்படுத்துனர் சுயதெரிவு முறை முன் னோடி குரும்பசிட்டியூர் வேல்அமுதனை நாடலாம். விவரங்களை மாலை 4.30 மணிக்கு மேல் வேல்அமுதனிடம் விசாரிக்க. முன் னேற்பாட்டு ஒழுங்குமுறையில் வேல் அமுத னைச் சந்தித்தல் முக்கியம். முகவரி 8/3/3 Mefro Aporlmust (ria 33 rd Lane) 55 Lane, Wellawatte, Colombo - 06. T.P 2360488, 4514396. (C/45615)

## தவறிவிட்டது

தனுசுயா விக்னேஸ்வரமூர்த்தி என்ப வருடைய தேசிய, பல்கலைக்கழக, நூலக அடையாள அட்டைகள், பஸ் பருவகால சீட் டும் கடந்த 10ஆம் திகதி நல்லூருக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் தவறிவிட் டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முக வரியில் ஒப்படைத்துதவவும். 'கங்கை தொலைதொடர்பு நிலையம்' கிராமக்கோடு- பருத்தித்துறை, யாழ்.பூபாலசிங்கம் புத்தக சாலை T.P. 077665042. (41515)

இராமநாதன் ரவீந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 822214185V யாழ்.நகரிற்குள் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் நாராயணா ஹாட்வெயர், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (41517)

## வேலை வாய்ப்பு.

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட விசேட சைக்கிள் மூலம் பாண் விநியோகம் செய்யக்கூடியவர்கள் உடன் வரவும் வெதுப்பகத்தொழில் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை.

**சுவிஸ் வெதுப்பகம்**

*நெல்லண்டை வீதி, தும்பளை, பருத்தித்துறை.*

(21.16.13) *021-2263325* (41316)

## எவரெஸ்ட் கருவேலன் பற்பொடி

முரசுகரைதல், வாய்நாற்றம், பல்வேதனை, பல்லறணை, பல்கூச்சம் ஆகியவற்றை நிவர்த் திப்பதுடன், பற்களையும் நன்கு மினிரச் செய் யும். சகல வியாபார நிலையங்களிலும் 25 கிராம், 15 கிராம் அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். (41316) (21.16.13)

## மாடிக்கட்டடத்தொகுதி வாடகைக்கு

*யாழ்ப்பாணம், நாவலர் வீதி (மனோகராச் சந்திக்கு அருகில் ), 14, அறைகள், 3 மண்டபங்கள், 3 நவீன குளியலறைகள், தனியான கிணறுகள், வாகனத்தரிப்பிடமும் கொண்ட மாடிக்கட்டடத் தொகுதி வாடகைக்கு உண்டு.*

நேரடித் தொடர்பிற்கு முன்னுரிமை

தொடர்புகளிற்கு:- உரிமையாளர்

**க.பாலயோகினி**

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(41383) *021-222 7085, 0777162428* (21.16.13)

## உவமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்




*இலங்கையில் வாழ்ந்து மிருதங்க இசைக்கலைக்கு காத்திரமான ஒரு பரம்பரையை உருவாக்கிய பேராசிரியர் A.S. இராமநாதன் அவர்களின் முதன்மை மாணவரும் எமது குருநாதரும் இராமநாதன் நுண்கலைக்கழக மிருதங்க விரிவுரையாளருமாகிய*

**திரு.சின்னத்துரை மகேந்திரன்**

*அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுதத்துவ மாணிப் (M.Phil.) பட்டத்திற்காக மிருதங்கம் நடனம் சார்ந்த ஆய்வினை மேற்கொண்டு 07.10.2005 இல் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டத்தினைப் பெற்றுள்ளார்.*

*இவர் சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, சுவிஸ்ஸர் லாந்து, இந்திய முதலான நாடுகளுக்குச் சென்று தமது திறமையை அங்குள்ளவர்களும் வியக்கத்தக்க விதத்தில் காட்டியதுமல்லாமல், எமது நாட்டில் பல மாணவர்களை உரு வாக்கி அவர்கள் போட்டிகளில் தங்கப்பதக்கம் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தது மட்டுமல்லாமல் உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு 'தமிழர் முழவியல் 'எனும் ஆய்வு நூலையும் துறைசார்ந்த பல கட்டுரைகளையும் ஆக்கியுள்ளார். இந்நூல் இலங்கை கலாசார அமைச்சின் சாகித்திய விருதினையும் பரிசில் களையும் அகில இலங்கை இலக்கியப் பேரவையின் விருதினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு எமது சமூகத்திற்கு அரிய தொண்டாற்றிவரும் எமது குருநாதரை வாழ்த்துவதோடு, மேலும் பல ஆய்வுகளை மேற்கொண்டு கல்விச் சமூகத்திற்கு அரிய சேவையாற்றுவதற்கு எல்லாம்வல்ல கலைத்தாயே வேண்டி நிற்கின்றோம்.*

*வாழ்த்துவோர்:*

**திருமதி காளகோகிலம் ஜெயம்,**
**திருமதி வாஸஸ்பதி ரஜீந்திரன்,**
**வேல்மாறன், கமலதாஸ், தயா.**

யாழ்ப்பாணம்.
(41512)(42-13-16-21)



# வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய
# தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் - 16.10.2005






இலங்கையில் உள்ள விஷ்ணு ஆலயங்களில் சிறப்பான ஸ்தலம் என தட்சண கைலாய மான்மியத்தில் புகழப்படுவது வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருக்கோயிலாகும்.

அலை கடலின் அருகே அழகிய வெண் மணற் பரப்பில், அரசு, கொன்றை, நாவல், இலுப்பை, சவுக்கு போன்ற நிழல்தரும் விருட்சங்கள் இடையே பார்ப்பவர் மனதில் பக்திப் பரவசம் ஊற்றெடுக்கச் செய்யும் - ஏழு தளமும், எழுபத்தொரு அடி உயரமும் கொண்ட இராஜகோபுரத்துடன் காட்சி தருகின்றது வரலாற்றுப் பெருமைமிக்க ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம். இவ்வாலயத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று சிறப்புகளும் நிறைவாக அமையப்பெற்றது இறையருளேயாகும். கீதோபதேசத்தில் "அதர்மம் மேலோங்கி தர்மம் குன்றும்போது நல்லோரைக் காப்பதற்கும் தீயோரை அழிப்பதற்கும் யுகங்கள் தோறும் நான் அவதரிக்கின்றேன்" என்று அருளிய வாக்கிற்கேற்ப அவதரித்த காத்தற் கடவுளாம் விஷ்ணுபகவான் இங்கு எழுந்தருளி பக்தரைக் காத்தருள்கிறார்.

இவ்வாலயம் அமைந்துள்ள வல்லிபுரம் பகுதி யாழ்ப்பாண இராச்சியத்தின் பழைய இராசதானியாகிய சிங்கைநகர் என்று சுவாமி ஞானப்பிரகாசர், பேராசிரியர் கணபதிப்பிள்ளை போன்ற அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தொல்பொருள் ஆராய்ச்சிக்குட்பட்ட பகுதியாகவும் இது விளங்குவதால் இப்பகுதியில் அமைந்துள்ள இவ்வாலயமும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதெனக் கூறப்படுகின்றது.

அத்துடன், கிருஷ்ண பரமாத்மாவின் ஆயுதமாகிய சக்கரம் கர்ப்பக்கிரகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதும் இங்குள்ள விசேட அம்சமாகும்.

காத்தற் கடவுளாம் விஷ்ணு பகவானின் வாகனமாக அமைந்திருப்பது கருடப் பறவையாகும். தனது அடியார்கள் துன்பத்தில் ஆழ்ந்தவேளை விரைவாக வந்து அருள் புரிவதற்கே விஷ்ணு கருடனை வாகனமாகக் கொண்டுள்ளார் எனப் புராணம் கூறுகிறது.

யானையொன்று தினமும் தாமரைக்குளம் ஒன்றில் இறங்கி நீராடி விட்டு "தாமரைப் பூ"வைப்பிடுங்கி விஷ்ணுவின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பித்து வணங்கி வந்தது. ஒருநாள் தாமரைக் குளத்தில் இறங்கித் தாமரைப்பூ பறித்த போது அக்குளத்தில் இருந்த முதலையொன்று யானையின் காலைக் கவ்விக்கொண்டது. அப்போது யானை "ஆதிமூலமே" என அபயக் குரல் எழுப்பியது. இக்குரல் விஷ்ணுவின் காதில் கேட்டதும் கருடப் பறவையில் சக்க ராயுதத்துடன் விரைந்து வந்த பகவான் முதலை யிடமிருந்து யானையைக் காத்தருளினார் என ஒரு கதை உண்டு.

இந்தக் கதையை அடிப்படையாகக் கொண்டே ஆலய மூலஸ்தானத்தில் காட்சியொன்றும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலய வருடாந்தத் திருவிழா 17 நாள்கள் இடம்பெறுகிறது. கொடியேற்றம் முதல் 6 தினங்களும் சுவாமி உள்வீதியுலா வந்து அருள்பாலிப்பார். 7 ஆம் உற்சவம் முதல் சுவாமி வெளிவீதி உலா வருவார். 8 ஆம் உற்சவம் முதல் 13 ஆம் உற்சவம் வரை கண்ணனின் திருவிளையாடல்களை அடிப்படையாகக் கொண்டு விழாக்கள் இடம்பெறும். 8 ஆம் உற்சவம் விஷ்ணு தனது மருமகனான விநாயகரிடம் செல்லும் கதையை அடிப்படையாகக் கொண்டு குருக்கட்டு விநாயகர் ஆலயத்திற்குச் செல்லும் திருவிழா கொண்டாடப் படுகிறது. அதனைத் தொடர்ந்து 9,10,11,12,13 ஆம் உற்சவங்கள் முறையே வெண்ணெய் திருடுதல், துகில் திருடல், பாம்புநடனம், கம்சன்போர், வேட்டையாடுதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுகின்றன.

## வாழ்வை வளமாக்கும் வல்லிபுர ஆழ்வார்

இந்த ஆண்டு மஹோற்சவத்தில் 15 ஆம் திருவிழாவான இரதோற்சவம் இன்று கொண்டாடப்படுகிறது. நாளை 16 ஆம் உற்சவமான சமுத்திரத் தீர்த்தம் ஆகும். 17 ஆம் உற்சவம் கேணித் தீர்த்தம் ஆகும். மறு நாள் ஆஞ்சநேயர் மடையுடன் உற்சவங்கள் நிறைவு பெறுகின்றன.

இவ்வாலயத்தில் வருடாந்த உற்சவத்தை விட கண்ணன் பிறப்பு, ஆவணி, மார்கழி ஞாயிறு தினங்கள், தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, ஏகாதசி தினங்கள் ஆகியவற்றில் விசேட பூஜைகள் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

-துன்னையூர் அற்புதன்


அலை பொங்கும் கடலோரம்
நிலைகொண்ட மாயவனே போற்றி.
GOPALAA
TELE COMMUNICATION
Manthigai, Puloly
Fax & Photocopy Service. E.Mail :manohar@sltnet.lk
வே.மனோகரன்
துவிச்சக்கரவண்டி,பெற்றோமக்ஸ், கட்டடப் பொருள்கள், மின்சாரப்பொருள்கள் விற்பனையாளர்.
மந்திகை, புலோலி. T.P:2264192

கீதை சொன்ன கண்ணன்
வண்ணத் தேரில் வருகிறான்.
ராஜன் சைக்கிள் வேக்ஸ்
வீடியோ மூவிஸ் சென்ரர்
தொலைத் தொடர்பு
மஹாலக்ஷ்மி பருத்தித்துறை
வாகன சேவை, உல்லாச வாகன சேவை மற்றும் உள்ளூர் விமான ஆசனப் பதிவுகள் செய்து கொடுக்கப்படும். மற்றும் தேவைகளுக்குத் தொர்பு கொள்ளவும்.
Tel: 021 2263248, 021 2263607,
Res: 021 2264013

தேரேறிவரும் மாயவனின்
அருள் வேண்டி நிற்கின்றோம்
இரகுராமன் பல்பொருள் வாணிபம்
24 மணி நேர தொலைத் தொடர்பு, சேவைகள், வீடியோ கசற்கள், வீடியோ CDக்கள் வாடகை சேவைகள் மற்றும் கலர் மீன்கள், மீன் தொட்டிகள், அழகுப் பொருள்கள், லவ் பேட்ஸ் என்பவைகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
631,நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே-021 2228160
கரணவாய் தெற்கு, கரவெட்டி. தொ.பே-021 2263877 077 7222140

தேரேறிவரும் மாயவனின்
அருள் வேண்டி நிற்கின்றோம்
கணேசா ஏஜென்சி
WESTERN UNION பணப் பரிமாற்றம்
Kavitha Traders
உள்ளூர், வெளியூர் சகல பத்திரிகைகளும்
எம்மிடம் பெறுக்கொள்ளலாம்.
No.329B,Main Street,
Point Pedro.
T.P:0212263928

தேரேறிவரும் மாயவனின்
அருள் வேண்டி நிற்கின்றோம்
சகல விதமான ஓவ்செற்பிரிண்டிங்
வேலைகளுக்கும் நாடுங்கள்
தமிழ்ப்பூங்கா அச்சகம்
பிரதான வீதி, நெல்லியடி.
T.P: 021 2264014

கீதை சொன்ன கண்ணன்
வண்ணத் தேரில் வருகிறான்.
செல்லமுத்தூஸ்
புடைவை மாளிகை
பிரதான வீதி, நெல்லியடி.
T.P: 021 2263238

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள்
அனைவரும் பெற்றிட
வேண்டிநிற்கின்றோம்.
யசோ மோட்டோர்ஸ்
இல.163,ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 222 2544

தேரேறிவரும் மாயவா!
எம்மைப் பார்போற்ற
வாழவைக்கும் கோபாலா!
சீமாட்டி புடைவைக்கடல்
15, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

கீதை சொன்ன கண்ணன்
வண்ணத் தேரில் வருகிறான்.
குட்வில் கொமினிக்கேசன்
&
குட்வில் பதிப்பகம்
48, சென்.பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5656

தேரேறிவரும் மாயவனின்
அருள் வேண்டி நிற்கின்றோம்
மலிவு விலைதானா என்பதை
அறிந்து கொள்ளஒரு முறை
விஜயம் செய்துபாருங்கள்.
கிறீன் பலஸ் எம்போரியம்
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள்
அனைவரும் பெற்றிட
வேண்டிநிற்கின்றோம்.
அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
இல.108, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். T.P: 222 5558
கிளை:இல.262, கண்டி வீதி,
சாவகச்சேரி.

கீதை சொன்ன கண்ணன்
வண்ணத் தேரில் வருகிறான்.
நல்ல தரமான மின்சாரப்பொருள்களை
பெற்றுக்கொள்ள நாடுங்கள்:
யாழ்ப்பாண மின்னகம்
141,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 5766
06(94), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 222 2353

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள்
அனைவரும் பெற்றிட
வேண்டிநிற்கின்றோம்.
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836

கீதை சொன்ன கண்ணன்
வண்ணத் தேரில் வருகிறான்.
ஸ்ரீ வல்லிபுரா போட்டோ
வீடியோ, புகைப்படப்பிடிப்பு, அல்பம் தயாரித்தல்
மற்றும் குளிரூட்டிய வான், கார் சேவை.
HOTLINE - 0777-739673
யாழ் நகரில் நல்லூர் ஒளியருவி வீடியோ B 440, பருத்தித்துறை வீதி, நல்லூர். Tel.021-2222604
வடமராட்சியில் ஸ்ரீ வல்லிபுரா போட்டோ புலோலி தெற்கு, புலோலி. Tel.021-2263469

தேரேறிவரும் மாயவனின்
அருள் வேண்டி நிற்கின்றோம்
மேசைத்தொலைபேசிகளை
அதிரடி விலையில் பெற்றுக்கொள்ள.
பவர் செலுலர் ரேடிங் கம்பனி
205/1,கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்
T.P: 0712 399220, 0773518330,
0714182500

கீதை சொன்ன கண்ணன்
வண்ணத் தேரில் வருகிறான்.
WESTERN UNION பணப் பரிமாற்றம்
SRI MUAUGAN
Tele Communication & Agenc Post Office,
303,K.K.S.Road, Jaffna.
T.P.:021 222 5392, Fax:222 3214
E-Mail: srimurugan@erueka.lk

## தென்னங்கன்று விநியோகம்

தென்னை அபிவிருத்திச் சபையினர் மானிய அடிப்படையில் தென்னம் கன்றுகளையும், உரத்தையும் விநியோகிக்கவுள்ளனர்.

அரை ஏக்கருக்கு அதிகமான விஸ்தீரணமுள்ள காணி உள்ளவர்கள் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தம்முடன் தொடர்பு கொண்டு இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தென்னை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர் தெரிவித்தார். (எ-175)




**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி பயிலும் எமது மகன்

**மோகனதாஸ் மோகனலக்ஷன்**

அவர்கள் 2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று மாவட்டமட்டத்தில் 8 ஆவது நிலையிலும் பாடசாலை மட்டத்தில் 2 ஆவது நிலையிலும் சித்தியடைந்தமையை இட்டு அவரை வாழ்த்துவதோடு அவர் சித்தி பெற வழிகாட்டிய அதிபர், உபஅதிபர், ஆசிரியப் பெருந்தகைகள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொக்குவில். (41518)(39-26-19-17) ஆ.மோகனதாஸ் குடும்பத்தினர்.



## சாரதி தேவை

வைற் கவுஸ் அந்தியகால நிறுவனத்திற்கு சாரதி உடன்தேவை. சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவராகவும், 5 வருட அனுபவம் உள்ளவராகவும், மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவராகவும், குடிப்பழக்கம் அற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

*நேரில் தொடர்புகொள்ளவும்:*
**181, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.**
(26-15-17) (41664)


## மோ.சைக்கிளில் வந்தவர்களால் பெண்ணின் தாலிக்கொடி அறுப்பு

### இணுவிலில் பட்டப் பகலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக்.16

வீதியால் நடந்துவந்து கொண்டிருந்த பெண்ணின் தாலிக்கொடியினை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துக் கொண்டு ஓடினர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் இணுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

குறிப்பிட்ட பெண்மணி தனது வீட்டிலிருந்து அருகில் உள்ள கடைக்கு நடந்து சென்றுள்ளார். அச் சமயம் அவ்வழியே மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம்(ஹெல்மற்) அணிந்து வந்த இருவர் பெண்ணின் தாலிக் கொடியினை அறுத்துக்கொண்டு ஓடித்தப்பியுள்ளனர்.

தாலிக்கொடி அறுக்கப்பட்டதை அடுத்து குறிப்பிட்ட பெண் கூக்குரலிட்டுள்ளார். இதனைக் கேட்டு அப்பகுதியில் நின்ற சில இளைஞர்கள் திருடர்களைத் துரத்திச் சென்றுள்ளனர். எனினும் அவர்களால் திருடர்களைப் பிடிக்க முடியவில்லை என்று கூறப்பட்டது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செயயப்பட்டுள்ளது. (எ-13)

## ஐப்பசி பூரணை தின விழா

ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சரின் ஐப்பசி பூரணை தின விழா நாளை திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு கோண்டாவில் நெட்டிலிப்பாய் ஸ்ரீகணேசா சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் 'உலகளாவிய ரீதியில் ராமகிருஷ்ணமிஷன் ஆற்றும் ஆன்மீக, சமூகப் பணிகள்' என்னும் தலைப்பில் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரம இணைச்செயலர் சி.சிவமோகன் கருத்துரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து தீப ஆராதனை தெய்வத் திருமூவரின் திருவுருவப் படங்கள் வழங்குதல், 'எழுந்திரு! விழித்துக் கொள்' என்னும் பொருளில் அமைந்த கண்காட்சி என்பன நடைபெறும். (எ-204)


யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் தலைவரும் பரீட்சைச் செயலருமான
**சைவப்புலவர் வ.கந்தசாமி**
அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தால்
**"தத்துவக் கலாநிதி"**
பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதையிட்டு

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



*தீந்தமிழ் போல் வாழிய நீர் பன்னூறாண்டே*
சுருதியொடு அங்கங்கள் பிரமாணங்கள்
துலங்குசைவ ஆகமங்கள் சொல்முறைகள்
கருதியுணர்ந் ததன்வழியே கடமை யாற்றும்
கந்தசாமி ஐயாகண பதியின் அருளால்
தருமவழி நடந்தடியார் மனங்கள் வாழும்
சங்கைதரு தோற்றமொடு தனைசிவ வாரி
திருமிகவுள் கலாநிதி பாய்த் திகழும் ஜோதி
தீந்தமிழ்போல் வாழியநீர் பன்நூ றாண்டே!

முத்தனைய சைவநெறி மேலு மோங்க
முயன்றுவரு தெய்வீகச் செல்வ னாகி
இத்தரையில் ஆற்றுபணி இதயத் தேற்றி
இகம்புகழும் யாழ்.பல்கலைக் கழகத்தார்கள்
தத்துவக்க லாநிதி யாம் தகைசார் விருதை
தந்துவக்கும் வேளையில்நீர் தாங்கி நிற்கும்
பத்திசைவ பரிபாலன சபையா ரோடு
பற்றுஉன் தொண்டர்களும் வாழ்த்தினோமே!

சிவமணமாய்ப் புவிகமழச் செய்த குருவே
சிவசின்னம் மேனிதனில் தாங்கும் திருவே
நவவரசீய் சாந்தையர்மடப்பிள்ளையாரின்
நல்லருளால் கலாநிதியாய் நாடே போற்றும்
தவமகனாய் வாழ்த்தடையும் பேறும் பெற்றாய்
தங்குமெழில் வயிரவிழா நூற்றாண் டென்றே
உவமையிலா விழாப்பலவும் உலகிற் கண்டே
உத்தமனே இன்தமிழ்போல் உயர்ந்தே வாழி!

ஆக்கம்:
இராசையா குகதாசன்,
நாயன்மார்கட்டு.

வளமார வாழ
உளமார வாழ்த்துவோர்:
**யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர்,**
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*

(த/45654)(39-26-17-19)



# கலாலயா

பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

**20 வருட கால ஈடிணையற்ற பயிற்சி நிலையம்**

**மகளிருக்கான துரித 3 மாத காலப் பயிற்சிகள்**

- **கேக் ஐசிங்:** 22 வகையான கேக் அமைப்புகளில் சகலவிதமான ஐசிங் முறைகள், மாச்சீனி மலர்கள் (Sugar Crafting) செய்தல்.
- **கூந்தல் அலங்காரம்:** 20 வகையான கொண்டைகள் (Hair Styles) போடுதல்.
- **உணவு தயாரித்தல்:** மேலைத்தேச, கீழைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள் தயாரித்தல்.
- Fabric Painting: துணிகளில், சாடியில் வர்ணந் தீட்டுதல்.
- **பூவேலை:** கடதாசியிலும், துணியிலும் மலர்கள், மலர்ச்செண்டு தயாரித்தல்.
- **கைவேலை:** கடதாசி, துணி மற்றும் முத்துக்களில் வேலைப்பாடுகள் செய்தல்.

அடிப்படை முக அழகுக்கலை (Basic Facial), மணமகள் அலங்காரங்கள் வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல் என்பன 2 நாள்கள் நடைபெறும்.

**துரித 6 மாதகால தையல் பயிற்சிகள்.**
(சிறுவர், மகளிருக்கான உடைகள் தயாரிப்பதற்கு பயிற்றுவிக்கப்படும்.)

அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்: 23-10-2005**
**கிழமைநாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்: 24-10-2005**

மேலதிக விவரங்களை வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2.30 வரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

(C/45619)(50-11-15) **பதிவாளர்.**






# பிரின்ஸெஸ் ஓ(f)ப் வேல்ஸ்
## - வைத்தியசாலை -

சேவை மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்ல எங்களுக்கு பின்வரும் சேவைகளுக்கு தகுதியானவர்கள் தேவை

- இரசாயனக்கூட தொழில்நுட்பவியலாளர்கள் (நோய்மூலத்தைக் கண்டறிதல் MRT / இருதய இயக்கம் பற்றி ஆராய்தல் / கதிர் சிகிச்சை ஆய்வு)
- வைத்திய உத்தியோகஸ்தர்கள் (பௌதீகவியலாளர்கள் / ஆலோசகர்கள்)
- மருந்து தயாரித்துக் கொடுப்பவர்கள்
- தாதிமேலாளர்கள் (SISTERS)
- தாதிகள் (ஆண் / பெண்)
- கணக்காளர் / உதவியாளர்
- நிர்வாக உத்தியோகஸ்தர்
- காசாளர்
- வரவேற்பாளர்கள்
- கணனி இயக்குபவர்
- பல் வைத்தியர்

23 நவம்பர் 2005 ஆம் திகதியன்று திறந்து வைக்கப்படுகிறது




விண்ணப்பதாரர் தங்களது கல்வி மற்றும் அனுபவம் சான்றிதழ் பிரதிகளுடன் விண்ணபிக்க வேண்டும். விண்ணப்பங்களை தயவுசெய்து 31.10.2005 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

**வைத்திய இயக்குனர்:**
**132, கச்சேரி நல்லூர் சாலை யாழ்ப்பாணம்.**



ACTION CONTRE LA FAIM

## ADVANCED FIELD OFFICER
## For FOOD SECURITY DEVELOPMENT PROGRAMMES (JAFFNA)

Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in Sri Lanka, since 1997. Current activities are based in Ampara, Batticaloa, Jaffna and Trincomalee districts. For a coming development programme of 2 years, **we require in Jaffna services of a woman as advanced field officer (AFO).**

This position is suitable for an economist or an agriculturalist, who has **strong experience** of minimum 2 years in running livelihood programs and who is more than 27 years old.

The woman will be in charge of development programmes, mainly in the Islands, with a targeted **gender approach** (initiatives with women's group, widows...). She will manage the collection and analysis of livelihood data, the reporting and occasionally the representation at technical meetings in Jaffna. She will join a team of 2 AFOs (Junior and senior) and will work under the responsibility of the Food Security Programme Manager in Jaffna.

Applicants must be charismatic, good in team management, fluent in English and able to do conversation in Tamil. Computer literacy, especially MS Word and Excel is required.

Category: Senior position
Duration: 1 year with insurance coverage.

Apply with in as soon as possible:
**ACF Food Security Job Vacancy**
**No.40, Racca Lane,**
**Chundikuli.**
**Jaffna.** Tel.: 021-222-2465/021 - 222 6993.

(C/45543)

# மாற்றுத்தேவைகளை உடையவர்களுக்கு அடைக்கலம் தரும் இனிய வாழ்வு இல்லம்

வெண் பிரம்புதின விழிப்புணர்வு கடந்த 6ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 19ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அதையொட்டி புதுக்குடியிருப்பில் உள்ள வள்ளிபுனம் இனியவாழ்வு இல்லம் தொடர்பான பார்வையொன்றை இங்கு தருகிறோம்.

சாதாரண ஒரு மனிதனே எந்தவித தடையும் இன்றி வாழ்கையை கொண்டு செல்ல பல பிரயத்தனங்கள் மேற்கொள்கின்ற போது தன்னம்பிக்கையுடன் தங்களாலும் எதுவும் முடியும் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தில் உள்ள 'இனியவாழ்வு இல்லத்தில் வாழும் மாற்றுவலுவுடையவர்கள்.

இங்கு இருப்பவர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர்.

1) உடல் ஊன முற்றோர் (Physical handicap)

2) மன ஊனமுற்றோர் (Mental handicap)

முதலாவதாகக் குறிப்பிட்ட விசேட தேவைக்குட்பட்டவர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

I) உடல் ஊனம் - வாதம், கை கால் முடம் இளம்பிள்ளை வாதம் போன்றவை.

II) புலன்ஊனம் - காது கேளாமை, கண் பார்வையின்மை, வாய்பேசமுடியாதவர்கள்.

இந்த இரண்டாவது பகுதியினரைத் தான் இனிய வாழ்வு இல்லம் அரவணைத்து கல்வி புகட்டி எதிர்கால வாழ்க்கையில் தன்னம்பிக்கையூட்டி அவர்களாலும் எதுவும் முடியும் என்பதை சாதித்துக்காட்ட வழிகாட்டி வருகின்றது. இதில் அவர்கள் வெற்றிபெற்றுவிட்டார்கள் என்றே கூறவேண்டும்.

இவர்களின் விருப்பங்கள் ஏக்கங்கள் பற்றி உதயன் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்கோடு அங்கு சென்றோம்.

**காலை வணக்கம்!**


கேசவன்

வாய் பேசமுடியாதவர் ஆனால், சைகை முறை கல்வியை கற்றிருக்கிறார். ஐந்து விரல்களையும் ஒன்றாக்கி நெற்றியில் வைத்து முன்னுக்கு நீட்டினார். இது காலை வணக்கம். அவர்களது பாசையில் என்றார் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி சாந்தி.

பரபரப்பாக மகிழ்ச்சியுடன் வரவேற்ற கேசவன்தான் செய்துகொண்டிருந்த பூ வேலைகளை எமக்கு காட்டி மகிழ்ந்தார். 'நிறையச் செய்திருக்கிறேன், இன்னும் வேற மாதிரி செய்ய யோசிக்கிறேன்' என்று கூறினார். அவரின் சைகை புரிந்துகொண்டு எமக்கு விளக்கினார் திருமதி சாந்தி.

இங்கு ஆசிரியராக **O/L, A/L** மாணவர்களுக்கு ஒரு வருடமாக கற்பிக்கிறார். அவர் கூறும்போது:

உடுத்துறை மகாவித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், முத்து ஐயன்கட்டு அ.த.க. பாடசாலை, கற்சிலைமடு அ.த.க. பாடசாலை போன்ற பாடசாலைகளின் (தான் கற்பிக்கும் பாடசாலைகளில் இங்கு கற்கும் மாணவர்களைக் கூட்டிச்சென்று கற்பிக்கிறேன். அந்த பாடசாலை மாணவர்களிலும் பார்க்க இந்த இல்லத்தின் மாணவர்கள் திறமைசாலிகளாக இருக்கின்றார்கள். இதனை மேற்படி பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இல்ல மாணவர்களே கற்பிக்கிறார்கள்.


ஆனந்தன்

***கேள்வி:*** சாதாரண ஒரு மாணவனுக்கு கற்பிக்கும் போதும் இந்த மாணணவர்களுக்கு கற்பிக்கும் போதும் என்ன வேறுபாடுகளை இனங்காண்கிறீர்கள்?

***பதில்:*** ஒன்றுமே இல்லை. நிச்சயமாக. சொல்லவேணும் என்பதற்காக சொல்லவில்லை. உண்மை இதுதான் பரீட்சை எழுதும் பொழுது சாதாரண ஒரு மாணவருக்கு 1 மணித்தியாலம் என்றால் கண்பார்வையற்ற மாணவருக்கு 1½மணித்தியாலங்கள். இவர்கள் குற்றெழுத்தில் எழுதுகிறார்கள் அவர்கள் பேனா கொண்டு எழுதுகிறார்கள். இவர்களால் எல்லாம் முடியும் என்று வெளி சமூகத்திற்கு தெரியவேண்டும். இருவருக்கு மிடையே சுமூகமான உறவுகளைப் பேண வேண்டும்.

**எங்களாலும் எதுவும் செய்ய முடியும்**


சோபனா
க.பொ.த.சாதாரண தர மாணவி

எங்களாலையும் எதுவும் செய்யமுடியும் என்று மற்றவர்கள் நம்ப வேணும். எங்களுடைய ஆசிரியர் ஒருவரை ஒரு பாடசாலை அதிபர் கேட்டாராம் இவர்களால் என்ன செய்ய முடியும்? அவர்களுக்கு பயணம் செய்யமுடியுமா? படிப்பிக்க அவர்களால் முடியுமா?

## அன்பு காட்டுங்கள்! அரவணையுங்கள்!! அனுதாபம் வேண்டாம்!!!

என்று... இந்த நிலை மாறவேணும். எங்களாலும் எங்களுடைய முயற்சியில் எதுவும் செய்யமுடியும்.

***கேள்வி:*** பாடசாலையில் படிக்கும் போதும் இங்கு படிக்கும்போதும் (கேள்வியை விளங்கிக்கொண்டு முடிக்க முன்பு பதில்கூற தொடங்கிவிட்டார் சரியான சுறுசுறுப்பு பேர்வழி)

***பதில்:*** பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் போட்பார்த்து கொப்பியில் சாதாரணமாக எழுதுவார்கள். எங்களால் ஏன் முடியாமல் போனது என்று மனதிற்கு கொஞ்சம் கஷ்ரமாய் இருக்கும். நாங்கள் பயன்படுத்தக் கூடிய **(BRAILLER)** மெசின் எங்களின் இல்லத்தில் தேவையான அளவு இல்லை. குற்றெழுத்து மூலமாக குறிப்பிட்ட வேகத்தில் எழுதமுடியாது. ஆசிரியர் கற்பிக்கும்போது விளங்காது விடின் திருப்பவும் கேட்கமுடியாது.

***கேள்வி:*** நீங்கள் ஏன் அவ்வாறு நினைக்கிறீங்கள் அல்லது கேட்காமல் தவிர்கிறீர்கள்?

***பதில்:*** ஒவ்வொரு வகுப்பிலும் எங்களை போல பிள்ளைகள் ஒருவர் அல்லது இருவர் தான் படிக்கிறார்கள் எமக்கு மட்டும் விளங்கவில்லை என்பதற்காக எப்படி திருப்பிக் கேட்பது...?

உதாரணத்திற்கு இலங்கைப்படத்திலோ அல்லது உலக வரைபடத்திலோ ஒரு இடத்தை குறிப்பது பற்றி கற்பித்தால் நாங்கள் எப்படி விளங்கிகொள்வது? களப்பு அல்லது குடா என்றால் அது எப்படி இருக்கும்? சிலரின் உருவங்களை நாங்கள் தொட்டுணர்வதன் மூலம் இனங்காண்போம்.

இவைபோன்ற வசதிகள் இந்த இல்லத்தில் கிடைக்கின்றன. பாடசாலைகளில் இல்லை. பரீட்சையில் தோற்றும் போதும் ஒரேவிதமான வினாக்கள்தான் எங்களுக்கும் தரப்படுகிறது. மற்றைய மாணவர்களுக்கு 1 மணித்தியாலம் என்றால் எங்களுக்கு 1½ மணித்தியாலங்கள். எது எப்படி என்றாலும் நாங்கள் பாடசாலைகளில் மற்ற பிள்ளைகளிலும் பார்க்கக்கூடிய புள்ளிகளை பெறுகின்றோம். மற்ற மாணவர்களின் அன்பும் அரவணைப்பும் தான் எங்களுக்குத் தேவை அவர்களின் அனுதாபம் அல்ல.

**கண்தெரியாதவர்களும் கணனியை இயக்குகிறார்கள்!**

எல்லாபிள்ளைகளிடமும் ஏதோ ஒரு திறமை இருக்கிறது. வெளியில் இருப்பவர்கள் நினைப்பது போன்று இந்த மாணவர்க்ளிடம் முடியாது என்று ஒன்றுமில்லை என்று தான் சொல்லவேண்டும். பல்கலைக் கழகத்தில் 4 மாணவர்கள் படிக்கிறார்கள் ஓ.எல் 5 மாணவர்களும் ஏ.எல் 4 மாணவர்களும் ஓ.எல் இரண்டாம் தரமாக 3 மாணவர்களும் உயர் கல்வி படிப்பவர்கள். இவர்களுக்கான வசதி உரியமுறையில் முடிந்தளவு செய்து கொடுத்திருக்கிறோம்.


யாழினி
கணக்காளர்

பல்கலைக்கழக மாணவர்கள் என்றால் அவர்களின் பயணங்களை அவர்களே செய்கிறார்கள். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கும் சென்று வருகின்றார்கள்.

கணனிக் கல்வி எதிர்வரும் காலங்களில் கட்டாய தேவையாக மாறியுள்ளது. அதிலும் எமது இல்லப்பிள்ளைகள் திறமையானவர்களாக உள்ளனர். கண் தெரியாதவர் என்றால் கணனியை எப்படி கையாள்வது என்று நீங்கள் கேட்கலாம். நேரில் வந்து அனைவரும் பார்க்கலாம் வெளி சமூகத்தின் வரவை நாங்களும் எமது பிள்ளைகளும் எதிர்பார்கிறோம்.

கதைக்க முடியாதவர் இசைக்கருவி வாசிக்கிறார். கண் தெரியாதவர் அருமையாகப் பாடுகிறார்கள். எதிர்வரும் 19ஆம் திகதி புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் இசைக்குழு நடைபெறப்போகிறது.

***கேள்வி:*** நீங்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினை...?

***பதில்:*** ஆம். எங்களிடம் **(BRAILLER)** குற்றெழுத்து மெசின் 10 தான் இருக்கிறது. அவை புலம்பெயர்ந்து வாழ்கின்ற உறவுகள் மற்றும் அன்பர்கள் வாங்கித் தந்தது. எங்களிடம் மொத்தம் 80 பிள்ளைகள் படிக்கிறார்கள். உயர்வகுப்பு அதாவது ஓ.எல். வகுப்புக்கு மேல் 16 பேர் படிக்கிறார்கள். அவர்களுக்கு கட்டாயம் இந்தக் குற்றெழுத்து மெசின் தேவை.

*சந்திப்பு - சி.கேசவன்*
*விசுவமடுச் செய்தியாளர்*

இதேவேளை, மற்றபிள்ளைகளிற்கும் இந்த எழுத்தை கற்பிக்க வேண்டும் அதற்கு கருணை உள்ளம் படைத்தவர்கள் தான் உதவ வேண்டும்.

**சுற்றுலா செல்லும் மாணவர்கள் இங்கும் ஒருமுறை வர வேண்டும்!**

***கேள்வி:*** வன்னி யில் இது போன்ற இல்லம் இதுமட்டும் தான் உள்ளது. சமூகத்தில் இது போன்ற பிள்ளைகள் இன்னும் இருக்கிறார்கள். இப்படியான இல்லம் இருப்பது வெளியில் தெரியாதுள்ளது. எதிர்காலத்தில் மேலும் பிள்ளைகளை இணைத்துக் கொள்வீர்களா? அதற்கான வளங்கள் உங்களிடம் உள்ளதா? இன்னும் எத்தனை பேரை இணைத்து கொள்ளவுள்ளீர் கள்?


திருமதி காந்தி
நிறைவேற்று பணிப்பாளர்

***பதில்:*** எங்களிடம் தற்போது 80 பிள்ளைகள் இருக்கின்றனர். இன்னும் 50 பிள்ளைகளை உள்வாங்க இருக்கின்றோம். எங்களுக்கு இன்னும் பிள்ளைகளை உள்வாங்க நிறைய விருப்பம். தற்போது இடவசதி பிரச்சினையாகவுள்ளது. இதுபோன்ற பிள்ளைகளை உள்வாங்கி கல்வி புகட்டி எதிர்காலத்

(18 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்டப் பிரதேசங்களின் எதிர்கால அபிவிருத்தித் திறமுறைகள்

மூத்த புவியியல் பேராசிரியரான பொ.பாலசுந்தரம்பிள்ளை எழுதிய கட்டுரையின் மூன்றாம் பாகம் கடந்த 2 ஆம் திகதி பிரசுரமானது. மிகுதி இங்கு தரப்படுகிறது.

**யாழ்ப்பாணம் மேற்கு**

இப்பிரதேசத்தின் அபிவிருத்தியை இரு பிரிவுகளாக நோக்குவது சிறப்பானதாகும்.

1. பெரிய யாழ்ப்பாணம்.
2. வலிகாமம்

**பெரிய யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இரு பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாகவுள்ளது. உள்ளூராட்சி அடிப்படையில் யாழ்ப்பாண மாநகரப்பகுதியையும், நல்லூர் பிரதேசசபையையும் உள்ளடக்கியதாகவுள்ளது. மாநகரசபைப் பகுதிக்குள் வாழ்பவர்கள் நகரவாசிகள் எனவும் நல்லூர் பிரதேசசபைக்குள் வாழ்பவர்கள் கிராமவாசிகள் எனவும், வரையறுக்கப்படினும் பெரிய யாழ்ப்பாண பகுதி முழுதும் வாழ்பவர்கள் நகரவாசிகளாவர். நல்லூர் பிரதேசசபை பகுதி யாழ்ப்பாண நகரத்தின் புறநகர்பகுதியாகவுள்ளது. நகரத்துடன் இப்பகுதி பலவழிகளிலும் உள்ளன. வீடு, குடிநீர், கழிவுநீரகற்றல், திடக்கழிவு அகற்றல், முகாமைத்துவம், கல்வி, சுகாதாரம், பொதுவசதிகள், போக்குவரத்து ஆகியவற்றுடன் தொடர்பான பிரச்சினைகளாகவுள்ளன. கடந்த கால யுத்தங்களினால் நகரம் வறுமையடைந்துள்ளது. யாழ்ப்பாண நகரதில் பல தளக்குறிகள் அழிந்து மீள அமைவு பெற்று வருகின்றன. யாழ்ப்பாணம் ஒரு துடிப்பான நகரமாக மாறும்போது அதனால் நகர 222மக்கள் மாத்திரமல்ல மாவட்ட மக்கள், இலங்கை வாழ் தமிழ் மக்கள் தங்களுடைய பல தேவைகளை பூர்த்தி செய்ய முடியும். இதனால், யாழ்ப்பாண நகரை திட்டமிட்ட நிலப்பயன்பாடு நகரில் வீதிவலைப்பின்னல், குடியிருப்புப்பகுதிகள், கைத்தொழில் நிறுவன இடவமைவுகள் அமைய வேண்டும்.

**வலிகாமம்**

வலிகாமம் ஐந்து பிரிவுகளைக் கொண்டது. இங்கு பிரதேசத்தின் அபிவிருத்தி மிகவும் சிக்கல் நிறைந்ததாகவுள்ளது. நிலப்பற்றாக்குறை, விவசாய நிலம் மாற்று தேவைகளுக்கு பயன்படுத்தப்படல், நீர் உவரடைதல், நீர்மாசடைதல், விவசாயம் நலிவடைதல், கைத்தொழில் துறைவளர்ச்சி பெறாதிருத்தல் போன்ற முக்கிய பொருளாதார பிரச்சினையாகவுள்ளன. சேவைத் தொழிலே அண்மைக் காலத்திலே வளர்ச்சிபெற்று வருகின்றது. செறிவான விவசாயக் குடியிருப்புகளாக இருந்தவை இன்று பொருளாதார ரீதியில் விவசாயம் சாரா குடியிருப்புக்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. தொழில் ஆற்றும் பிரதேசம் என்ற நிலையிலும் பார்க்க வாழும் பிரதேசமாகவுள்ளது. இப்பிரதேச மக்கள் தொழிலிற்காக, உழைப்பிற்காகப் பிற இடங்களுக்கு செல்கின்றனர். ஆகவே இப்பிரதேசத்தில் நகர்சார்ந்த சேவைத் தொழில்கள் விருத்தி, கைத்தொழில் விருத்தி செய்ய சந்தை நகர்கள், மத்திய இடங்களான சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், சுன்னாகம், கோண்டாவில், உரும்பிராய், கட்டுவன், இருபாலை, அச்சுவேலி ஆகியவற்றை இப்பிரதேசத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நிலையங்களாகவும் மக்களுக்குத் தேவையான பொருள்கள் சேவைகள் குறிப்பாக கல்வி, சுகாதாரம் ஆகியவற்றை வழங்கும் நிலையங்களாகவும் விருத்தியாக்கப் படவேண்டும்.

வலிகாமம் பகுதியில் காணப்படும் நிலப்பற்றாக்குறைவுக்கு தற்போதைய குடியிருப்பு நிலப்பயன்பாட்டு முறையை மாற்றியமைக்க வேண்டும். நிலங்கள் எல்லாரும் கொடுத்து மீள, ஒரே மாதிரியளவில் குடியிருப்புகள் அமைத்தல் மூலம் பெருமளவான நிலத்தை மீதப்படுத்தலாம். நிலப்பிரச்சினையையும் குறைக்கலாம்.

தொகுத்து நோக்குகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறப்பான இடஞ்சார் அபிவிருத்தியை முன்னெடுக்க மாவட்டத்தின் நிலப்பயன்பாடு, குடிசன மீள்பரம்பல், நகர அபிவிருத்தி, கைத்தொழில் நிறுவன இடவமைவு, சுற்றுலாத்துறை விருத்தி, உட்கட்டமைப்பு விருத்தி ஆகியனவற்றில் தெளிவான கொள்கையும், நீண்டுநிலைக்கக்கூடியதாகவும் செயற்பாடுகளும் இருக்கவேண்டும். உட்கட்டமைப்பில் பின்வரும் சாலைகளின் அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

1. கேரதீவு - சங்குப்பிட்டி
2. அராலி - வேலணை
3. வரணி - குடத்தனை - மணற்காடு
4. கைதடி - நீர்வேலி
5 சாவகச்சேரி - கச்சாய், கிளாலி வரையான கரையோரப்பாதை
6. அச்சுவேலி - கப்பூதுவழியாக சாவகச்சேரி
7. எழுதுமட்டுவாள் - நாகர்கோவில்

இப்பாதைகள் அமைக்கப்படுமிடத்து மாவட்டத்திற்கிடையே போக்குவரத்துவசதிகள் அதிகரிக்கப்படுவதுடன்புதிய நிலப் பரப்புகள் அபிவிருத்திக்கு உட்படும். இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் நெருக்கமான வீதிவலைப்பின்னல் மிகமுக்கியமானதாகும். வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் விபத்துகள் ஏற்படாத சிறந்த வீதி அமைப்புப்பின்னல் தேவையாகவுள்ளது. மாவட்டத்தின் இன்றைய வீதி அமைப்புப்பின்னல் மாவட்டத்தின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக இருப்பினும் இது பண்புரீதியாக தரமுயர்த்தப்பட வேண்டும். இச்செயற்பாட்டின் மூலம் மாவட்டத்தின் சமமான அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும்.

அபிவிருத்தித் தந்திரோபாயத்தில் யாழ்ப்பாணம் கிழக்குப்பகுதி முக்கியத்துவம் பெறின் இது மேற்கு பகுதியில் காணப்படும் பிரச்சினைகள் பலவற்றின் தாக்கத்தை குறைப்பதுடன் மாவட்டத்தில் ஒட்டுமொத்த சமமான வளர்ச்சியை முன்னெடுக்க வழிவகுக்கும். யுத்தத்தால் பின்தள்ளப்பட்ட பிரதேசங்களின் புனர்வாழ்வு, புனருத்தாரணம் சமாதான செயற்பாடுகளுடன் முன்னெடுக்கப்படின் குறுகிய காலத்தில் அபிவிருத்தி இலக்குகளை அடையாலம். இதன் மூலம் இழந்த வாழ்வாதாரங்களை மீளக்கொடுப்பதுடன் மக்கள் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்த முடியும். குறுகிய காலத்தில் அபிவிருத்தி இலக்குகளை அடையலாம். இதன் மூலம் இழந்த வாழ்வாதாரங்களை மீளக்கொடுப்பதுடன் மக்கள் வாழ்க்கைத் தரத்தையும் உயாத்த முடியும்.

(முற்றும்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மாவட்ட விலை மதிப்புத் திணைக்கள சிரேஷ்ட மதிப்பீட்டு உத்தியோகஸ்தரும் எமது சபையின் உப செயலாளருமான **திரு.நாகலிங்கம் ரகுநாதனின்** செல்வப் புதல்வி **எளிலினி** 07.10.2005 இல் யாழ். பல்லைக்கழகத்தில் சித்த மருத்துவமும் சத்திர சிகிச்சைமாணிப் ப்ட்டத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் மேன்மேலும் பல பட்டங்களைப் பெறவேண்டுமென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவரவது குடும்பவாழ்வு சிறப்பாக அமையப் பாராட்டி ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகின்றோம்.

பிறவுண் வீதி,
கொக்குவில். (41554)(30-16-11)

**கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்,**
**போதகர், மூப்பர்கள், ஊழியர்கள்,**
**கல்வாரிக் குடும்பம்.**

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பேரம்பலம்



அல்வாய் வடக்கைச் சேர்ந்த கந்தையா பேரம்பலம் அவர்கள் 15.10.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சித்திராதேவியின் அன்புக் கணவரும் வரோதயன், தாட்சாயிணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செல்வரதி, ஜெயசீலன் ஆகியோரின் மாமனாரும் சுஜிகா, ஆர்த்திகன், வைஷ்ணவி, அர்த்தகி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*நாவலடி சந்தி,*
*அல்வாய் வடக்கு.* (41544)(32-16)

தகவல்:
**வரோதயன் (மகன்).**

## திருமதி மேரி றெஜீனா இம்மனுவேல்

*(இளைப்பாறிய ஆசிரியை, சில்லாலை)*



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி றெஜீனா இம் மனுவேல் அவர்கள் 15.10.2005 சனிக் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அந்திரேஸ்பிள்ளை யோசவ் இம்மனுவேலின் அருமை மனைவியும் யோசி தயானி கிங்சிலி, காலஞ்சென்ற ஜோ தயான் இம்மனுவேல் மற்றும் அன்ரனீற்றா தர்ஷினி டெஸ்மன்ட், மரியெற் தர்மினி இம்மனுவேல் அவர்களின் அன்புத் தாயும் கிங்சிலி மரியநாயகம், அல்பிறெட் டெஸ்மன்ட் நோயல் இம்மனுவேல் ஆகியோரின் மாமியாரும் ஜொயிலின், ஜோயலா, யோகான் பற்றிக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் மேரி மாகிறெட், ஏபிரகாம், காலஞ்சென்ற டோமினிக்கா வேதநாயகம், டொமெற் நில்டா யோனாஸ், பிரான்சிஸ் சேவியர் வில்சன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*சில்லாலை,*
*பண்டத்தரிப்பு.* (41543)(32-16)

தகவல்:
**அருட்பணி A.C.கிறிஸ்ரோப்பர் (மைத்துனர்).**

## நாகப்பர் தம்பித்துரை



குடாரப்பு, நாகர்கோவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகப்பர் தம்பித்துரை அவர்கள் 14.10.2005 வெள்ளிக்கிழமை கிளிநொச்சி திருநகரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மனோரஞ்சிதமலர், நவரட்ணவேல் (இலங்கை மின்சாரசபை பி.பொ.மு (வட) அலுவலகம்), சபாரத்தினம் (மதுவரித் திணைக்களம், சங்கானை), இலங்கைரத்தினம் (சிறாப்பர், கச்சேரி, வவுனியா), சிறிரஞ் சனிதேவி (மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி) காலஞ்சென்ற குணரத்தினம், கோகிலரஞ்சிதம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நடராசா, ரஞ்சிதா (பொது சுகாதார சகோதரி, கோப்பாய்), டெல்லி அன்ரனீற்றா, கலாநிதி (ஆசிரியை, இறம்பைக்குளம், மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா), சுந்தரமூர்த்தி (பணிப்பாளர், பொருண்மிய மதி யுரையகம், கிளிநொச்சி), சோதிசிவம் ஆகியோரின் அன்பு மாமனாரும் அனுசுயா, அச்சுதன் (பொருண்மிய மதியுரையகம்), சிந்துஜன், சஞ்சயன் மீரா, பாரதி, பதுமன், பரதன், அனுசன், சிவ சூரியன், சபாதினி, ஆருதன், சாமினி, ஆருண்யா ஆகியோரின் அன்புப் பேரனும் சுபானுஜனின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.10.2005 வெள்ளிக் கிழமை மாலை 5 மணியளவில் திருநகரிலுள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநகர் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மஞ்சுளா பேக்கரியடி,*
*திருநகர்,*
*கிளிநொச்சி.* (41547) (39-32-16)

தகவல்:
**குடும்பத்தினர்,**
குடாரப்பு, நாகர்கோவில்.

# பனம்பொருள் உற்பத்தி பயிற்சிநெறி

வலி.தெற்கு,ஒக்.16

பனம்பொருள் உற்பத்தி தொடர்பான பயிற்சிநெறியொன்று வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படவுள்ளது.

அண்மையில் கந்தரோடையில் திறந்து வைக்கப்பட்ட கிராமிய உற்பத்தி மையக் கட்டடத்தில் இந்தப் பயிற்சிநெறி இடம் பெறும் என்றும் - இதற்கென 25 பயிற்சியாளர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர் என்றும் - கூறப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபையினால் நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சிநெறிக்கு வேண்டிய இடம், தளபாடம் போன்ற வசதிகளை வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் ஒழுங்கு செய்து கொடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-152)

# மாற்றுத் தேவைகளை...

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் சொந்தக்காலில் நிற்கக்கூடியவர்களாக மாற்ற வேண்டும். நிறையப் பெற்றோர்கள் எங்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். உரிய வயதில் உரிய நடவடிக்கைகள் எடுக்காததினால் வயது கூடிய பிள்ளைகள் வயது குறைந்த கல்வியை கற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

இருந்த போதிலும் கற்கவேண்டும் என்ற அவர்களது ஆசை இருப்பதால் கல்வி புகட்டுவதில் எங்களுக்கு சிக்கல் இல்லை. வரும் மாதம் அளவில் மாவட்ட ரீதியில் விழிப்புணர்வு நடவடிக்கை ஒன்றை செய்யவுள்ளோம். அனைவரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு கணனி தையல் பூவேலை இசை நடனம் போன்றவற்றை கற்பிக்கிறோம். சில மாதங்களுக்கு முன்னர் கணனியை பாவிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

முன்பு எல்லாம் கணனி என்றால் என்ன என்று தெரியாமல் இருந்தவர்கள் கண்காட்சியில் தொட்டுணர்ந்தவர்கள் இன்று கணனியில் கெட்டிக்காரர்களாக உள்ளனர்.

*கேள்வி:* வெளியில் உள்ளவர்களுக்கு குறிப்பாக கல்விச் சமூகத்திற்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

*பதில்:* கல்விச் சமூகம் தான் இந்த மாணவர்களை கண்ணெடுத்து பார்க்கவேண்டும் இன்று கல்விச் சுற்றுலா என்று நிறைய இடங்களை கொழும்புப் பக்கம் பாய்ப் பார்க்கிறார்கள் அவர்கள். இங்குவந்து போகவேண்டும். கல்விச் சமூகம் இவர்களைப் பார்க்க வருகின்ற போது எங்களுக்கும் எங்கள் பிள்ளைகளுக்கும் ஒரு உந்துதல் ஏற்படும். ஒரு படி மேலே முன்னேற முடியும்.

வெளியில் இருக்கிற மாணவர்கள் இப்படி படிக்கிறார்கள். நாங்களும் அப்படிப் படிக்க வேணும். வெளி மாணவர்களும் இவ்வாறு மாறி சிந்திக்கின்ற போது ஒரு உந்துதல் ஏற்படும். வெளி மாணவர்கள் தங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள் என்று எண்ணம் இவர்களுக்கு வரும்.

மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்கின்ற போது இனியவாழ்வு இல்லத்திற்கும் அவர்கள் சுற்றுலா வர வேண்டும். பிள்ளைகளும் நிறைவடைவார்கள். கல்வி தொடர்பான கருத்துப் பரிமாறல்கள் உருவாகும். ★


**படிவம்**

உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் (SLIATE) 2006 கல்வியாண்டுக்கு மாணவர் அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் உண்டு.
முடிவுத் திகதி:
16.11.2005
Bharathi Pathippakam.
430, K.K.S. Road, Jaffna.


## காணி, கடை விற்பனைக்கு

*யாழ்.ஐயனார் கோயில் வீதியில் 6¾ பரப்புக் காணி கிணறு, மலசல கூட வசதியுடனும் (தட்டாதெருச் சந்திக்கு அருகில்) மற்றும் யாழ். கஸ்தூரியார் வீதியில் மேல்மாடியுடன் கூடிய கடையும் விற்பனைக் குண்டு.*
T.P.No.: 021 222 5048 (41546)(42-32-16)
00442088935774. (லண்டன்)

## பிற்போடப்பட்டுள்ளது

*நாவற்குழி வடக்கு, செல்வநகர், அருள் சனசமூக நிலையத்தின் கட்டட வளர்ச்சி நிதிக்காக 16.10.2005 இன்று நடைபெற விருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் 16.11.2005 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.*

(41548)(42.32.16) **தலைவர்.**

## தவறிவிட்டது

*பல்கலைக்கழக பட்டமளிப்பு அங்கிகள் (Cloak) இரண்டும் அத்துடன் பதக்கம் இரண்டும் பையுடன் உடுப்பிட்டி சந்திக்கும் வல்லைப் பாலத்திற்கும் இடைப்பட்ட பாதையில் தவறி விழ்ந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

**சுமன் வீடியோ கடை,**
**உடுப்பிட்டிச் சந்தி,**
*(41542)(26-32-16)* **உடுப்பிட்டி.**

# 8ஆவது ஆண்டு க...னிைர்ப்பூக்கள்

| இங்கு | | அங்கு |
|---|---|---|
| 30 | | 14 |
| - | | - |
| 08 |  | 10 |
| - | | - |
| 1926 | | 1997 |

## அமரர் க.குலசேகரம்பிள்ளை J.P.

*ஆனதோ எமைப் பிரிந்து ஆண்டுகள் எட்டு*
*போனதோ உம் நினைவுகள் எமைவிட்டு*
*காலங்கள் ஓட ஓடக் கனக்குதே நெஞ்சு*
*கோலங்கள் கொடுத்திட்டீர் கொஞ்சமோ இங்கு*
*சீர்பெற்று சிறக்க வைத்தீர் சிலகாலம்*
*பேர்பெற்று பெருமை தந்தீர் பெருங்காலம்*
*ஊர்மெச்ச உயர்த்திவிட்டீர் ஒருகாலம்*
*ஊன்ஊருகி உயிர் உருகி உதிரத்தால் உயர்த்திவிட*
*வான் பொய்த்த பயிராக நாங்கள் வாடிவிட்டோம்*
*நெஞ்சு தணலாகி நெக்குருகி நீர் முட்டும் கண்களோடு*
*குஞ்சுகளாய் குலம் விளங்கும் பிஞ்சுகளாய் குமுறுகிறோம் நெஞ்ச புண்களோடு*
*கதைத்து சிரித்து காதல் கனிவு தர கர்த்தா நீரில்லை*
*பதைத்து சிரித்துபார்ப்பீரே அந்தப் பாசப்பார்வை பட்டுத் தெரிக்கவில்லை*
*குழைத்து, பிடித்து, வைத்து குறிப்பால் காட்டும் சோற்றுப் பிடி எங்கே*
*இழைத்து களைத்து வந்த இனிப்பால் கூட்டும் சத்த இடி எங்கே*
*யாரொடும் நோவோம் யார்க்கு எடுத்துஉரைப்போம்*
*பாரொடு விண்ணாண்ட பெரிய கேணியான் விழுபனையாள்*
*தேதொடும் வந்து தேவனை அழைக்க தெண்டனிட்டு பணிவோமே.*

ஓம் சாந்தி! சாந்தி!!சாந்தி!!!

*'பழமுதிர்ச்சோலை', எழுதுமட்டுவாழ்.* **குடும்பத்தினர்.** (41550)(32-16)

# 31ஆம் நாள் நினைவலைகள்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1933 | | 2005 |
| 12 |  | 09 |
| 17 | | 17 |

## அமரர் இராஜா கனகசபை *(பாபு)*

*(கும்பிளாவளை அளவெட்டி) திதி : 16-10-2005*

*எம் நெஞ்சமெல்லாம் நிறைந்த தந்தையே*
*ஏன் இந்த அவசரம் உங்களுக்கு*
*ஆருயிர் அன்னை போல் நீங்களும் தெய்வமாகிவிட்டீர்கள்*
*ஆயிரம் கைகள் அள்ளி அணைத்தாலும்*
*அன்னை தந்தை போல் வருமோ இவ் வுலகில்*
*எம் வாழ்க்கையின் முன்னுரை நீங்கள்*
*காலன் உங்கள் கணக்கை முடித்து எழுதிவிட்டான் முடிவுரைைய*
*அதனால் கரையை ஒதுங்கா ஒடம் போல் துவண்டு நிற்கும்.*

உடையார் ஒழுங்கை,
பொற்பதிவீதி, கோக்குவில். (41545)(32-16)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# அரசாங்க அறிவித்தல்

## யாழ் மாவட்டச் செயலகம்

### குறுகிய கால தொழிற்பயிற்சித் திட்டத்திற்கு உபகரணங்களும் பொருள்களும் வழங்குவதற்கான

# கேள்வி

யாழ்.மாவட்டத்தில் குறுகிய கால தொழிற் பயிற்சிநெறியினை நடைமுறைப்படுத்துவதற்காக கீழ்வரும் பொருள்கள் வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பப்படிவத்தையும், பொருள்களை தொடர்பான விரிவான விவரங்களையும், நிபந்தனைகளையும் மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் அலுவலக நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4.45 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தை மாவட்ட செயலர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் பயிற்சிநெறிக்கான உபகரணங்களும், பொருள்களும் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப் பெட்டியிலோ 2005.10.25ஆந் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்படல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு கேள்விப்பத்திர பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

1. உருக்கு அலுமாரி
2. உருக்கு எழுதுநர் மேசை
3. தச்சுப் பயிற்சிநெறிக்கான உபகரணங்களும், பொருள்களும்
4. தன்னியக்க இயந்திர பயிற்சி நெறிக்கான உபகரணங்களும், பொருள்களும்
5. தீந்தை வகைகள் (Paint)
6. தும்புக்கைத்தொழில் பயிற்சிநெறிக்கான உபகரணங்களும், பொருள்களும்
7. துணி வகைகள்
8. தூரிகை வகைகள்
9. பூச்சு வகைகள் (Dye)
10. பிளாஸ்ரிக் கதிரைகள்
11. மட்பாண்ட பயிற்சிநெறிக்கான உபகரணங்களும், பொருள்களும்

**க.கணேஷ்**
அரசாங்க அதிபரும், மாவட்ட செயலரும்
யாழ்.மாவட்டம் (சி-45663)(21.32.16)

# இயற்கை அனர்த்தம் வரும்போதும் தாக்கும்போதும் எல்லை எங்கே இருக்கிறது என்று பார்ப்பதில்லை!

## பாக். - இந்தியாவைப் பாதித்துள்ள பூகம்பம் சொல்லும் பாடம்

உலக வலம் - மேனா

இந்தியா சுதந்திரமடைவதற்குச் சில காலத்திற்கு முன்னர் வட இந்தியாவில் இயற்கைப் பேரனர்த்தம் ஒன்று ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழப்புக்கும் உடல், பொருள் பாதிப்புக்குள்ளாகியும் துன்பமுற்றார்கள். இந்திய விடுதலைக்காக காங்கிரஸ் சபை பெரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலம் அது. இந்தியப் பெருந்தலைவர்கள் அனைவரும் கவலையில் மூழ்கியிருந்தார்கள்.

அந்தவேளையில், மகாத்மா காந்தியைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டபோது நேரு, ''பாபுஜி நேற்று இயற்கை அனர்த்தத்தில் பெரும் அளவில் மக்கள் பலியாகி உள்ளார்களே! உங்கள் கடவுள் நேற்று என்ன விடுமுறையில் போயிருந்தாரா?'' என்று கேட்டாராம். அதற்கு காந்தி என்ன பதில் கூறினார் என்று தெரியவில்லை.

மனித சக்திக்கு அப்பாற்பட்ட அமானுஷிய விளைவுகளுக்குக் கடவுள்மேல் பழி போடுவதில் அர்த்தமில்லைதான். ஆனால், மனிதனின் இயலாமை உச்ச நிலையடையும் போது கடவுளையே அவன் சரணாகதியடைகிறான்.

நேருஜி - காந்திஜிடம் கேட்ட கேள்விக்குப் பல அர்த்தங்கள் உண்டு.

நல்லதற்கு நல்லதும் தீயதற்குத் தீயதுமே விளையும் என்ற இயற்கைத் தத்துவத்தில் நம்பிக்கையுள்ளவர் நேரு.

எல்லாமே இறைவன் செயல் என்பது காந்திஜியின் கொள்கை.

எனவேதான், இவ்வளவு பெரிய அழிவு நேர்ந்துள்ளதே. இதைச்செய்தவர் இறைவன் தானா? இல்லையென்றால் அந்தவேளையில் இறைவன் விடுமுறையில் சென்றிந்தாரா? என்று நேரு காந்திஜியிடம் ஆற்றாமையோடு கேட்டிருக்கிறார் என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

சில தினங்களுக்குமுன் வட இந்தியாவையும் அதையொட்டிய பாகிஸ்தான் பகுதிகளையும் பயங்கர பூகம்பம் தாக்கி எண்ணிறைந்த மக்களின் உயிர், உடைமைகளைப் பாழாக்கியிருக்கும் சம்பவங்கள் பற்றிய விவரங்கள் கிடைத்தவண்ணமிருக்கின்றன. சமீப காலத்தில் பூமி அதிர்ச்சியினால் இந்த அளவு அழிவுகள் ஏற்பட்டதில்லையென்று கூறப்படுகின்றது.

இந்த விவரங்களை ஊடகங்கள் மூலம் அறியும்போதுதான் எமக்கு அந்தப் பழைய ஞாபகம் ஏற்படுகிறது.

இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே அறிந்து மக்களைக் காப்பாற்ற முடியும் என்று விஞ்ஞானிகள் அறுதியிட்டுக் கூறி வருகிறார்கள். அந்தத் திசையில் இந்த நாடுகள் தமது கவனத்தைத் திருப்பவேண்டிய காலம் வந்துவிட்டது என்பதையே சமீப காலமாக உலகின் பல பாகங்களிலும் இடம் பெற்றுவரும் இயற்கை அனர்த்தங்கள் உணர்த்தி நிற்கின்றன.

இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா, தாய்லாந்து போன்ற நாடுகளைப் பாதித்த ஆழிப்பேரலை அமெரிக்கா, மெக்ஸிக்கோ மற்றும் சீனா போன்ற நாடுகளைப் பாதித்த சூறாவளிகள் இப்பொழுது இந்தியாவையும் பாகிஸ்தானையும் பாதித்துள்ள பூமி அதிர்ச்சி முதலியவை இதையே சுட்டிக்காட்டுகின்றன.

கோடிக்கணக்கான பணத்தையும் அறிவையும் காலத்தையும் செலவழித்து ஆயுதப் படைகளைக் கட்டியெழுப்புவதிலும் ஆயுத தளபாடங்கள் உற்பத்தி செய்வதிலும் பெரும் எண்ணிக்கையில் மனித உயிர்களைக் கொன்றொழிக்கும் அணுகுண்டு, விஷ வாயுக் குண்டு, ஏவுகணைகள் என்று பயங்கரப் போர் ஆயுதங்களையும் தயாரித்துக் கொண்டிருக்கும் இந்த நாடுகள், இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே தெளிவாக அறிந்து கொள்வதற்கான தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக இந்தப் பணத்தில் ஒரு பங்கையேனும் மூலதனமாகப் போட்டு முயற்சிக்கக்கூடாதா? நிச்சயமாக முடியும்.

## இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களைக் கண்டுபிடிக்க மோப்ப நாய்களும் உதவுகின்றன



### நினைத்தால் முடியும்

போர் ஆயுதங்களினால் ஏற்படும் ஆபத்து மனிதனால் ஏற்படுத்தப்படுவது. எனவே, மனிதன் நினைத்தால் - மனம் வைத்தால் - ஐ.நா. முயற்சிகள் மேலும் வலுப்பெற்றால் அவைகளைக் கட்டுப்படுத்தமுடியும் - குறைக்கமுடியும் - ஏன் இல்லாமலே செய்து விடவும் முடியும். ஆனால், இயற்கை அனர்த்தங்கள்?

அவை ஏன், எங்கே, எப்படி, எப்போது, ஏற்படுத்தப்படுகின்றனவென்பது எவருக்கும் தெரியாது. அவை பகை நாடு என்றும் நட்பு நாடு என்றும் நல்லவர் நாடு, தீயவர் நாடு, பணக்கார நாடு, ஏழை நாடு, வல்லரசு நாடு, வலுவில்லாத நாடு என்றெல்லாம் பார்ப்பதில்லை.

பூகம்பம் ஏற்பட்ட கையோடு தமது அணு ஆயுதங்கள் அசையாமல் அப்படியே இருப்பதாகப் பாகிஸ்தான் அறிவித்திருப்பது சிந்தனைக்குரியது. இதேநிலை இந்தியாவுக்குமுண்டு. ஆனால், அவர்கள் அலட்டிக்கொள்ளாமல் இருக்கிறார்கள்.

அணு ஆயுதங்கள் இருக்கும் இடங்களிலும் இந்தப் பூகம்பம் இந்த அளவு பாதித்திருக்குமானால் இயற்கை அனர்த்தத்தோடு அணுக் கதிரியக்கத் தாக்கத்துக்கும் இந்நாடுகள் உள்ளாக நேர்ந்திருக்கும். அந்த இரு நாடுகள் மட்டுமல்ல, அக்கம்பக்கத்திலுள்ள அப்பாவி நாடுகளும் அதன் விளைவுகளை அனுபவிக்கநேர்ந்திருக்கும்.

### 80 ஆயிரம்பேர் உயிரிழப்பு?

பிந்திக்கிடைத்துள்ள செய்திகளின்படி பாகிஸ்தானில் ஆஸாத் காஷ்மீர் உட்பட்ட பகுதிகளில் பெரும்பாலும் 80 ஆயிரம் பேர் உயிர் இழந்திருக்கலாம் என்றும் அதைவிட பல மடங்குபேர் காயமடைந்திருக்கலாம் என்றும் தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானின் வடக்கு, மேற்கு எல்லைப் பிராந்தியமே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதிபர் பர்வேஸ் முஷாரப் உலக நாடுகளின் உதவியை உடனடியாக நாடி அறிக்கை விடுத்தார். அண்டை நாடான இந்தியா உடனடியாகவே உதவிக்கு வருவதாக அறிவித்தாலும் முஷாரப் அந்த உதவியை முதலில் ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டினார்.

மக்கள் துன்பத்தைவிட அந்தத் துன்பத்தைப் பயன்படுத்தி இந்தியர் தங்கள் இரகசியங்களை அறிந்துவிடுவார்கள் - அல்லது ஆஸாத் காஷ்மீர் மக்களின் அன்பைத் திருப்பி விடுவார்கள் என்று முஷாராப்பினரின் இராணுவ தந்திர மூளை வேலை செய்திருக்க வேண்டும்.

இருதரப்பு உறவை மேம்படுத்திக் கொள்ள இயற்கை வழங்கிய சந்தர்ப்பத்தைக்கூட பயன்படுத்திக்கொள்ள முஷாரப் தவறிவிட்டார் என்று பல கோணங்களிலிருந்தும் வந்த விமர்சனங்களையடுத்து இந்திய உதவிகளை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தார். உடனடியாகவே இந்தியப் பிரதமர் வாக்களித்தபடி தொன்கணக்கான உணவுப் பொதிகள் இராட்சத விமானங்கள் மூலம் பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டதாகச் செய்திகள் வந்தன.

பாகிஸ்தான் அதிபர் பூகம்பம் பாதித்த பகுதிகளான இமாசலப்பகுதிக்கு விமானம் மூலம் சென்று பார்வையிட்டார்.

ஐரோப்பிய யூனியன் 30 லட்சம் யூரோவை உடனடியாக விடுவிப்பதாக அறிவித்தது. ஆனால், அபிவிருத்தி வங்கி ஒரு கோடி டொலரை அறிவித்தது. தங்களால் முடிந்த சகல விதத்திலும் உதவி புரியப்போவதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கூறினார். உடனடி நிவாரணப் பணிகளுக்கென 8 ஹெலிகொப்டர்கள் முதல் கட்டமாக அனுப்பப்படவிருப்பதாக புஷ் அறிவித்தார்.

சீன அதிபர் ஹூ ஜின்டாஓ பாகிஸ்தான் தலைவர்களுக்கும் இந்தியத் தலைவர்களுக்கும் அந்நாடுகளில் ஏற்பட்டுள்ள உயிர், உடல், உடைமைச் சேதங்கள் குறித்த தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். ஜேர்மன், பிரான்ஸ் மற்றும் பல்வேறு உலகநாடுகளும் தமது அனுதாபங்களைத் தெரிவித்திருப்பதுடன் உதவிகளையும் அனுப்ப உறுதியளித்துள்ளன.

பாகிஸ்தானின் வெகுதூர இடங்களில் இடிபாடுகளில் சிக்கியுள்ள மக்களுக்கு உதவிகள் கிடைப்பதில் பெரும் இடர்பாடு ஏற்பட்டிருப்பதாக நிருபர்கள் தெரிவித்துள்ளார்கள். வீதிகள் எல்லாம் இடிபாடுகளினால் மூடிக்கிடப்பதனால் 'தும்பி' விமானங்களே பெரிதும் உதவியாக இருக்கும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றுவது மட்டுமல்ல நிவாரண வேலைகளையும் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

### எல்லையைக் கடந்த இந்தியப் படையினர்

காஷ்மீரில் இந்திய - பாகிஸ்தானிய எல்லைகளைப் பிரிக்கும் பகுதியைக் கடந்து சென்ற இந்தியப் படையினர் பாகிஸ்தான் படையினருக்கு உதவிபுரிந்துள்ளார்கள் என்று ஒரு செய்தி வந்துள்ளது. பாகிஸ்தானிய வீரர்கள் உதவிபுரியும்படி கேட்டுக் குரல் கொடுத்ததையடுத்து இந்திய வீரர்கள் அப்பகுதிக்குச் சென்றதாகத் தெரிகின்றது. இப்பகுதியில் இந்திய - பாகிஸ்தான் 'தும்பி' விமானங்கள் தடையின்றிப் பறந்ததாகவும் கூறப்பட்டது. கடந்த காலங்களில் என்றால் இவ்வாறு பறக்கும் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுவிடும்.

பாகிஸ்தான் வீரர்கள் தங்களின் பதுங்கு குழிகள் சேதம் அடைந்துவிட்டதால் இரவில் படுக்க முடியாமல் இருப்பதாகவும் இடிபாடுகளை அகற்றி உதவும்படியும் அவர்கள் கேட்டுக் கொண்டதாலும் இந்தியப் படைகள் எல்லையைக் கடந்து பாகிஸ்தான் பகுதிக்குச் சென்று உதவியதாகவும் செய்திகள் கூறின.

### பூமியதிர்வு ஏற்பட்டபோது...

பூமியதிர்வு ஏற்படுவதற்குச் சற்று முன்னதாக ஆயிரக்கணக்கான பறவைகள் கீச்சிட்டுப் பயங்கரமாகக் கத்தியபடி பறந்து சென்றதாகப் பார்வையாளர்கள் கூறினார்கள். இஸ்லாமாபாத்தில் ஆயிரக்கணக்கான மரங்கள் சரிந்தும் வளைந்தும் முறிந்து விழுந்தன. அதே சமயம், பயங்கரமான அதிர்வும் ஓசையும் பூமிக்கடியிலிருந்து வெளிப்படுவதாகத் தெரிந்தது. மரங்களிலிருந்த காகம் போன்ற பறவைகள் மேலே எழுந்து பெரும் இரைச்சலுடன் வட்டமிட்டுக் கொண்டிருந்தன என்றார்கள் அவர்கள்.

இம்மாதிரி அதிபயங்கரப் பூமி அதிர்ச்சியை என் வாழ்நாளில் பார்த்ததில்லையென்று பாதுகாப்பு ஊழியரான மொகம்மது அக்கிரம் என்பவர் கூறினார்.

பூகம்பம் ஏற்பட்டவுடன் கட்டடங்களிலிருந்து மக்கள் வெளியில் பரபரப்புடன் ஓடிவந்தார்கள். பலர் நிலத்தில் அமர்ந்து பிரார்த்தனை செய்தார்கள் - என்றார் அவர்.

### கடலுக்கடியில் ஏற்பட்டிருந்தால்...

கடந்த சனிக்கிழமை 7.6 றிச்டர் அளவில் பதியப்பெற்ற இப்பூமி அதிர்வானது கடலுக்கடியில் ஏற்பட்டிருக்குமெனில் பெரும் ஆழிப்பேரலைகளை ஏற்பட்டிருக்கமுடியும் என்று கருதப்படுகின்றது.

### முதலாளித்துவமே காரணமாம்

இந்தியா - பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் பகுதிகளில் ஏற்பட்ட பூகம்பங்களுக்கு மத்திய அமெரிக்கா மற்றும் மெக்ஸிக்கோ உலக முதலாளித்துவமே காரணம் என்று வெனிசுவேவா அதிபர் ஹூகோ சாவெஸ் கூறியிருக்கிறார்.

உலக முதலாளித்துவத்துக்கு இயற்கை வழங்கியுள்ள பதிலாகும் இது என்று அதிபர் சாவெஸ் தனது வாராந்த வானொலி உரையில் கூறினார்.

இந்த முதலாளித்துவ அமைப்பு உலகை அழித்துவருகின்றது. உலகம் ஆபத்தில் இருக்கிறது. முன்னொருபோதும் இம்மாதிரி அழிவுகள், சூறாவளிகள், வரட்சிகள், தொடர்மழை என்பன இருந்ததில்லை. உலகம் பயங்கரமாகச் சமநிலையைவிட்டு விலகியுள்ளது என்று அவர் கூறினார்.

இதேவேளை, சில வாரங்களுக்கு முன் வெனிசுவேவா அதிபரைக் கொல்லவேண்டும் என்று கருத்துக் கூறி பரபரப்பு ஏற்படுத்திய சமயப் பிரசாரகர் பற்றொப்ட்சன் என்பவர் கடந்த ஞாயிறன்று அமெரிக்கத் தொலைக் காட்சியில் பேசும்போது, உலகின் முடிவு காலம் வந்துவிட்டதையே இந்த இயற்கை அனர்த்தங்கள் காட்டுவதாகக் கூறியுள்ளார். யேசுநாதர் வரப்போகிறார் என்பதை இவை சுட்டுகின்றன - என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க மெக்ஸிக்கோ குடாப் பகுதியைச் சூறாவளி தாக்கிப் பெரும் உயிர்ச்சேதம் ஏற்படுத்தியபோது ஈராக்கில் அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதல்களுக்குப் பதிலாகத்தான் இறைவன் அமெரிக்காவை இவ்வாறு பழிவாங்கியுள்ளார் என்று சில மத்திய கிழக்குத்தீவிரவாத அமைப்புகள் கூறியதாகச் செய்திகள் வந்திருந்தன.



இஸ்லாமாபாத் நகரில் பலமாடிக் குடியிருப்புக் கட்டடமான 'மரகல்லா கோபுரம்' பூமியதிர்ச்சியில் நொருங்குண்டு கிடப்பதையும் இடிபாடுகளுள் சிக்கியிருப்பவர்களை மீட்புக் குழுவினர் தேடுவதையும் படத்தில் காணலாம்.

அரசியல் மற்றும் மதத்தீவிரவாதத்தில் அக்கறையுள்ளவர்கள் இயற்கையாக ஏற்படும் அனர்த்தங்களுக்கு இறைவனைத் தமக்குச் சாதமாக வைத்துப் பேசுவதென்பது தத்துவார்த்தமாகப் பொருத்தமற்ற கருத்துத்தான். அவரவர் தமது சிந்தனைக்கு ஏற்ற விதத்தில் விளக்கம் கொடுத்துக்கொள்கிறார்கள்.

கடவுளின் சிந்தனை எவ்வாறு இருக்கும் என்பதை யார் அறிவார்கள்?

இயற்கை அனர்த்தம் என்பது இன்று நேற்று அல்ல தொல் ஊழிகாலம் முதற்கொண்டே இடம்பெற்றுவரும் ஒன்றுதான். மத்தியதரைக்கடல் பிராந்தியத்திலிருந்து அலை அலையாக முன்னொரு ஊழியின் போது மக்கள் இடம்பெயர்ந்து சென்று பல்வேறு புதிய நாகரிகங்களைத் தோற்றுவித்தார்கள் என்று வரலாற்று ஆசிரியர்கள் தொல்பொருள் ஆய்வுகள் மூலம் நிருபிக்கிறார்கள். லெமூரியாக் கண்டம் கடலுக்கடியில் மூழ்கிப்போனதும், இன்று மலைகளாகத் தோன்றும் பகுதிகள் கடலுக்கடியிலிருந்து வெளிப்பட்டவை என்றும் கூட அவர்கள் உறுதிபட வாதிடுகிறார்கள்.

உலகை அழிப்பதானால் இறைவன் வரன்முறை பார்த்துக்கொண்டிருக்கமாட்டான். சகலதும், சகலரும் அவனுக்குச் சமமே. ★

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!

கடைகள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 ☎:0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப்பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 021 222 2567

(C-45010)

# அன்புருக வாழ்த்துகின்றோம்



யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மற்றும் அன்பழகன் ஆசிரியரின் மாணவனுமாகிய

செல்வன் ம.கோவர்த்தன் (கோபி)

2005 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தி எய்தியமையையிட்டு மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

அப்பா, அம்மா, தங்கை, அண்ணாமார், அக்காமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சந்திரன் மாமா குடும்பம் (லண்டன்), பட்டுமாமா குடும்பம் (லண்டன்), சூரிமாமா குடும்பம் (கனடா).

சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

(41481)(32-11-19)

# அஞ்சல் திணைக்கள நேர்முகத்தேர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.16

அஞ்சல் திணைக்களத்தின் உபபகுதி அஞ்சல் அலுவலகங்களில் பதிவு செய்யப் பட்ட பதிவாளர்களின் நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சை ஏற்கனவே அறிவிக்கப் பட்டதன்படி எதிர்வரும் 18ஆம், 19 ஆம் திகதிகளில் நடைபெறமாட்டாது என்றும் -

நேர்முகப்பரீட்சை நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் -

வடபகுதி பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் வீ.குமரகுரு அறிவித்துள்ளார்.

(எ)

# வலி.மேற்கில் பெரும்போக நெற்செய்கை ஆரம்பம்

வலி.மேற்கு,ஒக்.16

வலி.மேற்குப் பிரதேசத்தில் பரவலாக பெரும்போக நெற்செய்கைக்கான நடவ டிக்கைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் பருவமழையைத் தொடர்ந்து விவசாயிகள் வயல்களில் விதைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

இந்த ஆண்டு பருவமழை காலம் தாழ்த்தி பெய்தமையினால் பெரும்பாலும் மூன்றரை மாத நெல் இனத்தையே விதைக்க முடியும் என்று விவ சாயிகள் தெரிவித் தனர். (எ-175)

# அழைப்புக் கட்டளை
## [இல. 16-பிரிவு ௬௦ (1)]

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட / நீதிமன்றத்தில்

தருமரெட்ணம் செல்வகுமரன் பெண்
அன்பரசி
(சுப்பிரமணியம் பூராசா மகள்)
91/11, இந்து மகளிர் ஒழுங்கை
கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.

**வழக்கு இல: மண்நீக்கம்/591 எதிர் வழக்காளி**

தருமரெட்ணம் செல்வகுமரன்
105, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளி/ எதிராளி/க்கு

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி தனக்கும் உமக்கும் இடையில் நடைபெற்ற பதிவுத் திருமணத்தை இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமானதாக்கும்படி கோரி.

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளாராதலினால், அதற்கு உமது மறுமொழி, ஏதேனும் இருப்பின், 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 25 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத் தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில், வழக்கானது மறு கட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளக்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவு பெற்ற தரணிமூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைந்தது நீதிமன்றக் கட்டளைப்படி
வழக்காளியின் சட்டத்தரணி. பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால், பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற் காகும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்
கையொப்பம் - பதிவாளர்

(41471)(86-88-11-19)

2005 ஆண்டு ஐப்பசி மாதம் 14 ஆந் நாளாகிய இன்று.

# AMENDMENT
# REQUEST FOR QUOTATIONS

UNDP

United Nations Development Programme, Sri Lanka invites Request for Quotations (RFQ) for the following and the documents could be collected from the locations given against each action:

| S. No. | Title of work | Corresponding UNDP Office |
|---|---|---|
| Lot 1 | Construction of two small bridges in Karaitivu Division, Ampara | UNDP Office, 63, Jayawardenapura, Ampara. |
| Lot 2 | Construction of drainage infrastructure in Kalmunai | UNDP Office, 63, Jayawardenapura, Ampara. |
| Lot 3 | Construction of drainage infrastructure in Manmunai South, Eraavil Pattu, and Koralai Pattu North Divisions in Batticaloa | UNDP Office, 30, Charles Velupillai Road, Batticaloa |
| Lot 4 | Construction of Agricultural Roads in Kirankulam, Batticaloa | UNDP Office, 30, Charles Velupillai Road, Batticaloa |
| Lot 5 | Construction of a 2.2 km road in Point Pedro, Jaffna | UNDP Office, 121A Temple Road, Jaffna |
| Lot 6 | Construction of drainage infrastructure in Muthur, Trincomalee | 58 Arunagiri Road, Trincomalee |

Documents to be presented for obtaining RFQ documents:

- request letter for document on the Company's business letterhead
- ICTAD registration book (contractors are requested to be of minimum M7 level of ICTAD)

Completed documents will be accepted at the same locations from where the documents are distributed **and extended** until 3 p.m. on October 24th, 2005. Documents can also be obtained from the UNDP Programme Office, Operations Manager, 202-204 Bauddhaloka Mawatha, Colombo 7, Sri Lanka Tel : 2580691-8 Ext 279 or via email at procurement.lk@undp.org

No telephone inquiries will be solicited and UNDP reserves the right to cancel all or one of the above actions and/or reject any quotations, without assigning any reasons.

யாழ் ரெக் கணனிக் கல்வியகத்தின் ஆரம்பத்தினை முன்னிட்டு வழங்கப்படவிருக்கும் மாபெரும்

"கணனிசார் தொழிற்கல்வி புலமைப்பரிசில் திட்டம் 2006"

இற்கான விசேட கற்கைநெறிகள் விஜயதசமி முதல் ஆண்டிறுதி வரை பல பிரிவுகளில் நடைபெறவிருக்கின்றது...

நவீன கணனி தொழில்நுட்பம் மற்றும் கல்விமுறைக்கமைய பொதுவான கணனி சார்ந்த அலுவல்களுக்கும் சிறந்த நிறுவனங்களில் தொழிற்புரிவதற்குமான அல்லது சுயதொழில் கற்கைநெறிகளாக எட்டு கற்கைநெறிகளை உள்ளடக்கிய கல்வியாண்டு 2006 இற்கான "மாபெரும் கணனிசார் தொழிற்கல்வி புலமைப்பரிசில் திட்டம்" கொழும்பு லண்டன் இன்ஃபோ ரெக் இன் இணை நிறுவனமான "யாழ் ரெக்" இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினூடாக யாழ் கணனித் துறைச்சார்ந்த மாணவர்கள் பெறும் பயனடையவிருக்கின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

| | | | |
|---|---|---|---|
| MS. OFFICE<br>எம். எஸ். ஓபீஸ் | MULTIMEDIA<br>மல்ரிமீடியா | TYPESETTING<br>ரைப்செற்றிங் | PHOTO MIXING<br>போட்டோ மிக்ஸிங் |
| VIDEO MIXING<br>வீடியோ மிக்ஸிங் | WEB DESIGN<br>வெப் டிசைன் | COMPUTERIZED ACCOUNTING<br>கணனிவழி கணக்கியல் | HARDWARE ENGINEERING<br>ஹாட்வெயார் இன்ஜினியரிங் |

- கற்கைநெறி கட்டணமாக ரூபா. 1500/- மட்டுமே அறவிடப்படும்.
- முதலில் இணையும் 100 பேர்களுக்கு பதிவுக்கட்டணம் இல்லை.
- அனைத்து கற்கைநெறிகளும் டிப்ளோமா நிலைக்குட்பட்டதாகும்.
- கற்கைநெறி முடிவில் கல்வியாண்டு 2006 இற்கான பரீட்சைகள் நடாத்தப்பட்டு புலமைப்பரிசில் வழங்கப்படும்.
- கற்கைநெறிகளிலுள்ள பாடவிதானங்களுக்கமைவான செயற்திட்டப்பரீட்சை மற்றும் பொதுஅறிவு, நுண்ணறிவுப் பரீட்சைகள் நடாத்தப்படும்.
- பெறுபேறுகளுக்கமைய 50%-75% வரையான கட்டணச்சலுகை மற்றும் ரூபா. 500/- பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் அதேவேளை உச்ச சலுகைகள் பலவுள்ளன...
- இவ்வருட A/L, O/L மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களுக்கும் கற்கைநெறி கட்டணத்திலிருந்து 10% கழிவு வழங்கப்படும்.
- அனைத்து தரப்பினருக்கும் அமைவாக நேர அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.
- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் (விழாவினூடாக விசேட அதிதிகளினால்) வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் காலம்: 10 ஒக்ரோபர் முதல் 25 டிசெம்பர் வரை

YTS IT For Future

யாழ் ரெக்

இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி, கலட்டிச்சந்தி.
(யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)

புதிய சாறிவகைகள்
ஸ்கேட் அன் பிளவுஸ்
புதிய ரகம் கண்ணைக்கவரும்
புத்தம் புதிய டிசைன்கள்
* பொக்ஸ் சேட்
* டெனிம்
* விதம்விதமான சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள் அனைத்துமே வியத்தகு மலிவுவிலையில் கிடைக்கும்.

மலிவு விலைதானா என்பதை அறிந்து கொள்ளவும் நாளைய நாகரீகத்தை முதன்முதலில் இன்றே அறிமுகம் செய்தவர்களா என்பதைப் பார்வையிடவும் ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்

# கிறீன் பலஸ் எம்போறியம்

இன்றே வாருங்கள்

யாழ்.நகரில் குறைந்த விலையில் நிறைந்த ரகங்கள்! நிகரில்லாத் தரங்கள்! அழகிய புடைவைத்தினுசு களின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்.

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.



(C/45494)(52-16-18)

# சைக்கிள் - டிராக்டர் விபத்தில் குடத்தனை வாசி மரணம்

யாழ்ப்பாணம், ஒக்.16

உழவு இயந்திரமும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை வடமராட்சி கிழக்கு, குடத்தனையில் இடம்பெற்றது. சைக்கிளைச் செலுத்திச் சென்றவரான மயிலிட்டியைச் சொந்த இடமாகவும் குடத்தனை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி அருமைராசா (வயது50) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவர்.

இந்த விபத்துச்சம்பவம் தொடர்பாக சாரதி உட்பட மூவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் ந.தங்கராசா மரண விசாரணைகளை மேற்கொண்டார்.

அண்மை நாள்களாக வடமராட்சிப்பகுதியில் வாகன விபத்துக்கள் அதிகரித்துவருகின்றன. (ஐ-173)

## கலந்துரையாடல்

ரோஸ்ற் பாஸ்ரர் சர்வதேசம் அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சியை ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை ஏற்பாடு செய்துள்ளது.

உலகெங்கிலும் தொடர்பாடலை யதார்த்தமாக்குவதே இந்த அமைப்பின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## 17 ஆவது பிறந்தநாள் நினைவு.....



**15.10.2005**

**மகாலிங்கம் யதுர்சினி**

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த மகாலிங்கம் தம்பதியரின் செல்வப் புதல்வி யதுர்சினியின் பிறந்தநாளில் உனை நினைத்துக் கலங்கி நிற்கும் அன்பு உள்ளங்கள்....

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
அப்பா, அம்மா, தீபன்அண்ணா, சகோதரர்கள், அத்தான்மார், அண்ணிமார்.
(4155 )(18-12-45-15)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 24 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைத்துறையில் பட்டம்பெற்ற யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபரின் மகள்

**சுந்தரலிங்கம் சுஜந்தா**

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

லோட்டஸ் வீதி, மானிப்பாய்.
(41559)(18-12-45-15)
திருமதி சபாரட்ணம், பிள்ளைகள்.

## கல்வியின் கலங்கரை விளக்கு கண்ணீரில் கரைந்ததேன்?



**அமரர் க.இராசதுரை**

(யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதல்வர்)

*யாழ்ப்பாணத்தின் உயர் கல்லூரியின் முன்னோடி முதல்வராய் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு அயராது உழைத்த பணிக்கூடாக எல்லோர் மனதிலும் நீங்காத இடம்பிடித்த தன்னிகரில்லா முதல்வரின் சாவுச் செய்தி எம்மையெல்லாம் நிலைகுலைய வைத்துள்ளது. இவரின் கல்விப்பணி சிறக்க திடசங்கற்பம் பூணுவோம். இவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

(சி-45672)
(18-45-12-15)
-தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை.

## கல்வியின் கலங்கரை விளக்கு கண்ணீரில் கரைந்ததேன்?



**அமரர் ந.சிவகடாட்சம்**

(நாட்டுப்பற்றாளர்)

(யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முதல்வர்)

கல்வி நிர்வாகத்தில் முதல் நிலையில் விளங்கிய பண்பாளனை, நாட்டுப்பற்றாளனை, மாணவர்களுக்காக அயராது உழைத்த முயற்சியாளனை கல்விமேம்பாட்டு பேரவையில் இணைந்து மாவட்ட கல்வி மேம்பாட்டுக்காக உழைத்த முதல்வரின் சாவுச்செய்தி எமெக்கெல்லாம் இடிபோல் இருந்தது, அன்னார் விட்டுச்சென்ற கல்விப்பணி சிறக்க எம் பணி தொடர்வோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-45671)
(18-45-12-15) -தமிழீழ கல்விமேம்பாட்டு பேரவை.

## கண்ணீர் அஞ்சலி



வலி.தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேச சபை பட்டின நூலகத்தில் நூலகராக கடமையாற்றும்

**திருமதி சிறிரஞ்சனி வசந்தகுமார்**

அவர்களின் அன்புக் கணவர்

**அமரர்**

**தம்பையா வசந்தகுமார்**

(SOCIAL WORKER - வசந்தன்) 12.10.2005 இல் மறைந்ததையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேசசபை மானிப்பாய்.
(சி-54668)(18)
செயலாளர், அலுவலர்கள், ஊழியர்கள்.

# பெண்களுடன் சேஷ்டைவிட்ட இளைஞர்களுக்கு எச்சரிக்கை

சாவகச்சேரி, ஒக்.16

பெண்களுடன் தகாத முறையில் ஈடுபட முயன்ற மூன்று இளைஞர்கள் கலாசாரம் பேணும் குழுவினரால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இச்சம்வம் கடந்த 11ஆம் திகதி செவ்வாய், சாவகச்சேரி, கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

வீதியால் சென்று கொண்டிருந்த பெண்களுடன் தகாதமுறையில் ஈடுபட்ட இந்த இளைஞர்களைகையும் மெய்யுமாகப் பிடித்த கலாசாரத்தை பேணும் குழுவினர் அந்த இளைஞர்களுடைய பெற்றோரை அழைத்து அவர்கள் முன்னிலையில் இளைஞர்கள் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

அதுமட்டுமல்லாமல் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டேன் என 100 தடவைகள் வெற்று கடதாசியில் எழுதிக் காண்பித்த பின்னரே அவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இத்தகைய சம்பவங்களில் இனிமேலும் ஈடுபடக் கூடாது எனவும் தொடர்ந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டது. (க-31)

## அனுராவின்....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனிப்பட்ட விசேட செவ்வியொன்றை வழங்கியிருக்கும் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா, அதில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை மிகக் கடுமையாக விமர்சித்திருக்கிறார் எனத் தெரியவந்தது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெறுவது தொடர்பில் சந்தேகம் வெளியிட்டுள்ள அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா, பண்டாரநாயக்கா பரம்பரையை எளிதில் அழித்துவிட முடியாதென்றும் அப்பேட்டியில் சூளுரைத்திருக்கிறார்.

அரசியலுக்காக இனவாதக் கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைத் தாரைவார்த்துவிட்டார் எனவும் அனுரா குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

பண்டாரநாயக்காக்களின் தலையை யாரும் உருட்டமுடியாது. யாரின் தலை உருளுகிறது என்பது நவம்பர் 18ஆம் திகதி தெரியும் - என்றும் அனுரா கூறியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா இவ்வாறு கூறிவருவது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வாக்கு வங்கியை பாதிப்பதாகவும் கூறப்படுகின்றது. (ஐ-க)

## ஒத்துமாறல்

யாழ்ப்பாணம், வலிகாமம் கல்வி வலயத்தில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கலைப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியராக தரம் (3.1) நிரந்தர நியமனம்பெற்ற ஒருவர் கண்டியில் (மேல்மாகாணம்) அதே பதவிக்கு நியமனம் பெற்ற ஒருவருடன் ஒத்து மாற விரும்புகின்றார்.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலை பேசி இலக்கம்
0776 628659, 0214591253
(41558)(18-12-45-15)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
மூன்றாவது ஜனத்திரள் வாரம்
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை** (தில்ஸ்)
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30.

**நாகலிங்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த
**சாணக்யா**
காட்சிநேரம்:- பு.நே. 2.30 6.30, 9.30.

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, அசின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த
**கஜினி**
இன்று மட்டும் பு.நே. 6.30, 9.30.
(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)

**மனோகரா** யாழ்ப்பாணம்
பார்த்திபன், வடிவேல், லட்சுமிராய் நடித்த
**குண்டக்க மண்டக்க**
(சி-44110)
காட்சிநேரம்:- 10.30, 2.30 6.30, 9.30, [பு.நே.]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 05 ✱ 07 ✱ 1932



உதிர்வு 16 ✱ 09 ✱ 2005

**திருமதி பத்மாவதி யோகராஜா**

**உம்முடலைப் பாராது - எம்**
**உயிரைத் தழைத்தோங்கச் செய்த - எங்கள்**
**அன்புத்தாயே! ஆயிரம் உறவுகள் இருந்தும் - இனி**
**அம்மாவென்றழைக்க யாருளர் ...... ?**

*கடந்த 16.09.2005 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தாயார் பத்மாவதி யோகராஜா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.10.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்.*

*தகவல்:- திரு.திருமதி ஜெயந்தி லோகநாதன், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.*
(41561) (18-45-12-15)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை அப்புத்துரை

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கைதடிமத்தி, குமர நகரை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அப்புத்துரை நேற்று (15.10.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் செந்தூரன், துவாரகா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரநகர், கைதடி.
(41563)(18-45-12-15)
*தகவல்: மனைவி, பிள்ளைகள்.*

## நல்லையா குமாரதேவா

(இளைப்பாறிய அரச நிலஅளவையாளர்)



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கிருலப்பனை, மானிப்பாய், உடுவில் ஆகிய பகுதிகளில் வசித்தவரும் புலம்பெயர்ந்து கனடாவில் வசித்தவருமாகிய நல்லையா குமாரதேவா அவர்கள் கனடாவில் 04.10.2005 செவ்வாய்க்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன்பென்சனியர் நல்லையா - அருந்ததி தம்பதியரின் மூத்த புதல்வரும் டாக்டர் இந்திராணியின் (முன்னாள் றாகம வைத்தியசாலை, மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை) அன்புக் கணவரும் சிலோசனா, டாக்டர் நிரஞ்சனா, லக்ஷ்மன் ஆகியோரின் தந்தையும் இராசநாயகம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான திருமதி புனிதவதி - இராமலிங்கம், நரேந்திரா(இளைப்பாறிய முகாமையாளர், சோபலஸ்), நடராசா (இளைப்பாறிய கட்டுப்பாட்டாளர், பலாலி, கட்டுநாயக்கா விமான நிலையம்), ஆறுமுகதாஸ் மற்றும் திருமதி பார்வதி சாம்பசிவம் (சியோ- மலேசியா), திருமதி மங்கையர்க்கரசி சிவஞானம் (கனடா), திருமதி பராசக்தி கந்தசாமி (கிளிநொச்சி), கணேசலிங்கம் (இளைப்பாறிய வங்கிச் சேவை-முகாமையாளர்-நீர்வேலி ப.நோ. கூ. சங்கம்) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் 07.10.2005 அன்று நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*'சிவபதி*
*கற்பகப் பிள்ளையார் வீதி,*
*உரும்பிராய் வடக்கு.*
(41551)
(18-15-45-12)
*தகவல்:*
***நல்லையா கணேசலிங்கம் (சகோதரன்).***

## பாலசிங்கம் நடனகுமார்



காரைநகர், கதிர்காமசுவாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 281, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் நடனகுமார் 11.10.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பாலசிங்கம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் ) - சரஸ்வதி தம்பதியரின் செல்வப் புதல்வரும் செல்வநாயகி (பிரான்ஸ்), அம்பிகாதேவி (தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற கமலநாயகி (நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்), ஆனந்தகுமார் (பிரான்ஸ்), வசந்தநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் துரைராசசிங்கம், இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரஞ்சன்குமாரின் சிறிய தந்தையும் சுவாதி, பாரதி, துளசி, பவித்திரன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற இராமச்சந்திரன், செல்வநாயகம், விசுவலிங்கம், காலஞ்சென்ற நடராசா, தேவராசா மற்றும் அருட்பிரகாசம், காலஞ்சென்ற கனகம்மா, தங்கரத்தினம் மற்றும் சிவபாக்கியம், திலகவதி ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதி மகேஸ்வரி வைகுந்தவாசனின் அன்புப் பெறாமகனும் காண்டீபனின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 13.10.2005 வியாழக்கிழமை நடைபெற்றது.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'துவாரகா'*
*281, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.*
(41289) (30-11-16)
*தகவல்:* **குடும்பத்தினர்.**

# அட்டாளைச்சேனையில் மோதல்

அட்டாளைச்சேனையில் முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.கட்சி இணைந்த ஆதரவாளர்களுக்கும் அமைச்சர் அதாவுல்லாவின் ஆதரவாளர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் பலத்த கைகலப்பும், கல்வீச்சும் இடம்பெற்றன.

அந்த இடத்திற்கு வந்திருந்த ஊடகவியலாளர்களின் புகைப்படக் கருவிகளும் நொறுக்கப்பட்டு அவர்களும் தாக்குதல்களுக்கு உட்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் தெரியவருவதாவது:-

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் அட்டாளைச்சேனையில் இடம்பெற ஏற்பாடுகளை முஸ் லிம் காங்கிரஸினதும், ஐ.தே.கட்சியினதும் ஆதரவாளர்கள் இணைந்தே மேற்கொண்டனர்.

இதனையும், ரணிலோடு அங்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் வருவதையும் எதிர்த்து ஆர்ப்பாட்டம் ஒன்று அட்டாளைச் சேனையில் இடம்பெற்றது.

அதில் அமைச்சர் அதாவுல்லாவின் ஆதரவாளர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம், ஜும் ஆத் தொழுகையை அடுத்து பிரதான வீதியை நோக்கித் தொடர்ந்தது. அதில் ரணிலையும் ஹக்கீமையும் எதிர்த்துக் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

குமாரி குரேயுடன் ஹக்கீமைத் தொடர்புபடுத்தியும் சில பதாகைகள் ஆர்ப்பாட்டத்தில் கொண்டுவரப்பட்டன என்றும்- 'உங்களின் குமரிப் பெண்களையும் காப் பாற்றுங்கள்!' எனும் வாசகங்கள் எழுதிய பதாகைகளும் இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## சுந்தரராமசாமி காலமானார்

இந்தியா,ஒக்.16

மூத்த இந்தியத் தமிழ் இலக்கியப் படைப்பாளிகளில் ஒருவரான சுந்தரராமசாமி (வயது 74) நேற்று அதிகாலை 2 மணியளவில் அமெரிக்காவில் காலமானார்.

சிலகாலம் நோய்வாய்ப்பட்டிருந்த இவர் அமெரிக்காவில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்தார்.

இவர் 'பசுவையா' என்ற புனைபெயரில் ஏராளமான கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதிவந்தார். சிறுகதைத் தொகுப்புகளையும் இவர் வெளியிட்டுள்ளார்.

இவரது தமிழ் எழுத்துநடை இளைய தலைமுறை இலக்கியப் படைப்பாளிகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. (ஐ-13)

# சமாதானத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவின் சமாதான முயற்சிக்கு வலுச்சேர்க்கும் என்ற சமாதான விரும்பிகளின் எதிர்பார்ப்பு கேள்விக்குறியாகிவிட மறுபுறத்தில் போர் வெறியர்களும் பேரினவாதிகளும் ஒன்றிணைந்து பலம்பெறுகின்ற அரசியல் சூழலே சிங்களத்தில் இன்று காணப்படுகின்றது. இனப்பிரச்சினை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக நிகழ்ந்த போர்நிறுத்த உடன்பாட்டை சிங்கள அரசு ஒரு சமாதானத்தின் திறவுகோலாக இன்றுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. தொடர்ந்தும் அதை முடக்கியே வைத்திருக்கின்றது.

போர்நிறுத்த உடன்பாட்டை முறித்துக் கொண்டு புலிகளுடன் போரைத் தொடங்கும் எண்ணத்துடனேயே "வெளிநாட்டில் பேச்சுக்கள் இல்லை" என்ற அரசியல் நிலைப்பாட்டிற்குச் சிங்கள அரசு வந்தது. இவ்வாறு சர்வதேச சமூகத்தை ஏமாற்றி திசை திருப்புவதற்காக சிங்கள அரசுகள் காலங்காலமாக சில காரணிகளை முன்வைத்து அமைதி வழி முயற்சிகளை முறியடித்து வருகின்றன. சிங்கள அரசின் தொடர்ச்சியான இனவாத நிலைப்பாடும், ஏமாற்று அரசியலும் தமிழ் மக்களுக்கு சலிப்பையும் விரக்தியையும் ஏற்படுத்தி வருகின்றன. சிங்கள அரசு எவ்வகையான அரசியல் நாடகங்களை அரங்கேற்றி வந்தாலும் தமிழ் மக்களை ஏமாற்றமுடியாது என்பதை அவர்கள் பல வழிகளில் வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆனால், தமிழரின் அமைதி வழி ஆர்வத்தை சிங்கள அரசு தவறாகக் கணித்து மீண்டும் போரைத் தொடங்க விரும்பினால் அதற்கு முகங்கொடுக்கவும் மக்கள் தயாராகி வருகின்றனர். ஆயுதப் பயிற்சிகள் பெற்று புலிகள் இயக்கத்தின் துணைப்படைக் கட்டமைப்பில் தமிழ்மக்கள் பெருமளவில் இணைந்து வருகின்றனர். ஆக்கிரமிப்புப் பகுதிகள் - விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் என்ற வேறுபாடுகள் இல்லாமல் தமிழர் தாயக நிலப்பகுதிகள் எங்குமே இந்தத் துணைப்படைக் கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் இராணுவப் பயிற்சிகள் பெறுகின்றனர். தேவை ஏற்பட்டால் சிங்களப் படைகளுடன் போரிடவும் தயார் என்ற அரசியல் செய்தியை தமிழ் மக்கள் சிங்கள அரசிற்கும் தெரிவிக்க விரும்புகின்றனர். சிங்கள அரசு தொடர்பாகவும் சமாதான அரசியலை அது நடத்தமுனையும் வழிமுறை தொடர்பாகவும் தமிழ் மக்கள் எதிர்மறையான கருத்தையே வைத்துள்ளனர். இதைச் சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

தொடர்ந்தும் சமாதானத்தை ஒரு தந்திரோபாய அரசியலாக சிங்களம் பயன்படுத்தி தமிழரின் விடுதலை உணர்வை நசுக்கிவிடலாமென்று அது கனவு காணமுடியாது. அத்துடன் அது தொடர்ந்தும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றவும் முடியாது.

(ஐ-3)

# இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தநிறுத்த உடன்பாட்டு மீறல்களாகவே கருதவேண்டும். இது அழிவை தருவனவாகும். இதில் இரு தரப்பினரும் ஈடுபட்டுள்ளனர். இது ஒரு மோசமான நிலைவரமாகும். எனவேதான் எமது அரசு (நோர்வே) இவற்றை நிறுத்துவதற்குக் கடுமையாக பாடுபடுகிறது.

உண்மையான சமாதானத்தை உருவாக்குவதாயின் இரு தரப்பினரும் முடிந்தளவிற்கு கட்டுப்பாட்டுடன் செயற்படவேண்டும். இரு தரப்பாரும் போர்நிறுத்த உடன்பாட்டுக்கு அமைய சுயஒழுக்கத்துடனும் சுயகட்டுப்பாட்டுடனும் செயற்படவேண்டும். வன்முறையில் ஈடுபட முற்படும்போது அவ்வாறு செயற்படுவது அவசியம்தானா? எனவும் அவற்றின் பின் விளைவுகள் குறித்தும் அவர்கள் சிந் திக்கவேண்டும்.

யுத்தநிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்க இரு தரப்பினரும் தயாராயுள்ளனர். ஆனால், அதனை ஆராய்வதற்கான பேச்சுக்களை எங்கே நடத்துவது என்பது தொடர்பாகவே இரு தரப்பினரும் இணக்கத்திற்கு வரமுடியாது இருக்கின்றனர். இதுவே பேச்சுக்களை ஆரம்பிக்கத் தடையாக உள்ளது

எமது கருத்தின்படி போர்நிறுத்த உடன்பாட்டை மீளாய்வு செய்வது தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிப்பது பற்றி இரு தரப்பினருமே முடிவெடுக்கவேண்டும். இந்த உடன்பாட்டின் ஓர் அங்கமான போர்நிறுத்த கண்காணிப்புக் குழு இந்த இரு தரப்பினருக்கும் ஆலோசனைகளை வழங்கி உதவி செய்ய மட்டுமே முடியும்.

- இவ்வாறு ஜெனரல் றொன்ட் புறூ ஹோவ்டே தெரிவித்தார்.

(ஐ)

# கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதையும் ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் தீர்வு என்பதையும் ஏற்கமுடியாது.

ஒற்றையாட்சியின் கீழ் - இந்தியாவில் உள்ள ஆட்சி அமைப்புப் போன்ற - அமைப்பே இங்கு ஏற்படுத்தப்படவேண்டும். இதை தேர்தலில் முன்நிறுத்தும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எமது ஆதரவை வழங்குவோம் - என்றார் அவர்.

(ஐ-3)

# ரணில் உருவாக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு மத்தியில் முஸ்லிம்கள் உள்ளனர்.ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் முஸ்லிம்கள் பலம் பெறுவர். சமாதான முயற்சிகளில் முஸ்லிம்களின் தனித்தரப்பு உறுதி செய்யப்படும் - என்றார் ஹக்கீம்.

ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவும் அங்கு உரையாற்றினார்.

ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் சமாதானப் பேச்சுகளில் முஸ்லிம் தரப்பு தனித்தரப்பாகக் குரல் கொடுக்கும் நிலையை உருவாக்குவேன்.அதன் அடிப்படையில் எதிர்காலச் செயற்பாடுகள் அமையும் - என்று ரணில் அங்கு தெரிவித்தார். (ஐ-3)

# வவுனதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாகப் பாதுகாக்க நாம் எவ்வாறு கடுமையாகப் பாடுபட்டாலும், போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் சமாதான நடவடிக்கைகளையும் சீர்குலைக்கும் நோக்குடன் நிலைமைகளை ஸ்ரீலங்கா அரசு கையாளுகின்றது என்பதையே இவை எடுத்துக்காட்டுகின்றன.

இதுபோன்ற செயற்பாடுகளால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட்டதன் நோக்கம் பாழடிக்கப்படும்.

ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிமிப்புப் பகுதிகளில் சட்டம் - ஒழுங்கை பாதுகாக்கின்ற முழுப் பொறுப்பும் ஸ்ரீலங்கா அரசுக்குத்தான் உண்டு. போர்நிறுத்த உடன்படிக்கையை ஸ்ரீலங்கா இராணுவம் சிதைத்துவருகின்றது என்பதை ஸ்ரீலங்கா அரசுக்கு உணர்த்துவதற்கு கண்காணிப்புக்குழு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகளில் வாழும் தமிழ் மக்களைப் பாதிக்கும் இத்தகைய வன்முறைகள் அதிகரித்துவருவது எமக்குக் கவலை அளிக்கின்றது என்று அதில் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ-3-13)

# ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமர்சித்தால் எஸ்.பி.திஸாநாயக்வுக்கு ஏற்ப்பட்ட கதி போன்று மாறிவிடும் என்றும் அவர் மேலும் கூறினார்.

தான் பிரதமராக இருந்த சமயம் பிரதமர் அலுவலகத்தில் இருந்து கணனிக் கொள்வனவில் மோசடி செய்தார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுக் குறித்தும், பிரதமர் மீது சுமத்தப்படும் ஹெல்பிங் அம்பாந்தோட்டை குற்றச்சாட்டுக் குறித்து மே விவாதம் நடத்த பிரதமருக்கு ரணில் அழைப்பு விடுத்திருந்தார்.

(ஐ-3)

## மரண அறிவித்தல்

### திருமதி அப்பாக்குட்டி அன்னம்மா

### (குட்டி ஆச்சி)



புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், அத்தியடி, புதுவீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா அப்பாக்குட்டி அவர்கள் 14.10.2005 வெள்ளிக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் -தில்லைவனம் தம்பதியரின் அன்பு மகளும் திரு.திருமதி வேலாயுதர் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அப்பாக்குட்டி அவர்களின் அருமை மனைவியும் சோமசுந்தரம் (முன்னாள் வர்த்தகர், திருகோணமலை), காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம் (முன்னாள் வர்த்தகர்), நாகலட்சுமி அவர்களின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற புஸ்பராஜா (களஞ்சியப் பொறுப்பாளர்), சரஸ்வதி, சுபத்திராதேவி, சித்திராதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் முத்தம்மா, காலஞ்சென்றவர்களான இராசம்மா, ஐயம்பிள்ளை மற்றும் சோமசுந்தரம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலைமகள் பரமலிங்கம், வேலழகன் சங்கீதா, கலைவாணி பிறேமதாசன், கலைபாரதி, ஸ்ரீரங்கன், சுபா, பிரபாகரன், நவநீதன், கிருத்திகா கனகேந்திரன், கட்சன் நிறஞ்சனா, கஜன்நாத், சுகிர்தா, சுதர்சன், மயூரதி, தர்சினி, மதுசூதனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஸ்வினி, அக்சயா, அக்ஸியா, பிரதீஸ், ஹரீசன், ஸாருஸன், ஸ்ருதி, ஸகீசன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2005) திங்கட் கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அ.சுந்தரலிங்கம்*
*மயூரா உரிமையாளர்,*
*யாழ். - கொழும்பு.*
*162/3, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*

(41562)(15-18)

தகவல்:
குடும்பத்தினர்.





நீங்கள் கணினி வாங்கப் போகிறீர்களா?
UNIT
6 பக்கம் பார்க்க





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# உலகக் கோட்பாட்டுக்கு எதிராக உருவெடுக்கும் சிங்களப் பேரினவாதம்!

தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற காலத்திலிருந்து சிறிலங்கா அரசுகள் ஒரு விடயத்தில் மிகுந்த சிரத்தை எடுத்து வந்துள்ளதை நாம் காணலாம். போர்க் காலமாக இந்தாலும், அல்லது சமாதானப் பேச்சுக்கான காலமாக இருந்தாலும் ஆட்சியில் இருந்த, இருக்கின்ற சிறிலங்கா அரசுகள் இந்த ஒரு விடயத்தில் தொடர்ந்து அக்கறை காட்டிச் செயற்பட்டு வந்திருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக, நன்கு திட்டமிடப்பட்ட வகையில், உலகளாவிய ரீதியில் விசமப் பரப்புரையை, சிறிலங்காவின் சகல சிங்கள அரசுகளும் புரிந்து வந்ததை, வருவதைத்தான் நாம் இங்கே குறிப்பிடுகின்றோம். சிறிலங்கா அரசுகளின் இவ்வகையான விசமப் பரப்புரைகள் அண்மைக் காலத்தில் மிகவும் முடுக்கி விடப்பட்டுள்ளதோடு கோடிக்கணக்கான ரூபாய்களும் இத்தகைய விசமப் பரப்புரைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

'உள்நாட்டு விடயம' என்றும் 'பிறநாடுகள் தமது உள்நாட்டு விடயங்களில் தலையிடக் கூடாது' என்றும் 'இது இனப்பிரச்சனை அல்ல வெறும் பயங்கரவாதப் பிரச்சனைதான்' என்றும் சளைக்காமல் நாக்கூசாமல் கூறிவந்த சிறிலங்கா அரசுகள் இன்று சர்வதேச ரீதியில், கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்து தனது விசமப் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை என்ன? அதற்கான அவசியம் என்ன? என்பவை குறித்து இப்போது தர்க்கிக்க வேண்டியது முக்கியமானதாகும் என்று நாம் கருதுகின்றோம்.

சிங்கள ~ பௌத்தப் பேரினவாத அரசுகள் தமிழினத்தின் மீது தொடர்ச்சியாக அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் மேற்கொண்ட அடக்குமுறைகள் குறித்தோ, ஒடுக்குமுறைகள் குறித்தோ தமிழினப் படுகொலைகள் குறித்தோ இனக்கலவரம் என்ற பெயரால் திட்டமிட்டு நடத்தப்பட்ட தமிழின அழிப்புக் குறித்தோ இன்றையதினம் நாம் மீண்டும் விளக்கவோ தர்க்கிக்கவோ போவதில்லை! இவை யாவும் எம்மவர்கள் அறிந்து, தெரிந்து, அனுபவித்து உணர்ந்த விடயங்களே!!

ஆகவே, சிறிலங்கா அரசுகளின் விசமப் பரப்புரைகள் குறித்து ஆழமாகவும் தெளிவாகவும் வேறொரு தளத்தில் நின்று தர்க்கிப்பதானது, ஒரு விரிவான பார்வையைத் தரக்கூடும் என்று நாம் நம்புகின்றோம்.

சிறிலங்கா அரசமைப்பு முதற்கொண்டு அதன் நீதித்துறை ஜனநாயக மரபுகள் சிங்கள அரசியல் கட்சிகள் அவற்றின் தலைமைகள் அவற்றின் அரசியல் மாற்றம் இராணுவக் கருத்துருவாக்கம், செயற்பாடுகள் யாவுமே சிங்களப் பௌத்தப் பேரினவாதத்தின் எழுச்சி மற்றும் நலன் குறித்தே செயல்படுபவவை ஆகும். இவை தமிழ்த்தேசிய இனத்திற்கு மட்டும் எதிரானவை அல்ல! தற்போதைய ஜனநாயக அரசியல் வாழ்வினை மேற்கொண்டுள்ள ஒட்டு மொத்த உலக நாடுகளுக்கும் எதிரான கருத்துருவாக்கத்தையும் செயலுருவாக்கத்தையும் கொண்டவையாகும். அதாவது ஜனநாயக மரபின் சகல பலவீனங்களையும் உபயோகப்படுத்திக் கொண்டு ஜனநாயகம் என்ற போர்வையின் கீழ் அராஜகம் புரிகின்ற ஒரு பேரினவாத சர்வாதிகார ஆட்சி முறையே சிறிலங்காவின் ஆட்சி முறையாகும். இதற்கு அன்றிலிருந்து இன்று வரை எந்தச் சிங்கள அரசுகளும் விதிவிலக்கல்ல.

பல உலகநாடுகள் வெட்கித் தலைகுனியக் கூடிய விடயங்கள் சிறிலங்காவின் அரசமைப்பிலே உள்ளன. எல்லோரும் சமத்துவமானவர்கள் என்ற உலகக் கோட்பாட்டை உடைத்தெறிந்து நிற்கின்றது. சிறிலங்காவின் அரசியல் யாப்பு. அது உண்மையில் ஓர் அடிமைச் சாசனம்.!!

## எம்மதமும் சம்மதமில்லை

சமத்துவம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கொண்டுள்ள நிலைப்பாட்டிற்கும் சிறிலங்கா அரசு கொண்டுள்ள நிலைப்பாட்டிற்கும் இடையே உள்ள முக்கியமான வித்தியாசத்தை ஒர் எளிய உதாரணத்தின் ஊடே சுட்டிக் காட்ட விழைகின்றோம்.!

சிறிலங்கா அரசமைப்பு 'மதம்' குறித்து தனது தீர்ப்பை இவ்வாறு கூறுகின்றது. பௌத்த மதத்திற்கு இலங்கையில் அதிஉயர் இடம் அளிக்கப்படுகின்றது. ஆகவே, இலங்கையில் அதிஉயர் இடத்தை வகிக்கின்ற மதம் பௌத்த மதமாகும். அதற்குச் சமமாக வேறு எந்த ஒரு மதமும் இல்லை என்பதே சிறிலங்காவின் அரசியல் சட்டமாகும். அதாவது 'எம்மதமும் சம்மதமே' என்பதோ அல்லது 'எல்லோரும் சமமே' என்பதோ சிறிலங்காவின் அரசமைப்பில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இதேவேளையில், 'இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை' குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் வழங்கிய வரைவில் குறிப்பிட்டுள்ள ஒரு சரத்தை ஒப்பீட்டளவில் தர்க்கிக்க விரும்புகின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகள் அளித்துள்ள அந்த வரைவின் ஐந்தாவது சரத்து கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது:~

வடக்கு ~ கிழக்குப் பகுதிகளில் எந்த ஒரு மதத்திற்கும் விசேட இடம் வழங்கப்படமாட்டாது.

அதாவது, தமிழீழ பிரதேசத்தில் எல்லா மதங்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படும் என்பதையும் எந்த மதத்தை யார் பின்பற்றினாலும் எல்லோரும் சமமானவர்கள் என்பதையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்குரிய ஆலோசனை வரைவு உறுதியளிக்கின்றது.

## 'மதம் குறித்து புலிகளின் நிலைப்பாடு'

தமிழீழ விடுதலைப் புலிகள் ஏதாவது ஒரு மதத்தின் மேலாதிக்கத்திற்காகப் போராடியவர்கள் அல்லர்! ஏதாவது ஒரு சாதிக்காகவோ, ஏதாவது ஒரு வர்க்கப் பிரிவின் மேலாண்மைக்காகப் போராடியவர்கள், ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகப் போராடுவதற்காகத் தமது வாழ்வையே அர்ப்பணித்தவர்கள்! மிகக் கடினம் வாய்ந்ததும் தியாகம் நிறைந்ததுமான தமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமது தற்காலிக வெற்றிக்காகத் தமது உயரிய கொள்கைகளைப் பலியிடுவதற்கு அவர்கள் தயாராக இல்லை! அதற்குப் பதிலாக தம்முடைய உயரிய உயிர்களைத்தான் தாரை வார்த்தார்கள்!! ஒப்பிட முடியாத ஒரு தலைமைத்துவத்தின் உறுதியான கொள்கைப் பிடிப்பினூடாக வழி நடத்தலின் ஊடாக ஒரு தெளிவான சமத்துவ உலகை நாம் காண்கின்றோம்.!!!

✪ 'எம் மதமும் சம்மதமல்ல' என்கிறது ஸ்ரீலங்கா அரசமைப்பு!

✪ 'எந்த மதத்துக்கும் விசேட இடம் இல்லை' என்கிறது புலிகளின் தன்னாட்சி அதிகார சபை!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சமத்துவக் கொள்கைக்கும் சிறிலங்கா அரசுகளின் சிங்கள ~ பௌத்த மேலாதிக்கக் கொள்கைக்கும் இடையிலான அடிப்படை வித்தியாசத்தைச் சுட்டிக் காட்டுவதற்காக ஓர் எளிமையான உதாரணத்தை மட்டும் இங்கே சுட்டிக் காட்டினோம். 'ஒரு பானை சோற்றிற்கு ஒருசோறு பதம்' என்கிற பழமொழிக்கு ஏற்ப நாம் வேறு உதாரணங்களை இப்போது சுட்டிக்காட்ட முயலவில்லை! 'இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை' குறித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசனை வரைவுத் திட்டத்தைச் சிங்கள அரசு எவ்வாறு புறக்கணித்தது என்பதையும் நாம் எல்லோரும் அறிவோம்.! அதற்குப் பின்னர் ஆழிப்பேரலை தந்திட்ட அழிவினைச் சந்திப்பதற்காக நிவாரணத் திட்டங்களைக் கொண்ட பொதுக்கட்டமைப்பு திட்டத்தை சிறிலங்காவின் நீதித்துறை(?) எவ்வாறு தடுத்து வைத்துள்ளது என்பதையும் நாம் அறிவோம்.

நாம் மட்டுமல்ல. சர்வ உலகமும் அறியும்! உள்ளதைச் சொல்லப்போனால் எமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எம்மையும் விட இந்த சர்வதேச உலகு நன்கு அறியும். சர்வதேச உலகம் தூங்கவில்லை. ஆனால், தூங்குவது போல நடிக்கின்றது. அதற்குத் தூபம் போடுவதற்காகச் சிறிலங்காவின் அரசுகள் தமது விசமப் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றன. தூங்காமல் நடிப்பவர்களின் தூக்கம் கெடாமல் இருப்பதற்காக சிறிலங்கா அரசு கோடிக்கணக்கான ரூபாய்களை தனது விசமப் பரப்புரைகளுக்காகச் செலவழித்து வருகின்றது.

இந்தப் பின்பலத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்தும் தமிழீழ மக்களின் ~ குறிப்பாக ~ புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் அரசியல் ரீதியான செயற்பாடுகள் குறித்தும் சில கருத்துக்களையும் தர்க்கங்களையும் முன்வைக்க விழைகின்றோம்.

## புலம் பெயர்ந்தோர் கவனத்துக்கு...!

ஒரு விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக ஒரு பேரினவாத அரசு பிரயோகிக்கக் கூடிய வழிகள் பலவாகும். விடுதலைப் போராட்டத்தை மேற்கொண்டுள்ள ஓர் இனத்தின் ஒற்றுமையைக் குலைப்பதும் விடுதலை குறித்த கருத்துருவாக்கத்தைச் சிதைப்பதும் விடுதலைப் போராட்டம் குறித்துப் பல ஐயப்பாடுகளைக் கிளப்பி போராட்டத்தின் வீரியத்தை மழுங்கடிக்க முனைவதும் இவ்வழிகளில் சிலவாகும். இராணுவ வன்முறையால் எதிர்கொள்ள முடியாமல் இருப்பதை அரசியல் வன்முறைகள் மூலம் மேற்கொள்வதற்குப் பேரினவாத சக்திகள் முயன்று வருகின்றன. அதற்காகப் பலவிதமான விசமப் பரப்புரைகளை மேற்கொள்ளும் பொருட்டு அதே இனத்தைச் சேர்ந்தவர்களை விலைக்கு வாங்கும் வேலைகளையும் பேரினவாத சக்திகள் செய்கின்றன. குறிப்பாகப் புலம் பெயர்ந்து வாழுகின்ற இனங்களுக்கு

சபேசன்
ஆஸ்திரேலியா

தத்தமது தாய் நாட்டின் விடுதலைப் போராட்டம் குறித்துச் சஞ்சலத்தை ஏற்படுத்த முனைவது இந்த விசமப் பரப்புரைகளின் நோக்கங்களில் முக்கியமான ஒன்றாகும்.!

இன்று உலகெல்லாம் புலம் பெயர்ந்து வாழுகின்ற யூத இன மக்கள் தத்தமக்கிடையே வேறு விடயங்களில் கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருந்த போதிலும் தமது நாடான 'இஸ்ரேல்' என்று வரும்போது கருத்தொருமித்து ஒருங்கிணைவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த வகையில் யூத மக்களின் கருத்துருவாக்கம் ஒன்றினை நாம் இந்த வேளையில்

(VIII பக்கம் பார்க்க)

மூத்த பெண்புலிகளின் அனுபவப் பகிர்வுகள் 09

# பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது சமூகம் அவர்களை விமர்சித்தது!

சந்திரமதனா



தமிழர்களின் இன விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் இணைந்து கொள்ள முன்னரும் பெண்கள் ஆங்காங்கே பேரினவாதிகளுக்கு எதிராக பல்வேறு வகையான போராட்டங்களில் தம்மை ஈடுபடுத்தியிருக்கின்றார்கள்.

சமூகத்தில் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளும் சில மூடநம்பிக்கைகளும் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வருவதற்குத் தடையாக இருந்திருக்கின்றன. ஆனாலும், சமூகத்தின் முன்னேற்றத்திலும் இனத்தின் விடுதலையிலும் அக்கறை கொண்ட சில பெண்கள் தம்மீதான தடைகளை உடைத்தெறிந்து கொண்டு, தமது இனத்துக்காக - சமூகத்துக்காக - பணியாற்ற முன் வந்தனர். இதனால் தமக்கு ஏற்படக்கூடிய அவப் பெயரையும் பொருட்படுத்தாது அரசியல் கட்சிகளிலும் பொது அமைப்புகளிலும் இணைந்து பெண்கள் பணியாற்றினர்.

பின்னர் காலப்போக்கில் அவர்கள் இனவிடுதலைக்காக ஆயுதம் ஏந்தினர். முன்னரெல்லாம் வெறுமனே சாத்வீக ரீதியில் போராட்டங்களை நடத்தியும் அமைதியான முறையில் சமூகப்பணி செய்து கொண்டும் இருந்த பெண்கள் பலர் பேரினவாதிகளின் அடாவடித்தனங்கள் முனைப்புப் பெற்றுச் சென்றதைக் கண்டு கொதிப்படைந்தனர். தாங்களும் ஆண்களுக்கு நிகராக ஆயுதம் ஏந்தத் தலைப்பட்டனர். அவ்வாறு ஆயுதம் ஏந்தியவர்களில் ஒருவர் மூத்த போராளி தேவா (தேவா அன்ரி)



(தேவா அன்ரி)

தற்போது தியாகதீபம் திலீபன் மருத்துவ மனையின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக இருக்கும் தேவா அக்காலத்தில் பெண்களின் விடுதலைக்கான பங்களிப்புப் பற்றிக் கூறினார்.

1967ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியில் உறுப்பினராக இணைந்து கொண்டேன். அடக்குமுறைக்கு உட்பட்டிருந்த எமது இனத்தின் விடுதலைக்காகப் போராடுவதற்காகவே நான் தமிரசுக்கட்சியுடன் இணைந்து செயற்பட்டேன்.

அக்காலத்தில் தமிழரசுக் கட்சியில் மகளிர் அமைப்பும் இருந்தது. அதன் கிளையை காங்கேசன் துறையில் நிறுவி அதற்கு ஊடாக சாத்வீகப் போராட்டங்களை நடத்தினோம். அன்றைய காலப்பகுதியில் பெண்கள் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவது விமர்சனத்துக்குரியதாகவே இருந்தது.

ஆனால், நாங்கள் அந்த விமர்சனங்களைக் கருத்தில் கொள்ளாது அவற்றை உடைத்தெறிந்து செயற்பட்டோம். பெண்களுக்கான கைத்தொழில்களை உருவாக்கி செயற்படுத்தினோம்.

அந்தக் காலத்தில் சமூகத்தில் நிலவிய சாதி ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் போராட வேண்டியிருந்தது. அதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்தோம்.

அப்படியிருக்கும்போது தமிழரசுக்கட்சி கூட்டணியாக உருவெடுத்தது.

இத்தகைய அரசியல் கட்சிகளின் சாத்வீகப் போராட்டங்கள் மூலமாக எமது இனத்தின் விடுதலையைப் பெற்றுவிடமுடியாது என்பதை உணர்ந்து கொண்டோம். எமது விடுதலையை வென்றெடுப்பதற்காக ஆயுதம் ஏந்தியே தீரவேண்டும் என்ற அளவுக்கு பேரினவாதிகளின் அடக்குமுறை முனைப்பு பெற்றிருந்தது அந்த நிலையை உணர்ந்து கொண்டதால் ஆயுதப் போராட்டத்தில் இணைந்து கொண்டேன் - என்கிறார் தேவா.

*(அனுபவங்கள் இன்னும் வளரும்)*



## முதற்கோணலே முற்றும் கோணிய 'கிறீன்பரேட்' கொமாண்டோ அணி!

ஸ்ரீலங்கா இராணுவத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்களுக்கு அமெரிக்காவின் 'கிறீன்பரேட்' கொமாண்டோ இராணுவ அதிகாரிகள் ஜாஎல காட்டுக்குள் வைத்து சிறப்புப் பயிற்சி வழங்கினார்கள். காட்டுக்குள் ஊடுருவிச் சென்று தாக்குவது எப்படி என்பது குறித்து தேர்ந்தெடுக்கப்பட்ட 300 இராணுவத்தினருக்கு அந்தச் சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது. அந்த அணிக்கும் 'கிறீன்பரேட்' கொமாண்டோ அணி என்றே பெயர் சூட்டப்பட்டது.

04.12.1997 .....

புளியங்குளத்தை மையப்படுத்தி ஒருபுறம் பனங்காமம் பகுதி ஊடாகவும் மறுபுறம் கரிப்பட்டமுறிப்பு போன்ற பகுதிகள் ஊடாகவும் இராணுவத்தின் அதிசிறப்பு படையணிகள் தமது முதலாவது நகர்வை - 'கன்னி' நடவடிக்கையைத் தொடங்கின.

மாலதி படையணியின் ஒரு அணி மன்னகுளம் காட்டுப்பகுதியில் தாக்குதலை எதிர்பார்த்துக் காத்திருந்தது. அப்போது மழைக்காலம் என்பதால் காட்டுக் குள் ஒரே சேறும் சகதியுமாக இருந்தது.... பதுங்கு குழிகளை வெட்டுவதற்கு பெரும் சிரமமாக இருந்தது. அரையும் குறையுமாக வெட்டப்பட்ட குழிகளைக் காப்பரண் களாக்கிக் காத்திருந்தன புலிகளின் அணிகள்.

எவ்.எம்.மக் (F.M - Mag) என்ற கனரக ஆயுதத்துடன் நீலாம்பரி என்ற போராளியின் தலைமையிலான சிறப்பு அணி ஒன்றும் அங்கு நிலையெடுத்திருந்தது.

4ஆம் திகதி அதிகாலை 'கிறீன் பரேட்' கொமண்டோ அணியின் நகர்வு தொடங்கியது...

சகல வகையான மோட்டார் எறிகணைகள் மற்றும் கனரக ஆயுதங்களுடன் மூர்க்கமான தாக்குதலோடு கொமாண்டோ அணி முன்னேறியது. நண்பகல் வரை நீடித்த சண்டையுடன் மாலதி படையணி நின்றிருந்த பகுதியில் சுமார் இரண்டரை கிலோ மீற்றர் நீளமான பகுதி கொமாண்டோ அணியிடம் வீழ்ந்தது. அந்தப் பகுதிக்குள் தான் நீலாம்பரியின் காப்பரணும் இருந்தது.

அந்த நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருந்த புலிகளின் தளபதிகளுக்கு நிலைமை புரிந்துவிட்டது. முன்னணியில் இருந்த காப்பரண்கள் இராணுவத்திடம் வீழ்ந்துவிட்டதால், அவற்றுக்குள் நின்றிருந்த நீலாம்பரி உட்பட போராளிகள் அனைவரும் வீரச்சாவடைந்து விட்டனர் என்று முடிவு செய்த தளபதிகள் மற்றொரு அணியைக் களமிறக்கி வந்திருந்த இராணுவத்தை எதிர் கொள்ளத் தயாராகிறார்கள்....

அப்போது தளபதி கேணல் பானுவின் தொலைத்தொடர்புக் கருவியில் பெண் போராளி ஒருவரின் குரல் ஒலிக்கிறது.

அது நீலாம்பரியின் குரல்... "

எங்களைச் சுற்றி எல்லா காப்பரணையும் ஆமி பிடிச்சிட்டான். எங்கட காப்பரண் மட்டும்தான் மிச்சம். இதுக்குள்ள நாங்கள் எட்டுப்பேர் இருக்கிறம்...தொடர்ந்து அடிச்சுக்கொண்டிருக்கிறம்...."

"எங்களில் இரண்டுபேர் சரி... 5பேருக்கு காயம்.."

"வேற படையணிகளை இறக்குங்கோ... அது வரைக்கும் நாங்கள் விடமாட்டம். சமாளிப்பம்..."

"...எங்கட காப்பரணுக்குப் பக்கத்தில இருக்கிற கட்டடத்துக்குள்ள காயப்பட்ட ஆமிக்காரரைக் கொண்டு போகிறாங்கள். அதுக்குள்ள ஷெல் போடுங்கோ.... இஞ்சால ஒரு இடத்தில கூட்டமாக கனபேர் நிக்கிறாங்கள். இவைக்கும் இரண்டு அனுப்புங்கோ....."

தொடர்ச்சியாக தளபதிக்கு அறிவித்துக்கொண்டு நாலாபுறமும் இருந்து வந்த கொமாண்டோ அணி தங்களை நெருங்கிவிடாதபடி ஆவேசமாகத் தாக்கிக் கொண்டிருந்தார்கள் நீலாம்பரியும் சகதோழிகளும்...

உடற் பாகங்கள் சிதைந்து அனைவருக்கும் இரத்தம் ஓடிக்கொண்டே இருந்தது. அவர்கள் சளைக்கவில்லை.

நீலாம்பரி கூறிய இடங்களைப் புலிகளின் எறிகணைகள் பதம் பார்த்துக் கொண்டிருந்தன.

மாலை 6.30 மணியளவில் வேறு சில படையணிகள் நீலாம்பரி வோக்கியில் கூறிய இடங்களுக்கு ஊடாக நுழைந்து கொமாண்டோக்கள் மீது தாக்குதல் தொடுக்க எதுவுமே செய்ய முடியாமல் "முதல் கோணலே முற்றும் கோணலாகி" 'கிறீன்பரேட்' அணி கைப்பற்றிய இடத்தையும் கைவிட்டுப் பின்வாங்கியது.

அமெரிக்க கொமாண்டோ படையணிகளிடம் சிறப்புப் பயிற்சி பெற்ற 'கிறீன்பரேட்' அதிசிறப்பு இராணுவ அணி தனது முதல் நடவடிக்கையிலேயே தோல்வி கண்டது.

அந்த அணிக்குப் பயிற்சி வழங்கிய அமெரிக்க கொமாண்டோ அதிகாரிகள் வாயடைத்து நின்றார்கள்.

நீலாம்பரியும் ஏனைய ஐந்து போராளிகளும் உடல் முழுவதும் காயங்களுடன் அங்கிருந்து காப்பாற்றப்பட்டார்கள்.

அவர்களின் அதீத துணிச்சலையும் சாமர்த்தியத்தையும் அறிந்த தேசியத் தலைவர் அடுத்தநாளே அவர்களை அழைத்துப் பரிசு வழங்கிப் பாராட்டினார்.

காயங்களுக்கு மருந்து கட்டியபடியே தமது அண்ணனின் கரங்களால் பரிசுபெற்று மகிழ்ந்தனர் அந்தத் தங்கைகள்.....

பின்னர் ஒரு தடவை கிளிநொச்சியில் நடந்த சண்டை ஒன்றில் நீலாம்பரி வீரச்சாவடைந்தார்.

**இப்போது அவர் மேஜர் நீலாம்பரி....**



# கேக் அலங்காரங்களில் வியத்தகு நுணுக்கங்கள்...

பெண்களுக்கேற்ற சுயதொழிலாகவும் அதிக வருமானத்தைப் பெறக்கூடிய ஒரு கலையாகவும் 'கேக்' அலங்காரக் கலை விளங்குகின்றது.

அந்த வகையிலே கடந்தவாரம் 'யோகி ஹோம் சயன்ஸ்' அக்கடமியில் நடைபெற்ற 'கேக்' அலங்காரக் கண்காட்சி அந்தப் பயிற்சியைப் பெற்றுக் கொண்ட பெண்களின் கலைத்திறனை வெளிப்படுத்தியுள்ளதுடன் கண்காட்சியைப் பார்த்துச் சென்றவர்களது மனதிலும் ஒரு நிறைவையும் உண்டு பண்ணியுள்ளது.

வித்தியாசமான கோணங்களில் - பாலர் கதைகள், பாடல்களைச் சித்திரிக்கும் வகையில் அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து 'கேக்' அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன.

ஒவ்வொரு விதமாகப் பல்வேறு அலங்காரங்கள் செய்து



வைக்கப்பட்டிருந்தன.

அந்த அக்கடமியில் பயிற்சி பெற்ற மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது கை வண்ணத்தை விதம் விதமாக வெளிப்படுத்தியிருந்தனர்.

பெண்களின் எதிர்கால வாழ்வை நல்ல முறையில் கொண்டு செலுத்தக் கூடிய சிறந்த கலையாக இது விளங்குகின்றது.

யார் வேண்டுமானாலும் இதனைப் பழகலாம்.



## யாழ்.பெண்களின் கைவண்ணங்கள்

விருப்பத்துடனும் மிகவும் அக்கறையுடனும் இதனைச் செய்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். அதன் மூலம் நல்ல வருமானத்தையும் பெற முடியும்.

மக்களிடம் இதற்கு நிறைய வரவேற்பு இருக்கின்றது. ஆரம்பகால 'கேக்' அலங்காரத்தில் இருந்து தற்போது செய்யப்படும் அலங்காரத்திற்கு நிறைய வேறுபாடு

- கங்கா, தீபா -

காணப்படுகின்றது. பழைய முறைகளை விடப் புதிய முறைகளைத்தான் பெரும்பாலும் எல்லோரும் விரும்புகின்றனர். புதிய முறையில் செய்யப்படும் 'கேக்' அலங்காரங்கள் மிகவும் அழகானவையாகக் காணப்படுகின்றன.

இந்தக் கேக் அலங்காரப் பயிற்சியானது 3 மாதங்களுக்கு நடத்தப்படுகின்றது. மூன்று மாதங்களில் பயிற்சியை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கு மேலும் ஒரு மாத காலப் பயிற்சி வழங்கப்பட்டு கண்காட்சி நடத்துவதற்கான விசேட ஒழுங்குபடுத்தல்கள் நடத்தப்பட்டு கண்காட்சியுடன் அவர்களது பயிற்சி முடிவடையும்.

அத்துடன் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்படுகின்றது.

இந்தக் கண்காட்சி தொடர்பாகவும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் தொடர்பாகவும் அக்கடமி நிர்வாகி திருமதி யோகினி சண்முகநாதனிடம் கருத்துக் கேட்டபோது:-

இந்த அக்கடமியில் 'கேக்' அலங்காரப் பயிற்சியில் 27 மாணவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். பயிற்சி முடிவில் கண்காட்சி நடத்தப்பட்டு அவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

என்னிடம் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு நான் முழுமையாகப் பயிற்சியை வழங்கிய பின்னர்தான் சான்றிதழ் வழங்குவேன். என்னிடம் கற்கும் மாணவர்களுக்குப் பூரண பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. என்னிடம் படித்த எத்தனையோ பெண்கள் வெளிநாடுகளிலும் இருந்து உழைக்கின்றனர்.

அண்மையில் கூட வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் (முன்னர் என்னிடம் படித்துவிட்டு வெளிநாடு சென்றவர்கள்.) இங்கு வந்து புதிய முறையிலான 'ஐசிங்' அலங்காரங்களை என்னிடம் கேட்டுப் படித்து விட்டுச் சென்றுள்ளனர்.

பெண்கள் கட்டாயம் படித்திருக்க வேண்டிய கலையாக இது காணப்படுகின்றது.

நான் 'கேக்' அலங்காரம் மட்டுமின்றி ஆடை அலங்காரம், முக அலங்காரம் போன்ற பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருகின்றேன்.

சிலர் இந்தப் பயிற்சிகளில் முழுமையாக ஈடுபடாமல் இரண்டு, மூன்று நாள்கள் மட்டும் நடத்தப்படும் பயிற்சிகளை எடுத்து விட்டு 'பியூட்டி' வகுப்புகளை நடத்தி வருகின்றனர். ஆனால், அவ்வாறு 'பியூட்டி' வகுப்புகளை நடத்துவது மிகவும் தவறானது. 'பியூட்டி' வகுப்புகளை நடத்த விரும்புவர்கள் முதலில் தாம் அது பற்றிய அறிவைப் பூரணமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மக்கள் நன்மை பெறக்கூடிய வகையிலேயே நாம் செயற்படவேண்டும்.



அவர்களுக்குத் தீங்கு ஏற்படக்கூடிய வகையில் எந்தவிதமான 'பேசியலோ' அல்லது வேறு எதுவாக இருந்தாலும் செய்யக்கூடாது.

நான் இயற்கை மூலிகைகளில் இருந்து தயாரிக்கப்பட்ட பொருள்களைத்தான் பயன்படுத்துகின்றேன். அதனால் பாதிப்புகள் எதுவும் ஏற்படாது. இரசாயனம் கலந்த எந்தப் பொருளும் பயன்படுத்துவதில்லை. என்னிடம் பயிற்சிகளைப் பெறுவதற்கான கட்டணம் கொஞ்சம் அதிகம்தான். ஆனால், நான் வகுப்புகளை நடத்தும்போது பயன்படுத்தும் பொருள்களின் விலை அதிகமாக இருக்கிறது. அத்துடன், அந்தப் பொருள்கள் தரமானவையாகவும் இருக்கும் - என்றார். ✱

# சந்தியாவின் கடிதங்கள்

**பிரியமுள்ள பிரியாவிற்கு,**

அன்பை விதைத்தால் கசப்பா விளையும்? கசப்பை விதைத்துவிட்டு கசப்பு விளை கின்றதே என புலம்பினால் சரியா? எனவே, அன்பை விதைத்து அன்பை அறுவடை செய்வோம்.

என்னடா இவள் ரொம்பக் குழப்புகிறாளே என நினைக்கின்றாயா? நான் குழப்ப வில்லை. என்னால் முடிந்தளவு தெளிவை ஏற்படுத்த முயற்சிக்கின்றேன்.

உங்களுக்கு வரவேண்டிய மிகப் பெரிய தொகைப் பணத்தை ஒருவர் அபகரிக் கின்றார். அந்தப் பணத்தில் சுகபோக வாழ்க்கையை நடத்தும் உங்கள் சகோதரத் தின் மீது உங்களுக்கு அன்பு ஏற்படுமா? உங்களை வறுமையில் வாட்டி நாளாந் தம் கண்ணீரை மட்டுமே தரும் உங்கள் சகோதரத்தை ஏற்றுக்கொள்ள முடியாது தான். ஆனால், அதே சகோதரம் துன்பப்பட்டு வாழும்போது உதவவேண்டியது உண்மை அன்பின் தாற்பரியம்.

உங்களை வாட்டி வதைத்தவர்கள் இன்று நேசக்கரம் நீட்ட யாருமின்றி வாடி வதங்கையில் ஏன் வலியச் சென்று உங்களது அன்பை வெளிப்படுத்தக் கூடாது? அநேக தடவைகளில் உங்களது காலைவாரி வேடிக்கை பார்த்த உங்கள் நண்பர்களுக்குத் துன்பம் நேர்கையில் ஏன் உதவி செய்யக்கூடாது?

நாம் ஒவ்வொருவரும் வாழப் பிறந்தவர்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு துளி யையும் ரசிப்பதற்கென்றே வாழ்பவர்கள். ஒவ்வொரு கணமும் கழிந்தபின் மீண்டும் வராது. அந்தக் கணத்தை எவ்வாறு மகிழ்ச்சியுடன் கழிக்கலாம் என்ப திலேயே நமது சிந்தனை நடைபோட வேண்டும்.

'பழிவாங்கவேண்டும்' என்ற கடுமையான மனிதத் தன்மையற்ற வார்த்தை - சிந்தனை நமது மனதில் எழக்கூடாது. அந்தச் சிந்தனையே நமது வாழ்வின் மகிழ் வைக் குலைத்துவிடும்.

தீமைக்குத் தீமையையே பதிலாகக் கொடுப்போமானால் மீண்டும் மீண்டும் தீமைதான் விளையும். பழிவாங்கும் எண்ணத்தை மறந்து மன்னித்து எமது வாழ்வை சந்தோசமாக்குவோம்.

நம் இதயங்களில் வேரோடிக் கிடக்கும் வெறுப்பை, பகைமை உணர்வு, பிறர் ப டும் வேதனைகளைக் கண்டு சந்தோசம் கொள்ளும் உணர்வு என்பவற்றைச் களை வதே நம்மை உண்மையான மனிதனாகவும் சந்தோசமான மனிதராகவும் மாற்றும்.

சந்தோசத்திற்காக நாம் சகலதையும் தாங்குவோம்; சகலதையும் ஏற்றுக்கொள் வோம். அனைத்தையும் தாங்கும் சக்தி அன்புக்குண்டு அன்பென்னும் தூய வெள்ளமே சகலவித கோபங்கள், ஏமாற்றங்கள் அனைத்தையும் அடித்துக் கொண்டு போகும்.

எமக்குத் தீமை செய்பவர்களுக்கு நன்மை செய்து மகிழ்வுடன் வாழ்வோம் .

பிரியமுடன் சந்தியா

# உடலின் எடையைக் குறைப்போம்



குண்டாக இருக்கின்றோமே, எம்மைப் பலரும் கேலி செய்கின்றார்களே! உடலின் எடையைக் குறைப்போம் என முயற்சி செய்பவர்களே கவனமாகக் கேளுங்கள்.

உடலின் எடையைக் குறைப்பதற்கென உடற்பயிற்சிகளைச் செய்யும்போது காலையில் செய்வதே நல்லது. அதாவது காலை உணவு உண்பதற்கு முன் செய்யவேண்டும். காலையில் உடற்பயிற்சி செய்தால் உடலில் அதிகமான கொழும்புசக்தி எரிக்கப்படும். பிற்பகலிலோ மாலையிலோ உடற்பயிற்சி செய்வதால் காபோவைதரேட் கலோரிகள்தான் அதிகளவில் எரிக்கப்படும்.

எனவே, காலைப் பயிற்சியே கொழுப்பைக் கரைக்க உதவும்.

## அர்த்தமுள்ள வாழ்விற்கு...

நீயே சிந்தித்துப்பார். உனக்குக் கிடைக்க வேண்டியதுதான் உனக்குக் கிடைக்கும். அதை எத்தனை பேர் வந்து தடுத்தும் நிறுத்தமுடியாது. உனக்குக் கிடைக்காது போகவேண்டியதை நீ எவ்வளவு முயன்றும் பெறமுடியாது.

# இயற்கையை ரசிக்கும் டெனிஸ் மக்கள் உல்லாச மையங்கள் அங்கு ஏராளம்

டென்மார்க்கின் ரன்டெர்ஸ் (Randers) எனும் நகரத்தில் அமைந்த இடம்தான் றெய்ன்ஸ்கோவ் (Regnskov). இங்கு ஆச்சரியப்படத்தக்க விடயம் என்னவென்றால் மூன்று கட்டடங்கள் விசேடமான முறையில் அமைக்கப்பட்டு அவை ஒவ்வொன்றினுள்ளும் ஒவ்வொரு கண்டங்களுக்குரிய காலநிலை அமைப்புகளும் அந்த சீதோஷண நிலையில் வசிக்கும் மிருகங்கள், பறவைகள், தாவரங்கள் என்பவற்றையும் தத்ரூபமாக அமைத்துள்ளனர்.

ஒவ்வொரு கண்டத்திற்குள்ளும் நுழைந்ததுமே அந்தக் கண்டத்தைச் சேர்ந்த நாடு ஒன்றில் நிற்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது.


றெய்ன்ஸ்கோவில் உள்ள ஆசியாக்கண்டத்திற்குரிய வாழை

ஆசியாக்கண்டம், ஆபிரிக்காக் கண்டம், தென்அமெரிக்காக் கண்டம் ஆகிய மூன்று கண்டங்களின் அமைப்புகளே இங்கு மாதிரி அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளன.

முதலில் ஆசியாக் கண்டத்திற்குள் செல்வோம். அங்கு சென்றதுதான் தாமதம் ஒரே வெக்கையாக இருந்தது. பறவைகள், மிருகங்கள் எல்லாம் ஒலி எழுப்பியபடி இருந்தன. வண்ணத்துப்பூச்சிகள், ஓணான், தவளை போன்ற உயிரினங்களும் ஆங்காங்கே காணப்பட்டன. டென்மார்க்கில் இருந்து திடீரென யாழ்ப்பாணத்துக்கு வந்த பிரமை ஏற்பட்டது. எமது மண்ணில் காணப்படும் செவ்வரத்தை அழகாகப் பூத்துக் குலுங்கியமை மேலும் ஆச்சரியத்தை வரவழைத்தது. வாழை மரத்தையே காணமுடியாத இந்த நாட்டிலே சிறிய வாழைகள் குலை போட்டுக் காணப்பட்டன. இந்த இடத்தில் ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும் டென்மார்க்கில் எமது தமிழ் மக்கள் சாடிகளில் வாழைகளை நட்டு வீட்டினுள் வைத்துப் பராமரித்து வருகின்றனர்.

முக்கிய விரத நிகழ்வுகள், விழாக்கள் போன்றவற்றிற்கு வாழை இலைகளைப் பயன்படுத்துகின்றனர்.

சரி, நாம் மீண்டும் ஆசியாக் கண்டத்திற்கு வருவோம். இங்கு எமது நாட்டிற்குரிய ஊர்வன, பறப்பன அனைத்தும் காணப்பட்டன. ஆயினும், அவற்றின் நிறங்கள்தான் சற்று வித்தியாசமாக இருந்தன. அட்டைகளை டப்பா ஒன்றில் வைத்திருந்த டெனிஸ்காரப் பெண் ஒருவர் அட்டைகளை எடுத்து சிலரின் கைகளில் கொடுத்து வைத்திருக்கும்படி கூறினார். டென்மார்க்கைச் சேர்ந்தவர்கள் அட்டையை கம்பளிப் பூச்சியை வைத்திருப்பதுபோல் ஆசையாகத் தடவினர். ஆனால், எம்மவர்கள் துள்ளிக் குதித்து ஓடியதை அவர்கள் வேடிக்கை பார்த்தனர். எமது நாட்டிற்குரிய அணில்கள் அங்கு வலம் வந்தன. முதலைகளும் நீரில் வலம் வரத் தவறவில்லை. இவ்வாறு பல விடயங்களை ஆவலோடு பார்த்தவர்களாய், ஆசியாவை விட்டு ஆபிரிக்காவிற்குள் நுழைந்தோம்.

அதனுள் நுழைந்ததுதான் தாமதம் வித்தியாசமான காலநிலையை உணர முடிந்தது. வெப்பம் குறைந்து சற்றுக் குளிராகக் காணப்பட்டது. காட்டுப் பிரதேசத்திற்குள் நிற்கும்போது மழைபெய்வது போன்ற ஓர் உணர்வு சிறிது சிறிதாய் தென்பட ஆரம்பித்தது. எம்முடன் பல வெளிநாட்டவர்கள் மிகவும் ஆவல் மிகுந்தவர்களாய் அங்கு வந்திருந்தனர். அவர்கள் தமக்குள்ளே பல்வேறுபட்ட மொழிகளிலும் பேசிக் கொண்டனர். அவற்றைப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் இந்தக் காட்சிகளில் அவர்கள் மலைத்து நிற்கின்றனர் என்பதை மட்டும் எம்மால் ஊகித்துக் கொள்ள முடிந்தது.



இந்துக்களின் தெய்வ சிலை

ஆபிரிக்கா கண்டத்திற்குரிய பாம்புகள், பறவைகள், மிருகங்கள் என எல்லாமே பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்ட இடங்களில் காணப்பட்டன. ஒரு பகுதியை நோக்கினோம். அங்கே வெளவால்கள் கூட்டமாக அமர்ந்திருந்தன. அதனைப் பார்த்த போது யாழ்.கச்சேரியடிப் பகுதியில் உள்ள பழைய பூங்கா நினைவுக்கு வந்தது. அத்துடன், விஷப்பாம்புகள், விஷத் தவளைகள் என எல்லாமே கொடியனவாய் காணப்பட்டன. இவற்றின் மத்தியில் மிக நீளமான 'அனகொண்டா' இன பாம்பு ஒன்று காணப்பட்டது. அவற்றுடன் ஐந்து தலைப் பாம்புகளுடன் கூடிய இந்துக்களின் தெய்வ சிலையொன்றும் வைக்கப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் பார்த்தபடியே நாம் தென் அமெரிக்கா கண்டத்தினுள் நுழைந்தோம். இங்கும் காலநிலை திடீரென மாற்றமடைந்ததைப் போல் உணர முடிந்தது. அங்கு மழைபெய்வது போன்ற உணர்வு ஏற்பட்டதுடன் சற்று இருள் போன்றும் காணப்பட்டது.

தென் அமெரிக்காவிற்குரிய மிருகங்கள், பறவைகள், தாவரங்கள் காணப்பட்டன. தாவரங்கள் எனும்போது எல்லாமே புதியரகமாகவே இருந்தன. வித்தியாசமான புதிய வகையான பறவைகளும் காணப்பட்டன. உதாரணமாக பஞ்சவர்ணத்தினாலான கிளிகள் காணப்பட்டன. பச்சை நிறத்திலான நீளமான பாம்புகள் கண்ணாடிக் கூடுகளில் வைக்கப்பட்டிருந்தன. ஆமைகள், முள்ளம்பன்றிகள், வெள்ளெலிகள், கீரியினங்கள் எனப் பல்வேறு வகையான அதிசய உயிரினங்கள் இங்கே காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

தென் அமெரிக்காவில் இருந்து வெளியில் வந்ததும் அதிசய மீன்கள் உள்ள இடத்திற்கு அழைக்கப்பட்டோம். எங்குமே கண்டிராத வகையில் அதிசய மீன்கள் பாரிய கண்ணாடித் தொட்டிகளில் வலம் வந்தன. பாரிய மீன்கள் பல்வேறு நிறங்களில் வண்ணமயமாய் காட்சியளித்தன. அவற்றையெல்லாம் கண்டு மலைத்தவர்களாய் வெளியில் வந்துபார்த்த போது மேலும் அதிசயம். காரணம் வெளியில் வெயில் நெருப்பாய் எறித்தது. உள்ளே நின்றபோது நாம் மழை பெய்வதாயே உணர்ந்திருந்தோம். இதுதான் 'மழைக்காடு (Regnskov).


டென்மார்க்கின் மற்றொரு பெரிய நகரம் தான் 'றிபே' (Ribe) இங்கு பெரியதொரு தேவாலயம் உள்ளது. இத்தேவாலயத்தைத் தரிசிப்பதற்கு பல்வேறுபட்ட நாடுகளில் இருந்தும் பலர் வருவது வழமை. இந்தத் தேவாலயத்தில் அதிசயம் ஒன்று உள்ளது. அதாவது தேவாலயத்தின் கோபுரத்தில் ஏறுவதற்கு 1,500 படிகள் உள்ளன. ஒரு காரியத்தை நினைத்து அதாவது நேர்த்தி வைத்து இப்படிகளின் வழியே ஏறினால் நினைத்த காரியம் நிறைவேறும் என்பது இங்குள்ள மக்களின் நம்பிக்கை. நாமும் நாடு விட்டு நாடு வந்து இதில் ஏறிவிடவேண்டும் என நினைத்து, படிவழியே ஏறத்தொடங்கினோம். அரைவாசித் தூரம் தான் சென்றிருப்போம் அதற்குமேல் ஏற முடியவில்லை. சற்று ஓய்வெடுத்தபடியே அருகில் உள்ள ஜன்னலின் வழியே வெளியில் பார்த்தோம். கீழே தரையில் அனைத்துமே சிறியதாகத் தெரிந்தன. அரைவாசித் தூரமே இப்படியென்றால் மேலே சென்றால் எப்படியிருக்கும் - நினைத்துப் பார்க்கவே தலைசுற்றுவதுபோல் இருந்தது. ஆனால், டெனிஸ்காரர்கள் எம்மைத் தாண்டி வேகமாகச் சென்று கொண்டிருந்தனர். அவர்களின் உற்சாகம் தைரியத்தை வரவழைத்தது. அவர்களைத் தொடர்ந்து நாமும் ஏறினோம். சில இடங்களில் ஏறுவதற்கு கயிறுகள் காட்டப்படிருந்தன. கயிறுகள் அறுத்தால் கீழேதான். கீழே பார்க்கவே அச்சமாக இருந்தது.


றெய்ன்ஸ்கோவில் உள்ள 'அனகொண்டா' இனப் பாம்பு

ஒருவாறு கோபுரத்தின் உச்சியை அடைந்து விட்டோம். உச்சியில் 50 பேர் வரை நிற்கக்கூடியவாறு தளம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் நின்றாவாறே பலர் புகைப்படம் எடுத்தனர். நாமும் வீடியோ, புகைப்படம் என்பவற்றை எடுத்தபடியே வெளிக்காட்சிகளைக் கண்ணுற்றோம். நாம் காண்பது கனவா நனவா என எண்ணவைத்தது. அங்கு நின்றவாறு டென்மார்க்கின் பல நகரங்களையும் ஒரே பார்வையில் பார்க்கக் கூடிய வாறு இருந்தது. சற்றுத் தொலைவில் கடலும் தெரிந்தது.

டென்மார்க்கிலிருந்து
**பகீர்**

அழகிய வீடுகள் சிறிய விளையாட்டுப்பொருள்கள்போல் காட்சியளித்தன. அந்த இடத்தைவிட்டு செல்லவே மனம் வரவில்லை. ஒருவாறு கீழே இறங்குவதற்கு ஆயத்தமானோம். கிழே இறங்குவதை நினைத்தபோது மனம் பதைபதைத்தது. மாலை 5மணியிருக்கும் நாம் படிவழியே மிகவும் கவனமாக இறங்கிக் கொண்டிருந்தோம். ஆனால், மேலே எவரும் வரவில்லை. காரணம் ஆலயத்தினுள் எவரையும் 5 மணிக்குப் பின்னர் அனுமதிப்பதில்லை என பின்னர் அறிந்துகொண்டோம். ஒருவாறு தரையைத் தொட்டதுதான் தெரியும். உயிரையே கையில் கொண்டு வந்தது போல் ஒரு பிரமை ஏற்பட்டது. பின்னர் ஆலயத்தில் போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து வழிபாடினை மேற்கொண்ட பின்னர், ஆலயத்திற்குப் பொறுப்பாக இருந்தவரிடம் விடைபெற்றோம். ஆலயத்தின் வெளிச்சூழல் மிகவும் அழகாக அமைந்திருந்தது. எங்குபார்த்தாலும் சுற்றுலாப் பயணிகள் நிறைந்திருந்தனர். சிலர் படகுச் சவாரிகளிலும் ஈடுபட்டிருந்தனர். வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவருவதற்கேற்றவாறு விற்பனை நிலையங்களும் அங்கு காணப்பட்டன. ஆனால், பொருள்களின் விலைகள் உயர்வாகவே இருந்தன. நாமும் அங்கு வந்துபோன ஞாபகத்திற்காகச் சில பொருள்களை வாங்கிச்சென்றோம்.


'றிபே' நகரிலுள்ள தேவாலயம்

அடுத்த தொடரில் டென்மார்க்கின் ஒதுக்குப்புறமான காட்டுப்பகுதியில் உள்ள மிருகக்காட்சி சாலை பற்றிய விநோதமான தகவல்களைப் பார்ப்போம்.

(வளரும்)

## ஒரு பிரகடனத்தின் எதிர்வினை...

எங்களுடைய
புன்னகையை சந்தேகிக்கும்
எல்லோருக்காகவும்
எங்களுடைய தெருக்களில்
சருகுகள் நிறைகையில்
கந்தகம் மணக்கையில்....

குருவிகளின் குரல்
சப்பாத்துக் கால்களில்
நொருங்கித்தேய்கையில்....
மனிதர்களின்
சுவடுகளேயறியா
இடங்களிற்கு
நாங்கள்
துரத்தப்படுகையில்
யார்
இருந்தார்...
உறைந்து போய்க்கிடக்கும்
எங்கள் குழந்தைகளின்
புன்னகையை....
குரல்களற்று அலையும்
ஊர்க்குருவியின் பாடலை....
பச்சையற்றெரியும்
வயல்களின்
பசியை....
பேனாக்களை
இழந்த எங்கள்
குழந்தைகளிடமிருந்து
துப்பாக்கிகளை....
முகவரிகளற்றுத் தேசங்களில்
அலையும்
உறவுகளின் முகங்களை...
மாற்றங்கள் அற்றுப்போன
வாழ்வின் சுவையை....
மறுபடியும்
தர முடியுமா உம்மால்?
நாங்கள் ஏன் தனித்தோம்
உலகே! எங்கள்
உணர்வுகளின் வலி
எட்டவேயில்லையா
உனக்கு?

எம் ஊரின்
நதியின் சலசலப்பில்
வருடும் தென்றலின் தழுவலில்
ஒவ்வொரு பூவின்
முகத்திலும்
விடுதலையின்
விருப்பு மிளிர்கிறதே
தெரிகிறதா உனக்கு?
நாங்கள் கனவுகள்
சமைக்கிறோம்
எங்களிடம் மிச்சமிருக்கும்
சுதந்திர உணர்வுகளின் மீது
எங்கள் கனவுகளைக்
கட்டியெழுப்புகிறோம்
நிறங்களற்றுப்போன
இவ்வாழ்வின்
நிறம் தருவார் யார்?

த. அகிலன்

## கனவுள் மீண்ட இரவு

கிழிக்கப்பட்ட கொடிய
முகங்களும்
வீறி வீசி நிற்கும் முட்புதர்களும்
கபாலங்களின் உரசல் ஒலிகளும்
நெஞ்சை பயத்தால்
அள்ளுகிறது.......

யாருமில்லா தெருவில்
நடக்க விடாமல்
காலை இழுப்பது போன்ற
உணர்வு மேலிடுகிறது...
இறப்பரில் மாட்டிய
கம்பிச் சுருள் போல
வாய்திறந்து பேசவிடாமல்
மௌன வாயு பல்லிடுக்குகளில்
பதுங்கிக்கொள்கிறது.

தூர நோக்கினால்
தெரியவில்லை சூரியன்.
விண், மண்ணை முட்டியபடி
தெரிகிறது.
வல்லூறுகளே வானில்
சுற்றியபடி இடைவெளிகளை
நிரப்பிக்கொள்கிறது அச்சுறுத்தும்
ஒலியுடன்............

விண்மீன்கள்
ஒளிகளைக் குறைத்து
கறுப்பு முகில்களுக்குள்ளே
மறைந்து கொள்கின்றன.

விருட்சங்களிடையே
விடியலின் குரல் கொடுக்க
சேவல்கள், குயில்கள் இல்லை.
வெளவால்களே தலைகீழாக
தொங்கியபடி மலங்களை
உமிழ்கின்றன.....

திடீரென
பொழிந்தது மழை
விஷ ஜந்துகளின்
கீச்சல்கள் தொடங்க
மழைத்துளி பிடித்து
வானத்தில் ஏற முயன்றேன்
பயத்தில் அலறி விழித்து
எழுந்தேன் கொடிய
கனவில் இருந்து மீண்டு.

- சுயர்சன்

# யாழ்ப் பாணம்



## ‘தப்புக்கணக்கு’

அவர் எனது நீண்ட கால நண்பர். ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் நாம்.

ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஒரே அலுவலகத்தில் பணி புரிந்திருக்கின்றோம்.

எப்போதுமே தன்னை ஒரு பெரிய ஆளாக - தனக்குத் தெரியாதது எதுவுமே இல்லை என - 'வாய்ச்சவடால்' அடித்துக்கொள்ளும் ரகம் அவர். அரச சேவையில் திறமை காட்ட இயலாததால்,அரச சேவையிலும் சரி, சொந்த வாழ்க்கையிலும் சரி அவரால் முன்னேற முடியவில்லை.

ஆனால், 'வாய்ச் சொல்லில் வீரரடி' என்ற பாரதியின் வார்த்தைக்கு உதாரணம் அவரே என்பது எனது கணிப்பு.

உரிய காலத்தின் முன்னர் இளைப்பாறும் வாய்ப்பைப் பயன்படுத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே அரச சேவையிலிருந்து அவர் இளைப்பாறி விட்டார். கடந்த இரு ஆண்டுகளாக வேறு மாவட்டத்தில் நான் அரச சேவையைத் தொடர நேர்ந்ததால் எப்போதாவது அவரும் நானும் சந்தித்துக் கொள்வதுண்டு. இளைப்பாறி ஊரோடு வந்த பின்பும் சிரமத்தோடு குடும்பத்தை நடத்தி வந்த அவரது வாழ்க்கையில் அண்மைக் காலமாக வசதி வாய்ப்புகள் பெருகிக் காணப்பட்டதை என்னால் அவதானிக்க முடிந்தது.

இந்த மாற்றம் எவ்வாறு சாத்தியமாயிற்று? என்ற எனது சந்தேகத்தை அவரே அண்மையில் ஒரு நாள் தீர்த்து வைத்தார்.

அதாவது வருமானம் தரும் தொழிலொன்றை மேற்கொண்டாலன்றி மாதாந்தம் கிடைக்கும் ஓய்வூதியத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்திச் செல்வது சிரமமென்பதை உணர்ந்த வேளையில் அவர் தேர்ந்தெடுத்த வழி திருமணப் பொருத்துநர் தொழிலை மேற்கொள்வதென்பதே.

முன்னரெல்லாம் இந்தப் பணியை மேற்கொண்டோரைத் 'தரகர்' என்று அடையாளப்படுத்தினோம். பொதுவாகவே தரகர்களது பேச்சை ஏனையோர் இலேசில் நம்புவதில்லை.

'ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை நிறைவேற்று' என்ற முதுமொழி இதற்குக் காரணமாயிருக்கலாம்.

ஆனாலும், தரகர்கள் ஓர் அலுவலில் இறங்கிவிட்டால் எத்தனை அலைச்சல் பட்டாலும் மனம் தளராமல் தமது அலுவலை நிறைவேற்ற முயலும் தன்மை கொண்டவர்கள்.

'கருமமே கண்ணாயினார்' என்பது இவர்களுக்குப் பொருத்தமான கூற்று. அந்த நாளில், கையில் குடையும் காலில் செருப்புமாய் அலையோ அலைவு என்று அலைந்து ஒரு திருமணத்தை ஒழுங்கு செய்ய இவர்கள் பட்டபாடு இலேசுப்பட்ட தொன்றல்ல. இத்தனைக்கும் அவர்கள் கொண்டு செல்லும் ஜாதகக் குறிப்புகள் சம்பந்தப்படும் இரு தரப்பாலும் நுணுகி ஆராயப்பட்டு, மேற்கொண்டு தலைதூக்கும் பிரச்சனைகளுக்குகெல்லாம் தமது வார்த்தை ஜாலங்களால் பதிலளித்து, அந்த முயற்சியின் முடிவில் அவர்கள் ஒரு கல்யாணத்தை நிறைவேற்றி வைப்பது தமக்கான தரகுக் கூலியைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனே அமையும் முயற்சியாய் அமைந்தது.

அன்றைய திருமணத்தரகர்கள் அவ்விதம் தமது முயற்சி கைகூடி, ஒப்பேறும் திருமணங்களில் தாமும் கலந்து மகிழ்ந்து தமக்கான தரகுப் பணத்தை தமது சேவைக்கான அன்பளிப்பாகப் பெற்றுத் திருப்தியுற்றனர்.

இது இருபத்து ஓராவது நூற்றாண்டு; காலமாற்றம், நாகரிக முன்னேற்றம் மற்றெல்லாத் துறைகளையும் போன்று இந்தத் துறையையும் மாற்றியமைத்தது புதுமையல்லவே!

கால மாற்றம் யாழ்ப்பாணத்தாரின் நடையுடை பாவனை, கலாசாரம் என்பற்றில் ஏற்படுத்தியுள்ள மாற்றத்தைத்தான் தினமும் கண்டும் கேட்டும் அனுபவிக்க முடிகிறதே!

'தரகர்' என்ற பதம் அநாகரிகமென கொண்டு, அத் தொழில் செய்வோர் தம்மைத் திருமணப்பொருத்துநர் என இன்று விளம்பரப்படுத்திக் கொண்டபோதிலும், அவர்கள் அன்று போல் இன்று தமது செயற்பாடுகளைப் பகிரங்கமாக மேற்கொள்வதைத் தவிர்க்கவே விரும்புகின்றனர்.

ஒரு சிலர் தம் தொழில் வாய்ப்புக்காக - தமது பெயர் அடிபட வேண்டுமெனக் கருதினாலும், இவர்களில் பெரும்பாலானோ இலை மறை காயாக - காதும் காதும் வைத்தாற்போல் - காரியமாற்று வதையே விரும்புகின்றனர்.

ஆரம்பத்தில் குறிப்பிட்ட எனது நண்பர் தமது திருமணப் பொருத்துநர் தொழிலை முன்னெடுத்துச் செல்லும் பாங்கே தனியானது; சுவாரஸ்யமானது.

திருமணப் பொருத்தம் குறித்து தம்மை நாடிவரும் நபர் ஒருவரிடமிருந்து அவசிய தகவல்களைச் சேகரித்துக் கொள்ளும் அவர், தாமாக பத்திரிகையொன்றில் மணமகனோ, மணமகளோ தேவைக்கேற்ற விதத்தில் விளம்பரம் செய்து கொள்வார். எவ்வித தனிப்பட்ட தகவலும் வெளிவராத விதத்தில் மேற்கொள்ளப்படும் அத்தகைய விளம்பரத்துக்குக் குறிப்பிட்ட தரப்புகளிலிருந்து வரும் விண்ணப்பங்களைத் தாமே சேகரித்துத் தகுதியான விண்ணப்பங்களை ஆரம்பத்தில் தம்மைத் தொடர்பு கொண்ட தரப்பினரிடம் கொண்டு சென்று வழங்குவதுடன், 'முதலில் ஜாதகப் பொருத்தத்தைப் பார்த்து, பொருத்தமான சம்பந்தப்பட்ட தரப்புகள் குறித்து விசாரித்தறிந்து, முடிவில் உங்களுக்குத் திருப்தியானால் தொடர்பு கொள்ளுங்கள் என்று தெரிவித்து விடுவார்.

சம்பந்தப்பட்ட தரப்புக் குறித்து சகல அடிப்படைத் தகவல்களையும் விசாரித்தறிந்து திருப்தியடைந்தால் மறுதரப்பு இவரைத் தொடர்பு கொள்ளுமாம்..அதன் பின் இருதரப்பும் கலந்து முடிவெடுக்கும் வேளையில் ஒப்புக்காக இவரும் அனுசரணையாளர் போல் கலந்து கொள்வாராம். சகல அடிப்படைப் பிரச்சனைகளும் பேசித் தீர்மானிக்கப்பட்ட பின், முடிவு சாதகமாக அமையுமாயின், தமது சேவைக்கான கூலியாக குறிப்பிட்ட தொகையை இருதரப்பிடமிருந்தும் கறந்து கொள்வதுடன் இவரது பணி முடிவுக்கு வருமாம்.

தப்பித் தவறி வெளிநாட்டுச் சம்பந்த முயற்சியொன்று இவர்களுக்கு அகப்பட்டு விட்டால் அவர்களது காட்டில் மழையோ மழைதான். வெளிநாட்டு மணமகன் காணி, வீடு என்று சீதனம் கோராது ரொக்கமாகவே கோர முனைவதால் தமக்குரிய விகிதத்தை லகரங்களில் கறந்துவிடும் திருமணப் பொருத்து நர்களும் இன்று எம்மிடையே நிறையப்பேர் உள்ளனர்.

அரச ஊழியராய்ப் பணி புரிந்த வேளை ஊராரின் மங்கள, அமங்கல காரியங்களில் கலந்து கொள்வதை அசட்டை செய்து வந்த எனது நண்பர் இப்போது ஊரில் இடம் பெறும் தனிப்பட்ட மற்றும் பொதுவான நிகழ்வுகளில் தவறாது கலந்து கொள்வதன் இரகசியம் இதுதான்.

பொய், புரட்டுப் பேசி, சுத்துமாத்துப் பண்ணி திருமணங்களைப் . பொருத்துவதற்கான வாய்ப்பு இன்று இவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் கிட்டுவதில்லை. எதையும் தீர விசாரித்து தீர்க்கமாக முடிவெடுக்க இன்று யாழ்ப்பாணத்தார் கற்றுக் கொண்டுள்ளார்கள்.

அந்த வகையில் 'தனக்குத் தெரியாதது எதுவுமே இல்லை' என்று தம்பட்டமடித்த நண்பருக்கு அவரது அதிகப் பிரசங்கித் தனம் இன்று கை கொடுக்கிறது. அரச சேவையில் ஓய்வு பெறும் வயதையடைந்தும், மேலும் சேவை நீடிப்புக்கு முயன்றும் தோற்றுப் போன நான், கிடைக்கும் ஓய்வூதியத்தில் குடும்பத்தை ஓட்டிச் செல்வதெப்படி எனக்குழப்பித் தடுமாறி நிற்பதை எவருக்கு எடுத்தியம்ப முடியும்?

அந்த வகையில் எனது நண்பர் குறித்து நான் போட்ட கணக்கு தப்புக் கணக்கே என்பதை யதார்த்தம் எனக்குப் புரிய வைத்துள்ளது.

—— பொன்வேளன்

வாராந்தம் வெளியாகும் இப்பத்தியில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் எவையும், தனிப்பட்ட முறையில் எவரையும் சுட்டுவதில்லை. (ஆ-ர்)

---

# வாழ்வு

குறுங்கதை



புள்ளினம் மகிழ்ச்சியாய்க் குதூகலிக்கும் காலைப்பொழுதுகளை நிமல் பார்த்து ரசிப்பது வழமை.

அன்றும் அப்படியேதான்.

தனது வீட்டின் முன்பக்கம் இருந்த அந்தச் சிறிய பூந்தோட்டத்தில் இருந்தவாறே உயிரினங்கள் ஒவ்வொன்றினதும் அசைவுகளை அவதானித்துக் கொண்டிருந்தான்.

வண்ணத்துப் பூச்சிகள் அங்குமிங்கும் பறந்து திரிந்து பூக்களில் அமர்வதும் பின்னர் பறப்பது மாகவிருந்தன. புளுனிக் கூட்டம் ஒன்று சிறிய இறகுகளை விரித்து தத்தித்தாவி உணவு தேடிக் கொண்டிருந்தது. சிட்டுக் குருவிகளும் வண்டினங்களும் தேன்குடிக்க மலர்களைத் தேடிக்கொண்டிருந்தன.

இவைகளுக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி...... பறவைகளைக் கண்டதும் அவனுக்கு இயேசுநாதர் கூறிய பைபிள் வாசகம் ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

"வானத்துப் பறவைகள் விதைப்பதுமில்லை அறுப்பது மில்லை, களஞ்சியத் தில் சேமித்து வைப்பது மில்லை"

ஆனாலும் இப் பறவைகளின் சந்தோசத்திற்குக் குறை வேது...? பொறாமையில்லை, சுயநலமில்லை, பாகுபாடு இல்லை. கிடைத்த போது உணவுண்டு மகிழ்ச்சியாய் வாழ்கின்றன. மிகச் சிறந்த வாழ்விது.

அந்தநேரம் அவனது சிந்தனை அறுபட அவனது வளர்ப்புப் பூனையான மணிக்குட்டி காரணமாயிற்று. தத்தித்தாவி மேய்ந்து கொண்டிருந்த புளுனிக் குஞ்சொன்றைப் பிடிக்க மணிக்குட்டி பதுங்கித் தயாரானபோது மற்றைய புளுனிகள் கலகலவென்று கத்தி அதை உசார்ப்படுத்தி தப்பிக்க வைத்தன.

அடேயப்பா...... என்ன பெரிய ஒற்றுமை! ஆனால்..... நாமும்தாம் இருக் கிறோமே........ சதாகாலமும் அடிமைப்பட்டு...... கண்ணீர் சொரிந்து...... எப்பொழுது திருந்தப் போகிறோம். தமிழினத்தின் வாழ்வு கண்ணெதிரே தோன்றவும் அனறைய சுவாரசியமான அந்தக் காலைப் பொழுது முடிவுக்கு வந்தது. அவன மனம் குழம்பியவனாக வீட்டுக்குள் நுழைந்தான்.

- சூரியன்

---

## விலைபேச முடியாத மனிதம்...

கலைபேசும் சிரிப்பழகன்
கள்ளமில்லாப் பேச்சழகன்
விலைபேச முடியாத புத்திஜீவி
விண்ணுலகைத் தூய்மை செய
விரைந்தான் அந்தோ!

கல்வியார்க் கோட்பாட்டின் விடிவெள்ளி
காலந் தவறாத கடமை வீரன்
எள்ளளவும் கலங்காத மனவுறுதி
எமைவிட்டுப் பிரிந்ததுவோ ஏங்குதுள்ளம்!

உருவத்தால் குறுகிய உடற்தோற்றம்
உள்ளத்தால் இமயத்தை வெல்லும் தன்மை
கருமத்தில் கண்ணான கட்டுக்கோப்பு
காவலவன் சதிவலையில் வீழ்ந்ததுவோ!

புன்சிரிப்பு உந்தனுக்கோர் தனிச்சிறப்பு
பண்புநிறை மென்பேச்சு உனது சொத்து.
மெல்லநடை உந்தனுக்கோர் தனியழகு
மேதினியைக் துறந்ததுவோ நம்பமாட்டோம்!

அழகு தமிழ் உன்நாவில் குடியிருக்கும்
ஆங்கிலத்தின் தனியழகு புரண்டோடும்
உளவியலின் உட்பொருள் உறைந்திருக்கும்
உள்ளத்தால் ஏங்குகின்றோம் எங்குசென்றீர்!

உன் கண்டிப்பின் உட்பொருளில் அன்பிருக்கும்
கடுஞ்சொல்லின் பின்னணியில் கனிவிருக்கும்
புண்பட்ட இதயங்களும் - உன்
புன்னகையால் பொலிவு பெறும்!

ஆசானே உன்காலம்
ஆசிரிய சாலையின் வரலாற்றில் பொற்காலம்
நீ நடந்த பாதையிலே தொடர்ந்துசெல்வோம்
நித்தமும் உன் பெயர் சொல்லி கல்வி கற்போம்.

– யாழ்.வதிரிவாசன் –

*(அமரர் கலாநிதி கவிஞர் காரை செ.சுந்தரம்பிள்ளை நினைவாக)*

# தன்னையே மறந்து சிந்தனையில் மூழ்கி சாதனை படைத்தவர் நியூட்டன்

ஒருவர் சிந்தனையில் மூழ்கித் தன்னையே மறந்து ஆராய்ச்சியில் ஈடுபடுவார். ஒருநாள் மெய் வருத்தம் பாராது, பசி போக்காது கண் துஞ்சாது ஏதோ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அவருக்காக வைக்கப்பட்ட உணவு இன்னும் உண்ணப்படாது மேசையில் மூடிவைக்கப்பட்டிருந்தது. அங்கு வந்த நண்பர் ஒருவர் குறும்பு செய்ய எண்ணி அந்த உணவை தாமே உண்டு விட்டுப் பாத்திரத்தை கழுவி வைத்து விட்டுச் சென்று விட்டார். வெகுநேரம் கழித்துப் பசியோடு வந்து உணவிருந்த தட்டைப் பார்த்தார். அட உணவு சாப்பிட்டதையே மறந்து விட்டேனே என்று தன்னைத் தட்டிக் கொண்டாரம்.



அவர் யார் தெரியுமா? வேறு யாருமல்ல. புவியீர்ப்பு விசையைக் கண்டு பிடித்த சேர் ஐசக் நியூட்டன்தான்.

1942ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று நத்தார் தினப் பரிசாக உலகுக்கு கிடைத்தவர் நியூட்டன். தாய் வயிற்றில் இருக்கும்போது அவரது தந்தை இறந்து விட்டார். அதனால் அந்தக் குடும்பம் வறுமையால் வாடியது. தாயார் மறுமணம் செய்த படியால் இரண்டு வயது முதல் தனது பாட்டியாருடன் வாழ்ந்து வந்தார். இளமைப் பருவத்திலேயே காற்றாடி, கடிகாரம் போன்ற பொருள்களைச் செய்வதில் பெரும் பொழுதைக் கழிக்கும் வழக்கமுடையவர்.

நியூட்டன் தாயாருடன் மீண்டும் வாழச் சென்ற காலத்தில் குடும்பத் தொழிலான விவசாயத்தில் ஈடுபடுவதையே இவரது தாயார் விரும்பினார்.

ஆனால், நியூட்டன் நிறைய வாசிப்பார், சிந்திப்பார். இவரது ஆற்றலையும் ஆர்வத்தையும் கண்டு லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயில அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு தனது 23 வயதில் கணிதப் பேரா சிரியராகினார்.

விஞ்ஞான வளர்ச்சியில் இவர் செய்த கண்டுபிடிப்புகள் அளப்பரியன. மரத்தின் கீழிருந்து சிந்தித்து புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார். இருட்டறையில் சூரிய ஒளிக் கற்றையை சிறு துவாரம் வழியாகப் புகவிட்டு சூரிய ஒளியில் 7 நிறங்கள் உண்டு என்பதைக் காட்டினார். இவரது கண்டுபிடிப்புகளை பாராட்டும் முகமாக 'சேர்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

நியூட்டன் தற்பெருமை அற்றவர் தனது சாதனைகள் மிக மிகச் சிறியவை என்று எண்ணியதால்தான் உலகம் இன்றும் அவரைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது

**தி.அருணாளினி,**
தரம் 11 பி, யாழ்/இந்து மகளிர் கல்லூரி.

## சிரிக்கும் பூக்கள்




வண்ண வண்ணப் பூக்கள் - நல்ல
அழகு நிறைந்த பூக்கள்
வானைப் பார்த்துச் சிரிக்கும் - அவை
வாசம் உள்ள பூக்கள்

ஆடி அசையும் பூக்கள் - நான்
அருகில் சென்று பறிப்பேன்
கூடை நிறைந்துபோகும் - நான்
ஆய்ந்த மலர்கள் சிரிக்கும்

உதிக்கும் போது சிரிக்கும் - நான்
பறிக்கும் போதும் சிரிக்கும்
மாலை தொடுக்கும் போதும் - அவை
சிரித்துக் கொண்டே இருக்கும்

**பா.போசுவா,**
தரம் 7, யா/மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை.



**செ.தக்சாயினி**
தரம் 7 ஏ,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## வர்ணந் தீட்டி மகிழுங்கள்....!



**தம்பி, தங்கைகளே.....!**

மேலே காணும் படத்திற்கு வர்ணம் தீட்டி கத்தரித்து அனுப்பி வையுங்கள். அழகுற வர்ணம் தீட்டி சிறந்த படங்களை அனுப்புவோரில் முதல் மூவருக்கு முறையே ரூ100/=, ரூ 75/=, ரூ50/= பெறுமதி யான வர்ணம் தீட்டுவதற்கான உபகரணங்கள் பரிசில்களாக வழங்கப்படும்.

*இந்தப் பரிசில்களை வழங்கும் நிறுவனம்: -*

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே : 222 5542

*அனுப்பவேண்டிய முகவரி:-*
**'வர்ணம் தீட்டுவோம்'** - 04, சூரியகாந்தி 'சிறுவர் பொழில்'
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வர்ணம் தீட்டி மகிழுங்கள் போட்டியில் ஏராளமான சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்குகொண்டு படங்களை அனுப்பியிருக்கின்றனர். அவர்களில் பலர் தங்கள் பெயர் விவரம், பாடசாலை விவரம் என்பவற்றைக் குறித்து அனுப்பத் தவறியதால் அவர்களது வண்ணங்கள் தெரிவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. நீங்கள் வர்ணம் தீட்டி அனுப்பும் படத்துடன் உங்கள் பெயர், பாடசாலையின் பெயர், வகுப்பு போன்ற விவரங்களை தவறாமல் சேர்த்து அனுப்புங்கள்.

வர்ணம் தீட்டுவோம் போட்டி இலக்கம் - 03இல் தெரிவு செய்யப்பட்ட ஐவரின் விவரங்கள் வருமாறு:-

- **பொ.மாலின் வெல்ஷியா,** *தரம் 4 பி, யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்.*
- **செ. தனுசியா,** *தரம் 10 பி, பளை மத்திய கல்லூரி.*
- **சே.சோபிகன்,** *தரம் 3, சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலயம்.*
- **ஜெயவர்த்தன ராஜா ஜெயரதிகா,** *தரம் 9 சி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.*
- **ம.மயூரவாணி,** *தரம் 5 பி, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.*

## செல்லையாத் தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்...

புளியடியில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது "தாத்தா வாறார்" என்று இனியன் குரல் கொடுத்தான். சிறுவர்கள் விளையாட்டை நிறுத்தி விட்டு, தாத்தாவுக்கு அருகே வந்தனர்.

"உங்களைக் காணேல்லையெண்டு வீட்டுக்கு வந்தனாங்கள். நீங்கள் கொழும்புக்குப் போட்டீங்கள் எண்டு சொன்னவை. எப்ப வந்தனீங்கள்?" என்று கேட்டாள் சாந்தி.

"நேற்றுத்தான் வந்தனான். கொழும்பிலை ஒரு பெரிய புத்தகக் கண்காட்சி நடந்தது. அதையும் பார்த்திட்டு, வேறை அலுவல்களையும் முடிச்சிட்டு வந்தனான்" என்று கூறிய தாத்தா, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு புத்தகங்களை வழங்கினார். ஒவ்வொன்றும் வெவ்வேறான கதைப் புத்தகங்கள். சிறுவர்கள் அவற்றை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு நன்றி கூறினர்.

"இந்தப் புத்தங்களை முதலிலை நீங்கள் வாசியுங்கோ. அதுக்குப் பிறகு ஒவ்வொருவருக்கும் மாறி மாறி வாசிக்கக் குடுங்கோ. இப்பிடியே வாசிச்சால் எல்லாரும் எல்லாப் புத்தகங்களையும் வாசித்து முடிக்கலாம். அதுக்குப் பிறகு உங்கடை பள்ளிக் கூட நண்பர்களுக்கும் குடுங்கோ. அப்பதான் அந்த புத்தகத்தில் கூறப்பட்டவற்றை எல்லாரும் அறிய முடியும்" என்று கூறிய தாத்தா "புத்தகங்கள் நமது நல்ல நண்பர்கள்" என்றார்.

"எப்பிடித் தாத்தா புத்தகங்கள் நண்பர்களாகலாம்?" என்று கேட்டான் பிரியன்.

"புத்தகங்கள் மூலமாக நீங்கள் என்னென்ன பயன்களைப் பெறுகிறீர்கள்?" என்று கேட்டார் தாத்தா.

"புத்தகங்கள் நமக்குப் பலவிதமான அறிவைத் தருகிறது" என்றாள் சாந்தி.

"புத்தகங்கள் எமக்கு நல்ல வழிகாட்டியாக உள்ளது" என்றான் பிரியன்.

"புத்தகங்கள் நமக்கு மன மகிழ்ச்சியையும் ஆறுதலையும் தருகின்றன" என்றாள் பிரியங்கா.

"அப்பிடியெண்டால் உங்களோடு உறவாடி, உங்களை மகிழ்ச்சிப்படுத்தி, உங்களை நல்வழியிலை போக வைக்கும் ஆலோசனைகளைத் தந்து, அறிவையும் அனுபவத்தையும் புத்தகம் தருகுது என்கி றியளா?' என்று கேட்டார் தாத்தா.

"ஓம்... ஓம்..." என்றனர் சிறுவர்கள்.



"உங்கடை நல்லை நண்பர்களும் இப்படித்தான் இருப்பினை இல்லையா?" மீண்டும் ஆமெனத் தலையசைத்தனர். "அப்ப... நூல்கள் உங்கடை நண்பர்களில்லையா?" "நண்பர்கள் தான்!" என ஒரே குரலில் கூறினர். "இந்த நண்பன் ஒரு நாளும் உங்களோடு கோபிக்க மாட்டான். சண்டையிட மாட்டான். வஞ்சகமாகக் கூட பழக மாட்டான். எப்போதும் உங்களுடன் துணையாயி ருந்து அன்பா கப் பழகுவான்" என்று தாத்தா சொல்லவும்

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்று கூறப்படுகிறதல்லே" என்றான் அகிலங்கன்.

"ஓமோம் அதை விட 'நூல் மேயா மனிதன் புல்மேயா மந்தை' என்னும் ஒரு முதுமொழி உள்ளது. நல்ல நூல்கள் உள்ள வீடு ஒரு மாளிகை போன்றது. என்றொரு ஆங்கிலப் பழமொழியும் உள்ளது" என்றார் தாத்தா.

"நாங்கள் நூல்களை வாசிக்க வாசிக்கத்தான் எங்களால தடக்கலில்லாமல் வாசிக்க முடியுது. அத்தோடு எழுத்துப் பிழையில்லாமல் எழுத்து வேறுபாடுகளைத் தெரிஞ்சு எழுதவும் முடியுது" என்றான் இனியன். "உண்மைதான் உங்களுக்கு ஆர்வமான எல்லாப் புத்தகங்களையும் நீங்கள் வாசிக்க வேணும். 'கண்டது கற்கப் பண்டிதனாவான்' எண்டு எங்கடை ஊரிலை சொல்வார்கள். ஆரம்பத்திலை எல்லாத்தையும் வாசித்து உங்களுடைய அறிவை வளர்த்துக் கொள்ள வேணும். அதுக்குப் பிறகு, தேர்ந்து எடுத்து வாசிப்பது அவசியமாகும். எமக்குத் தேவை யான எமது அறிவை வளர்த்து, எமது முன்னேற்றத்திற்கு வழி கோலும் நூல்களைத் தெரிவு செய்து படிக்க வேணும்" என்றார் தாத்தா.

"இப்ப கொம்பியூட்டர் யுகமல்லே தாத்தா. இதுகளைப் படிப்பதில ஆர்வம் குறையுது" என்றாள் சாந்தி.

கொம்பியூட்டர் யுகந்தானிது. ஆனால் புத்தகங்கள் செலவு குறைந்தவை. எங்கேயும் எப்போதும் எல்லாச் சூழ்நிலைகளிலும் பயன்படுத்தக் கூடியவை. புறப்பாதிப்புகளும் அற்றவை. ஆனா, இப்ப கொம்பியூட்டரிலை பார்க்கக் கூடியவகையில் புத்தகங்கள் வந்திட்டுது. ஈசாப் நீதிக் கதைகள், முல்லா கதைகள், தெனாலி இராமன் கதைகள், இராமாயணம், மகாபாரதம் எல்லாமே இறுவட்டுகளாக வந்து விட்டன. அதைவிட இணையச் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. பத்திரிகைகளைக் கூட இணையத்திலை பார்க்கலாம். உங்கடை அபிமான உதயன் பத்திரிகையைக் கூட இணையத்திலை பார்க்கலாம்.

அதைவிட, இணைய நூலகங்கள் பலவும் வந்து விட்டன. உலகத்தின் எந்த மூலையில் இருந்தும் எங்கோ தொலை தூரத்தில் வெளியிடப்பட்டு, எங்களாலை பார்க்க முடியாத புத்தகங்களை இணைய நூலகங்கள் மூலமாக நாங்கள் பார்க்கலாம்" என்று கூறி முடித்தார் தாத்தா.

"அப்பாடா... இனி எங்கடை பாடப்புத்தங்களும் இணையத்திலை வந்தால் நல்லாயிருக்கும். இந்தப் புத்தக மூட்டையைச் சுமந்தே முதுகு ஒடிஞ்சு போச்சுது" என்றான் பிரியன். சிறுவர்கள் எல்லோரும் சிரித்தனர். தாத்தாவும் சிரித்தபடி எழுந்தார்.

*(தாத்தா மீண்டும் வருவார்)*

**- பாபு அண்ணா**

# தாய் மீது பாசம் வைப்பது போல தாய்மொழி மீதும் பற்றுக் கொள்ளுங்கள்

- கலாநிதி அடைக்கலமுத்து

# கடமையை மக்கள் சேவையாகச் செய்தால் கடவுளின் பேருதவி கேளாமலே கிடைக்கும்

- கலாநிதி நவமலர்.

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 24ஆவது பட்டமளிப்பு விழாவில் அறுவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டங்கள் வழங்கப்பட்டன.**

**அவர்களின் திறமைகள், சேவைகள், அனுபவங்களை வெளிக்கொணரும் பொருட்டு கலாநிதிகளுடன் காணப்பட்ட செவ்விகள் உதயனில் தொடர்ந்து பிரசுரமாகும்.**

### கலாநிதி வித்துவான் சவரிமுத்து அடைக்கலமுத்து

❖ உங்களுடைய ஆரம்ப காலப் பணிகள் பற்றி....?



✸ நான் 1935 - 38 காலப்பகுதியில் கொழும்புத்துறைஆசிரிய பயிற்சிக் கலா சாலையில் பயிற்சிபெற்றேன். அந்தக் காலப் பகுதியில் தான் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அதன் நினைவாக 'தூதன்' என்ற பெயரில் ஆண்டு விழா மலர் ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. அந்த நூலுக்கு நான்தான் ஆசிரியராக இருந்தேன். அந்த மலர் 200 பக்கங்களில் மிகவும் சிறப்பாக அமைந்தது.

அதன் பின்னர் 'பாதுகாவலன்' பத்திரிகைக்கு ஆக்கங்களை எழுதினேன். தொடர்ந்து ஏனைய பத்திரிகைகளிலும் எனது ஆக்கங்கள் வெளி வர ஆரம்பித்தன. அந்தக் காலத்தில் இலங்கை யில் வெளியான ஈழகேசரி, சுதேச நாட்டியம் போன்ற பிரபல்யமான பத்திரிகைகளில் எனது ஆக்கங்கள் வெளிவரத் தொடங்கின.

நான் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் இளைஞர்போதினி எனும்சஞ்சிகையை வெளியிட்டேன். இது அரையாண்டு சஞ்சிகையாக வெளிவந்ததுடன், மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் பெற்று வந்தது. இந்தக் காலப் பகுதியில் சில பத்திரிகைகளில் செய்தியாளராக வும் பணியாற்றியுள்ளேன்.

அந்தக் காலத்தில் தேசியப் பத்திரிகையாக விளங்கிய ஈழகேசரிப் பத்திரிகையில் பண்டித மணி சி.கணபதிப்பிள்ளை, சோ.சிவபாதசுந்தரம் போன்ற பெரியார்களின் கட்டுரைகளும்இடம் பெற்றன. அவர்களுடைய சமகாலத்தில் எழுதி யமை எனக்குப் பெருமையாக இருந்தது. அவர் களின் வழிகாட்டலே என்னை எழுதவைத்தது. உயர்வடைய வைத்தது.

**தடையின் மத்தியிலும் வாசித்தேன்**

❖ நீங்கள் இந்திய எழுத்தாளர்களின் ஆக்கங்களை வாசித்த அனுபவங்கள் உண்டா....?

✸ ஆம், நிறைய வாசித்துள்ளேன். அந்தக் காலத்தில் 'ஆனந்தவிகடன்' சஞ்சிகை மிகப்பலராலும் வாசிக்கப்படும் சஞ்சிகையாகத் திகழ்ந்தது. அதன் ஆசிரியராக 'கல்கி' இருந்தார். முதன் முதலாகக் கல்கியின் தொடர்கதையான 'கள்வனின் காதலி' என்ற தொடர் ஆனந்தவிகடனில் வெளியானது. அந்தக் காலத்தில் அது நல்ல பிரபல்யம் மிக்க கதையாக இளைஞர்கள் மத்தியில் விளங்கியது. அப்போது யாழ்ப் பாணத்திற்கு 25 ஆனந்த விகடன் மட்டும் வரும். அதனை நான் வாங்குவதற்காக எனது வீடுதியில் இருந்து இரகசியமாக ஐந்து மைல் தூரத்திற்கு நடந்து சென்று வாங்கி வருவேன். ஆனந்த விகடன் ஒன்று 12 சதம் ஆக விற்கப்பட்டது. அப்போது ஒரு சதத்திற்கு இரண்டு கீரைப்பிடிகள் வாங்கக் கூடியதாக இருந்தகாலம். அப்படியிருந்தும் ஆனந்த விகடனின் ஒரு பிரதியைக் கூட நான் தவறவிடவில்லை.

எனது விடுதியில் இவ்வாறான புத்தகங்கள் வாசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. நான் இரகசியமாக வாசிப்பேன். வாசித்து முடிந்த பின்னர் எனது நண்பர்களுக்கும் கொடுப்பேன்.

நான் கல்கியின் எழுத்துத் திறமையை வியந்து பார்த்ததுண்டு. எனக்குப் பிடித்த எழுத்தாளரும் அவர்தான். நான் அவரையே பின்பற்றி எழுதினேன். இதனால் என்னைப் படிப்பித்த தமிழ் ஆசிரியரும் என்னைச் 'சின்னக் கல்கி' எனச் செல்லமாக அழைப்பார். அந்த நாளில் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் பண் டிதமணி சி.கணபதிப்பிள்ளை தமிழ்த்துறைக்குப் பொறுப்பாக இருந்தார். அவ்வேளையில் அவர் பல பொடிக்குறள்களை நகைச்சுவை யாக வெளியிட்டார். அவற்றில் ஒன்று:

''மடியில் பொடியிலான் வாழ்க்கை
பொழுது விடியப் பனிபோல் கெடும்''

இதனைப் பார்த்த நான் ஒரு கோப்பிக் குறளை இயற்றினேன்.

''கோப்பி குடியாதான் வாழ்க்கை
துயர்மண்டி ஆப்பிழுந்தான் போலக் கெடும்''

திருநெல்வேலியில் இருந்த பண்டிதமணி யின் காவியப் பாடசாலையில் பாலபண்டித வகுப்புப்படித்து நான் சித்தியடைந்தேன்.

பின்னர் ஊர்காவற்றுறை காவலூர் அந்தோனியார் பாடசாலையில் எனது ஆசிரிய பணியை ஆரம்பித்தேன்.

**பாப்பரசரிடம் இருந்து 'செவாலியர்' விருது பெற்றவர்**

❖ உங்களுக்கு இதுவரை கிடைத்த பட்டங்கள்...?

✸ ஞானப்பிரகாசர் தமிழ் மன்றத்தினால் 'சொல்லின் செல்வன்', பிரித்தானிய ஹென்றி அரசர் கல்லூரியால் 'புலவர்மணி', பேராசிரி யர் கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளால் லண்டன் பட்டிமண்டபத்தில் வைத்து 'முப்பணி வேந்தன்', பாப்பரசர் 2ஆம் அருளப் பர் சின்னப்பரால் 'பாவேந்தன்', ஜேர்மன் நாட்டுத் தமிழ்ப்பணி மன்றத்தால் 'தமிழ்க் கங்கை', லண்டன் தமிழ் மன்றத்தால் 'செந்தமிழ்த் தென் றல்', பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் கலைப்பீடாதிபதியாக இருந்த போது அவரால் 'கவியரசர்' யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம் பிள்ளையால் 'மதுரகவி' ஜேர்மன் உலகத் தமிழ் மன்றத்தால் 'புலவர் நாயகம்' ஆகிய பட்டங்களுடன் இன்னொரு பட்டத்தையும் இங்கு முக்கியமாகக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

1,500 வருடங்களாகப் பாப்பரசர்களால் 'செவாலியர்' விருது கொடுக்கப்படுவது வழமை. அந்த 'செவாலியர்' விருது பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பரால் எனக்கு வழங்கப்பட்டது.

50 வருடங்களுக்குமுன் இலங்கையைச் சேர்ந்த அருளானந்தம் என்பவருக்கு கல்விச் சேவை, ஆன்மீகப்பணி, ஏழைகளுக்கு கல்வீடு கள் அமைத்துக் கொடுத்தல் போன்ற வற்றுக்காக மேற்படி செவாலியர் விருது வழங்கப்பட்டது.

எனக்கு இந்த விருது இலக்கியப்பணி, எழுத்துப்பணி, ஆன்மீகப்பணி என்பவற்றை அடிப்படையாக வைத்து வழங்கப்பட்டது.

❖ இதுவரை நீங்கள் வெளியிட்ட புத்தகங்கள் குறித்து ...?

✸ நெஞ்சே நினை, இவ்வழிச் சென்ற இனியமனிதன், காக்கும் கரங்கள், மடுமாதா காவியம், அன்னம்மாள் ஆலய வரலாறு, அமுது வின் கவிதைத் தொகுப்பு, அன்பின் கங்கை அன்னை திரேசா.

❖ உங்களுக்கு அமுது என்று பெயர் வரக் காரணம் என்ன?

✸ அமுது என்பதுஅடைக்கலமுத்து என்பதன் சுருக்கப்பதமே. வேறொன்றுமில்லை. இந்தக் கேள்வியை என்னிடம் பல பேர் கேட்டுள்ளனர் (சிரிக்கிறார்).

**தாய்மீது உள்ளது போல தமிழிலும் பற்றுவைக்கவேண்டும்**

❖ உங்களுக்குக் கிடைத்த கௌரவ கலாநிதிப் பட்டம் பற்றி...-

✸ எனக்கு தமிழ் இலக்கியப் பாற் கடலைக் காட்டிவிட்ட பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களுக்கு அளிக்கப்பெற்ற கௌரவ கலாநிதிப் பட்டம் எனது சமய குருவும் பேரறிஞரும் அஞ்சாமல் தனது கருத்தை அரசியல் வாதிகளுக்கு வெளிப்படுத்தியவருமான ஆயர் தியோகுப்பிள்ளைக்கு அளிக்கப்பெற்ற கௌரவ கலாநிதிப் பட்டம் அடியேனுக்கும் கிடைத்திருப்பதையிட்டு உண்மையில் நான்பெருமைப்படுகின்றேன்.

❖ தமிழ்ச் சமுதாயத்துக்கு நீங்கள் கூறும் அறிவுரை ...?

✸ தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தாயிலே வைத்திருப்பதுபோல தமிழ் மொழியிலும் பற்றுவைத்திருக்கவேண்டும். தமிழ் மொழியிலே, அதன் இனிமையிலே, அதன் செழுமையிலே மட்டற்ற பற்றுவைத்ததால்தான் அடியேன் இன்று இந்தக் கௌரவ கலாநிதிப்பட்டத்தைப் பெற்றுக்கொண்டேன். இளமைதொட்டு நான் தமிழ் அன்னையை அணைத்துக் கொண்டேன். அவள் இறுதி மட்டும் தன் மடியில் வைத்து என்னைத் தாலாட்டினாள். எனவே, நீங்களும் தமிழ் பற்றுடையவர்களாய் சிறந்து விளங்கவேண்டுமென வாழ்த்துகின்றேன் .

✸ ✸ ✸

### கலாநிதி டாக்டர் நவமலர் கனகரட்ணம்

❖ உங்கள் ஆரம்ப கால வாழ்வு பற்றி..?



✸ சுதுமலையில் பிறந்தேன். எனது அப்பா காரைநகரைச் சேர்ந்தவர். அதனால் ஆரம்பக் கல்வியை வியாவில் சைவபரி பாலன வித்தியசாலை யில் ஆரம்பித்தேன். தொடர்ந்து மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்ற நான், பின்னர் கொழும்பு வெள்ளவத்தை சென்.கிளேயர்ஸ் கல்லூரி, பொரளை காசில்ஸ்தட் பெண்கள் பாடசாலை ஆகியவற்றில் கல்வியைத் தொடர்ந்தேன்.

உயர்கல்வியை யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலையிலும் மருத்துவக் கல்வியைக் கொழும்பிலும் கற்றேன். 1966ஆம் ஆண்டு மருத்துவக் கல்வியை முடித்து வெளியேறினேன்.

1967இல் உள்ளகப் பயிற்சிக்காக அனுராதபுரம் பொது வைத்தியசாலையில் இணைந்து கொண்டேன்.

பின்னர் 1972ஆம் ஆண்டுவரை வவுனியாவில் கடமையாற்றினேன். பின்னர் சுகாதார வைத்திய அதிகாரியாக களுத்துறை, முல்லைத்தீவு போன்ற இடங்களில் கடமை ஆற்றினேன்.

**கிராமத்துக்குப் போகச்சென்று காட்டுப் பகுதியை அடைந்தேன்**

❖ இப்பகுதிகளில் கடமை ஆற்றிய உங்களுக்கு ஏதாவது மறக்கமுடியாத அனுபவங்கள் உண்டா?

✸ அது கொலரா பரவிய காலம். முல்லைத்தீவில் 2 வருடங்கள் சுகாதார வைத்திய அதிகாரியாக இருந்தவேளை அப்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் (PHI) என்று எவரும் இல்லை. நாங்கள்தான் அனைத்து இடங்களுக் கும் செல்லவேண்டும். மல்லாவிப் பகுதியில்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர்களுடன்...

கொலரா அதிகமாகப் பரவியுள்ளதாக அறிந்து அப்பகுதிக்குச் சென்றோம். ஆனால், அங்கு காட்டுப்பகுதியாகவே இருந்தமையால் நாங்கள் தேடிச்சென்ற கிராமத்தை அடையமுடியவில்லை. வீதியில் நின்ற சிலநடுத்தர வயது டையவர்களை அணுகி விசாரித்தோம். அவர் கள் எமக்கு இடம்காட்டுவதாகக் கூறி எமது வாகனத்தைக் காட்டுப்பகுதிக்குக் கொண்டு சென்றனர். அவர்கள் மதுபோதையில் நின்றமையைப் பின்னர்தான் எம்மால் உணர முடிந்தது. அவர்கள் தகாதவார்த்தைகளால் ஏசி எம்மை மிரட்டினர். நாம் அவர்களின் மிரட்டலுக்கு அஞ்சவில்லை. ஆயினும், அவர்கள் என்னை ஒரு பெண் எனக் காரணம் காட்டி மிரட்டினர். ஒருவாறு அவர்களை அடக்கி நாம் வந்த வழியே திரும்பினோம். இருப்பினும் அவர்களின் மிரட்டல் அடங்கவில்லை. பின்னர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் அவர்களை இறக்கிவிட்டு பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறையிட்டோம்.

இப்படியான இடங்களுக்குச் செல்வதானால் எம்மிடம் உதவி கேட்டால் நாங்கள் உங் களுக்கு இரு பொலிஸாரை உதவிக்கு அனுப்புவோம் என்று பொலிஸ் பொறுப்பதிகாரி ஆலோசனை கூறினார்.

மறுநாள் குறிப்பிடப்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டு அதற்குரிய தகுந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. இவ்வாறு எத்தனை யோ சிக்கல்களை நான் எனது இந்த வைத்தியத் துறைச் சேவையில் கண்டுள்ளேன்.

**யாழ்.ஆஸ்பத்திரியில் சேவையாற்றிய வேளை....**

❖ அதன்பின்னர் நீங்கள் எப்பகுதிக்கு மாற்றப்பட்டீர்கள்?

✸ 1975 - 1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாவட்ட வைத்திய அதிகாரியாக (DMO) கம்பஹா மாவட்டத்தில் தொம்பே பகுதியில் கடமையாற்றினேன். அதன்பின்னர் 1977-1982 காலப்பகுதியில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியாக கடமையேற்றேன். அந்தக் காலப் பகுதியில் எனது சேவையின் அடிப்படையில் உயர்கல்விக்கு 6 மாதகாலத்திற்கு லண் டன் சென்றேன்.

❖ உங்களைத் துயரில் ஆழ்த்திய சம்பவங்கள் ஏதாவது உண்டா?

✸ 1982 ஜனவரி மாதம் எனது தந்தை இறந்துவிட்டார். அது என்னை மிகவும் வேதனைப்படுத்திவிட்டது. அதன்பின்னர் எனக்கு அவிசாவளைப் பகுதிக்கு மாற்றம் கிடைத்தது? அதற்கு நான் மறுப்புக் கடிதம் அனுப்பியிருந் தேன். அதன் விளைவாக எனக்கு மன்னார் பகுதிக்குக் கிடைத்தது. தமிழ்ப்பகுதி என்ப தால் நான் அங்கு சென்றேன். 1982-1986 காலப்பகுதியில் அங்கு கடமையாற்றினேன்.

மன்னாரில் கடமையாற்றியவேளை 1984 ஆம் ஆண்டில் ஊழியர்கள் அனைவரினதும் ஒரு மாதச் சம்பளப் பணத்தை எண்ணிக் கொண்டிருந்தேன். துப்பாக்கிகளுடன் வந்த கோஷ்டியினால் பணம் அபகரிக்கப்பட்டது. அந்தச் சம்பவமும் என்னைப் பயமுறச் செய்தது.

❖ யாழ்ப்பாணம் போதனா வைத் திய சாலைக்கு எப்போது மாற்றம் பெற்றீர்கள்?

✸ 1986-1991 காலப்பகுதியில் சட்ட வைத்திய அதிகாரியாக (JMO) மாற்றம் பெற்றுக் கடமையாற்றினேன். தொடர்ந்து 1991ஆம் ஆண்டு யாழ். போதனா வைத்திய சாலை யின் பணிப்பாளராக கடமையேற்று 2002ஆம் ஆண்டுவரை பணியாற்றினேன். அந்தக் காலப்பகுதியில் இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகநேரிட்டது. எத்தனை யோ தடவை என்னை அழைத்து மிரட்டியுமுள்ளனர். ஆயினும், நான் எனது கடமையே கண்ணென இருந்தமையால் எதற்கும் அஞ்சவில்லை.

**கடமைகளைச் சேவையாகச் செய்யுங்கள்**

❖ வேறு துறைகளில் உங்களுக்கு உள்ள அனுபவம் பற்றி?

✸ மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக அங்கத்தவராக இருக்கின்றேன். அதற்குத் தலைவராகவும் இருந்துள்ளேன். அதாவது 2001 - 2002 காலப்பகுதியில் 306B மாவட்டத்தின் சிறந்த தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டேன்.

ஏ-9 சாலை திறக்கப்படுவதற்கு முன்னர் லயன்ஸ் கழகத்தினருடன் கிளிநொச்சி சென்று மக்களுக்குச் சேவைபுரிந்துள்ளேன்.

யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராகவும் இருந்துள்ளேன். இப்போது சுதுமலை அம்மன் கோயில் நிர்வாக சபை உபதலைவராகச் செயலாற்றி வருகிறேன்.

**செவ்வி: கந்தரதன்**

❖ உங்களுக்குக் கிடைத்த கௌரவ கலாநிதிப் பட்டம் பற்றி...?

✸ எனது தந்தையாரின் ஊக்கத்தினாலேயே இந்தத் தொழிலுக்கு வந்தேன். இத்தொழிலில் பல அச்சுறுத்தல்களைச் சந்தித்தேன். துணிந்து செய்த எனது சேவைக்குத் தரப்பட்ட கௌரவமே இந்தப் பட்டம்.

❖ நீங்கள் எமது மக்களுக்குக் கூறக் கூடியவை....

✸ நேர்மையாக உழைத்தால் எமக்குத் தேவையான உதவி கிடைக்கும். கடமையைச் செய்யும்போது அதனை மக்கள் சேவையாக எண்ணிச் செய்தால் கடவுளின் பேருதவி கேளாமலே கிடைக்கும். பெற்றோரின் சொற்படி நடந்தால் உயர்வுபெறமுடியும். அத்துடன், தாய், தந்தையர் பிள்ளைகளைச் சரியான முறையில் வழிநடத்தவேண்டும். அவற்றையே நான் வலி யுறுத்த விரும்புகிறேன்.

# யாழ்.குடாநாட்டின் விருத்திக்கு உழைத்த சோழத் தளபதி கருணாகரத் தொண்டமான்

தமிழர் வீரத்தை தமிழகத்திற்கு அப்பால் பரவச் செய்தவர்கள் பிற்காலச் சோழப் பேரரசர்கள். இவர்களது இப்பெரும் பணிகளுக்குத் தொண்டை நாட்டுத் தலைவர்கள் உறுதுணையாய் உதவினர். சோழப்பேரரசைத் தமிழகத்திற்கு அப்பால் விரிவுபடுத்தியவர்களுள் முதலாம் குலோத்துங்க சோழப் பேரரசரும் ஒருவர். இப்பேரரசரின் படைத் தலைவர்களுள் ஒருவராகவும் தலைமை அமைச்சராகவும் கருணாகரத் தொண்டமான் இருந்தார். கருணாகரன் என்பது இவரது இயற்பெயர். இவர் தொண்டை நாட்டினர். இயற்பெயரும் நாட்டின் பெயரும் இணைத்துக் கருணாகரத் தொண்டமான் என்னும் பெயர் இவருக்கு வழங்கிற்று. இவர் தொண்டை நாட்டில் வண்டலாஞ்சேரி என்னும் பகுதிக்குத் தலைவன். இதனால், இவரை 'வண்டையர் கோமான்' என கலிங்கத்துப் பரணி நூல் குறிப்பிடுகிறது.

கலிங்கம் என்பது தமிழகத்திற்கு அப்பால் ஓரிசா மாகாணத்தின் ஒரு பகுதி. வலிமை மிக்க அரசர்களின் ஆளுமையினால் கலிங்கநாடு வலிமை பெற்று விளங்கியது. முன்பு மகத நாட்டுப் பேரரசர் அசோகன் இந்நாட்டில் பெரும் போர் நிகழ்த்தினார். ஆனால், அவரது நோக்கம் நிறைவேறவில்லை. முதலாம் குலோத்துங்க சோழப்பேரரசர் காலத்தில் கலிங்க நாடு வலிமையுடன் விளங்கியது. சோழப் பேரரசைத் தமிழகத்திற்கு அப்பால் விரிவுபடுத்த எண்ணிய இப்பேரரசர் கருணாகரத் தொண்டமானின் திறமையை நன்கு உணர்ந்து அவரது தலைமையில் ஒரு பெரும் படையைக் கலிங்கத்திற்கு அனுப்பினார். இவர் அங்கு சென்று வீரம்மிகு பெரும் போரினால் அந்நாட்டை வெற்றிகொண்டு பெரும் புகழோடு திரும்பினார்.

இப் பெரு வெற்றியைப் பாராட்டிச் சயங்கொண்டார் என்னும் பெரும் புலவர் 'கலிங்கத்துப் பரணி' என்னும் அதி சிறந்த நூலை ஆக்கினார். இந்த நூலில் முதற் குலோத்துங்க சோழப் பேரரசரின் சிறப்புகளும் கருணாகரத் தொண்டமானின் பெருவீரமும் விரிவாகக் கூறப்படுகின்றன. தென் தமிழ்த் தெய்வப் பரணி என இந்நூலை ஒட்டக்கூத்தர் என்னும் பெரும்புலவர் பாராட்டியுள்ளார். இப்பேரசரைத் திருமால் எனவும் கருணாகரத் தொண்டமான் இவரது சக்கரமாகவும் இப்பரணி நூல் போற்றுகின்றது.
இப்பெருவெற்றியினால் கருணாகரத் தொண்டமான் தமிழகப் படைத் தலைவர்களுள் உலகு புகழ் கருணாகரத் தொண்டமான் ஆனார்.

முதற் குலோத்துங்கப் பேரரசர் இலங்கையையும் தன் ஆட்சிக்கு உட்படுத்த எண்ணி இதற்குக் கருணாகரத் தொண்டமானே தக்கவன் என உணர்ந்து அவரை ஒரு பெரும் படையோடு இலங்கைக்கு அனுப்பினார். இலங்கை வந்த கருணாகரத் தொண்டமான் வட இலங்கை முழுவதையும் வெற்றி கொண்டு சோழப் பேரரசர் ஆட்சி நிலைபெறச் செய்து சில ஆண்டுகள் இலங்கையில் தங்கியிருந்தார்.

அக்காலத்தில் இவர் யாழ். குடா நாட்டில் இணுவில் என்னும் ஊரில் காரைக்கால் பகுதியில் வதிவிடம் அமைத்து அங்கு இருந்தார் எனவும் வடமராட்சிப் பகுதியில் உப்பாற்றுப் பகுதியில் அதிக உப்பு விளைவதைக் கண்டு அதனைத் தமிழகத்திற்கு அனுப்பும் முயற்சியை மேற்கொண்டு உப்பேற்றும் கப்பல்கள் உள்ளே வருதற்காக இவர் நீர்வழிப்பாதை அமைத்தார் எனவும் அது தொண்டமானாறு என வழங்கப்படுகிறது எனவும் இவர் இருந்த வதிவிடத்திற்கு அண்மையில் உரும்பிராய்ப் பகுதியில் இவர் பெயரால் கருணாகர விநாயகர் கோயில் அமைக்கப்பெற்றது எனவும் யாழ்ப்பாணச் சரித்திர நூலின் ஆசிரியர் இராசநாயகமுதலியார் இந்நூலில் எழுதியுள்ளார்.

இதே வரலாற்றுக் குறிப்புகளைத் தஞ்சாவூரைச் சேர்ந்த குடவாயில் சுப்பிரமணியம் என்றும் அறிஞர் கருணாகரத் தொண்டமான் பற்றித் தினமணி இதழில் எழுதியுள்ளார். இத்தொண்டமான் காலத்துக் கல்வெட்டு ஒன்று இக் கோயிலில் இருப்பதாகவும் இவ் ஆசிரியர் எழுதியுள்ளார். உடைந்த நிலையில் உள்ள இக் கல்வெட்டை ஆராய்ந்த கலாநிதி இந்திரபாலா அவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் இக் கோயிலுக்கு நெய்விளக்கு ஏற்ற மானியம் வழங்கியதை இக்கல் வெட்டு குறிப்பிடுகிறது என இக்கோயிற் சிறப்பு மலரில் எழுதியுள்ளார். இக் கல்வெட்டு இப்போது இக்கோயிற் கருவறைக் சுவருள் வைத்துக் கட்டப் பெற்றிருக்கிறது. இக்கோயிலைப் பராமரித்து வந்த மரபினர் இக்காரைக்காற் பகுதியில் இருந்துள்ளனர்.

கருணாகரத் தொண்டாமான் தமிழகம் சென்ற பின் இலங்கையில் சோழப் பேரரசு சிதைவுற்றது எனினும், கருணாகரத் தொண்டமான் வட இலங்கையில் சோழப் பேரரின் ஆட்சியை அமைத்தமையும் அவர் யாழ்ப்பாணக் குடா நாட்டில் தங்கியிருந்தமையும் யாழ்ப்பாணத்தில் தமிழரசர் ஆட்சியும் வன்னிப் பிரதேசத்தில் வன்னியர் ஆட்சியும் அமைய உதவின எனலாம். கருணாகரத் தொண்டமானுக்குப் பின் இவரது தொண்டைநாட்டுக் திருக்கோவலூரில் இருந்து வந்த காலிங்கராயன் என்பவன் தொண்டமான் தங்கியிருந்த இணுவிலைத் தனது ஆட்சிக்கு உரிய இடமாக்கியும் வன்னியத் தலைவர்களைப் படைத் தலைவர்களாகவும் அமைச்சர்களாகவும் வைத்தும் பெருவலிமையுடன் ஆட்சி செய்தான். இவனது ஆட்சிச் சிறப்பைப் பஞ்சவண்ணத் தூது நூல் குறிப்பிடுகின்றது. இவனுக்குப் பின் இவனது மகன் கைலாயநாதன் ஆட்சி செய்தான். இவன் பேரருளாளன். அதனால் இவனுக்கும் வன்னி முதலிமாருக்கும் பண்டைய நடுகல் வழிபாட்டு முறையில் இப்பொழுதும் வழிபாடு நடைபெற்று வருகிறது.

## பொருளாதார, சமயத் துறைகளில் அவரது சேவை மேலோங்கி நின்றது

கருணாகரத் தொண்டமான் போர்த்திறனினும் ஆட்சித் திறனினும் வல்லவனாக இருந்தமை போலப் பொருளாதாரத் திறனிலும் வல்லவனாக இருந்தார். இதற்கு ஈழத்து உப்பைத் தமிழகத்திற்கு அனுப்புதற்கு இவர் மேற்கொண்ட முயற்சி தக்கசான்றாக உள்ளது. ஈழநாட்டின் பொருளாதாரத்தை வளர்த்த முதல் வெளிநாட்டவர் கருணாகரத் தொண்டமானே ஆவார். உரும்பிராய்க் கருணாகர விநாயகர் கோயிலும் தொண்டமானாறும் ஈழத்தின் சமய பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்த இப் பெருமகனை இன்னும் நினைவுறுத்திக் கொண்டிருக்கின்றன.

கடந்த நூற்றாண்டில் இணுவில் ஊரில் இருந்த பெரிய சந்நியாசியார் என்னும் பெரும் சித்தர் கருணாகரத் தொண்டமான் சிவநெறிப் பற்றினன் என்பதை உணர்ந்தார். அவர் இருந்த காரைக்காற் பகுதியைச் சிவபூமியாக எண்ணினார். ஆதலின் அந்த இடத்தில் சிவன் ஆலயத்தை அமைத்து அந்த இடத்தில் பல்வகை மரங்களை வளர்த்து வளமான பெருஞ் சோலை ஆக்கினார். இந்த இடத்தின் பழமை உணர்தற்காக மூலச் சிவலிங்கத்தைப் பண்டைச் சிந்து வெளிச் சிவலிங்க அமைப்பில் அமைத்தார். முற்பகுதியில் யோக நிலையில் தட்சணாமூர்த்தி உருவம் அமைந்திருந்தது. நாற்பக்கமும் அதனைப் பார்த்து வணங்கும் வகையில் நாற்பக்கமும் அமைப்புகள் அமைத்துள்ளார். பரிவார மூர்த்திகளைப் பண்டைய காலத்து முறையில் கருங்கற்களில் ஓவிய உருவங்களாக அமைத்தார். சில மூர்த்தங்களை மரத்தில் அமைத்தார். இவை இப்போது இல்லை. கிணறுகளும் பல குளங்களும் அமைத்தார். பெரிய சந்நியாசியார் காலத்தில் இக்கோயில் பூசைகளும் திருவிழாக்களும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. பல ஊர்களில் இருந்தும் பெருந்தொகையான மக்கள் இவ்விழாக்களில் பங்கு பற்றினர்.

பெரிய சந்நியாசியார் மறைவுற்றதும் இக்கோயில் பல ஆண்டுகள் சிதைவுற்று இருந்தது. அருளாளர் பலர் இங்கு வந்தனர். அவர்களின் முயற்சியினால் இச்சிவாலயத்தில் மீண்டும் பூசைகள் ஆரம்பமாயின. பெரிய சந்நியாசியார் மரபில் வந்த அம்பலவாண சுவாமியார் மக்களின் நோய் பிணிகள் நீக்கும் அருளாளராக விளங்கினார். பல ஊரவர்கள் இங்கு வந்து தங்கித் தம் குறைகள் நீங்கி நலம் பெற்றனர். இவரது முயற்சியால் இக்கோயில் திருத்தி அமைக்கப்பெற்றுப் பெரும் சிவத்தலமாக விளங்குகிறது. இங்கு அன்னதானம் அனைவருக்கும் வழங்கப்பெறுகிறது. புலம் பெயர்ந்த மக்கள் இதன் அயலில் வாழ்ந்து வருகின்றனர்.

இத்திருத்தலம் நல்ல நல்ல தோட்ட நிலங்களில் நடுவில் அமைந்து நல்ல புனித சிவாலயப் பிரதேசமாக விளங்குகிறது. தேவர்கள் இரவு வேளை இங்கு வருவதாக அருளாளர் கூறியுள்ளனர். சிவன் சுடலையில் நடனம் செய்வதாகத் திருமுறைகள் தெரிவிக்கின்றன. அதே போல இதன் அயலில் ஒரு பெரும் சுடலை சோலையாக அமைந்துள்ளது. இந்தச் சிவபூமி இருக்கிற இடத்தில் இருந்து உரும்பிராய் கருணாகர விநாயகர் ஆலயத்திற்குச் செல்வதற்கு ஒரு வீதி அமைந்துள்ளது.

இந்த நிலையில் ஈழத்தின் சமய பொருளாதார வளர்ச்சிகளுக்கு வழிவகுத்த பெருஞ் சிறப்புக்கு உரிய கருணாகரத் தொண்டமானின் அழகிய உருவச்சிலை இத் திருத்தலத்தின் முன்பாக அமைப்பது அறிஞர்கள், ஆர்வலர்கள் பெருங் கடமையாகும். வரலாற்றுச் சிறப்பு உள்ள தமிழகத்தும் வெளிநாடுகளில் இருந்தும் வருங்காலத்தில் இத் திருத்தலத்திற்கு பலர் வருவர். இத்திருத்தலத்தினால் இப்பகுதியில் கருணாகரத் தொண்டமான் புகழ் மேலும் சிறப்புப் பெறும்.

**- தமிழவேள் இ.க.கந்தசுவாமி**

---

### உலகக் கோட்பாடுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தர்க்கிப்பதானது தமிழ் மக்களின் ஒருங்கிணைப்பின் வலிமை குறித்தும் அதன் அவசியம் குறித்தும் ஒரு தெளிவான பார்வையைத் தரக்கூடும்.

**பலஸ்தீன உதாரணம்**

ஆஸ்திரேலியா~ இஸ்ரேல் மற்றும் யூத விவகார ஆலோசனைச் சபையின் நிறைவேற்று இயக்குநராக இருக்கின்ற திரு கொலின் ரூபன்ஸ்டெயின் (Colin Rubenstein) அவர்கள் அண்மையில் வலியுறுத்தியிருந்த ஒரு கருத்துருவாக்கம் எமது தர்க்கத்திற்கு வலுச் சேர்ப்பதாகவே அமைந்துள்ளது. பலஸ்தீன அதிபர் அப்பாஸ் (Mahmoud Abbas) செய்ய முனைந்துள்ள ஒரு காரியத்தை கொலின் ரூபன்ஸ்டெய்ன் பாராட்டுகின்றார். அதை இவ்வாறு கொலின் கூறுகின்றார். "Abbas has said the right things, promising to promote. 'One authority and one gun' அதாவது ஆஸ்திரேலியா ~ இஸ்ரேல் மற்றும் யூத விவகார ஆலோசனைச் சபையின் நிறைவேற்று இயக்குநராக விளங்குகின்ற யூதரான திரு கொலின் அவர்கள் பலஸ்தீன அதிபர் திரு அப்பாஸை பாராட்டுகின்ற அளவிற்கு அப்பாஸ் செய்ய முனைகின்ற காரியம் என்ன? பலஸ்தீன நாட்டோடு இஸ்ரேல் சரியான முறையில் சமாதானப் பேச்சுகளை நடத்தவேண்டும் என்றால் பலஸ்தீன நாடு ஒரே அதிகாரத்தின் கீழ் ஒரே துப்பாக்கியின் கீழ் இயங்க வேண்டும் என்பதேயாகும். அதனை அப்பாஸ் செய்ய முடியாவிட்டால் பாலஸ்தீனமும் இஸ்ரேலும் சமாதானப் பேச்சுக்களை சரியான விதத்தில் நடத்த முடியாது என்பதும் கொலினின் வாதமாகும். அதாவது, பல்வேறு ஆயுதக் குழுக்கள் பலஸ்தீனத்தில் இருந்தால் முறையான சமாதானப் பேச்சு உருவாக முடியாது என்று இஸ்ரேல் பலஸ்தீனத்திற்கு அழுத்தம் கொடுக்கின்றது.

இதே தர்க்கம் தமிழீழத்திற்கும் சிறிலங்காவிற்கும் சரியாகவே பொருந்தும். ஆயினும், இங்கே ஒரு முக்கியமான விடயத்தை ~ வித்தியாச மான விடயத்தை நாம் கவனிக்கின் றோம். தமிழீழத்தை பொறுத்தவரையில அங்கே தமிழ் ஆயுதக் குழுக்களுக்கும அதன் சமூக விரோதச் செயல்களுக் கும் ஆதரவாக இருப்பது சிறிலங்கா அரசேயாகும். யுத்த நிறுத்த உடன் படிக்கையில் ஏற்றுக்கொண்டவாறு தமிழ் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை சிறிலங்கா களைந் திருக்க வேண்டும். மாறாக இந்த ஆயுதக் குழுக்களுக்கு மேலும் ஆயுதங்களை வழங்கி அக்கிர மிக்கப் பட்டுள்ள தமிழீழப் பகுதிகளிலும் சிறிலங்காவின தலைநகர்ப் பகுதிகளி லும் இவர்கள் வன்முறைகளில் ஈடுபடு வதற்குச் சிறிலங்கா அரசே துணை போகின்றது. இந்த தமிழ்க் குழுக்களின் ஆயுதங்களை ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்டவாறு களையும் படி தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் வேண்டுகோள் விடுத்து வருகின்றார் கள். சிறிலங்கா அரசோ அல்லது சம்பந் தப்பட்ட உலக நாடுகளோ இவற்றைக் கண்டு கொள்வதாக இல்லை.

ஆனால், நாம் முன்னர் கூறியவாறு சிறிலங்கா அரசின் விசமப் பரப்புரை தனது அராஜகச் செயல்களைத் திரித்துக் கூறுவதோடு மட்டுமல்லாது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தின் மீது வீண் பழியைப் போடுவதிலேயே முனைப் பாக உள்ளது. அத்துடன், புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் ஒருங்கிணைப்பைக் குலைக்கும் நோக் கில் முழு முனைப்பு டன் தனது விசமப் பரப்புரைகளை முடுக்கியும் வருகின்றது.

அதனால்தான், கடந்த ஆண்டு தனது மாவீரர் தினப்பேருரையின் போது தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் உலக நாடுகளுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தார். எமது இந்த இக்கட்டான நிலையை தமிழரின் இனப் பிரச்சனை யில் அக்கறையுடைய உலக நாடுகள் கருத்தில் எடுத்து, எமது நியாயமான நிலைப்பாட்டின் அடிப்படை யில் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்கு மாறு சிறிலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம ~ என்று தேசியத் தலைவர் கேட்டுக் கொண்டிருந்தார்.

ஆகவே, சமாதானப் பேச்சுக் காலத்தில் சிறிலங்கா அரசு முனைப் பாகத் தொடர்கின்ற அதன் விசமப் பரப்புரை யானது எவரையெல்லாம் குறிவைக்கின் றது என்பதைப் பார்க்கின்றோம். ஒரே சட்டமும் ஒரே நியாயமும் ஒவ்வொரு வருக்கும் வித்தியாசமான முறையில் வழங்கப்படுவதைப் பார்த்தோம். எது எப்படியிருப்பினும் யூத மக்கள் தனது இஸ்ரேல் நாட்டு நலனுக்காக ஒருங்கி ணைந்து இருப்ப தையும் கண்டோம். சிறிலங்கா அரசுகளின் விசமப் பரப்புரை களை முறியடிப்பதற்குப் புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் செய்யவேண்டிய முதல் செயற்பாடு தம்மிடையே உள்ள ஒருங்கிணைப்பை இன்னும் வலிமை யாக்குவதேயாகும். இந்த ஒருங்கிணைப்பு பல அநீதிகளை உடைக்க வல்ல தாகும். நியாயத்திற்கு வலுச்சேர்க்கக் கூடியதாகும். ஒட்டுமொத்த தமிழீழத் தேசிய இனத்தின் விடுதலைக்கான போராட்டத்தை வழி நடத்துகின்ற அந்தத் தேசியத் தலைமையின் கரங்களைப் பலப்படுத்தக் கூடியதாகும். இன்றைய கால கட்டத்தில் இதுவே எமது முக்கிய கடமையுமாகும்.!

(இந்த ஆய்வு 10.10.05 அவுஸ்திரேலியா மெல்பேர்ன் 'தமிழ்க்குரல்' வானொலியில் ஒலிபரப்பாகிய ஆய்வின் எழுத்து வடிவமாகும்.)

# கீரிமலையில் புரட்டாதிச் சனி

**புரட்டாதிச் சனி விரதம் சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் இந்துக்களின் புனிதஸ் தலமான கீரிமலையில் எவ்வாறு அனுஷ்டிக்கப்பட்டது என்பதை நினைவு கூருகிறார் கட்டுரையாளர்.**

புரட்டாதிச்சனியில் இந்துக்களனைவரும் எண்ணெய் ஸ்தானம் செய்து எள் தீபம் ஏற்றி சனீஸ்வரனை வழிபடுவர். சனீஸ்வர பகவான் எழுந்தருளியுள்ள அல்லது நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஆலயங்களனைத்திலும் சனிஸ்ரவனுக்குப் பக்தர்கள் எள் தீபம் ஏற்றி வழிபடுவர்.

இந்துக்களின் புனிதஸ்தலமான கீரிமலை தற்போது உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கீரிமலையிலும் புரட்டாதிச் சனியன்று விசேட பூசைகள், வழிபாடுகள் இடம்பெறும். புரட்டாதி கடைசிச் சனியன்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கீரிமலைக்குச் சென்று நீராடி நகுலேஸ்வரப் பெருமானை வழிபடுவர்.

வருடத்தில் மூன்று தடவைகள் கீரிமலையில் பக்தர் கூட்டம் அலை மோதும். ஆடி அமாவாசை, சிவராத்திரி, புரட்டாதிச் சனி ஆகிய தினங்களில் கீரிமலை பக்தர் கூட்டத்தால் நிரம்பி வழியும். ஏனைய கோயில்களுக்குச் சென்று சனீஸ்வர வழிபாடு அல்லது வழிபாடு செய்வதை விட பக்தர்களுக்கு கீரிமலைக்குச் சென்று வழிபடு வது சௌகரியமாயிருந்தது. காரணம் ஏனைய கோயில்களுக்குச் செல்லும்போது பக்தர்கள் வீட்டில் நீராடி விட்டே கோயிலுக்குச் சென்று வழிபடுவர்.

கீரிமலைக்குச் செல்லும் அடியார்களுக்கு கீரிமலையிலேயே சமுத்திரஸ்நானம் செய்துவிட்டு வழிபாடு செய்யக்கூடிய வசதி காணப்பட்டது. புரட்டாதிச் சனியன்று எள் தீபம் ஏற்றி வழிபாடு செய்யும் கோயில்களனைத்திலும் எள் எண்ணெய்ச்சட்டி வியாபாரம் நடைபெறும். கீரிமலையில் எள் எண்ணெய்ச்சட்டி வியாபாரத்துடன் மேலதிகமாக இன்னொரு வியாபாரமும் நடைபெறும். அரப்பு எலுமிச்சங்காய் வியாபாரம். புரட்டாதிச் சனியன்று தலைக்கு அரப்பு தேய்த்து நீராடுவதே விதி. கீரிமலைக்கு வரும் பக்தர்கள் வரும் போது அரப்பு எடுத்து வருவது சிரமமான காரியம். இதனால், புரட்டாதிச் சனியன்று கீரிமலை வாசிகள் பலர் அரப்பு எலுமிச்சங்காய் வியாபாரத்தில் ஈடுபடுவர். அரப்பு எலுமிச்சங்காய் வியாபாரம் முதல் இல்லாத வியாபாரம்.

முன்பெல்லாம் தேநீர்க்கடைகளில் பால் தேநீர் தயாரிப்பதற்கு பால்மா பயன்படுத் தப்படுவதில்லை. டின்பாலே பயன்படுத்தப்பட்டு வந்தது. பாவித்த டின்பால் பேணிகள் கீரிமலையிலுள்ள தேநீர்க் கடைகளின் பின்புறம் தாராளமாகக் காணப்படும் . அரப்பு எலுமிச்சங்காய் வியாபாரம் செய்வோர் ஒரு வாரத்திற்கு முன்னரே பாவித்த 'டின்பால்' பேணிகளைச் சேகரிக்கத் தொடங்கி விடுவர். புரட்டாதிச் சனியன்று கடற்கரையில் நெருப்பு மூட்டி அலுமினியப்பானையில் அரப்பை அவிய விட்டு 'டின்பால்' பேணிக்குள் விட்டு நான்காக வெட்டப்பட்ட எலுமிச்சம் பழப்பாதி ஒன்றையும் போட்டு நீராட வருவோருக்கு விற்பனை செய்வர். இறுதியாக ஒரு பேணி அரப்பு எலுமிச்சங்காய் ஐம்பது சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டது.

கீரிமலையில் அரப்பு எலுமிச்சங்காய் வியாபாரம் நடைபெற்றாலும் நாம் காசு கொடுத்து வாங்குவதில்லை. ஏனெனில், வீட்டில் தாராளமாக அரப்பு இருக்கும். ஆவணி மாதமே நல்லெண்ணெய் வியாபாரிகள் அரப்பும் கொண்டு வந்து தந்து விடுவார்கள். இவர்கள் தலைச் சுமையாகவும் சைக்கிளிலும் கொண்டு வந்து வீடு வீடாக விற்பனை செய்வர். தகரத்தால் செய்யப்பட்ட சருக்குடுவை போன்ற பாத்திரத்தை கடகத்தினுள் வைத்து அதனுள் எண்ணெய் நிரப்பி எடுத்து வருவர். வயோதிபப் பெண்மணிகளும் எண்ணெய் வியாபாரத்தில் ஈடுபடுவதுண்டு.
புரட்டாதிச் சனியன்று உடல் முழுவதும் நல்லெண்ணெய் தேய்த்து கண், நகக்கண் என்பவற்றிலும் எண்ணெய் பூசி வாய் நிறைய எண்ணெய் விட்டு பின்பு நீராடி கோயிலுக்குச் செல்வது வழமை.
வழமையாகக் கோயிலுக்குச் செல்லும் போது அர்ச்சனைத்தட்டில்தான் அர்ச்சனைப் பொருள்களை எடுத்துச் செல்வது வழக்கம். ஆனால், புரட்டாதிச் சனியன்று மட்டும் கடதாசிப் பையில் (இது மரத்தாள் பாக் எனவும் அழைக்கப்படும். சீமெந்துப் பையில் தயாரிக்கப்பட்டது) அர்ச்சனைப் பொருள்களை எடுத்துச் செல்வோம். ஒரு பை ஐந்து சதம் சனிஸ்வரனுக்குக் கொண்டு செல்லும் பொருள்கள் திருப்பி எடுத்து வரக்கூடாது என்பதற்காக சனீஸ்வரனிடம் கொண்டு செல்லும் பொருள்களை திருப்பிக் கொண்டு வந்தால் அவற்றில் ஒட்டிக் கொண்டு சனியன் வந்து விடும் என்பது நம்பிக்கை.
புரட்டாதிச் சனியன்று கீரிமலையிலும் எள் எண்ணெய்ச்சட்டி வியாபாரம் நடைபெறும். நாங்கள் சட்டி மட்டும் வாங்குவோம். எள் பொட்டலம் வாங்குவதில்லை. பாவித்த குடைகளை வீட்டு வேலியில் மாட்டியிருப்பார். அம்மா புரட்டாதிச் சனியன்று எள் பொட்டலம் கட்டுவதற்காக அந்தக் காலத்தில் 'ராஜராணி' குடைகள் பிரசித்தம். இவை சுமார் இருபத்தைந்து வருடங்கள் பாவிக்கக் கூடியவை. பின்னர் மான்மார்க் குடைகளும் பிரசித்தி பெற்றிருந்தது. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப எள் பொட்டலம் கட்டி சட்டியினுள் போட்டு எடுத்துச்
சென்று தீபம் ஏற்றுவோம். கோயி லுக்குப் போகும்போது அம்மா சொல்வார். ''வடிவாகக் காலைக் கழுவிப் போட் டுப்போ. நளமகாராசா கால் கழுவேக்கை ஒரு இடத்திலை தண்ணிபடாமை விட் டிட்டுதாம். அந்த இடத்திலை தான் நளம காராசாவுக்குச் சனியன் பிடித்ததாம்'' என்று.
''அப்பனே சனீஸ்வர பகவானே இண்டையோடை எங்களை விட்டு விலத்தியிடு என்று கும்பிட்டு விட்டு வா'' என்றும் அம்மா அறிவுறுத்துவார். கோயிலால் வந்து காகத்திற்குச் சாப்பாடு வைத்து காகம் சாப்பிட்ட பின்னர்தான் எமக்குச்சாப்பாடு. தலை வாழையிலையில் சோற்றின் மேல் நல்லெண்ணெய் விட்டு அப்பளம் தொடக்கம் சமைத்த சகல கறிகளிலும் சிறிதளவு சேர்த்து துப்புரவான இடத்தில் தண்ணீர் தெளித்து அதன் மேல் காகத்திற்கு உணவு படைக்கப்படும்.
காகம் சாப்பிடாவிட்டால் அம்மா சொல்வார் ஏதோ துப்புரவு இல்லாமல் செய்து விட்டோம்போலிருக்கிறது. அதனால்தான், காகம் சாப்பிட மறுக்கிறது எனக்கூறி மறு முறை குளித்து சமையல் செய்வார். ஒரு தடவை அம்மா மூன்றாம் முறை குளித்து விட்டு சமைத்து காகத்திற்கு உணவு பரிமாறியதும் உண்டு. கோயிலிலும் எள் சாதம் விற்பனை செய்யப்படும். சிலர் அதை வாங்கி காகத்திற்குப் படைப்பதுமுண்டு. அந்த பசுமையான நாள்களை எண்ணிப் பெருமூச்சு விடத்தான் முடியும் வேறென்ன செய்வது.

White Diamond
தெளிவாகவே உங்களுக்கு

வர்ணம் கலப்படமற்றது
எண்ணம் மாறுபட்டது.
பல்வேறு தரப்பினரின் சந்திப்பு
மாறுபட்ட எண்ணங்களின் சங்கமிப்பு
ஆனால் ஒன்று மட்டும் தெளிவு
எதையும் சேர்க்கலாம் வைட் டயமனுடன்
அதில் கிட்டும் மகிழ்ச்சிப் பரவசம்.


# விழிப்பின் பதிவுகள்

உதயன் TV

# எதிர்பார்க்கப்பட்ட வெற்றியும் எதிர்பார்க்கப்படாத சறுக்கலும்

ஜனாதிபதி தேர்தல் ஏற்பாடுகள் சூடு பிடித்தள்ளன. பிரச்சார கூட்டங்களில் வாக்குறுதிகளும், கொள்கை முழங்கல்களும் வாய் வீச்சுகளாகியுள்ளன. வேட்பு மனுத்தாக்கல் முடிந்து புறப்பட்ட ஜனாதிபதி வேட்பாளர்கள் பல்வேறு பிரதேசங்களுக்கும் சூறாவளிப் பயணங்களை மேற்கொண்டு மக்களை சந்திக்கின்றனர். மஹிந்த ராஜபக்ஷ தமது பாதுகாப்பை முன்னிட்டு குண்டு துளைக்காத கண்ணாடிப்பெட்டிக்குள் இருந்து கொண்டு கூட்டங்களில் உரையாற்றுகிறார்.

தனது பாதுகாப்பை உறுதி செய்ய முடிந்துள்ள அவரால் இலங்கை தொழிலாளர் காங்கிரசும், முஸ்லிம் காங்கிரசும் தன்னை ஆதரிப்பதை உறுதி செய்யமுடியாமல் போயுள்ளது. பல வாரங்களாக கொடுக்கல் வாங்கல்களை அல்லது கொள்கைகளை அடிப்டையாக வைத்து இரு கட்சிகளினது ஆதரவையும் பெறுவதற்காக பல தடவைகள் தொடர்ந்தும் இந்தக் கட்சிகளோடு மஹிந்த பேச்சுக்களை நடத்தியிருந்தார். குறிப்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிச்சயமாக தன்னையே ஆதரிக்கும் என நம்பியிருந்தார்.

இதற்கு பல காரணங்கள் இருந்தன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியானது ஐக்கிய தேசிய கட்சியுடன் சேர்ந்து. தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு வந்த போதும் எதிர்க்கட்சியில் அமராமல் வழமை





போல ஆளுங்கட்சியுடன் போய் சேர்ந்து கொண்டனர். மந்திரிப் பதவிகள் இல்லாமல், ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்காமல் அவர்களால் ஒருபோதும் அரசியல் நடத்த முடியாது என்பதை மீண்டும், ஒருமுறை உறுதி செய்திருந்தனர்.

எனவே தனது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிச்சயமாக தன்னையே ஆதரிக்குமென மஹிந்த நம்பியிருந்தார். இருக்கின்ற மந்திரிப்பதவிகளை துறந்து எதிர்க்கட்சி ஆசனத்தில் இருப்பதை இலங்கை தொழிலாளர் காங்கிரசினால் நினைத்துக்கூட பார்க்கமுடியாது என்பதை மஹிந்த நன்றாக அறிந்து வைத்திருந்தார்.

ஆனால் ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் மஹிந்தவுடன் இணைந்ததானது கள நிலவரத்தையே மாற்றிவிட்டது. ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் மஹிந்தவுக்கு ஆதரவு தருவதாக தெரிவித்தவுடன் தேர்தல் இல்லாமலேயே மஹிந்த வென்றது போன்றதொரு தோற்றம் ஏற்பட்டது உண்மை. அந்த அளவிற்கு மஹிந்த ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்திருந்தார். இவர்களது ஆதரவு மஹிந்தவை நிச்சயமாக வெல்ல வைத்துவிடும் என்ற பிரமையை சகல பெரும்பாலானவர்களிடமும் ஏற்படுத்தியிருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கூட மஹிந்தவே ஜனாதிபதியாக வருவார் என நம்பியிருப்பார்கள் என்பது வெளிப்படை. எனவே அவருக்கு ஆதரவு தெரிவிக்கவும், அதற்கான சன்மானங்களைப் பெறவும் அவர்கள் தயாராக இருந்திருக்கக்கூடும்.

எனினும் இந்த மஹிந்த அலையானது நீடித்திருக்கவில்லை. ஜே.வி.பியும் ஹெல உறுமயவினதும் நிபந்தனைகளை கேள்வி இல்லாமல் ஏற்றுக் கொள்ளத் துணிந்தமை. அதிலும் குறிப்பாக, தனது கட்சியின், தனது அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு முரணான கொள்கைகளுக்கு அடிமையானமை என்பன மஹிந்தவுக்கு உடனடி பாதிப்புகளாக அமைந்தன.

**- என். ஜீவேந்திரன்**

பின்னர் ஜனாதிபதியுடனான முரண்பாடுகள். அனுரவுடனான முரண்பாடுகள் மற்றும் சுதந்திரக் கட்சியில் சில மூத்ததலைவர்களுடனான அதிருப்தி என்பன மஹிந்தவின் அலையை ஓயச்செய்தன. அத்தோடு அவருக்கு ஆதரவு தெரிவித்த ஜேவிபியினதும், ஹெல உறுமயவினதும் மோதல்கள் முரண்பாடுகள் நிலமையை மேலும் மோசமாக்கின. குறிப்பாக ஜேவிபியானது மஹிந்தவை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது, மஹிந்தவின் பிரச்சாரக் கூட்டங்களை தானே ஏற்பாடு செய்யும் என்றும் அந்த மேடையில் ஹெல உறுமய இடம்பெறக் கூடாது என்றும் விதித்த நிபந்தனைகள் மஹிந்தவின் அணியை பலவீனமாக்கின.

இந்நிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மஹிந்தவுக்கு ஆதரவு வழங்குவது அக்கட்சிகளின் இனவாத கருத்துக்களை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்றுக் கொள்வதாகவே மக்கள் எடுத்துக் கொள்வர் என்பது நிதர்சனமானது. மேலும் தனியார் தொலைக்காட்சி ஊடகம் ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பில் கூட பெரும்பாலான மக்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ரணிலையே ஆதரிக்கும் என அபிப்பிராயம் தெரிவித்திருந்தனர். இது மக்களது அபிப்பிராயம் அல்ல, வேண்டுகோள் என்பதை புரிந்துகொள்ள முடியாத ஒரு அரசியல்வாதியாக ஆறுமுகம் தொண்டமான் இருந்திருக்க மாட்டார். இதுவும் மஹிந்தவின் எதிர்பார்ப்பில் மண்ணள்ளிப் போட்டது எனலாம்.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் பயணத்தடை சமாதான நடவடிக்கைகளை பாதிக்குமா?



பிரித்தானியாவின் ஓரவஞ்சனை

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளுக்கு பயணத்தடையை அறிவித்துள்ளமையானது தெற்கில் சிங்கள மக்கள் மத்தியிலும், சிங்கள அரசியல்வாதிகளின் மத்தியிலும் பெரும் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. புலிகளுக்கு வைக்கப்பட்ட இந்த ஆப்பானது அவர்களை ஆனந்தத்தில் திக்குமுக்காட வைத்துள்ளது. உண்மையில் சிங்கள புத்திஜீவிகளினதும், ஸ்ரீலங்கா அரசாங்கத்தினதும் இராஜதந்திரத்திற்கு கிடைத்த வெற்றி என்றே இது கருதப்பபடுகிறது. அதேபோல தமிழர் தரப்பின் இராஜதந்திர பலவீனத்தையும், கையாலாகாத்தனத்தையும் இது அம்பலப்படுத்தியுள்ளது.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நுனிநாக்கு ஆங்கிலத்தில் பீற்றித்திரியும் தமிழ் புத்திஜீவிகளும், அரசியலை கரைத்து குடித்தவர்களும் என்ன பிடிங்கிக் கொண்டிருந்தார்கள் என சாதாரண தமிழ் பொதுமக்கள் பேசுவதை எங்கும் கேட்க கூடியதாக உள்ளது. அது மட்டுமல்ல ஆயுத சமரில் பலமான விடுதலைப்புலிகள் அரசியல் களத்தில் மிக மோசமான பலவீனத்தை கொண்டிருப்பதை இது வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது.

விடுதலைப்புலிகளை பொறுத்தவரையில் ஆயுத போராட்டத்தை அவர்கள் முழு ஈடுபாட்டுடன் பல்வேறு தியாகங்களுக்கு மத்தியில் முன்னெடுத்தனர். அவர்களது வீரத்திற்கும், தியாகத்திற்கும் களத்தில் வெற்றிமேல் வெற்றி கிட்டியது. எனினும் இலங்கை இனப்பிரச்சனையானது வெறும் போர்க்களத்துடன் நின்றுவிடக்கூடிய ஒன்றல்ல. அது சர்வதேசமயப்பட்ட நிலையிலும் இந்தியா உள்ளிட்ட பிராந்திய கழுகுகளின் பிடியில் சிக்கியுள்ள நிலையிலும் போர்க்களத்திற்கு அப்பாலும் புலிகள் போராட வேண்டிய நிலையில் உள்ளனர்.

குறிப்பாக போர்நிறுத்த உடன்படிக்கைக்கு பின்னர் நிலமைகள் முற்றாக மாறிப் போயுள்ளன. எவ்வித அரசியல் நடவடிக்கைகளையும் புலிகள் தன்னிச்சையாக மேற்கொள்ளமுடியாது. இலங்கை அரசுடனான அரசியல் நகர்வுகள் மிக கவனமாக கையாளப்படவேண்டியவை. விடுகின்ற சிறு தவறுகளும் அரசாங்கத்தின் துரும்புச் சீட்டாக மாறிவிடும்.

அதேபோல முஸ்லிம் மக்களுடனான முரண்பாடுகள், பிணக்குகள் கவனமாக கையாளப்படவேண்டியவை என்பதோடு கருணா குழு பிளவிற்கு பின்னர் ஏற்பட்டுள்ள மோதல் நிலமையும் மிக அவதானமாக அணுக வேண்டியவை.

இதற்கு மேல் சிறுவர்களை படையில் இணைத்தல், கடத்தல், கப்பம் வாங்குதல் ஆகிய குற்றச்சாட்டுக்கள், புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் மனிதஉரிமைகளின் நிலை என்பனவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகவுள்ளன.

இந்தநிலையில் இவற்றின் அடிப்படையில் எழுந்த அழுத்தங்களை கதிர்காமரின் படுகொலையுடன் ஏற்பட்ட வாய்ப்பான சூழலை பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் அடித்து ஆடியுள்ளது. எதிர்ப்புகள் இல்லாத, போட்டியில்லாத, சவால்கள் இல்லாத களத்தில் சிங்கள புத்திஜீவிகளும் அரசாங்கமும் தமது விருப்பப்படி அடித்து ஆடியதுடன் வெற்றிக்கனியையும் பறித்துள்ளனர். பெரும்பாலும் இது முதல் ஆட்டமாக இருக்கலாம். இன்னும் பல ஆட்டங்களை அவர்கள் ஆயத்தம் செய்திருக்கக்கூடும்.

உதாரணமாக தற்போது ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளுக்கு பயணத்தடையை மட்டுமே விதித்துள்ளது. அடுத்ததாக அவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கே தடைவிதிக்கலாம். விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களை நாடு கடத்தலாம். வங்கிக் கணக்குகளை, சொத்துகளை முடக்கலாம். மேலும் தடை விதிக்காத நோர்வே, சுவீடன் போன்ற ஸ்கன்டிநேவிய நாடுகளுக்கு விடுதலைப் புலிகள் மீது கடும் போக்கை கடைப்பிடிக்கும்படி அழுத்தங்களை மேற்கொள்ளலாம். இவை உடனடியாக இடம்பெறக்கூடியவையல்ல. ஆனால் பாதகமான சூழல் ஒருவேளை துரதிஸ்டவசமாக தொடருமாக இருந்தால் ஏற்படக்கூடியவை. அப்படி ஏற்பட்டால் அது புலிகளுக்கு மோசமான இராஜதந்திர பின்னடைவை ஏற்படுத்தும்.

**- ஜீ.யோகப்பிரியா**

சரி, இவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு தமிழ் பொதுமக்களது உணர்வலைகளைப் பார்ப்போமாக இருந்தால், அவர்கள் பிரிட்டனே தமது முதுகில் குத்தியதாக உணர்கிறார்கள். காரணம் தற்போது ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தலைமை தாங்குவது பிரிட்டனேயாகும். மேலும் இது பிரிட்டனின் தனிப்பட்ட தன்னிச்சையான முடிவு என்றும் இதில் பிரிட்டனோடு சேர்ந்து இயங்கும் இத்தாலி, ஸ்பெயின் நாடுகளைத்தவிர ஏனைய நாடுகளின் விருப்பமோ. சம்பந்தமோ இல்லை என்றும் பலர் கருதுகின்றனர்.

குறிப்பாக பிரிட்டன் இலங்கை சுதந்திரம் வழங்கும் போது சிங்கள அரசியல்வாதிகளிடம் மட்டும் முழு நாட்டையும் ஒப்படைத்தன் மூலம் வடகிழக்கு தமிழ் மக்களுக்கு மிகப்பெரிய துரோகத்தைச் பிரிட்டன் செய்தது.

அதன் பின் தம்மால் இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட மலையக தமிழ் மக்களுக்கு எவ்வித அரசியல் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தாது நட்டாற்றில் விட்டதன் மூலம் தமிழருக்கு இரண்டாவது துரோகத்தை செய்தது.

மீண்டும் விடுதலைப்புலிகளை தடை செய்ததன் மூலமும், இலங்கை அரசாங்கத்திற்கு போருக்கு ஆதரவு வழங்கி மூன்றாவது முறையாக பிரிட்டன் தமிழருக்கு துரோகத்தை செய்தது.

இப்போது ஒரு பக்கச்சார்பான கருத்துகளை வைத்துக் கொண்டு, விடுதலைப்புலிகளுக்கு பயணத்தடையை விதித்ததன் மூலம் பிரிட்டன் தமிழருக்கு நான்காவது தடவையாகவும் துரோகத்தை செய்துள்ளது.

## இவ்வார விழிப்பில்...

- உலக சிறுவர் தின நிகழ்வுகள்
- சகவாழ்வு மன்றத்தின் சிறுவர் தினம்
- மனித அபிவிருத்தி அறிக்கையும் இலங்கையும்
- செடக் இளைஞர் மாநாடு
- வேறுபாடுகளற்ற இளைஞர் சங்கமிப்பு

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# சட்டத்தை மீறுவோர் கவனத்திற்கு

தேர்தல் தோல்வியின் பின்னர், வாக்களிப்புக் குறித்தும், தேர்தல் முறைகேடுகள் குறித்தும் அதிகம் குறைகூறும் சராசரி அரசியல்வாதிகள் நமக்குத் தெரிந்தவர்கள்தான்.

பத்தாண்டுகளுக்கு முன்னர் நடந்த தேர்தல்களின் முறைகேடுகளைப் பயன்படுத்தி, சொற்ப வாக்குகளுடன், அதிக நாடாளுமன்ற ஆசனங்களை வென்றவர்கள், பத்து ஆண்டுகள் கழித்து அதே நடவடிக்கைப் பாணி 'பூமராங்' ஆகத் திரும்பி வந்து தம்மைத் தாக்கியபோது குதித்துக் கூச்சலிட்டதை கடந்த ஆண்டு பார்த்தோம். வழக்குக்கும் போனார்கள். சரி வரவில்லை.


வழக்கு என்றதும் ஒரு விடயம் நினைவுக்குவருகிறது.முன்னர் 'கள்ள வாக்கு'களைத் திரட்டி வெற்றிக்கு இலக்குவைத்த இதே ஆட்கள்,அப்போது வாக்களிப்புக்கு அடையாள அட்டையைக் கட்டாயமாக்கிக் கோருவது வாக்காளனின் அடிப்படை உரிமையை மீறும் செயல் என்று நீதிமன்றத்திற்கு எழுத்து மூலம் தெரிவித்தார்கள். ஆனால், அதுவே பின்னர் தங்களுக்கு மாறாகத் திரும்பியதும், அடையாள அட்டை கூட இல்லாமல் வந்து அள்ளிப்போட்டு ஆசனங்களை அள்ளிச் சென்றுவிட்டார்களே என்று கூட்டமைப்புக்காரரைப் பார்த்துக் கூச்சலிட்டு நொந்து கொள்ளும் நிலைமையும் வழக்குப் போடும் கட்டாயமும் அவர்களுக்கு ஏற்பட்டது.

அது பழங்கதை விட்டுவிடுவோம். இனிப் புதுக்கதையைப் பார்ப்போம்.

இப்போது, ஜனாதிபதித் தேர்தலில் நிற்கும் இரண்டு பிரதான கட்சிகளினதும் வேட்பாளர்களுக்குமே வடக்கில் - யாழ். குடாநாட்டில் - பலமான கட்சி அடித்தளம் ஏதுமில்லை. எனவே, தென்னிலங்கையில்

(5ஆம் பக்கம் பார்க்க)


பெக் லோடட்
பவர் ஸ்ப்ரேயர்



General Equipments Limited
400, Sri Sangaraja Mawatha, Colombo 12.
Tel: 2345046, 2327264, 2343822, 2343823, 2430799
Fax: 2434637

February 2006 Intake
STUDY IN LONDON

- Finance Money & Banking
- Art, Fasion & Desing
- Electronic & Electrical Eng.
- Manufacturing System Eng.
- Salon Management
- Bio Medical Sciences
- Psychology & Sociology
- H. R. Management
- Surveying & Geographical
- Sports Sciences& Medicine
- Business Studies
- PG Diploma
- Bio- Sciences
- Architecture
- Ari line & Port Mgt
- LLM
- LLB
- Accounting & Finance
- Media & Communication
- Software Engineering
- Computer Forensics
- Computer Networks
- Hospitality Management
- Culinary Arts Mgt.
- Early Childhood Studies


◆ Scholarships for Posigraduat Studies
◆ Work Placement Opportunities for Hospitality Mgt

*BA *Bsc *MA *MBA *MPhD/PhD
Over 1000 Courses Available
Affordable Tuition · Free Consultation · No Charges · Visa Guidence
Immediat Offers Made to Genuine Students
For appoiments contact:
Mr Loho Gunasekera- Lohos Groups
Official Representative & Education Advise
E-mail: loho@dialogsl.net
Tel No's: 0777-917929 /0714-124446
Office: Lucky Plaza Builiding, SH2,6th floor, St.Anthony's Mw.,Colombo 03
(Weekdays only8a.m-2p.m
Office Tel:2301050)
In Tamil Dr Indrani 2862376

Panasonic
ideas for life

நீர் இறைக்கும் இயந்திரம்

விசேஷ அம்சங்கள்
- சக்திவாய்ந்ததும், பாவனை கூடியதும்
- சத்தம் குறைந்ததும், சக்தி சேமிப்பும்
- வேகம் கூடியது
- பாவனைக்கு இலகுவானது
- வெப்பத்தை தாங்கக்கூடியது



*Model GP-200JA
இயந்திரவலு 200W
வெளிப்பாய்ச்சல் வலு 45 liter/min (Max)
உயர வலு 35 meters (Max)

*Model GP-125JB
இயந்திரவலு 125W
வெளிப்பாய்ச்சல் வலு 30 liter/min (Max)
உயர வலு 30 meters (Max)

*Model A-200JAE
(Auto pressure pump)
இயந்திரவலு 200W
அதிகபட்ச வெளிப்பாய்ச்சல் வலு Max 45 L/min
உயர வலு Ht12m 29 L/min
அழுத்த ஆளியுடன் Max 19 meter
அழுத்த ஆளிஇன்றி Max 35 meters
ON 1.1kgf/cm2
OFF 1.8 kgf/cm2

ஏகவிநியோகஸ்தர்கள்
CAPRICORN®
* ஒரு வருட உத்தரவாதம்
(தயாரிப்பாளர் குறைபாட்டிற்கு மாத்திரம்)
* உத்தரவாதப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும்

கப்ரிகோன் என்ரபிரைசஸ் பிரைவேட் லிமிட்டட்
காட்சி அறை அலுவலகம்:
வெள்ளவத்தை காட்சி அறை : 298 A & B காலி வீதி வெள்ளவத்தை தொலைபேசி: 2582154, 2360919
புறக்கோட்டை காட்சி அறை : 59, மெலிபன் வீதி கொழும்பு 11 தொலைபேசி: 4737443
காலி காட்சி அறை : 04 வாட் வீதி காலி தொலைபேசி: 091-2234104
தலைமை அலுவலகம் 47, டெம்பிளர்ஸ் வீதி கல்கிசை தொலைபேசி: 2735584, 2714631
பெக்ஸ் : 2735586 மின் அஞ்சல் : caprico1@sltnet.lk
- நாடளாவிய ரீதியிலான விநியோகம் -

Cambrian College of Applied Arts and Technology

Welcome to the First Canadian campus in Sri Lanka

Cambrian College is the largest College of Applied Arts and Technology, in Northern Ontario, Canada.

2nd Intake

We are Now in Canada

Subramaniam Thayananthan



I'm happy to declare that my ambition to study in Canada has fulfilled through Governor's College.

Prasad Rasika Mendis



I have experienced true Canadian education from Governor's College before leaving to Canada for continuing my education.

SCHOLARSHIPS
Scheme Available

Courses Offered
- HOTEL AND RESTAURANT MANAGEMENT
- TRAVEL AND TOURISM MANAGEMENT
- SOFTWARE ENGINEERING TECHNOLOGY
- BUSINESS ADMINISTRATION - ACCOUNTING

- Complete TWO semester (one year) at Sri Lankan campus, and transfer to CANADA
- Free ESL course (English as a second language)
- Course fee can be paid in installments
- Loan facilities on request

FOR THE SECOND INTAKE
Contact : Soumya / Kavitha



GOVERNOR'S COLLEGE
"COLLEGE CAMPUS"
376, Galle Road, Colombo 03, Sri Lanka.
Tel : +94 11 2375371, +94 11 2375222 Fax : +94 11 2375374
E-mail: governors@sltnet.lk

பழுது பார்த்தல்

1975 ஆம் ஆண்டில் இருந்து சுமார் 30 வருடங்களாக அநுபவமிக்க, விஷேட சேவையுடன் மக்கள் மத்தியில் நன்மதிப்பையும்,பாராட்டையும் பெற்றுக் கொண்ட விசுவாசமிக்க சேர்விஸ் சென்டர்

திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் 40 பேர்களுடன், அதி நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு, ஒரே நாளில் கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட துரித சேவை.
ஒரு வருட உத்தரவாதம்!

கெமரா பழுது பார்த்தல்



மின்சார உபகரணங்கள் பழுது பார்த்தல்



டிஜிட்டல், ஸ்டில் & வீடியோ கெமரா, லென்சஸ், ஸூம் கெமரா பிளேக்ஸ் சேர்கியுற், ரீபிளேஸ்மன்ட்ஸ், ஸ்டுடியோ பிளாஷஸ், கொம்பியுட்ரைஸ்ட், ஃபிளாஷ் கன்ஸ்ஹை-பை எம்பிலிபையர்ஸ், சற்டலைட்ஸ்.

LD, CD, VCD, DVD கெசட்ஸ், CD இயந்திரங்களை VCD யாக மாற்றுதல்
செலுலர் தொலைபேசிகள், பெக்ஸ்மெசின்கள், கோட்லெஸ், அனலொக் தொலைபேசிகள், இலக்றோனிக் டைப்ரைட்டர்கள்,மைக்றோவேவ்ஸ் ஒவன், பொலிஷர், பிளென்டர், மின்சார விசிறிகள்,குளிருட்டி, சலவை இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மோட்டார்கள்,

DURST ELECTRONICS (PVT) LTD.
364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. போன்: 2575480, 2565756
P.G மாட்டிற்குக்கும் H.N.B வங்கிக்கு எதிரிலும், ரேனுகா ஹோட்டலுக்கு அருகிலும் (கடல் பக்கம்)

# போர் ஓய்ந்து விட்டது

சுயாதீனமான, நேர்மையான பின்வரும் விடயங்கள் அடங்கலான அரசாங்கமொன்றை இலங்கையில் கட்டியெழுப்புவோம்.

★போர் இந்றி சமாதானம் மட்டும்.
★அரசியல் யாப்பை சீர்திருத்தி சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கிய மக்களின் இன நல்லுறவை பாதுகாப்பேன்.
★விவசாயத்துறையின் முன்னேற்றத்திற்கா தானிய வங்கிகள்.
★பாதுகாப்பான வாழ்க்கை முறை
★இளைய சமுதாயத்துக்கு பிரகாசமான எதிர்காலமொன்றை அமைத்துக் கொடுப்பதற்கான நல்ல சூழ்நிலை.
★சட்டம் ஒழுங்கு
★வன்முறை, லஞ்சம், தீவிரவாதத்திற்கு முற்றுப்புள்ளி.
★மத, ஜாதி, இன வேறுபாடுகளுக்கு ஒரு முடிவு.
★சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு நிரந்தர நிவாரணம்.
★பொருளாதார முன்னேற்றத்திற்கான செயற்பாடுகள்.
★நமது இளைஞர் யுவதிகளுக்கு ஏற்ற முறையில் கல்வி முறையை சீர்செய்வோம்.




57 வருட சாபக்கேடான சூழ்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுங்கள். செயற்திறன் மிக்க, நேர்மையான, அனுபமிக்க அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை ஒன்று அனைத்து கட்சிகளின் நல்லாசியுடன் எதிர்வரும் ஆறு வருடங்களுக்கு இலங்கையை ஆண்டால் மட்டுமே இது சாத்தியமாகும்.

ஒரு சுயாதீனமான ஜனாதிபதி, சுயாதீனமான அமைச்சரவை, சுயாதீனமான பாராளுமன்ற உறுப்பினர்கள், சுயாதீனமான அரச அலுவலர்கள், மற்றும் சுயாதீனமான பாதுகாப்புப் படை மற்றும் பொலிஸாரர் இவர்களோடு உங்கள் அறிவுபூர்வமான ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே நாட்டை முன்னேற்றப்பாதைக்கு இட்டுச்செல்ல முடியும்.

கௌரவமான நேர்மையான அழகிய இலங்கையை கட்டியெழுப்புவேன் என்று நான் உறுதியளிக்கின்றேன். பழைய தலைவர்களை நம்பியிருப்பதை விடுத்து சுயாதீன ஜனாதிபதியை தெரிவுசெய்து நாட்டை அவரிடம் ஒப்படையுங்கள்.

இந்த நடப்பு அரசியலில் புத்திசாலித்தனமான தெரிவு இல்லாவிடில் நாடு முடங்கிவிடும், மக்களும் முடக்கப்படுவர்.

ஜனாதிபதித் தேர்தல் 2005 நெருங்கிக் கொண்டிருக்கின்றது. கடந்தகால அரசாட்சிக் காலங்களில் ஏற்பட்ட கசப்பான மறக்கமுடியாத நிகழ்வுகள் பல இருக்கின்றன. இந்த நிகழ்வுகள் மறுபடி நிகழ நாம் அனுமதித்தால் நாடு முடங்கிவிடும் அத்தோடு மக்கள் தொடர்ந்து ஏமாற்றத்துடனேய இருப்பர் நாட்டின்





பின்னடைவு தொடர்ந்து கொண்டேயிருக்கும். கடந்த 57 வருடங்களாக அதிகாரத்திலிருந்த இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் மக்களை ஏமாற்றத் திருற்கே உட்படுத்தின. எனவே செயல்திறனுடைய, நுண்ணறிவுடைய, சுயாதீனமான ஒரு வேட்பாளரை நாம் தெரிவு செய்வதே இதற்கான தீர்வு.

அரசியல் ரீதியாக ஒரு முக்கிய தீர்மானத்திற்கு வரவேண்டிய நிலையில் நாடு உள்ளது. இந்த சந்தர்ப்பத்தையும் உரிமையையும் பயன்படுத்தி உச்சக்கட்ட பலனை பெற்றுக்கொள்ளத் தவறினால் நாடு அழிவுப்பாதை நோக்கி வேகமாய் முன்னேறத் தொடங்கும். உங்கள் நாட்டுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் நல்லதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு உங்கள் கைகளிலேயே உள்ளது.

## 80% இற்கும் அதிகமான மக்கள் கட்சி அரசியலால் கரைப்படுகின்றார்கள்

தேர்தல் முடிவடைந்து மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியவுடன் இரண்டு கட்சிகளையும் பற்றி விமர்சிக்கத் தொடங்கிவிடுகின்றார்கள். சிறுபான்மைக் கட்சிகள் தமது விமர்சனங்களால் மக்களைத் தூண்டத் தொடங்கிவிடுகின்றனர். அவர்கள் மீண்டும் ஒன்றுசேர்ந்துவிடுகின்றனர்.

பெரும்பான்மை மற்றும் சிறுபான்மைக் கட்சித் தலைவர்கள் சிங்களவர்களையும், தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரித்து வைத்திருக்கின்றனர். தொழிலாளர்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தி அதன்மூலும் வேலைநிறுத்தம் போன் பல பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர். நல்ல வேலைத் திட்டங்களை நிராகரித்து நாட்டை அனர்த்தத்துக்கு உள்ளாக்குகின்றனர்.

அனைத்து சிறுபான்மைக் கட்சிகளும் தமது ஆதவை இது பெரும்பான்மைக் கட்சிகளுக்கு பல்வேறு உறுதிப்பாடுகளின் மத்தியில் வழங்குகின்றன. அந்த உறுதிப்பாடுகள் என்னவென்று மக்களுக்குத் தெரியாது. தேர்தல் நேரங்களில் மட்டுமே மக்கள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றனர்.

இந்தத் தருணத்தில் தமது நாடு மோடசகதியை அடையுமா அல்லது பாதாளரத்தில் வீழுமா என்று மக்களுக்குத் தெரியாது. தீராத வலி மட்டுமே அவர்களுக்கு எஞ்சுகிறத.

தற்போதைய நிலையிலிருந்து எமத நாட்டை மீட்க வேண்டும். அதற்கு சுயேட்சை வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதியாக தெரிவுசெய்ய வேண்டும். இந்நாட்டை அழகானதாகவும் சிறந்த எதிர்கால மிக்கதாகவும் மாற்றவேண்டிய முடிவு உங்களதே. அறிவுபூர்வமாக சிந்தியுங்கள்.

பான்வெல்கட்ட
கோமாரிக்கா



ஆரோக்கியமான.வசீகரமான.
மென்மையான
சருமத்தை பெற
பான்வெல்கட்ட சவர்க்காரத்தை
பாவியுங்கள்.இது
சுருக்கங்கள்.வறண்டதோல்
ஏற்படுவதை தடுக்கும்.

பான்வெல்கட்ட
கோமாரிக்கா

விஷக்கிருமிகளை அழிக்கவல்ல
ஆயுர்வேத வாசனை சவர்க்காரம்

இது ஒரு சித்தாலேப தயாரிப்பு

ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிட்.
33/3, ஸ்ரீ தர்மராம வீதி, இரத்மலானை, இலங்கை.
தொலைபேசி: 2736910 தொலைநகல்: 2735465

வனிக்கா மெடிக்கல்,
இல. 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6291, 021 222 2445.

## சட்டத்தை மீறுவோர் கவனத்திற்கு......

[மூன்றாம் பக்கத் தொடர்ச்சி]

தாங்கள் நடத்திய சுவ ரொட்டிப் போட்டியை அவர்களால் குடாநாட்டில் முன்னெடுக்க முடியவில்லை.

இந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் தினமான கடந்த 7ஆம் திகதி அதிகாலை வரை இந்த சுவரொட்டி நடவடிக்கை, தேர்தல் சட்டத்தின்கீழ் குற்றமல்ல. அதனால், அந்தநாள்வரை சுவரொட்டிப் போராட்டம் தெற்கில் மும்முரமாக நடந்தது. இப்போது தேர்தல் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டதால் அது தெற்கில் அடங்கிவிட்டது.

ஆனால், குடாநாட்டில் நிலைமை தலைகீழ். தேர்தல் சட்டம் நடைமுறைக்கு வரும் வரை - 6ஆம் திகதி இரவுவரை - தேர்தல் அசமந்தமே அங்கிருக்கவில்லை. ஆனால், 7ஆம் திகதி தேர்தல் சட்டம் நடைமுறைக்கு வந்த சமயத்தில் - காலையில் - கண்விழித்த குடாநாட்டு மக்களுக்கு ஆச்சரியம்.

அன்று அதிகாலை வேளை விடியு முன்பே பல இடங்களிலும் - தேர்தல் சட்ட விதிகளுக்கு முரணாக - சுவர்களில் சிரித்துக் கொண்டிருந்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. அதுவும் இராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளில்தான். இப்படி தேர்தல் சட்டத்தை மீறி சுவரொட்டி ஒட்டும் 'துணிச்சல்', சம்பந்தப்பட்டோருக்கு வந்திருக்கிறது. இந்தச் சுவரொட்டிகளையும், அவை ஒட்டப்பட்ட இடங்களையும் நோக்கிய குடாநாட்டு மக்களுக்கு அவற்றை ஒட்டிய சூத்திரதாரிகள் யார் என்பதை ஊகித்துக் கொள்வதில் அப்படி ஒன்றும் கஷ்டம் இருக்கவில்லை.

இப்படித் தேர்தல் சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்திலேயே அந்தச் சட்டத்தை மீறுவதற்கு பிள்ளையார் சுழி போடுகின்றவர்கள், பின்னர் வாக்களிப்பு சமயத்தில் தேர்தல் சட்டத்துக்கு எதிராக முறைகேடுகள் நடக்கின்றன என்று தடங்கல் போடுவதற்கான தார்மீகத்தைத் தாங்கள் இழந்து விடுகின்றார்கள் என்பதை உணர்ந்து கொள்வது நல்லது.







மக்கள் சேமிப்பு மாதம் ஆரம்பமாகிவிட்டது

உலக சிக்கன தினத்தை முன்னிட்டு ஒக்டோபர் மாதம் முழுவதும் மக்கள் வங்கியின் பிரதிநிதிகள் உங்கள் இல்லத்தை நாடி வருவார்கள். சேமிக்கும் சிறந்த பழக்கத்தை உங்கள் மத்தியிலும் ஊக்குவிக்கத்தான். இப்போது மக்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் அனைவருக்கும் ரூபா 10 இலட்சம் வரை ஆயுள் காப்புறுதி வசதியுமுண்டு. ஒக்டோபர் மாதத்தில் அதிகமதிகமாகச் சேமிக்க மக்கள் வங்கியோடு உடனடியாக இணைந்து கொள்ளுங்கள்.

மக்கள் வங்கி

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

# கொலை முயற்சிகளிலிருந்து இருபது தடவைகள் தப்பிய ஹிட்லர்!



இரண்டாவது உலகமகாயுத்தம் ஆரம்பமாகக் காரண கர்த்தாவான ஜேர்மனிய சர்வாதிகாரி ஹிட்லருக்கு தமது நாட்டினுள்ளேயே பல எதிரிகள் இருந்தனர் என்பது ஹிட்லருக்கும் தெரிந்தேயிருந்தது. ஹிட்லருடன் மிக நெருக்கமாகப் பழகியவாறே அவர்கள் ஹிட்லரைக் கொலை செய்வதற்கான சதித் திட்டங்களைத் தீட்டி வந்தனர். பல தடவைகள் கொலை முயற்சிகளிலிருந்து தப்பிப் பிழைத்த உலகத் தலைவர்களில் ஒரேயொரு தலைவர் ஹிட்லரே எனக் கூறுவது தவறாகாது.

ஹிட்லரைத் தனியாகவும் அவரது உதவியாளர்களுடன் சேர்த்தும் கொலை செய்து விடுவதற்கு ஹிட்லரின் எதிரிகள் இருபது தடவைகளுக்கு மேல் முயற்சித்ததாக வரலாற்றில் பதிவாகியுள்ளது. இவ்வித கொலை முயற்சிகளில் சில குறித்து ஹிட்லர் பின் ஒருபோதும் தெரிந்து கொள்ள இயலாது போனது மட்டுமன்றி, இக்கொலை முயற்சிக்குத் திட்டமிட்டோர் தமது முயற்சி தோல்வியடைந்த வேளையில் இதனால் கவலையடையவும் நேர்ந்தது.

**விமானத்தில் வெடிகுண்டு**

1943ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஜெனரல் புரூட்ரீச் ஒல்பிரிச் என்ற ஹிட்லரின் இராணுவ அதிகாரியின் தலைமையில் ஹிட்லரைப் படுகொலை செய்வதற்கான திட்டமொன்று வகுக்கப்பட்டது. குறித்த நேரத்தில் வெடிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட வெடி குண்டொன்றை ஜெனரல் புரூட்ரிச் ஒல்பிரிச் சுக்கு நெருக்கமான விமானி ஒருவரூடாக ஹிட்லர் பயணம் செய்யவிருந்த விமானத்தினுள் பொருத்தி விடுவதில் சதிகாரர்கள் வெற்றி கண்டனர். குறிப்பிட்ட வேளையில் குறித்த விமானத்தில் ஹிட்லர் தமது பயணத்தை ஆரம்பித்தார். விமானம் புறப்பட்டு பத்து நிமிட நேரத்தில் வெடிகுண்டு வெடிக்கத்தக்க வகையில் பொருத்தப்பட்டிருந்தது. வானத்தில் விமானத்துடன் ஹிட்லரும் வெடித்துச் சிதறி உயிரிழப்பதைக் காணும் ஆவலில் சதிகாரர்கள் காத்திருந்தனர். ஆயினும், ஒரு மணி நேரம் கழித்து விமானம் சென்றடையத் திட்டமிட்டிருந்த இடத்தைப் பத்திரமாகச் சென்றடைந்தது என்ற செய்தியைக் கேள்வியுற்ற சதிகாரர்கள் ஏமாற்றத்துக்கு உள்ளாக நேர்ந்தது. அதனால் அச்சமடைந்த அவர்கள் மிகச் சாதுரியமாகச் செயற்பட்டு ஹிட்லர் அறிந்து கொள்ள இயலாத வகையில் விமானத்தில் தாம் பொருத்தி வைத்த வெடிகுண்டை இரகசியமாக அங்கிருந்து அகற்றி எடுத்துச் சென்று விட்டனர். இந்த விஷயம் ஹிட்லருக்குத் தெரிய வந்திருப்பின் விமானப் படை ஊழியர்கள் அனைவருமே ஹிட்லரால் கொன்றொழிக்கப் பட்டிருப்பர். அந்த வெடிகுண்டு தொழில் நுட்பக் கோளாறு காரணமாகவே எதிர்பார்த்தபடி வெடிக்கவில்லை என்பது பின்னர் சதிகாரர்களால் கண்டு பிடிக்கப்பட்டது.

**மனித வெடிகுண்டுத் தாக்குதல்**

இதேபோன்று ஹிட்லரைப் படுகொலை செய்வதற்கான மற்றொரு திட்டத்தை சதிகாரர்கள் தீட்டிய போதிலும் அவர்களால் தமது திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள இயலவில்லை. 1943 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி ஹிட்லரின் தலைமையில் கொண்டாடப்பட இருந்த மாவீரர் தின நிகழ்வில் வைத்துக் ஹிட்லரைப் படுகொலை செய்து விடுவதென்பதே சதிகாரர்கள் தீட்டிய அந்தக் திட்டமாகும். அந்தக் திட்டத்தில் எப்படியும் வெற்றி பெற்று விட வேண்டுமென்ற நோக்கில் அதற்காக மனித வெடி குண்டைப் பயன்படுத்தச் சதிகாரர்கள் முடிவெடுத்தனர். அந்த நிகழ்வில் ஹிட்லருடன் அவரது படைத் தளபதிகள் பலரும் கலந்து கொள்ளவிருப்பதாகத் தெரிந்து கொண்ட சதிகாரர்கள் ஹிட்லரின் படைத் தளபதிகளுள் ஒருவரான கேணல், புறூகிகர் - மொன்குறோஸ் தொப் என்பவரை மனித வெடி குண்டாகப் பயன்படுத்தித் தமது நோக்கத்தை நிறைவேற்ற முடிவு செய்தனர். தமது உடலில் அதிசக்தி வாய்ந்த இரு வெடிகுண்டுகளைப் பொருத்திக் கொண்டு குறிப்பிட்ட கேணல் ஹிட்லருடன் அந்த நிகழ்வில் கலந்து கொள்வதென்றும், குறிப்பிட்ட நேரத்தில் வெடி குண்டுகள் வெடித்துச் சிதறுவதால் ஹிட்லருடன் அவரது பல இராணுவ தளபதிகளையும் படுகொலை செய்ய இயலும் விதத்திலேயே அந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டது. அந்த நிகழ்வில் அரைமணி நேரத்துக்கு மேல் கட்டாயமாக ஹிட்லர் கலந்து கொண்டு உரையாற்ற வேண்டியிருந்தது. ஆனால், எவரும் சற்றும் எதிர்பார்த்திராதவாறு குறிப்பிட்ட நிகழ்ச்சி ஆரம்பமாகி எட்டு நிமிடங்கள் கழிந்த சமயம், திடீரென்று ஹிட்லரும் அவரது முக்கிய தளபதிகளும் அவ்விடத்திலிருந்து வெளியேறிச் சென்று விட்டனர். உண்மையில் நிகழ்வு ஆரம்பித்து இருபது நிமிடங்கள் கழியும் வேளையிலேயே வெடிக்கத்தக்க வகையில் அக் குண்டுகள் குறிப்பிட்ட கேணலின் உடலில் சதிகாரர்களால் பொருத்தப்பட்டிருந்தன. ஆகையால், சதிகாரர்களின் அந்த முயற்சியும் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. இதே விதத்தில் சதிகாரர்களால் பின்னர் திட்டமிடப்பட்ட ஹிட்லரைப் படுகொலை செய்து விடும் சில முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்தன.

**மேடையில் வெடிகுண்டு**

1943ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மற்றுமொரு படுகொலை முயற்சி பெரிய அளவில் சதிகாரர்களால் திட்டமிடப்பட்டது. இந்தத் தடவை எந்த வகையிலும் ஹிட்லர் யமனின் பிடியிலிருந்து தப்பிக்கவே முடியாது என தமது சதி முயற்சி குறித்து சதிகாரர்கள் தம்மிடையே கருத்துப் பரிமாறிக் கொண்டனர். இந்தத் தடவை வழக்கமாக குறிப்பிட்டதொரு தினத்தில் இடம் பெறும் அணிவகுப்பு நிகழ்ச்சியொன்றில் ஹிட்லர் கலந்து கொள்ளும் சமயம் அங்கு வைத்து அவரைப் படுகொலை செய்து விடுவதென்பதே சதிகாரர்களின் திட்டமாக அமைந்தது. நிகழ்வு இடம்பெறும் பரந்த மைதானத்தில் ஹிட்லர் அணிவகுப்பைப் பார்வையிட அமரும் மேடைக்கருகில் வெடிகுண்டைப் பொருத்தி வைத்து குறித்த வேளையில் வெடிக்கச் செய்யும் வகையில் சதிகாரர்களால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், எவரும் எதிர்பாராதவாறு குறிப்பிட்ட நிகழ்வை நடத்தத் திட்டமிட்டிருந்த தினத்துக்கு இரு நாள்கள் முன்னர் பிரித்தானிய விமானப் படையினரின் குண்டு வீச்சுக்கு இலக்காகி குறிப்பிட்ட மைதானம் சேதமடைய நேர்ந்தது. இதன் காரணமாக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சியை வேறொரு தினத்துக்குப் பிற்போட வேண்டிஏற்பட்டது. இதனால், மற்றொரு தடவை யமனின் பிடியிலிருந்து ஹிட்லர் தப்பிகொள்ளும் சந்தர்ப்பம் வாய்த்தது.

இதன் பின்னர் 1943ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி இடம்பெறவிருந்த இராணுவ அதிகாரிகளின் மாநாட்டிற்குத் தலைமை வகிக்க ஹிட்லர் வரும் சமயம் அவரை அங்கு வைத்துப் படுகொலை செய்து விடுவதெனச் சதிகாரர்கள் திட்டமிட்டனர். ஆனால், தமது நத்தார் விடுமுறையைக் கழிக்க ஹிட்லர் ஜேர்மனியின் மற்றொரு நகரத்துக்குச் செல்லவிருப்பதால் குறிப்பிட்ட மாநாடு வேறொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்படுவதாக ஹிட்லரின் நடவடிக்கைச் செயலகம் வெளியிட்ட அறிக்கையால் சதிகாரர்களின் திட்டம் தவிடு பொடியானது.

இதன் பின்னர் 1944 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் திகதியன்று ஹிட்லரைப் படுகொலை செய்து விடுவதற்கு சதிகாரர்கள் திட்டம் தீட்டிய போதிலும் அவர்களது அந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. இதற்கு ஐந்து தினங்கள் கழித்து, ஜுலை 20 ஆம் திகதியன்று ஒழுங்கு செய்யப்பட்ட இராணுவ அதிகாரிகளின் மாநாடு பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பிக்கும் விதத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும், அவ்வேளையில் இத்தாலிய நாட்டின் சர்வாதிகாரி முசோலினி ஜேர்மனிக்கு விஜயம் செய்திருந்தமையால் அந்த மாநாடு திட்டமிடப்பட்டதற்கு அரைமணி நேரம் முன்பதாக பிற்பகல் பன்னிரண்டரை மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த இராணுவ அதிகாரிகளின் மாநாட்டில் வைத்துக் ஹிட்லரைப் படுகொலை செய்துவிடுவதென்ற சதிகாரர்களின் திட்டம் இந்த நேரமாற்றத்தின் காரணமாக குழப்பமுற நேர்ந்தது. அந்த மாநாட்டில் ஹிட்லருடன் கூட அவரது ஏழு உயரதிகாரிகள், 18 இராணுவ அதிகாரிகள் மற்றும் மூன்று உதவியாளர்களும் கலந்து கொண்டனர். அந்த மாநாடு இடம் பெற்றுக் கொண்டிருந்த வேளையில், சதிகாரர்களின் திட்டப்படி வெடித்துச் சிதறிய வெடிகுண்டின் தாக்கத்தால் மாநாட்டு மண்டபம் சிதறிச் சின்னாபின்னமாகியது. இருந்த போதிலும் ஹிட்லரும் அவரது ஏழு உயரதிகாரிளும் உயிராபத்து இன்றித் தப்பித்துக் கொண்டனர். மாநாட்டில் கலந்து கொண்டோரில் ஹிட்லர் உட்பட அந்த எட்டுப் பேர் தவிர ஏனைய அனைவரும் அந்தத் தாக்குதலில் மரணமடைய நேர்ந்தது. தமது திட்டப்படி ஹிட்லரைப் படுகொலை செய்ய இயலாது போனதால் சதிகாரர்கள் கலவரமடைந்தனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சதிகாரக் கும்பல் அனைவரும் பின்னர் ஹிட்லரால் ஒட்டு மொத்தமாக யமனுலகு அனுப்பப்பட்டிருப்பர் என்பதை வாசகர்கள் நான் சொல்லாமலேயே புரிந்து கொண்டிருப்பர்.

**ஹிட்லரின் உத்தி**

இவ்விதம் இருபது தடவைகள் படுகொலை முயற்சிகளிலிருந்து உயிர் தப்பிப் பிழைத்த ஹிட்லர் தாம் கொலை முயற்சிகளிலிருந்து தப்பிப் பிழைக்க முடிந்தமைக்கான காரணத்தைத் தமது தளபதிகளுடன் சிரித்துப் பேசிப் பொழுது போக்கிய ஒரு சந்தர்ப்பத்தில் விரிவாக எடுத்துக் கூறினார்.

"உலகில் பிரபல்யம் பெற்றுக் திகழ்ந்தவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு விகிதமானோர் படுகொலை முயற்சிகளில் சிக்கி உயிரிழக்க நேர்ந்தமைக்கான காரணம் அவர்கள் தமது வழமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் ஒரே விதத்தில் மேற்கொண்டு வந்தமையேயாகும். ஆனால், எனது நடவடிக்கைகள் அவ்விதம் ஒரே சீரில் அமையாது பார்த்துக் கொண்டேன். எனது நடவடிக்கைகள் பல்வேறு விதத்தில் அமையுமாறு பார்த்துக் கொண்டேன். உணவு உண்பது, பிரயாணம் செய்வது, குறிப்பிட்ட ஒரு இடத்தில் தங்குவது, என்பன போன்ற செயற்பாடுகளை நான் ஒரே விதத்தில் மேற்கொள்வதில்லை. எனது வரவைப் பலர் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகக் கேள்விப்பட்டால் நான் அந்த இடத்துக்குச் செல்வதைத் தவிர்த்து விடுவேன். குறிப்பிட்ட நேரத்தில் புறப்பட ஒழுங்கு செய்யப்படும் பயணங்களைக் கடைசி நிமிடத்தில் நான் மாற்றிக் கொள்வேன் அல்லது பின்போட்டு விடுவேன் அல்லது குறிப்பிடப்பட்ட நேரத்துக்கு முன்னராகப் புறப்பட்டுச் சென்று விடுவேன். என்னைப் படுகொலை செய்யத் திட்டமிடும் சதிகாரர்களின் திட்டத்தில் மாட்டிக் கொள்ளாத விதத்தில் எனது உயிரைக் காத்துக் கொள்ள நான் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இவை. இவை பலருக்குப் புதுமையாய் இருக்கலாம். ஆனால், பிரபல்யமானவர்கள் தமது எதிரிகளின் சதி வலையில் சிக்கிக் கொள்ளாது தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தந்திர வழி இதுவாகும் என ஹிட்லர் தமது நடவடிக்கைகள் குறித்து தனது நெருங்கிய உயரதிகாரிகளுக்கு விவரித்தார்.

**உணவுப் பரிசோதனை**

ஹிட்லர் தமது உணவை குறிப்பிட்ட ஒரே வேளையில் எடுத்துக் கொண்டதில்லை. அவர் உணவு உண்பதற்கு முன்னர் அவரது உணவு மூன்று தடவைகள் விசித்திரமான விதத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். முதலில் அவரது வளர்ப்பு நாய் அவரது உணவில் ஒரு பகுதியை ருசி பார்க்கும். அடுத்து அவரது வைத்தியர் அவரது உணவில் நஞ்சு கலக்கப்பட்டுள்ளதா என்பதனை பரீட்சித்துப் பார்ப்பார். கடைசியில் அவரது உணவின் ஒரு பகுதியை அவரது மெய்ப் பாதுகாவலர் ருசிபார்ப்பார். இம் மூன்று வழிகளிலும் பரீட்சித்துப் பார்த்த பின்னரே ஹிட்லர் தனது உணவை உண்பதை வழக்கப்படுத்திக் கொண்டிருந்தார்.

இவ்விதம் பல்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் உயிராபத்தைத் தவிர்த்து வந்த ஹிட்லரின் மரணம் கடைசியில் பரிதாபகரமானதொன்றாக அமைந்தது. தமது உயிரைத் தாமே போக்கிக் கொள்ள வேண்டிய இக்கட்டு நிலையில், விஷம் அருந்தித் தமது உயிரைப் போக்கிக் கொள்ள வேண்டிய நிலை - தற்கொலை செய்து கொள்ள வேண்டிய நிலை ஜேர்மனியைக் கட்டியாண்ட ஹிட்லருக்கு ஏற்பட்டமை பரிதாபகரமானதொன்றே.

வியெஸ்ரீ

# கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் சப்பலை ஔவையார் சந்தித்தால்...!

நாரதர் செய்த கலக விளையாட்டால் முருகப்பெருமான் மாம்பழத்தைக் கணபதியிடம் பறிகொடுத்துவிட்டு தாய், தந்தையரை விட்டுப் பிரிந்து பழனி மலைக்குச் செல்கிறார்..... அப்போது முருகனை வழியில் கண்ட ஔவையார், அவரைச் சாந்தப்படுத்தி கோபத்தைத் தணிக்க முயன்றார். அதனோடு இணைந்ததாய் முருகனது சில கேள்விகளுக்கு அழகு தமிழால் விடையளித்தார் ஔவையார். அந்தக் காட்சி திருவிளையாடல் என்ற சினிமாப் படத்திலே மிக அழகாகச் சித்திரிக் கப்பட்டுள்ளது. ஔவையார் குரலுக்கு ஒப்பனை வழங்கியவர் இசைக்குயில் கே.வி சுந்தராம்பாள் அவர்கள்.

அதேபோன்றதொரு சாயலில் இந்த சம்பாசனைக் கட்டுரை அமைந்திருக்கிறது. இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் சப்பலை ஔவையார் சந்தித்தால் .....? இருவருக்கிடையேயான உரையாடல் எப்படி இருக்கும்? என்ன? கற்பனை செய்ய ஆரம்பித்து விட்டீர்களா? வேண்டாம். உங்களை நீண்ட நேரம் கற்பனையில் மூழ்கடித்து சங்கடப்படுத்த நாங்கள் விரும்பவில்லை. நாங்களே தருகிறோம் கற்பனையில் உருவான கதை ஒன்றினை. ஆனால், ஒரு நிபந்தனை. என்ன தெரியுமா? இதை நீங்கள் வெறும் நகைச்சுவையாக மட்டுமே கருத்தில் கொண்டு வாசிக்கவேண்டும். வேறு எந்த நோக்கம் கருதியும் இது எழுதப்படவில்லை.

என்ன நீங்கள் தயாரா? நீங்கள் தயார் என்றால் நாங்கள் தயார். கே.வி சுந்தராம்பாளின் பாடல் மெட்டை, குரலை மனதில் கொண்டு மெல்ல நகருங்கள்...

**சப்பல்:-** ஔவையே இந்திய கிரிக்கெட் அணியில் அரியது என்ன?

**ஔவை :-** அரியது கேட்கும் சப்பலே... அரிது அரிது கங்குலி சதம் (100) அடிப்பது அரிது. சதம் அடித்தாலும் நான்கோ, ஆறோ



உங்களைச் சிரிக்க வைப்பதற்கு ஒரு கற்பனைச் சித்திரம்

(பவுண்டரி, சிக்சர்) அடிப்பது அரிது, நான்கோ, ஆறோ அடித்தாலும் களத்தில் நிலைத்து நின்று ஆடுவது அரிது. நிலைத்து நின்று ஆடினாலும் களத்தடுப்பில் ஒரு பந்தையேனும் தடுத்து நிறுத்துவது அரிது. தடுத்து நிறுத்தினாலும் உனது சொல் கேட்டு நடப்பது அரிது. இப்படி நடந்தால் அவன் கப்டன் பதவியில் நீடிப்பது அரிது.

**சப்பல் :-** அரியது கேட்டபோது அழகான தமிழால் விளக்கம் தந்த ஔவையே கொடியது என்ன?

**ஔவை:-** கொடிது கொடிது சச்சின் அணியில் விளையாடாதது கொடிது. உனது கருத்துக்கு முரணாக கருத்துத் தெரிவிப்பது கொடிது. அதனிலும் கொடிது சச்சினைப் பீடித்த ஆற்றொணா எல்போ நோய் கொடிது. அதனிலும் கொடிது சுப்பர் சீரிசில் விளையாடாமல் சலஞ்சர் கிண்ணத் துக்காக விளையாடுவது கொடிது. அதனி லும் கொடிது அந்தப் போட்டியில் தன் கையால் ஓட்டமெதுவும் பெறாமல் அவுட்டாகிப் போவது தானே....

**சப்பல்:-** மிக்க மகிழ்ச்சி. சொல்லால், தமிழால் வெல்லாத உலகையெல்லாம் வெல்லும் திறமை படைத்த ஔவையே பெரியது என்ன?

**ஔவை:-** பெரியது கேட்பின்... பெரிது பெரிது கிரிக்கெட் விளையாட்டுப் பெரிது. கிரிக்கெட் விளையாட்டும் இங்கிலாந்துக் காரனின் படைப்பு. பிளின்ரொப்பும் இங்கிலாந்துவீரன் மைக்கல் வோகனோ ஆஸ்திரேலிய அணியை வென்ற கப்டன். இங்கிலாந்து அணியோ இவன் சொல்லுக்குள் அடக்கம். ஆஸ்திரேலியா அணியை வென்ற இங்கிலாந்தையோ அல்லது பங்காளதேஷையோ புகழ்வது பெரிதே!

**சப்பல்:-** ஔவையே உலக கிரிக்கெட் ஜாம்பவான்களும் உன்து வாக்கிற்கு அடிமையாகிவிடுவர் என்றால் அதில் வியப்பில்லை. இனியது என்ன ஔவையே?

**ஔவை :-** இனியது கேட்கும் சப்பலே! இனிது இனிது அணியில் வேற்றுமை நீங்கி விளையாடுதல் இனிது. அதனிலும்இனிது இந்திய அணியில் கைவ்வையோ, யுவராஜ் சிங்கையோ கப்டனாய் நியமிப்பது இனிது. அதனிலும் இனிது உலக அணியில் விளையாடிய சங்ககாராவும், முரளியும் காட்டிய திறமை இனிது. அதனிலும் இனிது இந்தியா ஒதுக்கிய திறமையான பயிற்சியாளர் ரொம்மூடியை நினைப்பது இனிது.அதனிலும் இனிது ஆத்திஆடி; கொன்றைவேந்தனை இந்திய அணியினர் கனவிலும், நனவிலும் படிப்பது இனிது.

**சப்பல்:-** அரியது, கொடியது, பெரியது, இனியது அனைத்திற்கும் முறையோடு விடைபகன்ற ஔவையே... புதியது என்ன?

**ஔவை:** என்றும் புதியது - பாடல்
என்றும் புதியது
பொருள் நிறைந்த - பாடல்
என்றும் புதியது
சப்பலே உனைப்பாடும் - பொருள்
நிறைந்த பாடல் என்றும் புதியது
திறமை படைத்த
சச்சின் கையில்
சிறப்பான துடுப்பளித்த - உனது
திறமை புதியது
சச்சின் என்ற
பெயரில் வந்த - விஜயின்
படமும் புதியது
முறுவல் காட்டும்
சச்சின் கொண்ட
இளமை என்றும் புதியது
அவனைப் பெற்ற
பாதர மாதாவுக்கு
எல்போ நோய் புதியது.
அணியின் தலைவர் கங்குலிக்கு
அந்த நோயே வருகுது
சப்பலே உனைப்பாடும்
பொருள் நிறைந்த
பாடல் என்றும் புதியது.
யாதவுக்கும், றொகானுக்கும்
இந்திய அணி புதியது.
சேர்ந்தவர்க்கு வழங்கும்
உந்தன் பயிற்சி புதியது.
அறிவில் அரியது
பயிற்சியோ பெரியது.
வழங்க வழங்க
உனது பயிற்சி இனியது.
முதலில் முடிவது
முடிவில் முதலது
மூன்று காலம் உணர்ந்தவர்க்கு
சப்பல் என்றும் புதியது.

- சுதேசிகன்




# இலங்கை கலைஞர்களை ஊக்குவிக்கும் M Entertainment நிறுவனம்

உலகின் மாபெரும் இசைத்தட்டு வெளியீட்டு நிறுவனத்தின் துணைநிறுவனமான யுனிவர்சல் மியூசிக் இந்தியா அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட Number 1 hits from the continent என்ற இசைத் தொகுப்பை இலங்கையில் வெளியிட்டுள்ளது. இந்தியா, பாகிஸ்தான், நேபாள நாட்டுக் கலைஞர்களுடன், இலங்கையின் முன்னணி இசைக் கலைஞர்களும், இசைத்தட்டு தயாரிப்பாளர்களுமான பாத்திய என் சந்துரஷ், இராஜ் ஆகியோரின் பாடல்களும் இந்த இசைத் தொகுப்பில் அடங்கியுள்ளன.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற பிரமாண்டமான நிகழ்வொன்றில் இராஜ் தனது புகழ் பெற்ற ரண் ரண் ரண் பாடலை இசைக்க, இந்த இசைத்தொகுப்பின் ஒலி இறுவட்டு மற்றும் ஒளி இறுவட்டுகள் முதன்முறையாக பொதுமக்கள் மத்தியில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

இவ்வெளியீட்டு வைபவத்தில் கலந்துகொண்டு யுனிவேர்சல் மியூசிக் இந்தியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ராஜத் காகர் உரை நிகழ்த்துகையில், 'யுனிவேர்சல் தயாரிப்புகள் உள்ளூர் இசையணித் தேர்வுகளில் ஆதிக்கம் செலுத்துவதுடன் கலைஞர்களால் பெரிதும் விரும்பப்படும் வர்த்தகச் சின்னமாகவும் விளங்குகின்றன. யுனிவேர்சல் இன்று இத்துறையில் ஆதர்ஷமாக விளங்கும் செல்லிடப்பேசிகள், வானொலி, வெளியீடுகள் போன்ற புதிய வருமான வழிகளின் மூலம் வருமானத்தை ஈட்டிக் கொள்கின்றது. இலங்கைக் கலைஞர்களும் இந்தப் பாரிய வளத்தைப் பயன்படுத்தி தமது தயாரிப்புகளையும் விநியோகத் தளத்தையும் மேலும் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும் எனக் கூறினார்.




ஏற்கனவே சர்வதேச இசைத் துறையில் பல்வேறு முக்கிய திருப்பங்களை ஏற்படுத்தியுள்ள பாத்திய என்ட் சந்துரஷ் மற்றும் இராஜ் போன்ற கலைஞர்கள் இந்த இசைத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டமை அவர்களின் இசை வாழ்வில் மற்றுமொரு மைல்கல்லாகும். ஆசியாவின் செல்திசையை நிர்ணயிக்கும் அலைவரிசையெனக் கருதப்படும் சேனல் வீ கடந்த மாதம் இவர்களின் இசைவடிவங்களை அறிமுகப்படுத்தியிருந்தது.

சேனல் வீ உலகெங்கிலுமுள்ள பாரிய இளம் ரசிகர்களின் சுவையையும், போக்கையும் பிரதிபலிக்கும் ஓர் அலைவரிசையெனக் கருதப்படுகின்றது. வீ அலைவரிசை நேத்ரா மற்றும் இராஜ் வீரரத்னவின் ரண் ரண் ரண் இசைத் தொகுப்புகளிலிருந்து பாடல்களைத் தொடர்ந்தும் ஒளிபரப்பி வருகின்றது.

இக்கலைஞர்களின் சாதனை படைக்கும் இசைத் தொகுப்புகளை இலங்கை பூராகவும் வெளியிடுவதில் எம் என்ரடெயின்மென்ற் நிறுவனம் பாரிய பங்காற்றிவரும் வேளையில் இக்கலைஞர்களுக்கு இத்தகைய மாபெரும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. எம் என்ர டெயின்மென்ற் நிறுவனப் பணிப்பாளர் பிரதீப் மகாராஜா கருத்து வெளியிடுகையில்,

நாம் ஒலி, ஒளி இறுவட்டுகளை விநியோகிக்கும் ஒரு நிறுவனம் என்பதைவிட மேலும் ஒருபடி மேலே சென்று இலங்கையின் இசைத்துறையில் பிரபலமானவர்களின் படைப்புகளை உருவாக்குவதிலும் முகாமைத்துவம் செய்வதிலும் பங்கெடுத்துள்ளோம். யுனிவேர்சல் நிறுவனத்துடனான கூட்டிணைப்பு இத்துறைக்குப் பெரிதும் உதவுகிறது - என்றார். எம் என்ரடெயின்மென்ற் நிறுவனம் திறமைமிக்க இளம் இசைக் கலைஞர்களுடன் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு, அவர்களின் படைப்புகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சந்தைப்படுத்துவதில் முன்னணி வகிக்கின்றது.

எம் என்ரடெயின்மென்ற் நிறுவனத்தினரான நாம் இத்துறையில் தொழில்ரீதியான மாற்றத்தை ஏற்படுத்த விரும்புகின்றோம். கலைஞர்கள் தம்மை பாடகராகவோ, இசைக்கலைஞராகவோ பார்க்காமல் தொழில் முயற்சியாளராகப் பார்க்கவேண்டுமென நாம் விரும்புகிறோம். அவர்களது படைப்புகள், அவர்களது வாழ்நாள் முழுவதும் ஒரு சொத்துரிமத்தை வழங்கவேண்டும்.

எம் என்ரடெயின்மென்ற் நிறுவனம் அண்மைக்காலமாக இலங்கையில் புலமைச் சொத்துரிமைச் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துமாறு கோரி கடுமையாகப் போராடி வருகின்றது. இது பாரியதொரு முயற்சி எனக்கூறும் மகாராஜா, இலங்கையின் கலைத்துறையில் போலித்தயாரிப்புகள் பாரிய தாக்கத்தை விளைவித்திருப்பதாகக் கூறுகிறார். பல மாதங்களாக ஏன் வருடங்களாகப் பாடுபட்டு ஒருவர் உருவாக்கிய ஓர் இசைத் தொகுப்பை யாரோ ஒருவர் போலியாக உருவாக்குவது என்பது ஒருவரின் வாழ்நாள் உழைப்பையே திருடுவதைப் போன்றது என்கிறார் அவர்.

